2861

# T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: X NO: 1

JUNE 26th 1985

D
1211,31 N85

N85·10·1
136390

61-13

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

2862

# TAMILNADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, 1985 ஜூன் 26—தொகுதி X-எண்.1

Wednesday, the 26th June 1985—Volume X-No. 1.

சட்டமன்றப் பேரவை செயலகம், சென்னை-600009

**Legislative Assembly Secretariat, Fort St. George**

**Madras-600 009**

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

136370

## பொருளடக்கம்

**1985 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் நாள்.**

பக்கங்கள்


(அ) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் — i—iv

(ஆ) Personnel of the Government of Tamil Nadu — v—vi

(இ) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் — vii - viii

(ஈ) தொகுதிகள் உள்ளிட்ட, தமிழ்நாடு சட்ட மன்றப்பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப் பட்டியல். — viii—xvi

1. வினாக்கள்—விடைகள்:
   - உடுக்குறியிட்ட வினாக்கள் — 1—33

2. கவன ஈர்ப்புகள் :
   - (அ) கொடைக்கானல் பாண்ட்ஸ் நிறுவனத்தின் கழிவு நீரால் சுற்றுப்புற சூழல் பாதிக்கப் பெறுவது — 34—36
   - (ஆ) வெள்ளம் ஏற்படுவதைத் தடுக்க வேளச்சேரி ஏரியில் நீர்க்குறைப்புப் பணியை மேற்கொள்ளுதல் — 36—38

3. அரசினர் சட்ட முன் வடிவுகள்:
   - (அ) சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை நீட்டித்தல்) சட்ட முன் வடிவு 1985 — 38
   - (ஆ) எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன் வடிவு 1985 — 38—54

4. வரவு-செலவுத்திட்டம், 1985—86, வாக்கெடுப்பு (தொடர்ச்சி)—
   - (அ) கோரிக்கை எண் 33—வீட்டு வசதி — 54
   - (ஆ) கோரிக்கை எண் 34-நகர்ப்பகுதி வளர்ச்சி — 54—138
     - மாண்புமிகு திரு என். நல்லுசாமி — 54—70, 126—138
     - திரு. சி. பழனிமுத்து — 55—66
     - டாக்டர் அ. பொன்னுசாமி — 61—65
     - திரு. கு. சுப்பராயன் — 65—70
     - திரு. பரிதி இளம்வழுதி — 70—78
     - திரு. சா. துரைசாமி — 78—85
     - டாக்டர் தே. குமாரதாஸ் — 85—90
     - திரு. ஜி.கே. பிரான்சிஸ் — 90—92
     - திரு. கு. ரமணி — 92—101
     - திரு. ஆ.கா.அ. அப்துல் சமத் — 102—106
     - திரு. எஸ். வேணுகோபால் — 106—113
     - திரு. எல்ல. இராசமாணிக்கம் — 113—120
     - திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் — 120—126

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். — 139


**128—179—A**

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## தமிழ்நாடு ஆளுநர் திரு. சுந்தர்லால் குரானா

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : (முதலமைச்சர்) பொது, நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்திய பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத்துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், லஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) ஆயத்துறை மற்றும் பயண இசைவுச் சீட்டு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (நிதி அமைச்சர்)- நிதி, வருவாய், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (மின்துறை அமைச்சர்)-மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு, அச்சு காகிதக் கட்டுபாடு, எழுது பொருள் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (செய்தி—அறநிலையத் துறை அமைச்சர்) செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

6. மாண்புமிகு திரு. க, இராசாராம் : (தொழில் துறை அமைச்சர்) பெருந் தொழில்கள், சுரங்கம், மற்றும் கனிவளம், மின்னணுவியல் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக்கடன் சம்பந்தப் பட்டவை.

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :'(கல்வி அமைச்சர்)— கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.



9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (வேளாண்மைத் துறை அமைச்சர்)-- வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

10. மாண்புமிகு திரு சி. பொன்னையன்: (சட்ட அமைச்சர்)— சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு மற்றும் கடன் நிவாரணம், (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல், உள்பட,

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வத் துறை, சுற்று சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (போக்குவரத்துத் துறை அமைச்சர்) —போக்குவரத்து; அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து. இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (உணவு அமைச்சர்)— உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14, மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (கைத்தறி துறை அமைச்சர்)—கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (சத்துணவு அமைச்சர்)— சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி : (வணிக வரித்துறை அமைச்சர்)—வணிகவரிகள்.

17. மாண்புமிகு திரு. எஸ். நல்லுசாமி : (வீட்டு வசதித்துறை அமைச்சர்) வீட்டு வசதி மற்றும் குடிசைமாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : (ஊரகத் தொழில் அமைச்சர்)— கிராம, குடிசை, சிறு தொழில்கள், உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. த. இராமசாமி : (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சர்)—வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.

20. மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (ஆநிதிராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம் மற்றும் மீன்வளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (சமுக நலத் துறை அமைச்சர்)—மகளிர் குழந்தைகள் உள்ளிட்ட சமூக நலம் பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : (கதர்த் துறை அமைச்சர்)—கதர், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (பொதுப்பணித் துறை அமைச்சர்) —பொதுப்பணித் துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள். மற்றும் வக்ப்

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர், இராமச்சந்திரன் (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கூட்டுறவு.



2861

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

THIRU SUNDAR LAL KHURANA.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS :

1. The Hon. Dr. M. G. RAMACHANDRAN : (Chief Minister) Public, General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaelogy, Prohibition excluding grant of Liquor permits, Excise and Passports.

2. The Hon. Dr. V. R. NEDUNCHEZHIAN : (Minister for Finance)—Finance, Revenne, Legislature, Elections, Statistics, Youth Service Corps and Ex-Service men.

3. The Hon. Thiru S. RAMACHANDRAN : (Minister for Electricity) Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. The Hon. Thiru K. A. KRISHNASAMY : (Minister for Labour)—Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The Hon. Thiru R. M. VEERAPPAN : (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology. Tourism, Tourism Development Corporation Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and grant of Liquor permits.

6. The Hon. Thiru K. RAJARAM :(Minister for Industries)-Large Scale Industries, Mines and Minerals Electronics, Science and Technology.

7. The Hon. Thiru P. U. SHANMUGAM : (Minister for Local Administration), Municipal Administration, Panchayats Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

8. The Hon. Thiru C. ARANGANAYAGAM : (Minister for Education).—Education, Official Language, Tamil Development and Culture.

9. The Hon. Dr. K. KALIMUTHU: (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance Agricultural Engineer ing Wing andAgro-Engineering, Agro-Service Co-operative Societies, Water Supply and Drainage Board.

10. The Hon. Thiru C. PONNAIYAN:(Minister For Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of companies, Debt Relicf including Legislation on money lending nd Legislation on Chits.

11. The HON. DR. H. V. HANDE: (MINISTER FOR HEALTH) —Health and Environmental Pollution Control.

12. The HON. THIRU S. MUTHUSAMY : (MINISTER FOR TRANSPORT)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, and Highways.

13. The HON. THIRU S. THIRUNAVUKKARASU : (MINISTER FOR FOOD) Food, Price control and Census.

14. The HON. THIRU V. V. SWAMINATHAN : (MINISTER FOR HANDLOOMS)—Handlooms and Textiles.

15. The HON. THIRU R. SOUNDARARAJAN : (MINISTER FOR NUTRITIOUS MEALS)—Nutritious meals

16. The HON. THIRU T. VEERASAMY : (MINISTER FOR COMMERCIAL TAXES)—Commercial Taxes

17. The HON. THIRU N. NALLUSAMY : (MINISTER FOR HOUSING) Housing and Slum Clearance Board, Town Planning and Accommodation Control.

18. The HON. THIRU ANOOR P. G. JAGADEESAN: (MINISTER FOR RURAL INDUSTRIES)—Rural Industries including Village, Cottage and Small Industries.

19. The HON. THIRU T. RAMASAMY : (MINISTER FOR REHABILITATION AND EMPLOYMENT)—Employment and Training, Indian Overseas, Refugees and Evacuees.

20. The HON. THIRU A. ARUNACHALAM : (MINISTER FOR ADI DRAVIDAR WELFARE) Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. The HON. THIRU M. R. GOVENDAN : (MINISTER FOR BACKWARD CLASSES) Backward Classes and Fisheries.

22. The HON. TMT. GOMATHI SRINIVASAN : (MINISTER FOR SOCIAL WELFARE)—Social Welfare including Women and Children Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration.

23. The HON. TMT. VIJAYALAKSHMI PALANISAMY : (MINISTER FOR KHADI)—Khadi, Bhoodan and Gramdhan.

24. The HON. THIRU Y. S. M. YUSUF : (MINISTER FOR PUBLIC WORKS) Public works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. The HON. THIRU K. K. S. S. R. RAMACHANDRAN : (MINISTER FOR CO-OPERATION)—Co-operation.



**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்**

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு பி. எச். பாண்டியன்.

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு மா. சின்னராசு
திரு செ. செம்மலை
திரு டி. தீர்த்தகிரி கவுண்டர்
திரு மு. இராமநாதன்
திரு வே. இரா. ஜெயராமன்

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

ணைச் செயலாளர்கள்

திரு பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.
திரு வி. சீதாராமன், பி. காம்., பி.ஜி.எல்,

குழு அலுவலர்கள்

திரு கா. சீனிவாசன், பி.எஸ்.சி.
திரு கு. அ. சீனிவாசன், பி.ஏ.

சார்புச் செயலாளர்கள்

திரு செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு பெ. பாலகிருஷ்ணன், பி. காம்.
திரு பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு வ. சா. ஜான், பி.ஏ.
திரு கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.ஜி.எல்,
திரு டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்.சி., பி.எல்.

### எஸ்டேட் அலுவலர்கள்

திரு கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.
திரு கேசவராம், பி.ஏ.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்
திரு பி. கோதண்டராமன்,

துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு ஜி. எஸ். அனந்த நாராயணன், பி.லிட்.

தலைமை நிருபர்

திரு வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.

### தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப்பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும் | | தொகுதியின் பெயர் |
|---|---|---|
| (1) | | (2) |
| 1 அப்துல் சமத், திரு ஆ. கா. அ. | .. | திருவல்லிக்கேணி. |
| 2 அப்துல் மஜீத் திரு எச். | .. | வாணியம்பாடி. |
| 3 அரங்கநாயகம், திரு செ. | .. | தொண்டாமுத்தூர். |
| 4 அரிக்குமார், திரு. இரா. | .. | பேரணமல்லூர். |
| 5 அருணாசலம், திரு இரா. | .. | நாமக்கல் (செ. வ.). |
| 6 அருணாசலம், திரு எ. | .. | வரகூர் (செ. வ.). |
| 7 அன்பழகன், திரு க. | .. | பார்க்டவுன். |
| 8 அன்பழகன், திரு கே. | .. | ஓமலூர். |
| 9 அன்பழகன், திரு தி. | .. | நாட்றாம்பள்ளி. |
| 10 அன்பழகன், திரு பொ. | .. | இளையான்குடி. |
| 11 ஆண்டி அம்பலம், திரு மெ. | .. | நத்தம். |
| 12 ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி. | .. | ஆண்டிமடம். |
| 13 ஆபிரகாம், திரு ம. | .. | ஆலந்தூர். |
| 14 ஆறுமுகம், திரு அ. | .. | வந்தவாசி. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| (1) | (2) |
| 15 ஆறுமுகம், திரு எச். ஜி. | பென்னாகரம். |
| 16 ஆறுமுகம், திரு ஆர். எஸ். | ஓட்டப்பிடாரம் (செ.வ) |
| 17 ஆறுமுகம், திரு எ. எஸ். ஏ. | விருதுநகர். |
| 18 ஆறுமுகம், திரு செ. | மதுராந்தகம். |
| 19 ஆறுமுகம், திரு மு. | சேலம்–2. |
| 20 ஆனந்த கிருஷ்ணா, திரு ஜி. | பூந்தமல்லி. |
| 21 ஆனந்தன், திரு மு. | உளுந்தூர்பேட்டை. |
| 22 ரகுபதி, திரு கோ. | காட்பாடி. |
| 23 இரகுமான்கான், திரு அ. | சேப்பாக்கம். |
| 24 இரத்திலம், திரு எம். வி. | பொள்ளாச்சி. |
| 25 இரத்தினவேலு, திரு சே. | முசிறி. |
| 26 இராசமாணிக்கம், திரு ஆர். | அரூர் (செ.வ). |
| 27 இராசமாணிக்கம், திரு எல். | தாம்பரம். |
| 28 இராசரத்தினம், திரு எப். எம். | கொளச்சல். |
| 29 இராசரத்தினம் திரு எம். | விழுப்புரம். |
| 30 இராசாங்கம், திரு மு. | திருவிடைமருதூர். |
| 31 இராசாம்பாள், திருமதி த. | தலைவாசல் (செ.வ). |
| 32 இராசாராம், திரு க. | பனமரத்துப்பட்டி. |
| 33 இராசாராமன் திரு எஸ். | பாபநாசம். |
| 34 இராசு, திரு வி. கே. | அரக்கோணம் (செ.வ.) |
| 35 இராசேந்திரன், திரு எஸ். என். | தூத்துக்குடி. |
| 36 இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி. |
| 37 இராமச்சந்திரன், திரு கே. எஸ். எம். | போடிநாயக்கனூர். |
| 38 இராமச்சந்திரன், திரு கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர். |
| 39 இராமச்சந்திரன், திரு ச. | பண்ருட்டி. |
| 40 இராமச்சந்திரன், திரு சோ. மா. | அண்ணாநகர். |
| 41 இராமச்சந்திரன், திரு ப. ந. | பட்டுக்கோட்டை. |
| 42 இராமசாமி, திரு எஸ். என். | சாத்தான்குளம். |
| 43 இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம். |
| 44 இராமநாதன், திரு மு. | கோயம்புத்தூர். |

மேற்கு

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | | தொகுதியின் பெயர் (2) |
|---|---|---|
| 45 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. | ராசிபுரம் |
| 46 | இளங்கோவன், திரு ஈ. கே. கி. ச. | சத்தியமங்கலம் |
| 47 | ஈஸ்வரன், திரு ஆர். | வாசுதேவநல்லூர் (செ. வ.) |
| 48 | உச்சி, திரு கே. | கூடலூர் |
| 49 | உத்திராபதி, திரு பொ. | திருத்துறைப்பூண்டி (செ. வ.) |
| 50 | எத்திராசன், திரு கி. | அச்சரப்பாக்கம் (செ. வ.) |
| 51 | கணபதி திரு கே. ஆர். | சிதம்பரம் |
| 52 | கதிர்வேலு, திரு மா. | ராணிப்பேட்டை |
| 53 | கந்தசாமி, திரு கா. வே. | கிணத்துக்கடவு |
| 54 | கந்தசாமி, திரு பெ. | பொங்கலூர் |
| 55 | கல்லன், திரு கே. | உதகமண்டலம் |
| 56 | கலிதீர்த்தான், திரு சோ. | சங்கராபுரம் |
| 57 | காளிமுத்து, டாக்டர் கா. | மதுரை கிழக்கு |
| 58 | கிருஷ்ணசாமி, திரு கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 59 | கிருஷ்ணசாமி, திரு வி. இரா. | அணைக்கட்டு |
| 60 | கிருஷ்ணமூர்த்தி, திரு கி. | கும்பகோணம் |
| 61 | கிருஷ்ணராஜ், திரு ஜி. | சேலம்.1 |
| 62 | குப்புசாமி, திரு கு. | ஒட்டன்சத்திரம் |
| 63 | குமரகுருபர ராமநாதன், திரு ச. | விளாத்திகுளம் |
| 64 | குமரி அனந்தன், திரு | ராதாபுரம் |
| 65 | குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 66 | அண்ணாதாசன், திரு எம். | திருவரம்பூர் |
| 67 | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ. வ.) |
| 68 | கோவிந்தசாமி, திரு ஆர். | குடியாத்தம் |
| 69 | கோவிந்தசாமி, திரு ச. | எடப்பாடி |
| 70 | கோவேந்தன், திரு எம். ஆர். | பேராவூரணி |
| 71 | சங்கரலிங்கம், திரு ச. | சங்கரநாயனார் கோவில் (செ. வ.) |
| 72 | சண்முகம், திரு இரா. | திருத்தணி |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | | தொகுதியின் பெயர் (2) |
|---|---|---|
| 73 | சண்முகம், திரு என். | சோளிங்கர் |
| 74 | சண்முகம், திரு ப. உ. | மேல் மலையனூர் |
| 75 | சண்முகையா பாண்டியன், திரு | ஆலங்குளம் |
| 76 | சந்திரசேகரன், திரு ஆ. | சோழவந்தான் |
| 77 | சந்திரசேகர், திரு மு. | முகையூர் |
| 78 | சம்சுல் ஆலம் திரு. வி. எஸ். டி. | பாளையங்கோட்டை |
| 79 | சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டினம் |
| 80 | சரோஜா, திருமதி இரா. | உப்பிலியாபுரம் (ஆ. வா.) |
| 81 | சாமிக்கண்ணு, திரு தா. | செங்கம் (செ. வ.) |
| 82 | சித்தன், திரு என். எஸ். வி. | திருமங்கலம் |
| 83 | சிந்தன், திரு வி. பி. | வில்லிவாக்கம் |
| 84 | சிவக்குமார், திரு ஆ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 85 | சிவக்குமார், திரு எம். | கூர்னூர் (செ.வ.) |
| 86 | சிவஞானம், திரு என். | திருவோணம் |
| 87 | சிவப்பிரகாசம், திரு சீ. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 88 | சிவராமன், திரு எஸ். | சின்னசேலம் |
| 89 | சிவராஜ், திரு க. | ரிஷிவந்தியம் |
| 90 | சின்னக்குழந்தை, திரு மு. | ஆரணி |
| 91 | சின்னச்சாமி, திரு ரா. | தர்மபுரி |
| 92 | சின்னசாமி, திரு வே. கு. | பவானிசாகர் |
| 93 | சின்னராசு, திரு க. இரா. | கிருஷ்ணகிரி |
| 94 | சின்னராசு, திரு மா. | மேட்டுபாளையம் |
| 95 | சுந்தரதாஸ், திரு மா. | விளவன்கோடு |
| 96 | சுப்புராயர், திரு சி. | கம்பம் |
| 97 | சுபபுராயன், திரு கு. | திருப்பூர் |
| 98 | சுப்ரமணிய ஆதித்தன், திரு எஸ். ஆர். | திருச்செந்தூர் |
| 99 | சுப்பிரமணியன், திரு உ. | சிவகங்கை |
| 100 | சுப்பிரமணியன், திரு வீ. | கண்டமங்கலம் (செ. வ.) |
| 101 | சுவாமிநாதன், திரு வி. வீ. | புவனகிரி |
| 102 | செங்காளியப்பன், திரு ஆர். | சிங்காநல்லூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 103 செங்கோட்டையன் திரு கு. அ. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 104 செங்கோட்டையன், திரு பெ. | கபிலர்மலை |
| 105 செம்மலை, திரு செ. | தாரமங்கலம் |
| 106 செல்லமுத்து திரு எம். | திருவாரூர் (செ. வ.) |
| 107 செல்லப்பா, திரு வி. கோ. | கடலூர் |
| 108 செல்வராசன், திரு அ. | துறைமுகம் |
| 109 சேகர், திரு கே. பி. கே. | பொன்னேரி (செ. வ.) |
| 110 சொர்ணலிங்கம், திரு கா. | திருவாடனை |
| 111 சோலைராசு, திரு க. | மருங்காபுரி |
| 112 துரைசாமி, திரு சா. | சைதாப்பேட்டை |
| 113 சௌந்திரராசன், திரு ஆர். | ஸ்ரீரங்கம் |
| 114 சௌரிராஜன், டாக்டர் கே. | தியாகராயநகர் |
| 115 ஞானசுந்தரம், திரு சா. | மன்னார்குடி |
| 116 டேனியல்ராஜ், திரு எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 117 தங்கமணி, திரு மு. | மாயூரம் |
| 118 தங்கமணி, திரு கே. எம். | திண்டிவனம் |
| 119 தங்ராசு, திரு ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 120 தங்கராசு, திரு செ. | மங்களூர் (செ. வ.) |
| 121 தங்கவேல்ராஜ், திரு ப. ம. | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 122 தங்கவேலு, திரு வி. | வால்பாறை (செ. வ.) |
| 123 தமிழ்மணி, திரு | திருப்போரூர் (செ. வ.) |
| 124 தமிழரசன், திரு கு. | பேரணாம்பட்டு (செ. வ.) |
| 125 தனபால், திரு ப. | சங்கரி (செ. வ.) |
| 126 தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 127 தியாகராசன், திரு ஆர். | விருத்தாசலம் |
| 128 திருஞானம், திரு பி. ஆர். | ஏற்காடு (ஆ. வா.) |
| 129 திருநாவுக்கரசு, திரு எஸ். | அறந்தாங்கி |
| 130 திருமலைசாமிக் கவுண்டர், திரு சு. | உடுமலைப்பேட்டை |
| 131 தீர்த்தகிரி கவுண்டர், திரு டி. | மொரப்பூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 132 தீர்த்தராமன் திரு ப. | பாலக்கோடு |
| 133 துரை அன்பரசன், திரு | நெல்லிக்குப்பம் |
| 134 துரை கிருஷ்ணமூர்த்தி | தஞ்சாவூர் |
| 135 துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு |
| 136 துரைராசு, திரு. எஸ்.பி. | காரைக்குடி |
| 137 துரைராமசாமி திரு. | வெள்ளக்கோவில் |
| 138 தெய்வநாயகம், திரு. எ. | மதுரை சென்ட்ரல் |
| 139 தேவராஜ், திரு. வி.எம். | வேலூர் |
| 140 நடராசன், திரு. ஆ. | பேரூர் |
| 141 நரசிம்ம பல்லவன், திரு. க. | உத்திரமேரூர் |
| 142 நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 143 நல்லமுத்து டாக்டர், க. | பெரம்பலூர் (செ.வ.) |
| 144 நல்லுசாமி, திரு. என். | திருச்சிராப்பள்ளி-2. |
| 145 நாச்சிமுத்து, திரு. கே.பி. | மேட்டூர் |
| 146 நாராயணன், திரு. எஸ். | திருநெல்வேலி |
| 147 நாராயணன், திரு. பு.கோ. | பவானி |
| 148 நெடுஞ்செழியன் டாக்டர் இரா. | ஆத்தூர் |
| 149 பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 150 பரமசிவம், திரு. பா.ந. | பல்லடம் |
| 151 பரிதி இளம்வழுதி, திரு. | பெரம்பூர் |
| 152 பழனி, திரு. த. | ஆற்காடு |
| 153 பழனிச்சாமி, திரு. கா.செ. | காங்கேயம் |
| 154 பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 155 பாண்டியன், திரு. பி.எச். | சேரன்மாதேவி |
| 156 பாண்டுரங்கன், திரு. மு. | கலசபாக்கம் |
| 157 பாப்பா சுப்ரமணியன், திரு. | குத்தாலம் |
| 158 பாரதி, திரு. ஜி.கே.ஜெ. | திருவொற்றியூர் |
| 159 பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 160 பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 161 பாலகிருஷ்ணன், திரு. வ. | சிவகாசி |
| 162 பாலச்சந்திரன், திரு. வை. | பத்மநாபபுரம் |
| 163 பாலசுப்ரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 164 பாலசுப்ரமணியன், திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 165 பாலசுப்ரமணியன், திரு. வேடசந்தூர் வி.பி. | வேடசந்தூர் |
| 166 பாலன். திரு. சு. | எழும்பூர் |
| 167 பாலாஜி, திரு. கே. | காஞ்சிபுரம் |
| 168 பாலுச்சாமி, திரு. ஏ. | பரமக்குடி (செ.வ.) |
| 169 பாலுசாமி, திரு, அ, | நிலக்கோட்டை (செ.வ) |
| 170 பிச்சை, திரு. மு. | அருப்புக்கோட்டை |
| 171 பிரணவநாதன், திரு. அ. | கடலாடி |
| 172 பிரேம்குமார், திரு, ஆ. | திண்டுக்கல் |
| 173 புருசோத்தமன், திரு. எஸ். | அரியலூர் |
| 174 புஷ்பராசு, திரு. த. | திருமயம் |
| 175 பெரியசாமி, திரு. அ. | தாராபுரம் (செ.வ.) |
| 176 பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |
| 177 பெருமாள், திரு, தெ. | கடையநல்லூர் |
| 178 பெருமாள் பிள்ளை, திரு.கோ. | கன்னியாகுமரி |
| 179 பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | பழனி (செ.வ.) |
| 180 பொன்னுசாமி, டாக்டர் அ. | பெருந்துறை |
| 181 பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 182 பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 183 மணவாளன், திரு. எஸ். பி, | திருப்பத்தூர் |
| 184 மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ.வ.) |
| 185 மலர்மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி-1 |
| 186 மனோகரன், திரு. நாஞ்சில் கி. | புரசைவாக்கம் |
| 187 மனோகரன், திரு. தி.நா.கோ.அ. | திருநாவலூர் |
| 188 மாசிலாமணி, டாக்டர் ந. | ஜெயங்கொண்டான் |
| 189 மாதவன், திரு செ. | திருப்பத்தூர் |
| 190 மாதையன், திரு. யு.பி. | அந்தியூர் (செ.வ.) |
| 191 மாரிமுத்து, திரு. த. | குளத்தூர்(செ.வ.) |
| 192 மாரிமுத்து, திரு. மு. | திருப்பரங்குன்றம் |
| 193 மீனாட்சி சுந்தரம், திரு. மா. | வேதாரணியம் |
| 194 முகம்மது கனி, திரு. ஜே. | புதுக்கோட்டை |
| 195 முகம்மது சலீம், டாக்டர், க. | பெரியகுளம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 196. முசிறிபுத்தன், திரு பி. | குளித்தலை |
| 197 முத்துசாமி, திரு சு. | ஈரோடு |
| 198 முத்துராமலிங்கம், திரு பி.கே.எம். | உசிலம்பட்டி |
| 199 முத்துராமலிங்கம், திரு பொன். | மதுரை மேற்கு |
| 200 முத்துவேல், திரு.கே. | முதுகுளத்தூர் |
| 201 முத்தையா, திரு இரா. | சேடப்பட்டி |
| 202 முருகன், திரு கி. | செய்யாறு |
| 203 முருகானந்தம், திரு டி. என். | செஞ்சி |
| 204 முனிரத்தினம், திரு இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 205 யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 206 ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 207 ரவீந்திரன், திரு. ஏ. எஸ். | திருவண்ணாமலை |
| 208 ராமஜெயம், திரு. ம. நா. | வாணூர் (செ. வ.) |
| 209 ராமன், திரு. கி. | ராஜபாளையம் (செ. வ.) |
| 210 ராஜாபாபு, திரு. ஜெ. | போளூர் |
| 211 ரெங்கசாமி, திரு. ஆர். | கோவில்பட்டி |
| 212 ரெத்தினராஜ், திரு. எஸ். | நாகர்கோவில் |
| 213 லட்சுமி, திருமதி பி. | அவினாசி (செ. வ.) |
| 214 வச்சிரவேலு, திரு. எ. | தண்டராம்பட்டு |
| 215 வடிவேல், திரு. கு. | கரூர் |
| 216 வளர்மதி, திருமதி பா. | மயிலாப்பூர் |
| 217 விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 218 விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி | வீரபாண்டி |
| 219 வீரானம்பலம், திரு. க.வெ. | மேலூர் |
| 220 வீரய்யன், திரு. கோ. | நாகப்பட்டினம் |
| 221 வீராசாமி, திரு. தா. | ஒரத்தநாடு |
| 222 வேங்கடரமணன், திரு. டி. ஆர். | தென்காசி |
| 223 வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 224 வெங்கடாசலம், திரு. அ. | ஆலங்குடி |
| 225 வெங்கடாசலம், திரு. கி. | லால்குடி |
| 226 வெங்டாசலம், திரு. டி.எம். | பரகூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 227 வேணுகோபால், திரு. எஸ். | டாக்டர் ராதா கிருஷ்ணன் நகர் |
| 228 வேணுகோபால், திரு. கே.வி. | தள்ளி |
| 229 ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 230 ஜகதீசன், திரு. ஆனூர் பு. கோ. | செங்கல்பட்டு |
| 231 ஜெகதீசன், திரு. சு. | அரவக்குறிச்சி |
| 232 ஜெயச்சந்திரன், திரு. சா. | காட்டுமன்னார் கோவில் (செ.வ) |
| 233 ஜெயராமன், திரு. வே.இரா. | தேனி |
| 234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 235 பிரான்சிஸ், திரு. ஜி.கே. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் | அமைச்சர் |
| 2. மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே | அமைச்சர் |
| 3. மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் | அமைச்சர் |
| 4. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி | தலைமை வழக்கறிஞர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985, ஜூன் 26, புதன்கிழமை.

ஆனி 12, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு 2016

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" மனநலம் நன்குஉடையர் ஆயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்பு உடைத்து."

மனத்தின் நன்மையை உறுதியாக உடையவராயினும் சான்றோர்க்கு இனத்தின் நன்மை மேலும் நல்ல காவலாக அமைவதாகும்.

### 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### திருப்பூரில் ராஜ வாய்க்கால் மீது கான்கிரீட் சாலை

374—(*வினா எண். 1165)—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரின் நடுவில் ஈஸ்வரன் கோயிலை ஒட்டி ஓடுகிற ராஜ வாய்க்காலைமூடி (சாக்கடை வாய்க்கால்) அதன்மீது கான்கிரீட்ரோடு போடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இல்லை.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவரவர்களே, திருப்பூர் நகரம் வேகமாக வளர்ந்து வருகின்ற ஒரு நகரம் என்ற முறையிலேயும், நகரத்தின் நடுமையத்திலே நகரத்தின் அனைத்து சாக்கடை கழிவுநீரும் வெளியேறுகின்ற காரணத்தினாலும், கடுமையான ஆரோக்கிய குறைவு ஏற்பட்டும், கொசு உற்பத்தி அதிகமாகியும், நோய்க் கிருமிகள் அங்கே அதிகப்படியாக வருவதாலும் அதைத் தடுக்கின்ற முறையிலேயும், போக்குவரத்து நெரிசலைத் தடுக்கின்ற முறையிலேயும், நகரத்தின் தேவையை உணர்ந்தும் அக்கறையோடு மீண்டும் இதைப் பற்றிப் பரிசீலிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிடப்படும் ராஜ வாய்க்கால் அரசு புறம்போக்காக இருக்கிறது. அதை சாலை என்று மாற்றி நகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டுமென்று நகராட்சியிடமிருந்து வருவாய்த் துறை அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. வந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

## நெல்லை மாவட்டத்தில் வேலைவாய்ப்புத் திட்டப் பணிகள்.

375—(*வினா எண். 1480)—திரு. சா. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், சேரன்மாதேவி, கடையம், பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியங்களில் என்.ஆர்.இ.பி. திட்டத்தின் கீழ் எவ்வளவு பணி நடைபெற்றுள்ளது ?

(ஆ) தற்போதுள்ள ஆர்.எல்.இ.ஜீ.பி.யில் எத்தனைத் திட்டங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன ?

(இ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, (அ) நெல்லை மாவட்டம், சேரன்மாதேவி, கடையம் மற்றும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்டப் பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியங்களில் 1984–85 ஆம் ஆண்டில், பணிகளின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1 சேரன்மாதேவி .. .. .. .. | 21 |
| 2 கடையம் .. .. .. .. .. | 55 |
| 3 பாப்பாக்குடி .. .. .. .. | 47 |



(ஆ) மற்றும் (இ) : 1984–85ஆம் ஆண்டு ஊரக நில மற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகள் மற்றும் அவற்றின் கீழ் திட்ட மதிப்பீடு விவரங்கள் பின்வருமாறு :—

| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | ஒதுக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை. | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 சேரன்மாதேவி .. .. | 71 | 6.64 |
| 2 கடையம் .. .. | 55 | 4.70 |
| 3 பாப்பாக்குடி .. .. | 54 | 4.50 |

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் என்.ஆர்.இ.பி. திட்டத்தின் கீழ் நடைபெற்றுள்ள பணி கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு குறைவாக உள்ளது என்ற தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, 1984–85-ஆம் ஆண்டில் பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகளின் மதிப்பீடு, வேலைப் பணிகளின் எண்ணிக்கை ஆகியவற்றிற்கும், 1985–86-ஆம் ஆண்டு எடுக்கப்படுகின்ற வேலைப் பணிகளின் எண்ணிக்கைக்கும் ஏதேனும் மாறுபாடு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கின்ற அந்த விவரம் என்னிடத்திலே இல்லை. இருந்தாலும் பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் அப்படி வேலைகள் பாக்கியிருந்தால் இந்த ஆண்டு தொடர்ச்சியாக அது எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்பட்ட என்.ஆர்.இ.பி. பணிகள் சென்ற ஆண்டைவிட மிகவும் அதிகமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த நிதியை உயர்த்தித் தருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு குறைந்திருப்பதால்தான் ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற தொகையும் குறைவாக இருக்கிறது. அதுவும்கூட, இனிமேல் ஒன்றியங்களுக்கு ஒதுக்குவதில்

சில விதிமுறைகளை வகுத்துத் தந்திருக்கிறார்கள். அதன்படி தான் ஒதுக்கப்படும். சென்ற முறை ஒதுக்கீடு செய்த பொழுது எல்லா ஒன்றியங்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்தோம். அது தவறு என்று மத்திய அரசு சுட்டிக்காட்டியது. வேறு விதிமுறைகளை வகுத்துக் கொடுத்து, அதன்படிதான் ஒன்றியங்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசு கூறியிருக்கிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் என்.ஆர்.இ.பி. திட்டத்தின் கீழ் எர்த் ஒர்க்—மண் வேலை என்ற முறையில் ஊரக சாலைகளைப் பழுது பார்க்கிறார்கள். அப்பொழுது செம்மண் அடித்து வேலை செய்வதால், கோடை காலங்களில் கார்கள் போகின்றபொழுது அந்த மண் பறந்து சென்று விடுகிறது. ஆகவே, அங்கே வேலை நடந்ததாக அறிகுறியே தென்படவில்லை. அதை மாற்றுகின்ற வகையில், அங்கே என்.ஆர்.இ.பி. திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படுகின்ற தொகைகள், ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படுகின்ற தொகைகள் கட்டிடப் பணிகளுக்காக ஒதுக்கப்படுமா ? அப்படி அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பாதை அமைக்கும்போது புதிய பாதைகளாக இருந்தால் எடுத்துக் கொள்ளலாம் என்றும் ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிற பாதைகளைச் செப்பனிடுவதற்காக மேற்கொண்டு உறுதிபடுத்துவதற்காகச் செலவிடலாம் என்றும் தான் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. மண் அடிக்கிற காரியங்களை நிறுத்த வேண்டுமென்ற ஆணை பிறப்பித்திருக்கிறது. எனவே, இனிமேல் அது நடக்காது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்திலே இந்தியப் பேரரசு அளிக்கின்ற நிதியினுடைய அளவு குறைந்திருக்கிற காரணத்தாலே, சில ஒன்றியங்களுக்குக் குறைக்க வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். நான் அறிந்த வரையில், 1985—86-ஆம் ஆண்டிலே, எங்கள் பகுதியிலே, உதாரணமாக, திருமங்கலம் பகுதியை எடுத்துக் கொள்ளலாம், சரி பாதியாக, என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டங்களில் குறைந்திருக்கிற மாதிரி எங்களுக்குத் தெரிகிறது. ஆகவே, மத்திய அரசாங்கம் எவ்வளவு, குறைத்திருக்கிறது ? அப்படிக் குறைத்திருந்தாலுங்கூட எந்த எந்த தொகுதி வளம் குன்றிய அல்லது பிற்படுத்தப்பட்ட பகுதி என்பதைக் கருத்தில் கொண்டு, முன்னாலே கொடுத்த பணத்தைக் கொடுக்க அரசு தயாராக இருக்குமா ?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.எல்.இ.ஜி.பி. யைப் பொறுத்தமட்டில் சென்ற ஆண்டு எடுத்துக் கொண்ட வேலைகளை முடிப்பதற்கு மட்டும் ரூபாய் 55 கோடி தேவைப்படுகிறது. ஆனால், இந்த ஆண்டு மைய அரசு ஒதுக்கியிருப்பதோ ரூபாய் 37 கோடி. மாண்புமிகு முதல்வர் அவர்கள், டெல்லியிலிருந்து வந்த இந்தத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்தபோது வற்புறுத்திக் கூறி இருக்கிறார்கள். மேலும் ஏற்கெனவே உள்ளதை முடிப்பதற்கே ரூ. 17, ரூ. 18 கோடி தேவைப்படுகிறது. புதிய வேலைகளை எடுக்க முடியவில்லையென்றும் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள். மைய அமைச்சர் கவனிப்பதாக சொல்லிவிட்டுச் சென்றார்கள். என்.ஆர்.இ.பி. பொறுத்தமட்டில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற புள்ளி விவரம் என்னிடத்திலே இல்லை. ஆனால், கணிசமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு ஒதுக்கிய தொகையை எல்லா ஒன்றியங்களுக்கும் சரிசமமாகப் பிரித்துக் கொடுத்து விட்டோம். ஆனால் கொடுத்தது சரியல்ல என்று மத்திய அரசாங்கம் கூறியிருக்கிறது. வேறு சில விதிமுறைகளை வகுத்து அதன்படிதான் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.ஸை முடித்து விட்டு அதற்குப் பிறகு என்.ஆர்.இ.பி. ஸ்கீம் தொடர்ந்து முடிக்கப்பட்டது. இந்த ஆர். எல். இ.ஜி.பி. ஸ்கீமில் எந்த அடிப்படையில் அங்கே பணம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது ? கிராமத்தின் அடிப்படையிலா, அல்லது பணப் பற்றாக்குறை உள்ள ஊராட்சி ஒன்றிய அடிப்படையிலா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, எஸ்.எஸ். ஸ்கீம் என்பது மாநில அரசே முழு பொறுப்பை ஏற்றுக் கொண்டு, முழுத் தொகையும் மாநில அரசே ஒதுக்குகின்ற திட்டம். என்.ஆர்.இ.பி. திட்டம் என்பது மத்திய அரசாங்கம் 50 சதவீதம், நாம் 50 சதவீதம் என்று கொடுக்கிற திட்டம். ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டம் மத்திய அரசாங்கமே கொடுக்கிற திட்டமாகும். மத்திய அரசாங்கமே நடவடிக்கை எடுத்து இன்ன, இன்ன வேலைகளுக்குத்தான் செலவழிக்க வேண்டுமென்று வகுத்துக் கொடுக்கிறார்கள். அவைகளுக்கு ஒதுக்கிவிட்டு மாவட்டங்கள்தோறும் பிரித்துக் கொடுக்கிறோம். மத்திய அரசாங்கம் ஒதுக்கியிருக்கிற தொகை குறைந்திருக்கிற காரணத்தால்தான் இப்பொழுது பற்றாக்குறை ஏற்படுகிறதே தவிர வேறு காரணம் அல்ல.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நிறைவேற்றி வரக்கூடிய என்.ஆர்.இ.பி., ஆர். என். இ.ஜி.பி. திட்டங்களைப் போன்ற திட்டங்களை நிறை

வேற்றுவதற்காக மத்திய அரசு பல்வேறுவிதமான விதிகளை விதித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். என்ன, என்ன விதிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன? எந்த அடிப்படையில் மேலும் பணம் ஒதுக்க அவர்கள் விரும்புகிறார்கள் என்ற விவரங்களை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த முழு விவரம் என்னிடத்திலே இல்லை. அந்த, அந்த மாவட்டங்களிலே பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் எவ்வளவு இருக்கிறார்களோ, அதற்கேற்றவாறும் விவசாயப் பெருங்குடி மக்கள் எவ்வளவு இருக்கிறார்களோ அதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு ஒதுக்குவது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த என்.ஆர்.இ.பி. திட்டத்தின்கீழ் வெட்டப்படுகின்ற சாலைகளின் அகலமானது 24 அடி இருக்க வேண்டுமென்றும் ஆர்.எல்.இ.ஜி.பி. யில் வெட்டுகின்ற சாலைகளின் அகலமானது 36 அடி இருக்க வேண்டுமென்றும் வகுக்கப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால், குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அப்படி அகலமான ரோடுகளையே அங்கே எடுக்க முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே திட்டங்கள் தொடங்குவதற்கு வாய்ப்பில்லை. எனவே, 36 அடி அகலச் சாலைகள் வெட்ட வேண்டுமென்று இருப்பதைக் குறைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அதுபற்றி எழுதிக் கொடுப்பாரானால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மண் வேலைகள் செய்வதை நிறுத்தி வைத்திருப்பதாகத் தெரிவித்தார்கள். அதிலே உள்ள குறைபாடு மண் வேலைகள் அதிகமாகச் செய்யப்படுவதில்லை. பணம்தான் அதிகமாக விரயம் ஆகிறது என்ற எண்ணத்திலே நிறுத்தி வைக்கப்பட்டதாக அறிவித்து இருக்கிறார்கள். அது உண்மைதான். அப்படிச் சில கிராமங்களிலே ஆதி திராவிட மக்களுக்குச் சுடுகாட்டுப் பாதைகள் இல்லாத, இன்னும் சாலைகள் இல்லாத கிராமங்களுக்குப் பாதகம் ஏற்படுகிறது என்ற காரணத்தாலே, சில விதிவிலக்கு அளித்து, மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது வட்டார வளர்ச்சி அதிகாரியோ நேரடிப் பார்வையிட்டு அப்படிப்பட்ட இடங்கள் அத்தியாவசியமான இடமாக இருப்பதால், அவற்றிற்கு விதிவிலக்கு அளித்து, அந்த மண் வேலைகளுக்கு உத்தரவிட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, புதிய பாதைகள் போடுவதை அரசு தடுக்கவில்லை. போடப்பட்டிருக்கிற சாலைகளை மெட்டல் சாலைகளாக மாற்றுவதையும் அரசு தடுக்கவில்லை. செய்யச் சொல்கிறோம். ஆனால் மண் வாரி போடுகிறோம் என்று சொல்லி, அதிலே சில தவறுகள் நடைபெறுவதாகத் தெரிவதால் அப்படிப்பட்ட பணிகளைச் செய்ய வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல எங்கும் அப்படிப்பட்ட சிக்கல் இருப்பதாகத் தெரியவில்லை. எங்காவது இருந்தால், எழுதிக் கொடுத்தால் அரசு பரிசீலிக்கும்.

(முற்பகல் 9-10)

## புலவர் மற்றும் பி. லிட். பட்டதாரிகள்.

376—(*வினா எண் 715)—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985 ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்திருந்த புலவர் மற்றும் பி.லிட். பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக எவ்வளவு ?

(ஆ) நடுநிலைப் பள்ளிகளில் புலவர் மற்றும் பி. லிட். பட்டம் பெற்றவர்களை நியமனம் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, (அ) மாவட்ட வாரியாக விவரங்கள் இல்லை. எனினும், மாநில அளவில் 31—12—1984 அன்றைய நிலவரப்படி ஆண்கள் 1,494 பேர்களும், பெண்கள் 3,071 பேர்களும் ஆக மொத்தம் 4,565 மொழி ஆசிரியர்கள் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ளனர்.

(ஆ) இது குறித்து 21—7—1979 லேயே அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. ந. சிவஞானம் : தலைவரவர்களே, நடுநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருப்பவர்களில் பலர் புலவர் அல்லது பி.லிட். பட்டம் பெற்றவர்கள் என்று சொல்கிறார்கள். அதைப்போன்ற தொடக்கப் பள்ளிகளிலும் புலவர் அல்லது பி.லிட். பட்டம் பெற்றவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மாநில அளவில் ஆசிரியர் பற்றாக்குறை இருக்கிறதா என்று தெரிந்த பின்னால் இதுகுறித்து முடிவு செய்யப்படும்.

சத்துணவு மையங்களில் திருக்குறள் வகுப்புகள்.

377—(*வினா எண் 942)—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவு மையப் பொறுப்பாளர்கள் பிற்பகல் 3 மணி வரை சார்ந்துள்ள பள்ளிகளில் தங்கி வகுப்புகளில் திருக்குறள் போதிக்க வேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளதா ?

(ஆ) இவர்கள் வகுப்பு நடத்தும்போது அவ்வகுப்பாசிரியரின் பணி என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, (அ) பள்ளிகளில் 1–5 வகுப்புகளில் பிற்பகலில் சத்துணவு அமைப்பாளர்கள் திருக்குறள் கற்றுத் தரவேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

(ஆ) மாணவர்களுடைய பதிவுத்தாள், பதிவேடுகள் முதலியவற்றை எழுதிப் பராமரித்தல்; மாணவர்களுடைய பயிற்சிச் சுவடிகளைத் திருத்துதல் ; பாடக் குறிப்புகளைத் தயாரித்தல்; போதனைக் கருவிகளைத் தயாரித்தல் ஆகிய பணிகளில் வகுப்பு ஆசிரியர்கள் ஈடுபடவேண்டும்.

திரு. ஆர். தியாகராசன் : தலைவரவர்களே, சத்துணவு பொறுப்பாளர்கள் ஒரு மணிக்கெல்லாம் சத்துணவு அளித்து விட்டு ஓய்வு எடுத்துக் கொள்கிறார்கள். அதனால் அவர்கள் திருக்குறள் மட்டும் சொல்லிக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் அந்த மாணவர்களுக்கு ' பிரைவேட் ' சொல்லிக் கொடுப்பது போன்ற காரியங்களில், அதாவது ஒரு மணி முதல் 5 மணி வரையிலுள்ள காலத்திற்குள் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பள்ளி நாள் ஒவ்வொன்றிலும் சத்துணவு அமைப்பாளர்கள் ஒரு நாளைக்கு 45 நிமிடம் கொண்ட ' பீரியட் ' ஒன்றில் 3 முதல் 5 வகுப்பு வரையிலுள்ள மாணவர்களுக்குத் திருக்குறள் கற்றுத் தர வேண்டும். 1, 2 வகுப்பு மாணவர்கள் திருக்குறளை மனப்பாடம் செய்ய கற்றுத் தர வேண்டும். சத்துணவு அமைப்பாளர்கள், சத்துணவு தயாரித்து, பரிமாறி முடிந்தபிறகு இந்த வகுப்பு



களை நடத்த வேண்டும். திருக்குறளை மாணவர்களுக்குச் சொல்லித் தரும்போது அந்த அந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களை வழிகாட்டியாகக் கொண்டு, அவர்கள் ஆலோசனைப்படி சொல்லித் தர வேண்டும்.

திரு. ஆர். தியாகராசன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதற்கு நன்றி. ஆனால் பள்ளிகளிலே நான் விசாரித்த அளவில் அவர்கள் அந்தச் செயலைச் செய்யவில்லை. அந்த உத்தரவு எப்போது பிறப்பிக்கப்பட்டது ? அது இப்போது நிறைவேற்றப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, 22–2–1983 இல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இப்போதும், நடைமுறையில் இருக்கிறது. ஏதாவது பள்ளியில் இந்தப் பணி நடைபெறவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால் விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே, சத்துணவு மைய பொறுப்பாளர்களை முழு நேர ஊழியர்களாக்கி, அவர்களுக்குச் சற்று கூடுதல் சம்பளம் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதுபற்றி தனிக் கேள்வி மூலம் சத்துணவு அமைச்சரிடம் கேட்க வேண்டும்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குறள் வகுப்புகளை நடத்துவதன் மூலம் சத்துணவுப் பொறுப்பாளர்கள் போதிக்கின்ற பணியில் ஈடுபடுகிறார்கள் என்பதால் அவர்களை ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் தரத்திற்கு உயர்த்துகின்ற திட்டம் பற்றி அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குறள் போதிக்கக்கூடிய அளவுக்கு அவர்கள் தமிழ் படித்திருக்கிறார்கள் என்ற அடிப்படையில்தான் அவர்களுக்கு இந்தப் பொறுப்பை நாம் தந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. பாண்டுரங்கன் : பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களில் திருக்குறளைக் கற்றுத் தரன் நல்ல ஆசிரியர்களை ஏற்பாடு செய்ய இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சத்துணவு மையப் பொறுப்பாளர்கள் மற்றும் அமைப்பாளர்கள் என்ற முறையில் அந்தப் பொறுப்புக்களை நிறைவேற்றியபின் அவர்களை இந்த வகையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதால்தான் திருக்குறள் போதிக்கின்ற அதாவது திருக்குறளை மனப்பாடம் செய்துகொள்கின்ற அளவுக்குச் சொல்லித் தருகின்ற பொறுப்பை அவர்களிடத்தில் நாம் தந்திருக்கிறோம். எனவே இதற்காகத் தனியாக ஆசிரியர்கள் நியமிக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே சத்துணவு மையப் பொறுப்பாளர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவதற்காக உத்தரவிட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசு திருக்குறள் நடத்துவதற்கு தனியாகச் சம்பளம் கொடுக்கின்றதா? பால சேவிகாக்கள் போன்றவர்களைப் பொறுத்தவரையில் குடும்ப நலத் திட்டத்திற்காகப் பெண்களை அழைத்து வரும்படி சொல்லப் படுகின்றது ஆனால் இவர்களுக்கு மட்டும் அந்தப் பொறுப்பு இல்லாமல் இருப்பதற்கான காரணத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளில் சத்துணவு போடுகிறோம். குழந்தைகள் சாப்பிடுகிறார்கள் அதற்கென்று பெண்களைப் போட்டிருக்கிறோம். அந்த அமைப்பாளர்கள் திருக்குறள் சொல்லித்தந்தால் திருக்குறள் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் ஒரு கூடுதலான வாய்ப்பு கிடைக்கும் என்ற எண்ணத்தில்தான் நாம் இதைச் செய்திருக்கிறோம். எனவே இதற்கும் மற்ற பிரச்சினைகளுக்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சின்னராஜ : பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வரின் குழந்தைகள் சத்துணவு திட்டத்திற்கான கூடத்தில் நடத்தப்படும் பள்ளிகள் பள்ளிக் கல்வி இயக்குநரகத்தோடு சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றதா ? அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கின்றதா ? ஆரம்பப் பள்ளிக்கல்விக்கென்று தனியாக இயக்குநரகம் இருப்பது போல், உயர்நிலைப்பள்ளிக் கல்விக்குத் தனியாக இயக்குநரகம் இருப்பது போல் இந்தக் குழந்தைகள் பள்ளி இயக்குநரகத்தை ஏற்படுத்தி இதைச் சீராக நிர்வகிக்க அரசு முடிவு ஏதும் எடுத்திருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திரு. டி. எர். வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையப் பொறுப்பாளர்களும், அமைப்பாளர்களும் திருக்குறளைச் சொல்லிக்கொடுக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர்களுக்கெல்லாம் திருக்குறள் புத்தகங்கள் வழங்குகின்ற திட்டம் அரசினிடத்திலே இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களிடத்திலே இருக்கும் என்றுதான் கருதுகிறேன். தேவை என்றால் அதைத் தருவதில் எந்தவிதமான கஷ்டமும் இல்லை.

### கல்வேலிப்பட்டியில் முதியோர் கல்வித் திட்டம்.

378 — (*வினா எண் 1145)—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நத்தம் தொகுதி நத்தம் ஒன்றியம் கல்வேலிப்பட்டியில் முதியோர் கல்வித் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு உள்ளது.

### மாமண்டூரில் பேருந்து நிலையம்.

379—(*வினா எண் 744)—திரு. மு. இராமநாதன், திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. எஸ். ராசாராமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) செங்கல்பட்டு மாமண்டூர் கிராமத்தில் சுமார் ரூ.20 இலட்சம் செலவில் பேருந்து நிலையம் (Bus Stand Complex) கட்டும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
(அ) ஆம்.

(ஆ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் செங்கல்பட்டு அருகில் மாமண்டூர் கிராமத்தில் சுமார் ரூ.20 இலட்சம் செலவில் பேருந்து நிலையம் ஒன்றை கட்டி வருகின்றது. இன்னும் ஒரு சில மாதங்களில் முடிவடையும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமண்டூர் மெயின் ரோட்டிலே ஒரே நேரத்தில் 6-லிருந்து 10 பஸ்கள் வரை நிற்கின்ற அளவில் அதிகமான அளவில் பஸ் பயணிகள் வந்து சேர்கின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே இந்த பஸ் நிலையத்தில் சரியான முறையில் சிற்றுண்டிகள் மற்றும் பகல் உணவு, அதிகாலை நேரங்களில் கழிப்பிட வசதி ஆகியவற்றை மனத்தில் இருத்தி அந்த பஸ் நிலையத்தில் அவை இடம் பெறக்கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நேரத்தில் 24 பேருந்துகள் நிற்கின்ற அளவுக்கு அதை நாம் தயார் செய்ய ஆரம்பித்திருக்கிறோம். அங்கே சிற்றுண்டிகள் மாத்திரமல்ல, இதுவரையில் இல்லாத அளவுக்கு எல்லா வசதிகளையும் கொடுக்கின்ற அளவுக்குச் செய்ய வேண்டும் என்ற உணர்வோடுதான் செய்யப்பட்டிருக்கின்றது. அதில் அதிகமான பேருந்துகள் நிற்கின்றன என்ற காரணத்தால்தான் இந்த நடவடிக்கையே எடுக்கப்பட்டிருக்கின்றது.

திரு. வி. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழக அரசு போக்குவரத்துக்களைப் பொறுத்த வரையில் நடு ரோடுகளில் கண்டக்டர்களும், டிரைவர்களும் பஸ்களை நிறுத்திவிடுகிறார்கள். அப்படி நிறுத்துவதால் பயணம் செய்யக்கூடிய பயணிகளுக்குப் பெரிய அளவில் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு நிறுத்தக்கூடிய கண்டக்டர்கள் மற்றும் டிரைவர்கள் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வண்டிகளை நிறுத்தவே கூடாது என்று சொல்ல முடியாது. அவற்றை ஒட்டி நிறுத்தத்தான் வேண்டும். ஆனால் அவற்றை எங்கெங்கே நிறுத்தவேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் எல்லா வண்டிகளையும் ஒரே இடத்தில் நிறுத்த முடியாது என்பதால் பல இடங்களில் மாற்றி நிறுத்துகிறார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் மாமண்டூரில் பேருந்து நிலையம் கட்டப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் போக்குவரத்துக் கழகங்களின் சார்பாக ஏறத்தாழ 60 இடங்களில் ஹோட்டல்கள்



கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இது இன்னும் 6 மாத காலத்திற்குள் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது அவை முடிந்தபிறகு இந்தப் பிரச்சினைகளுக்கு இடம் இருக்காது.

(முற்பகல் 9—20)

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பஸ் நிலையங்களிலே கழிப்பிடங்களுக்கு நிர்ணயம் செய்து கட்டணம் வாங்க, போர்டுகளைப் போட்டிருக்கிறார்கள். ஆனால், பயணிகளிடத்தில் 8 அணா, 1 ரூபாய் என்று வாங்கக்கூடிய நிலை இருக்கிறது. அதைப் போல உணவுப் பொருள்கள் வழங்குவதிலும் குறைந்த அளவு பயணிகளுக்கு மட்டுமே கிடைக்கின்ற நிலைமை இருக்கிறது. அதற்கும் கட்டணத்தை நிர்ணயம் செய்து, அப்படி நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தின் அடிப்படையில் மட்டும் தான் காசு வசூலிக்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ? அப்படி வசூலிப்பதற்கு இனியாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, கழிப்பிடங்களிலே அந்தப் பிரச்சினை ஏற்படுமானால் அதை கண்டிப்பாக தடுத்து நிறுத்த நடவடிக்கை.மேற்கொள்ளலாம். ஏற்கெனவே எடுக்கப்பட்டும் இருக்கிறது. சிற்றுண்டிகளைப் பொறுத்த வரையில் கட்டுப்படியாகக்கூடிய விலையைக் குறிப்பிட்டு அதற்குள்ளே தான் அவர்கள் விற்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கலாம்.

திரு. பூ. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களிலே உள்ள பேருந்துகள் குறிப்பிட்ட இடத்திற்குக் காலதாமதமாகவே வருகின்றன. அதற்குக் காரணம் குறிப்பாக சென்னையிலே இருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகிற நேஷனல் ஹைவேஸ் ரோடுகளில் செக் போஸ்டுகள் அதிகமாக இருக்கின்றன. அங்கே எல்லாம் ரோடுகளில் லாரிகள் நின்று கொண்டு பேருந்துகள் போகிற பாதையைத் தடை செய்கின்றன. அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, செக் போஸ்ட்டுகள் இருந்தாக வேண்டியிருக்கிறது. ஆனால், லாரிகளை ரோடுகளிலே நிறுத்தாமல் பக்கவாட்டிலே நிறுத்தி பேருந்துகள் செல்வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை

எடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு, முயற்சிகள் எடுக்கப் பட்டு வருகின்றன. பக்கத்திலே இருக்கிற நிலங்களை அதற் காக ஆர்ஜிதம் செய்வது பற்றிக்கூட, முன்பு மானியத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அது அவ்வளவு சுலபமாக எடுக்கக் கூடிய நடவடிக்கை அல்ல. பக்கத்திலே உள்ள நிலங்களை எடுக்க வேண்டுமென்றால் நோட்டீஸ் கொடுத்த பிறகு செய்ய வேண்டும். அதற்குக் காலதாமதம் ஆகும். அந்த முயற்சி எடுக் கப்படுகிறது.

கோத்தகிரியிலிருந்து புதிய பேருந்து வழித்தடங்கள்.

380—(*வினா எண் 1027)—திரு. எம். சிவக்குமார் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

கோத்தகிரியிலிருந்து பழனி, பாலக்காடு ஆகிய இடங்களுக்கு நேரடி பேருந்து விட அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, கோத்தகிரி-பாலக்காடு வழித்தடம் தமிழ்நாடு, கேரளம் ஆகிய இரு மாநிலங்களுக்கிடையே வருகின்ற ஒரு வழித்தடமாகும். தமிழ்நாடு, கேரளா அரசுகளுக்கிடையே தற்போது உள்ள ஒப் பந்தத்தின்படி இவ்வழித்தடம் சேர்க்கப்படவில்லை. இனிவரும் ஒப்பந்தத்தில் இவ் வழித்தடம் சேர்க்கப்பட முயற்சி எடுக்கப் படும். பின்பு பேருந்தை இயக்கலாம்.

திரு. எம். சிவக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகின்ற ஆண்டி லாவது அதை நடைமுறையில் கொண்டு வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, வருகிற ஆண்டு என்று சொல்ல முடியாது. வருகிற ஒப்பந்தத் திலே அதைச் சேர்ப்பதற்கு முயற்சி எடுக்கப்படும்.

திரு. சு. சிவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ஊட்டியிலேயிருந்து சென்னைக்கு நேரிடையாக பஸ் போக்குவரத்தை ஏற்படுத்தித்தரும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இது கோத்தகிரிக்கும் கேரளாவிற்கும் இடையில் உள்ள ஒரு வழித்தடத்தைப் பற்றிய பிரச்சினை. அவர்கள் இப்போது





ஊட்டியிலேயிருந்து சென்னைக்கு கேட்கிறார்கள். ஊட்டிக்கு விடுகிறபோது பெரிய பேருந்துகளை விட முடியாது. சிறிய பேருந்துகளைதான் அங்கே இயக்குவதற்கு சுலபமாக இருக்கும். ஆகவே, சிறிய பேருந்துகளை தான் விட வேண்டும். அதிலே பிரச்சினை என்னவென்றால், ஊட்டி மலையை விட்டு கீழே இறங்கி அதற்குப் பிறகு சென்னைக்கு இயக்கப்பட வேண்டும். அது நட்டம் தரும், ஏனென்றால் குறைந்த அளவு பேசஞ்சர் களையே கொண்டு வர வேண்டியிருக்கும். ஆகவே, ஊட்டியிலே இருந்து கீழே வந்து பெரிய பேருந்துகளுக்கு மாறி சென்னைக்கு வருவதுதான் சரியாக இருக்கும்.

பெருவளப்பூர்—கண்ணாகுடி சாலையில் புதிய பாலம்.

381—(*வினா எண். 1574)—திரு. இ. வெங்கடாசலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், லால்குடி தாலுகாவில், பெரு வளப்பூர்-கண்ணாகுடி செல்லும் சாலையில் பாலம் அமைக்கும் பணி தற்போது எந்நிலையில் உள்ளது ?

(ஆ) இப்பாலம் அமைக்கும் பணி எப்பொழுது முடிவடை யும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) : வினாவில் குறிப்பிட்ட சாலையில் ரூ. 6.59 இலட்சம் செலவில் இரண்டு பாலங்கள் கட்டுவதற்கான ஒப்பந் தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ஒப்பந்தங்கள் முடிவு செய்த வுடன், பணி ஆரம்பித்து ஓராண்டுக்குள் முடிக்கப்படும்.

பேருந்து நிலையக் கழகம்.

382—(*வினா எண். 1631)—திரு. சே. செம்மலை : மாண்பு மிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ''பேருந்து நிலையக் கழகம்'' (Bus Stand Corporation) ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பிக்கப்பட இருக்கிற இந்தப் பேருந்து நிலையக் கழகம் என்னென்ன நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக என்னென்ன பணிகளை மேற்கொள்வதற்காக ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்கிற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பது அல்ல. இப்போது ஆய்விலே வைத்திருக்கிறோம். இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை. ஆரம்பிக்க வேண்டுமென்று நினைப்பதற்குக் காரணம், தனிக் கழகமாக இருக்குமானால் வெளியிலே இருந்து கடன் வாங்கி விரைவாக அதன் பணிகளை நடத்த வசதி ஏற்படுமே என்றுதான். காரணம் ஊராட்சி ஒன்றியங்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் ஏற்கெனவே மக்களுக்குத் தேவையான பணிகளைச் செய்யும் வேலை அதிகமாக இருக்கிற காரணத்தினால், இந்தப் பேருந்துநிலையங்களைப்பராமரிக்க அவைகளுக்குச்சிரமமாகஇருக்கிறது. இதை எல்லாம் கவனத்தில் வைத்துத்தான் தனி கழகமாக வைத்தால், அதன் மூலமாக கடனைப் பெற்று சரிவர அதன் பராமரிப்புகளை, விஸ்தரிப்புகளைச் செய்ய முடியும் என்பதனால், போக்குவரத்துத் துறையும், உள்ளாட்சித் துறையும், இதனை மிகவும் தீவிரமாக ஆய்வு செய்துகொண்டிருக்கிறது. அதன் முடிவு வந்த பிறகுதான், முழுமையாகச் சொல்ல முடியும்.

திரு. செ செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கழகம் ஆரம்பிக்கப்பட்டு, அதன்மூலம் பேருந்து நிலையங்கள் கட்டப்படுகின்ற நிலைமை ஏற்படுகின்றபோது நகராட்சிக்கு வருகின்ற வருவாய்க்கு இழப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்த வருவாய்க்கு முழுமையான பாதுகாப்பு கொடுக்கப்படுகின்றது. அந்த வருவாய் திருப்பிக் கொடுக்கப்படும்.

## சென்னை பெருநகரில் குடிசை மாற்றுப் பணிகள்

*383—(*வினா எண் 1363)—* திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாப்பூர் தொகுதியில் தனியாருக்குச் சொந்தமான இடங்களில் கட்டப்பட்டிருக்கும் குடிசைப் பகுதிகளை அரசே எடுத்து குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?





மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்றுக்கணக்கான குடும்பங்கள் திடீரென்று தனியாருக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து உயர்நீதி மன்றத்தின் ஆணையின் மூலம் வெளியேற்றப்படுகிறார்கள். அவர்களுக்கு அந்தத் தனியார் இடங்களை அரசாங்கமே விலை பேசி, அந்த நிலங்களில் அவர்கள் திருப்பிக் குடியேறுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் இடங்களிலே இருக்கின்றவர்களுக்கு உதவ, தனிப்பட்ட வகையில் அந்த உரிமையாளர்களிடம் பேசி, அவர்கள் ஒப்புக் கொண்டால், விலை கொடுத்து வாங்கி அதிலே குடியமர்த்தலாம். அப்படி ஒத்துக்கொள்ளாதபோது தான் பிரச்னை ஏற்படுகிறது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டிருக்கின்ற பல வீடுகள் பழுதடைந்து காணப்படுகின்றன. அவற்றைச் சீரமைக்கும் பணியில் அரசாங்கம் ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பகுதியில் அப்படிப்பட்ட பழுதடைந்த நிலைமை இருக்கின்றது என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் எழுதிக் கொடுத்தால், அதுபற்றி தனியாக கவனம் செலுத்தப்படும்.

திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் உலக வங்கி திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதிகளுக்குப் பட்டா வழங்கியும், கடனுதவி அளித்து குடிநீர், சாலை வசதிகள், மின்சார வசதிகள் போன்ற வசதிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குடிசைப் பகுதிகளில் தீ விபத்து அடிக்கடி ஏற்படுகிறது. எனவே, இதைத் தடுக்க மேம்பாடுடைய குடிசைப் பகுதிகளில் ஓலைகளுக்குப் பதிலாக ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் பயன்படுத்துகின்ற முறையில் இந்தக் கடனுதவியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது நல்ல யோசனை. நிதி நிலையை அனுசரித்து முடிவு எடுக்கப்படும்.

[1985 ஜூலை 26

384—(*வினா எண் 1807)—திரு. எல். இராசமாணிக்கம் : மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில், 148-வது வட்டம் வேளச்சேரியிலும், 149-வது வட்டம் இந்திரா நகர்-தரமணி, 150-வது வட்டம் திருவான்மியூர் பம்மல் பேரூராட்சி போன்ற பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதிகளை குடிசை மாற்று வாரியம் மூலம் அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) 148வது வட்டம் வேளச்சேரியில் உள்ள 14 குடிசைப் பகுதிகளையும் 150வது வட்டம் திருவான்மியூர் பகுதியில் உள்ள 15 குடிசைப்பகுதிகளையும் மேம்படுத்தும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. பம்மல் பேரூராட்சி மற்றும் தரமணியில் உள்ள குடிசைப்பகுதிகளை மேம்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 148-வது வட்டத்தில் 14 பகுதிகளையும், 150வது வட்டத்தில் 15 பகுதிகளையும் அறிவித்திருக்கிறார்கள். அவை எந்தெந்த பகுதிகள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 148வது வட்டத்தைப் பொறுத்தவரையில் ஸ்வீப்பர்ஸ் காலனி, சாஸ்திரி நகர், டாங்கு பண்டு குடிசை, ஜகந்நாதபுரம், திரௌபதி அம்மன் கோயில் தெரு, புகாரி, புது காலனி, மாங்குளம், காமராஜ் நகர், காமராஜ் காலனி, கக்கன்ஜி காலனி, இந்திரா காந்தி நகர், பெரியார் நகர், நேரு நகர் ஆக 14 இடங்களையும் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அபிவிருத்தி செய்ய, சீப் என்ஜினியர் (இரிகேஷன்) அவர்களின் யோசனையைப் பெற வேண்டியிருக்கிறது. காரணம், அந்தப் பகுதிகள் வெள்ளப் பகுதிகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது வந்தவுடன், பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(முற்பகல் 9–30)

திரு. எல்ல. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, தரமணிப் பகுதியிலே ஒரு கழிப்பிடம் கட்ட பெரிய தொகை செலவழித்துக் கட்டப்பட்டும் 4 ஆண்டுகளாக அது துவக்கப்படாமல் இருப்பதன் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.



1935 ஜூலை 26]

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

## ஆதி திராவிட மாணவர்களுக்குச் சுயவேலை வாய்ப்பு.

385 (*வினா எண் 1005)—திரு. செ. செம்மலை: மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிட மாணவர்களுக்காக சிறப்பு சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : மத்திய சிறப்பு உதவி நிதியிலிருந்து நகர்ப்புறத்தில் உள்ள ஆதிதிராவிடர்களுக்காக சுயவேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி திட்டம் அமுல் நடத்தப்படுகிறது. இத்திட்டத்தால் பயன் பெறுவோரில் மாணவர்களும் சுயவேலை வாய்ப்போ அல்லது பயிற்சியோ பெறலாம். எனவே தனியாக சிறப்பு சுய வேலைவாய்ப்பு திட்டம் ஆதி திராவிட மாணவர்களுக்கென்று ஏதும் அரசிடமில்லை.

திரு. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மத்திய சிறப்பு நிதி உதவி மூலமாக நடப்பு ஆண்டில் எத்தனை ஆதிதிராவிடர்கள் பயன் பெற இருக்கிறார்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே ஆதிதிராவிட மாணவர்கள் வேலை
வாய்ப்புப் பெறும்பொருட்டுச் சில பயிற்சிகள் தரப்படுகின்றன.
தமிழகத்தைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு தேர்வாணைக்
குழுவால் நடத்தப்படும் தொகுதி 4 பணிக்குரிய போட்டித்
தேர்வினை எழுத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குச்
சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்திய ஆட்சிப்பணி, மற்
றும் இந்தியக் காவல் பணி போன்ற அனைத்து இந்தியப் பணி
களுக்கான போட்டித் தேர்வுகள் எழுத விழையும் ஆதிதிராவிடர்
மற்றும் பழங்குடியினரின் வெற்றிவாய்ப்பினை மேம்படச்
செய்ய, முன் பயிற்சி 1966ஆம் ஆண்டிலிருந்து அளிக்கப்
படுகிறது. முதல் வகுப்பில் தேர்ச்சி பெறுகின்ற திறமை,
மிக்க ஆதிதிராவிட விண்ணப்பதார மாணவர்களின் பெற்றோ
ரின் ஆண்டு வருமானம் ரூ. 12 ஆயிரம் அல்லது அதற்குக்

குறைவாக இருப்பின், டெல்லியில் உள்ள டாக்டர் ராவின் படிப்பு மையத்திற்குக் குடிமுறை அரசு பணித் தேர்வுகளில் சிறப்புப் பயிற்சி பெறவும் அனுப்பப்படுகிறார்கள்.

தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி பெற்ற ஆதிதிராவிடர் பழங்குடி மாணவர்கள் போதிய எண்ணிக்கை இல்லையாதலால், தட்டச்சர், சுருக்கெழுத்தர் பதவிகளில் அவர்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள 18 சதவீத இடங்களை நிரப்ப இயலாது போகிறது. இதனைக் கருத்திற்கொண்டு, தனியார் நடத்தும் வணிகக் கல்வி நிறுவனங்களில் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கும் பழங்குடி மாணவர்களுக்கும், தட்டச்சு, சுருக்கெழுத்தில் பயிற்சி அளிப்பதற்கான சிறப்புத் திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்தின்படி 950 மாணவர்களுக்குத் தட்டச்சுப் பயிற்சியும், 475 மாணவர்களுக்குச் சுருக்கெழுத்துப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

வழக்கறிஞர் தொழில் செய்ய விரும்பும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியைச் சேர்ந்த சட்ட பட்டதாரிகள், தங்கள் பெயரை வழக்கறிஞர் குழுவில் பதிவு செய்து கொள்ளவும், அவர்கள் தங்கள் தொழிலை நடத்தும் பொருட்டும் நீதிமன்றக் கட்டடங்களில் ஒதுக்கப்படுகிற வழக்கறிஞர்களுக்கான அறை வாடகை போன்ற செலவிற்காகவும் கடனாக ரூ. 750-ம் மற்றும் சட்டப் புத்தகங்கள் மரச் சாமான்கள் முதலியவை வாங்குவதற்கு ரூ. 750 மானியமாகவும் அரசு வழங்குகிறது. மத்திய சிறப்பு நிதியிலிருந்து நகர்ப்புறத்தில் உள்ள ஆதிதிராவிடர்களுக்காக சுய வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டம் அமல் நடத்தப்படுகிறது. சென்னை, செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தர்மபுரி, சேலம், பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி, தஞ்சாவூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, போன்ற இடங்களில் பயன்பெற்றவர்கள் மொத்தம் 3,500 பேர்கள் ஆகும்.

சிதம்பரத்தில் நலத்துறையின்கீழ் தொழிற் பயிற்சிப்பள்ளி.

386—(*வினா எண். 1275)—திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் சிதம்பரம் நந்தனார் மேல்நிலைப் பள்ளியில் தொழிற் பயிற்சிப் பள்ளி (I.T.I.) துவங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?



மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே (அ) இல்லை. (ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு ஆதிதிராவிட மக்களுக்குத் தனிச் சலுகைகளையும் வாய்ப்புக்களையும் தருகிற நிலையில் இருக்கும்போது ஆதிதிராவிட மக்களுக்குத் தனியாக ஐ.டி.ஐ. பள்ளியை ஆரம்பிக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு மே திங்களில் சிதம்பரத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இளைஞர்களுக்கு சிறப்புத் தொழிற் பயிற்சி நிலையம் துவங்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நல இயக்குநர் கீழ்க்கண்ட செயற்குறிப்பு அனுப்பி இருந்தார். இத்திட்டத்திற்காக தொடரா செலவாக ரூ. 81.32 இலட்சங்களும், தொடரும் செலவாக ரூ. 10.09 இலட்சங்களும் ஆக மொத்தம் ரூ. 91.41 இலட்சங்கள் தேவைப்பட்டது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப்பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று மாநில அரசு செயல்படுத்தி வருகின்றது.

1984–85 ஆம வருடத்திற்கான பகுதி-2 திட்டங்கள் பரிசீலிப்பதற்கான காலம் ஏற்கனவே கடந்து விட்டதால் இத்திட்டத்தை 1985–86 ஆம் வருடத்திற்கான பகுதி-2 திட்டமாகக் கருதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டு, இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டது. அதற்கேற்ப 1985–86-ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டமாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதென்றும், ஆனால் இம் முன்மொழிவு மாநில திட்டக் குழுவின் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதி திராவிட விவசாயிகளுக்கு உதவித் தொகை.

387—(*வினா எண். 1276)— திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர்களுக்கு வேளாண்மைக் கருவிகள் மற்றும் உழவு மாடுகள் வாங்குவதற்கு தற்போது எவ்வளவு உதவித் தொகை வழங்கப்படுகிறது ?

(ஆ) அத்தொகையினை அதிகரிக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

[1985 ஜூன் 26

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே,
(அ) ஆதிதிராவிடர்களுக்கு உழவு மாடுகளின் விலையில்
1/3 பாகம் அல்லது உயர் அளவுத் தொகை ரூ. 600-
உழவு மாடுசள் வாங்குவதற்கு மான்யமாக வழங்கப்படுகிறது.
மீதமுள்ள 2/3 பாகம் அதாவது 1,200- பயன்பெறுவோர்
களுக்கு வங்கிகளின் மூலம் கடனாக வழங்கப்படுகிறது.
வேளாண்மைக் கருவிகள் வாங்குவதற்காக தற்போது மான்யம்
வழங்கப்படுவதில்லை.

(ஆ) இது சம்பந்தமான செயற்குறிப்பு தற்பொழுது
பரிசீலனையில் இல்லை.

திரு. கோ. இரகுபதி ; தலைவர் அவர்களே, ஆதிதிராவிட
மக்களுக்குக் கடன் மூலமாகவும், மானியமாகவும் பசு மாடுகள்
வாங்க உதவி செய்யப்படுவதாக மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி மாடுகள் வாங்கிக்
கொடுத்த 10 நாட்கள் அல்லது ஒரு மாதத்திற்குள்ளாக சந்தை
யில் கொண்டு போய் அவற்றை விற்பதாக அறிகிறோம்.
ஆகவே, ஆதிதிராவிட மக்கள் அந்த மாடுகளை விற்காமல் நல்ல
முறையில் தங்கள் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்கிற
வகையில் அவர்களை அறிவுறுத்துவதற்கான சட்டதிட்டங்களைக்
கொண்டு வருகிற அளவிற்குத் திட்டம் ஏதாவது இருக்கிறதா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே,
உழவு மாடுகள் வழங்கப்படுகிறபோது அந்த மாடுகளுக்கு
வெடர்னரி டாக்டர் மூலமாக சர்டிபிகேட் பெற்று, அந்த
மாடுகளின் காதில் சில் வைக்கப்படுகிறது. ஆகவே வாங்கிய
மாடுகளை அவர்கள் விற்கக் கூடாது என்பதற்காகத்தான்
அப்படி சில் வைக்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்காக 1985–
86-ல் உழவு மாடுகள் மற்றும் கருவிகள் கொடுப்பதற்காக
தமிழக அரசு மூலமாக ரூ. 4.96 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர்களைப் பொறுத்த
வரையில் ரூ. 2.80 லட்சமும், பழங்குடியினருக்கு ரூ. 0.92
இலட்சமும், கிறிஸ்த்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கு
ரூ. 1.24 இலட்சமும், ஆக மொத்தம், ரூ. 4.96 இலட்சங்கள்
ஒதுக்கி அந்த மக்களுக்கு பயன்படும் வகையில் திட்டங்கள் செம்
மையாக செயல்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதைத் தெரி
துக்கொள்கிறேன்.

திவு கோ. இரகுபதி : தலைவர் அவர்களே, ஆதிதிராவிட
மக்களுக்குக் கொடுக்கிற சலுகைகள் சரியான முறையில் பயன்
படுத்திக் கொள்ளப்படுவதில்லை. அந்த மக்களுக்குச் சரியாகப்
பயன்படாத காரணத்தால் அரசினுடைய எண்ணங்களும்,
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் எண்ணங்களும்
அந்த மக்களுக்குச் சரியான முறையில் பயன்படவில்லை என்பது



1985 ஜூன் 26]

தான் கருத்தாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத்
திட்டத்தின் விவரங்களை எடுத்துச் சொன்னார்கள். மாடுகள்ச்
விற்கப்படுவதைத் தடுப்பதற்காக மாடுகளின் காதில் சில் வைக்
கப்படுவதாகச் சொன்னார்கள். இருந்தாலும் அப்படி அடை
யாளம் செய்யப்பட்டாலும், அதையும் மீறி அந்த மாடுகளை
சந்தையில் கொண்டு போய் விற்று விடுகிறார்கள். ஆகவே
அரசின் நோக்கம் மக்களின் இந்தச் செயலால் கெட்டுவிடுகிறது
என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே இதனைத் தடுக்கிற
வகையில் அரசு பரிசீலனை செய்து, அந்த மக்கள் ஆக்கபூர்வ
மாக நல்ல பலனை அடைகிற வகையில் திட்டமொன்றை
தீட்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எ. அருணாசலம் : தலைவர் அவர்களே,
இதுபோன்று தவறுகள் நடைபெற்றால் குறிப்பாக இந்தஇந்த
இடங்களில் நடக்கின்றன என்று உறுப்பினர் அவர்கள் எடுத்துச்
சொன்னால் அதன்மேல் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்
கிறோம். இந்தச் சூழ்நிலையை அரசு பரிசீலனை செய்து ஆவன
செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9—40)

திரு. ஆர். எஸ் ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தத் தொகை எந்தக் காலத்திலோ நிர்ணயிக்கப்
பட்டது. அந்தத் தொகைதான் இப்போதும் மானியமாகக்
கொடுக்கிறார்கள். எனவே இந்தத் தொகையை உயர்த்துவதற்கு
அரசு ஆலோசிக்குமா? பேனாம் யாரோ, ஒன்றிரண்டு பேர்கள்
தவறு செய்கிறார்கள். இது எல்லா சமூகத்திலும் நடக்கக் கூடியது
தான். இதிலே ஆதி திராவிட மக்களை மட்டும் குறை சொல்வது
நியாயமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல்
சில இடங்களில் தவறுகள் நடக்கின்றன. இதை யார் செய்
கிறார்கள் என்பதைக் குறிப்பாகச் சொன்னால், அதன் மீது
நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,
அது எந்த இடம் என்பதை அவர்கள் குறித்துக் கொடுத்தால்,
அதற்கு வேண்டிய ஆவன செய்யப்படும் என்பதை நான் தெரி
வித்துக் கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்காக உழவு மாடுகள்
வாங்குவதற்காக தரப்படுகிற உதவித் தொகைகள் அவர்களைச்
சென்று அடைவதில்லை. பொதுவாக இப்படிப்பட்ட அரசினு
டைய உதவித் தொகைகள் பயன் பெறுவோர்களுக்குச் செல்லா
மல், அது தடுக்கப்படுகிற காரணத்தால்தான், அந்த உதவியைப்

பெற்று மாடுகள் வாங்குகின்றவர்கள் எல்லாம் பின்னாலே விற்க வேண்டிய நிலைக்கும் அதனால் வருகின்ற பயனை அடைய முடியாத அளவிற்கும் இடையிலே சில கோளாறுகள் இருக்கின்றன அதை அரசு ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், அப்படிப்பட்ட தவறு நடந்தால் அதை அரசுக்குத் தெரியப் படுத்தினால், அரசு கட்டாயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆதி திராவிட நலத்துறையின் வாயிலாக 600 ரூபாய் மானியமாகவும், 1,200 ரூபாய் கடனாகவும் உழவு மாடுகள் வாங்க உதவித் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகை தற்போது இருக்கின்ற விலைவாசியில் மாடுகள் வாங்குவதற்கு இயலாத நிலைமையிருக்கிறது. எனவே இந்தத் தொகையை 3 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா ? அதோடு, இப்படிப்பட்ட கடன்கள், ஆதி திராவிட நலத் துறையின் வாயிலாகவும், தாட்கோ மூலமாகவும் கொடுக்கப்படுகின்றது. எந்தத் திட்டம் எதன் மூலமாகக் கொடுக்கப்படுகிறது என்பதை மக்கள் அறிய வாய்ப்பு இல்லாத காரணத்தால், எல்லாக் கடன் திட்டங்களையும் தாட்கோ மூலமாகக் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி தனியாகக் கேள்வி கேட்டால், விளக்கமாகச் சொல்லப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 388 மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றது.

பாப்டா ரகத் துணி தயாரிப்பு.

389—(*-வினா எண் 797)—திரு. எஸ் என். இராமசாமி : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கதர் வாரியத்தின் மூலம் பருத்தி, பட்டு நூல்களைக் கலந்து ' பாப்டா ' என்ற ரகத் துணி தற்போது தயார் செய்யப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?





மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

குமரி மாவட்டத்தில் குளங்களை ஆழப்படுத்தும் திட்டம்.

390—(*வினா எண் 1389)— திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தூர்ந்து வரும் குளங்களை ஆழப்படுத்துவதற்காக DCR திட்டத்தினை குமரி மாவட்டத்திற்கு விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, தற்போது டி.சி.ஆர். திட்டத்தினை குமரி மாவட்டத்திற்கு விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. எஸ். ரெத்தினராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில், 40, 50 ஏக்கர் பரப்பளவு உள்ள பெரிய குளங்களான, சம்புக் குளம், பரட்டைக் குளம், பெருங்குளம் ஆகிய குளங்கள் இன்றைக்குத் தூர்ந்து போய் தண்ணீர் தேங்குவதற்கு வாய்பபில்லாமல், விளையாட்டு மைதானமாகவும் இருந்து வருவதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அந்தக் குளங்களில் கிரவுண்ட் வாட்டர் குறைந்து விட்ட காரணத்தால், இதற்காகத் தனியாக திட்டம் வகுத்து, அப்படிப்பட்ட குளங்களை ஆழப் படுத்துவதற்கு புதிய திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே பெரும்பாலான குளங்கள் கோதையாறு பாசனத் திட்டத் தின் கீழ் கொண்டு வரப்பட்ட குளங்களாக இருக்கின்றன. அவைகளில் கால்வாய்கள் மூலமாக பாசனத்திற்கு வேண்டிய தண்ணீர் விடப்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு 9 மாதங்கள் பாசனத்திற்கு வேண்டிய தண்ணீரைப் பெற்றுக் கொண்டு வருகின்றன. அதுமட்டு மல்லாமல், கடந்த 3 ஆண்டுக் காலமாகத் தொடர்ந்து கன்னியா குமரி மாவட்டத்தில் அந்தக் குளங்களின் கொள்ளளவு குறைந்து இருப்பதன் காரணமாக தீவு ஏற்பட்டதாக அரசுக்கு எந்தவித மான தகவலும் கிடையாது. நீங்கலாக, அப்படியே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, ஆழப்படுத்தவேண் டும் என்று சொன்னாலும்கூட, அந்தக் குளங்களில் இருந்து எடுக் கப்பட்ட அந்த மண்ணை பக்கத்தில் உள்ள ஆயக்கட்டுதாரர் களுடைய நஞ்சை நிலத்திலேதான் போட வேண்டிய நிலைமை யிருக்கிறது. எடுக்கப்படுகின்ற அந்த மண்ணை அப்புறப்படுத்த

[1985 ஜூன் 26

பக்கத்திலே தகுந்த இடம் இல்லாத காரணத்தால் கன்னியாகுமரி
மாவட்டத்தில் வேறு விதமான ஏற்பாடுகளின் வாயிலாக அவை
களின் கொள்ளளவை தக்க வைத்துக் கொள்ள உரிய நட
வடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, குளங்களை ஆழப்படுத்துகிற போது அதிலிருந்து
எடுக்கப்படுகிற மண்ணை போடுவதற்கு இடம் இல்லை என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நான் குறிப்
பிட்ட இந்த குளங்களில் இருந்து மண்ணை எடுத்து சாலை
அமைப்பதற்கும், வேறு பல தொழிற்சாலைகளுக்கு எடுத்துச்
செல்வதற்கும், செங்கல் தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்வதற்
கும் அந்த மண்ணை கரையில் உயர்த்தி வைத்தால் அதை
அப்புறப்படுத்துவதற்கு அந்தப் பகுதியில் இருப்பவர்கள் தயாராக
இருக்கிறார்கள் என்றும் சாலைகள் அமைப்பதற்கு அந்த மண்ணை
பயன்படுத்தலாம் என்றும் மாண்புமிகு அமைச்சருக்குக் கூறிக்
கொண்டு இந்த வகையில் மண்ணை போடுவதற்கு வாய்ப்பு
இருக்கிறது. குளங்களை ஆழப்படுத்தினால் மட்டுமே கிரௌண்டு
வாட்டர் குறைவு இருக்கிற குமரி மாவட்டத்தில் 9 மாதங்கள்
கோதையாறு பாசனம் இருந்தாலும் குளங்களில் தண்ணீரைத்
தேக்கி வைத்தால் தான் விளைச்சல் நேரத்தில் போதுமான
தண்ணீர் கிடைத்து விளைச்சல் ஏற்படும். மேலும் பொதுப்பணித்
துறையில் சாதாரணமாக குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை
யில் கோதையாறு பாசனத் திட்டம் இருக்கிறது என்று சொல்லி
குளங்களை தூர் எடுக்காமல் விட்டு விட்டக் காரணத்தால்
குளங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு அதனுடைய கொள்அளவு குறைந்து
கடைசி நேரத்தில் தீவு ஏற்படுகிறது. 3 ஆண்டுகள் தொடர்ந்து
கழிந்தால் தான் மண் எடுக்க வேண்டும் என்ற நிலைமையை
மாற்றி தனி திட்டத்தின் கீழ் ஆழப்படுத்துவதற்கு உடனடியாக
அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 3 ஆண்டுகள் தொடர்ந்து தூர் எடுக்கா
விட்டால் தான் தூர் எடுக்க வேண்டும் என்று எங்கேயும் நான்
குறிப்பிடவில்லை. நான் சொன்னது எல்லாம் தொடர்ந்து 3
ஆண்டுக் காலம் அந்த குளங்கள், அல்லது ஏரிகளை பயன்படுத்தி
வேளாண்மை உற்பத்திச் செய்கின்ற அந்த பாசனத்திற்கு உரிய
ஆயக்கட்டு நிலங்கள் தீவு ஏற்படுவதன் காரணமாக குளங்கள்
ஏரிகள் தன்னுடைய கொள் அளவு குறைந்து விடுவதன் வாயி
லாக அந்தப் பகுதி பாதிக்கப்படுகிறது என்பதை நாம் அறிய
லாம். 3 ஆண்டு காலம் தொடர்ந்து தீவு ஏற்படுவதன் காரண
மாக அரசு அந்த குளங்களை எல்லாம் அல்லது ஏரிகளை எல்லாம்
ஆழப்படுத்துவது மிக அத்தியாவசியமான ஒரு செயல் என்று
கருதவில்லை என்று நான் சொன்னேன்.



1985 ஜூன் 26]

அது மட்டும் அல்ல, இன்னும் ஒன்றையும் மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே, அங்கே இருக்கக்
கூடிய மண்ணை நாம் எடுத்து சாலைகள் அமைக்கலாம் என்று
சொன்னார்கள். குமரி மாவட்டத்தில் தகுந்த அளவு, போதிய
அளவு, தேவையான அளவு நல்ல அருமையான செம்மண் என்ற
கிராவல் கிடைக்கிறது. ஆகவே, இந்த வண்டல் மண்ணைக்
கொண்டுபோய் யாரும் சாலைகள் அமைப்பது கிடையாது என்
பதை நானும் அறிவேன். என்றாலும் ஒரு குளத்தினை ஆழப்
படுத்துவதற்கு ஒரு சில கட்டுப்பாடு, விதிமுறைகளின்படி குளங்
களை ஆழப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளில் இந்த அரசு ஈடு
படுகிறது. அந்த முறையில் நான் முன்பு கூறியது போல் ஏற்
கெனவே பாசன வசதி இருக்கிறது. அங்கே 3 ஆண்டுகளாகத்
தீவு ஏற்படவில்லை. மற்றும் எடுக்கக்கூடிய மண்ணை கொண்டு
செல்வதற்கு உரிய இடம் இல்லை ஆகிய 3 காரணங்களால் அதை
மேற்கொள்ளவில்லை என்பதை சொன்னேனே ஒழிய வேறு ஒன்
றும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, இந்தக் குமரி மாவட்டத்தில் குளங்களை ஆழப்
படுத்துவது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்
பிட்டார்கள். இருப்பினும், பெரும்பாலான குளங்கள் சிறிய,
குட்டை பகுதி மாதிரி மற்ற 4 பகுதிகளிலும் நிலங்கள் சூழ
அமைந்து இருக்கிறது. அப்படிப்பட்ட பகுதிகளில் சாணல் நீர்
கொண்டு வர முடியாத சூழ்நிலையில் இருக்கிறது. எனவே,
அப்படிப்பட்ட பெரும்பாலான குளங்கள் கிட்டத்தட்ட ஆயிரத்
திற்கும் மேற்பட்ட குளங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட
வைகளுக்கு இந்த பாசன வசதி மூலம் அந்த குளங்களை நிரப்பு
வதற்கு நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்
னதுபோல் அமைக்கப்பட்டு இருக்கிற குளங்கள் எல்லாம், ஏற்
கெனவே இருக்கக்கூடிய ஆயக்கட்டு நிலங்களுக்கு ஊடே அமைந்து
இருக்கிறது. அந்த முறையில் ஆயக்கட்டு நிலங்களுக்கு உரிய
பாசன தண்ணீர் விடப்படக்கூடிய சூழ்நிலையில் பேர்கு
லேஷன் என்று சொல்லக்கூடிய அந்த வடிகால்களில் இருந்து
எல்லாம் வடிகின்ற தண்ணீர் எல்லாம் அந்த குட்டைகளில்
தேங்கி தேவையான நேரத்தில் பயன் உள்ளதாக குமரி மாவட்
டத்தில் நிலைமை இருக்கிறது. ஆகவே, அதற்கு என்று தனி
யாக கால்வாய் தோண்டி தண்ணீர் கொண்டு சென்று அந்தக்
குட்டைகளை நிரப்பக்கூடிய சூழ்நிலையில் எந்தவிதமான திட்
டங்களும் அரசிடத்தில் இல்லை. அந்த நிலைமைகளை உரு
வாக்குவது மிகவும் கடுமையான ஒரு காரியம் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

[1985 ஜூன் 26

(முற்பகல் 9–50)

திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயக்கட்டு ஏரிகளை மூன்று ஆண்டுகளுக்குள்ளாக இருப்பதையே வேலை செய்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் என்றுகூட சில குட்டைகள் ஆழப்படுத்தப்படாமல், மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன. ஏரியிலே புதிய பகுதிகளிலே உள்ள மேல் கரைப் பகுதியில் அந்த மண்ணைப் போட்டு ஆழப்படுத்துவதற்கான வசதி இருக்கிறது. எனவே, எத்தனை ஆண்டு காலம் என்று பார்க்காமல் அந்த ஏரிகளையும் எடுத்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவரவர்களே, நான் எந்தச் சந்தர்ப்பத்திலேயும், தொடர்ந்து மூன்றாண்டுகள் ஆழப்படுத்தப்படாத ஏரிகளில் வேலை செய்வதற்குத்தான் அரசு முன் வந்திருக்கிறது என்று சொல்லவில்லை. ஆனால், ஒரு சில நிபந்தனைகளை கொண்டு குளங்களைத் தூர் வாருகின்ற திட்டம் அரசிடம் இருக்கிறது, குளத்தில் தூர் சேருவதால் அதன் கொள்ளளவில் குறைவு ஏற்பட்டாலோ, பாசனப் பரப்பில் இடைவெளி ஏற்பட்டாலோ, கடந்த காலத்தில் குளம் நிரம்பாமல் இருந்திருக்க வேண்டும். தூர் எடுக்கும் மண்ணைக் கொட்டுவதற்கு அங்கே காலி நிலங்கள் இருக்க வேண்டும். இவைகளுக்கு உட்பட்டு அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டு வருகின்றன. அந்த முறையில் ஏற்கெனவே தமிழகத்தில் உள்ள பல குளங்களில் தூர் வாரப்பட்டும், புனர் அமைப்புப் பணிகள் செய்யப்பட்டும் வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## கல்லிடைக்குறிச்சியில் குளம் மராமத்து

391—(*வினா எண் 1538)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கல்லிடைக்குறிச்சி நகர பஞ்சாயத்தில் மூலச்சி கிராமம் பகுதிவாழ் மக்களிடமிருந்து குளம் மராமத்து செய்யக் கோரி மனு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?



1985 ஜூன் 26]

மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப்: தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## குடகனாறு அணைக்கட்டு

392—(*வினா எண் 455)—திரு. இரா. தாமரைக்கனி; மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) மற்றும் திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் வேடசந்தூர் தாலுகா அழகாபுரி கிராமம் அருகே உள்ள குடகனாறு அணையை மீண்டும் கட்ட அரசு பரிசீலனை செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டத்தில் உடைந்த குடகனாறு அணையை ரூ. 920 இலட்ச மதிப்பீட்டில் மீண்டும் கட்ட அரசு ஆணை (நிலை) எண் 2396, பொதுப்பணித்துறை, நாள்: 5–12–1984 அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடகனாறு அணையில் ஏற்கெனவே உள்ள தண்ணீரின் கொள்ளளவைக் கொண்டு அணை புதுப்பிக்கப்படுகிறதா அல்லது கொள்ளளவில் மாற்றம் செய்து அணை புதிதாகக் கட்டப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். அத்துடன், இந்த அணையால் பயன்பெறும் மொத்த ஆயக்கட்டுகள் எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே 1973ஆம் ஆண்டு வேடசந்தூர் வட்டத்தில் குடகனாறு அணையைக் கட்டும் அந்தச் சந்தர்ப்பத்தில் அன்றைய அரசால் போடப்பட்ட திட்டத்தைவிட பெரிய அளவில்தான் இப்பொழுது திட்டத்தைத் தீட்டி, ஆயக்கட்டு நிலங்களும் விஸ்தீரணத்தில் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1973-ஆம் ஆண்டில் போடப்பட்ட திட்டத்தின் வாயிலாக மதுரை மாவட்டத்திலுள்ள 2,910 ஏக்கர் புதிய ஆயக்கட்டு நிலங்களும், 819 ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாசன உறுதியும் பெறும் சூழ்நிலைகளை மாற்றி

[1985 ஜூன் 26

இந்தப் புதிய அமைப்பின்படி, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த
3,662 ஏக்கர்கள் 78 சென்ட் நிலம் புதிய ஆயக்கட்டு நிலமாகவும்,
அது நீங்கலாக 819 ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாசன உறுதி பெறும்
வகையிலேயும் மாற்றப்பட்டு திட்டம் புதிய முறையிலே மேற்
கொள்ளப்பட்டுக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, இப்பொழுது பழுது பார்க்க உள்ள அந்த
அணைக்கட்டிற்குச் செலவு எவ்வளவு ஆகும்? திட்டச் செலவு
எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவ
ரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சுட்டிக்காட்டியதைப்
போல, குடானாறு அணைக்கட்டு பழுதுபார்க்கப்படவில்லை ;
புதிதாகக் கட்டப்படுகிறது என்பதைத்தான் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். இதுவரை குடகனாறு அணை, 1973-ஆம்
ஆண்டு வெள்ளச் சேதத்திற்கு உட்பட்டு, முழுக்க முழுக்க அடித்
துச் செல்லப்படும் வரையில் அரசுக்கு ஏற்பட்ட செலவு 4 கோடி
ரூபாய். இப்பொழுது புதிதாக மேற்கொள்ளப்பட்டுக் கொண்டு
வருகின்ற இந்தத் திட்டத்தின் வாயிலாக ரூபாய் 920 இலட்சம்
செலவு செய்ய அரசு உத்தேசித்திருக்கிறது என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

திரு மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, குடகனாறு அணைக்கட்டு இருக்கிற அளகாபுரி கிரா
மத்தைநான் நேரில் சென்று பார்த்திருக்கிறேன். வெள்ளச்சேதம்
ஏற்பட்ட பிறகு அந்த அணையினுடைய மெயின் கட்டுமானம்
அப்படியே இருக்கிறது. அணையைச் சுற்றியிருக்கிற மண் கரை
கள் தான் வெள்ளம் வந்தபொழுது. மதகுகள் குறிப்பிட்ட
நேரத்தில் திறக்கப்படாத காரணத்தாலே அடித்துச் செல்லப்
பட்டது. அமைச்சர் அவர்கள் சொன்ன குறிப்பிலேயிருந்து அந்த
மெயின் கட்டுமானத்தை இடித்து விட்டு புதிதாக அணைக்கட்டப்
போகிறார்களா? அல்லது இந்த மெயின் கட்டுமானத்தோடு
இணைத்து வலுவான முறையிலே அணை கட்டப்படுகிறதா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர்
அவர்களே, இருக்கக்கூடிய பிரச்னையே என்னவென்றால், மெயின்
கட்டுமானம் கட்டியதே வரக்கூடிய தண்ணீரைக் கணக்குப்
பார்க்காமல், வரக்கூடிய தண்ணீர் எவ்வளவு தூரத்திற்குச்
சேமித்து வைக்க முடியும் என்பதைப் பார்க்காமலேயே தண்ணீர்
அதிகமாக வரத் தகுந்த அளவிலே இல்லாமல் சிறிய அளவிலே



[1985 ஜூன் 26

கட்டப்பட்டதனால் இந்தப் பிரச்னை ஏற்பட்டிருக்கிறது என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காகத்தான் அதை
மாற்றி, இந்த அரசு உரிய முறையிலே நடவடிக்கை மேற்
கொண்டு புதிய திட்டத்தை இன்று செயல்படுத்திக் கொண்டு
வருகிறது.

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத்
தலைவர் அவர்களே, இப்பொழுது கட்டுகின்ற அணை உடைந்த
நேரத்திலே எதனாலே இந்த அணை உடைந்தது என்பதைக்
கண்டறிய நம்முடைய அரசு ஒரு குழுவை நியமனம் செய்தது.
அந்தக் குழு என்ன காரணத்தினாலே இந்த அணை உடைந்
திருக்கிறது என்று அறிக்கை கொடுத்திருக்கிறது என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு யா. சை.மு. யூசுப் : பேரவைத் தலைவர்
தலைவர் அவர்களே, தற்போது என்னிடத்திலே விவரங்கள்
இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி
போட்டால் தகவல் தரப்படும்.

திரு பொன்முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் அணை புதிதாகவே கட்டப்பட இருக்கிறது என்று
தெரிவித்தார்கள். ஏற்கனவே இருந்த இடத்திலேயிருந்து மாற்றி
எந்த இடத்திலே கட்ட இருக்கிறார்கள்? இல்லை, ஏற்கனவே
இருந்த இடத்தில் கட்ட இருக்கின்றார்கள் என்றால், இருக்கிற
அந்த கான்கிரீட்டை எல்லாம், வல்லுநர்களுடைய அபிப்பிரா
யத்திற்கு மாறாக, இடித்துத் தள்ளிவிட்டு, அதே இடத்தில்,
புதிதாகக் கட்ட இருக்கிறார்களா என்பதை நான் அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தத் திட்டம் எப்பேர்ப்பட்ட மாறுதலுக்கு
உட்பட்டு மேற்கொள்ளப்பட்டுக்கொண்டு வருகின்றது என்ற
விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு
உறுப்பினர்கள் தனிக் கேள்வி போடவும்.

திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தக் குடகனாறு திட்டம் பொது
மக்களுக்கு, உபயோகத்திற்கு எந்த வருஷத்திலே வர இருக்க
கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தத் திட்டம் இப்போழுதுதான் துவக்கப்பட்
டிருக்கிறது. ஆகவே, சரியாக இப்பொழுது எவ்வளவு நாட்களில்

1985 ஜூலை 26]

இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதைச் சொல்ல இயலாத நிலையில் துறையிருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

### கோட்டப்பாளையம் ஜம்பேரியில் ஆக்கிரமிப்புகள்

393—(*வினா எண். 1780).—திருமதி இரா. சரோஜா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி கோட்டப்பாளையம் ஜம்பேரியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

(ஆ) இதன் மூலம் சுமார் 20 ஏரிகள் பயன்பெறும் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, (அ) உப்பிலியாபுரம் தொகுதி கோட்டப்பாளையம் ஜம்பேரியில் பெரும்பாலும் 14 ஆண்டுகளாக 193 ஆக்கிரமிப்புகள் உள்ளன. இவ்வாக்கிரமிப்புக்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திருச்சி பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

(ஆ) இவ்வேரி மூலம் 20 ஏரிகள் பயன்பெறா. ஆனால் ஆறு ஏரிகள் பயன்பெறுகின்றன.

திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புகள் எப்பொழுது அகற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். அந்த நடவடிக்கைகள் ஒவ்வொரு கட்டமாகத் தான் மேற்கொள்ளப்படவேண்டும். அந்த முறையிலேதான் எவ்வளவு துரிதமாக முடியுமோ அவ்வளவுத் துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ள துறை நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



[1985 ஜூலை 26]

திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் வட்டம், கோட்டப்பாளையம் கிராமம், ஜம்பேரிக்குத் தூர் வாரும் பணிக்கு எவ்வளவு அளிக்கப்பட்டுள்ளது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எண். 1596, பொதுப் பணித் துறை நாள் 4—8—1984-இல், தமிழக முதல்வர் மாண்புமிகு, டாக்டர் புரட்சித் தலைவர் அந்த இடத்தை நேரடியாகப் பார்த்த பிறகு, அந்தத் திட்டத்திற்காக ரூ. 30.70 இலட்சம் ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளுமாறு பணித்திருக்கிறார். அந்த முறையிலேதான் அரசு ஆணை வெளியாகியிருக்கிறது.

திரு. கோ. இரகுபதி : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உப்பிலியாபுரத்தில் இருக்கிற கோட்டப்பாளையத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்ற அதிகாரிகள் பணிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் தமிழகத்திலே இருக்கிற ஏரிகளுக்கு வருகின்ற வரத்துக் கால்வாய் என்று சொல்லப்படுகின்ற, மலைப் பகுதியில் தண்ணீர் வருகின்ற வரத்துக் கால்வாய் என்று சொல்லப்படுகின்றவற்றில் ஆங்காங்கே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் முழுவதுமாக ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்பது பெரிய விவகாரம் என்பது அரசுக்கு நன்றாகவும் தெரியும். அதனால், ஏரிகளுக்குத் தண்ணீர் வராத காரணத்தினால், நிலத்தடி நீர் குறைகிறது என்பது அரசினுடைய குறிப்பாகும் ....(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, இந்த ஜம்பேரியைப் பொறுத்த வரையில்தான் விவரம் இருக்கிறது. அது நீங்கலாக வரத்துக்கால்வாய் பிரச்சனை, ஏரியைப் பற்றியப் பிரச்சனை எல்லாம் தனித் தனிப் பிரச்சனைகள். அந்த முறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற வினாவுக்கு தற்போது விவரம் இல்லை. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்புகள்.

### (அ) கொடைக்கானல் பாண்ட்ஸ் நிறுவனத்தின் கழிவு நீரால் சுற்றுப்புற சூழல் பாதிக்கப்பெறுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சி. சுப்புராயர், வே. இரா. ஜெயராமன், டாக்டர் முகம்மது சலீம், மற்றும் மாண்புமிகு திரு. வேடச்சந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) ஆகியோர் ஒரேபொருள் குறித்துகவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ''கொடைக்கானல் நகரியத்திலுள்ள பாண்ட்ஸ் நிறுவனத்திலிருந்து வெளியாகும் கழிவு அப்பகுதியிலுள்ள விவசாயப் பயிர்கள் மற்றும் மக்கள் வாழ்க்கையைப் பாதிக்கும் நிலை'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை.

திருவாளர்கள் பாண்ட்ஸ் எக்ஸ்போர்ட் லிமிடெட், மதுரை மாவட்டம், கொடைக்கானல் செயின்ட் மேரீஸ் சாலையிலுள்ள செயின்ட் மேரி மலையில் அமைந்துள்ளது. இத்தொழிற்சாலை, நாளொன்றுக்கு 67,000 மருத்துவ வெப்பமானிகளைத் தயாரிக்கிறது.

கண்ணாடிப் பிரம்புகள் துண்டுகளாக வெட்டியெடுக்கப்படுகின்றன. இத்துண்டுகள் வெப்ப மூட்டப்பட்டு அடிப்பாகத்தில் மூன்று அறைகள் உருவாக்கப்படுகின்றன. அப்போது குமிழ் உருவாகின்றது. அக்குமிழில் தேவையான அளவு பாதரசம் நிரப்பப்படுகின்றது. பின்னர் தோராயமாக வெப்ப அளவு பொறிக்கப்படுகின்றது. இறுதியாக, தேவையற்ற குமிழ்ப் பகுதியை வெட்டிய பின்னர் வெப்பமானி அளவுகோல் ஆய்வு செய்யப்பட்டு தரம் சரி பார்க்கப்படுகின்றது.

வெப்பமானி பாதரசத்தால் நிரப்பப்படும்போது, அல்லது மேற்கொண்டு தரம் பிரித்து அளவுகோல் ஆய்வு செய்யும்பொழுது அது உடைய நேர்ந்தால் தொழிற்சாலைக் கழிவுநீர் உற்பத்தி



யாகின்றது. தவிர, வெப்பமானியைப் பரிசோதிக்கும்போது தொட்டியிலிருந்து சிந்தும் நீரும் எபாக்ஸி பூசப்பட்ட தரையின் மீது உடையும் உஷ்ணமானியினின்று சிதறும் பாதரசமும், கூட்டிக் கழுவும் நீரும், தொழிற்சாலையிலிருந்து வெளிப்படும் கழிவு நீராகும்.

இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 13,620 லிட்டர்கள் தொழிற்சாலைக் கழிவு நீரை வெளிவிடுகின்றது. தொழிற்சாலைக் கழிவுநீரில் பாதரசமும், மிதக்கும் திடப்பொருள்களும் கரைந்த திடப்பொருள்களும் நிலத்தின்மீது அல்லது நீர்நிலைகளில் வெளியிடப்படும்போது நிலமும் நிலத்தடி நீரும் மாசடைய வாய்ப்புள்ளது.

இத்தொழிற்சாலை தனது தொழிற்சாலைக் கழிவுநீரை சுத்திகரிக்க சுத்திகரிக்கும் நிலையமொன்றை அமைத்திருக்கின்றது. தொழிற்சாலைக் கழிவுநீர், சமநிலைப் படுத்தும் தொட்டியிலும் படிய வைக்க ஆயத்தத் தொட்டியிலும், படிய வைக்கும் தொட்டியிலும், வடிகட்டியிலும் சுத்திகக்கப்படுகின்றது. இத்தொழிற்சாலை தனது தொழிற்சாலைக் கழிவு நீரை வெளிவிடுவதற்காக அனுமதி வேண்டி, 1974 ஆம் ஆண்டு (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 25ஆம் பிரிவின் கீழ் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு விண்ணப்பித்திருந்தது. 9—2—1984 அன்று இத்தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கப்பட்டது. இத்தொழிற்சாலையால் கொடுக்கப்பட்ட தொழிற்சாலைக் கழிவுநீர்ப் பகுப்பாய்வறிக்கையானது இவ்வாரியத்தால் விதிக்கப்பட்ட அளவீட்டைத் தொழிற்சாலைக் கழிவுநீர் நிறைவு செய்கின்றதென்று, தெரியவந்துள்ளது. 10—1—85 அன்றும் 28—1—85 அன்றும் இத்தொழிற்சாலை பார்வையிடப்பட்டது. 28—1—85 அன்று இவ்வாரிய வட்டார அலுவலரால் தொழிற்சாலையிலிருந்து தொழிற்சாலைக் கழிவு நீர் மாதிரி சேகரிக்கப்பட்டது. பகுப்பாய்வறிக்கையில் கழிவு நீரில் பாதரசம் கலந்திருக்கவில்லை என்பது தெரியவந்தது. 9—2—85 அன்று இத்தொழிற்சாலைக்கான அனுமதி புதுப்பிக்கப்பட்டது. 13—6—85 அன்று தொழிற்சாலையைப் பார்வையிட்டபோது, தொழிற்சாலைக் கழிவுநீரை மின்உற்பத்தி இயந்திரத்திற்குக் குளிர் நீராக மீண்டும் பயன் படுத்தப்படுவதும், நிலத்தின் தொழிற்சாலைக் கழிவுநீர் வெளியேற்றாமலிருப்பதும் தெரியவந்தது. தொழிற்சாலைக் கழிவுநீர், எந்த விவசாய நிலத்தையும் பாதிக்கவில்லையென்று அங்குள்ள மக்கள் தெரிவித்தனர். கொடைக்கானல் நகரிய அதிகாரிகள் அதை உறுதிப்படுத்தினர்.

இருப்பினும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற்
சாலையினின்று கழிவு நீர் வெளியேறுவதையும் சுத்திகரிப்பு
முறையையும் தொடர்ந்து கண்காணித்து வருகின்றது.

(ஆ) வெள்ளம் ஏற்படுவதைத் தடுக்க வேளச்சேரி ஏரியில்
நீர்க் குறைப்புப் பணியை மேற்கொள்ளுதல்.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ''வேளச்சேரி ஏரி நீர் குறைப்புப் பணியினை
பொதுப்பணித் துறை மேற்கொள்ளாத காரணத்தினால்
வெள்ள அபாயம் ஏற்பட்டு, அப்பகுதிவாழ் மக்களுக்கு பெரு
மளவு பாதிப்பு ஏற்படக்கூடிய நிலைமை'' குறித்த அவசரப்
பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்
பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை
ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

வேளச்சேரி ஏரியில் நான்கு மதகுகளும் (Sluice) மூன்று
கலிங்கல்களும் (Weirs) உள்ளன. இக்கலிங்கல்கள் மூலமாக
வெள்ளநீரை வெளியேற்றும் வகையில் உபரிநீர் செல்லும்
பாதை சரிவர அமையவில்லை. மேலும் இந்த ஏரியின் கரை
கள் முழுவதும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. இதில்
மொத்தம் 1,325 ஆக்கிரமிப்பாளர்களில் 468 ஆக்கிரமிப்புகள்
அகற்றப்பட்டுள்ளன. எஞ்சியுள்ளவை 857 ஆக்கிரமிப்புகள்
அனுமதிக்கப்பட்டுள்ளனவாகும். வேளச்சேரி ஏரியின் உள்
வாயிலுள்ள பல காலனிகளிலுள்ள குடியிருப்பு வாசிகள் வேளச்
சேரியின் உச்சநீர் மட்டத்தை குறைத்து வெள்ளக்காலங்
களில் இப்பகுதியில் கட்டப்பட்டிருக்கும் வீடுகள், குடிசைகள்
தண்ணீரில் மூழ்காவண்ணம் இருக்க ஆவன செய்
யும்படி கோரினர். இக்கோரிக்கை அரசின் பரிசில
னைக்குப் பிறகு ஏரியின் உச்ச நீர் மட்டத்தை 4 அடி
(நான்கு அடிகள்) குறைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.
அதன்படி ரூ. 4.80 இலட்சம் மதிப்பீட்டில் தலைமைப் பொறி
யாளர் (பாசனம்) அவர்கள் வேளச்சேரி ஏரியின் உச்சநீர்
மட்டத்தினை 4 அடிகள் குறைக்க அறிக்கை அனுப்பியுள்ளார்.
இவ்வறிக்கையில் ஒரு கலிங்கலும் ஒரு மதகும் புதிதாக கட்ட
வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வேரியின் உச்சநீர்
மட்டம் 4 அடி குறைப்பதன் மூலம் அப்பகுதிவாழ் மக்கள்
வெள்ள பாதிப்பு ஏற்படாவண்ணம் பாதுகாப்பு பெறுவர்.
மேலும் இதனால் வேளச்சேரி ஏரி ஆயக்கட்டு நிலங்களுக்கு



பாசனமும் பாதிக்காது (தற்போது ஏறக்குறைய 477 ஏக்கர்
நிலங்கள் பாசனம் பெறுகிறது). இந்த அறிக்கை அரசின்
பரிசீலனையில் உள்ளது. அரசின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றதும்
பணி மேற்கொள்ளப்படும்.

திரு. சா. துரைசாமி : தலைவரவர்களே, 1978 ஆம்
ஆண்டே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டும்
இந்தப் பணி காலதாமதமாகிறது. இதற்கு முன்னாலேகூட
மாண்புமிகு வீட்டு வசதி வாரிய அமைச்சர் அவர்கள் இந்த
ஏரியின் காரணமாக 15 குடிசைப் பகுதிகள் எந்த விதமான
மேம்பாட்டுப் பணியும் அல்லது அடிப்படை வசதியும் பெற
முடியாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். இது அந்த
வகையில் மக்களுக்கு மிக முக்கியமான ஒரு பணி. கடந்த
7 ஆண்டுகளாக, இந்தப் பணி நிறைவேற்றப்படாததால், அந்தப்
பகுதி மக்கள் ஆண்டுக்காண்டு வெள்ள அபாயத்தால் பாதிக்கப்
பட்டு அரசுக்கு ஏறத்தாழ 7 இலட்சம் ரூபாய், 10 இலட்சம்
ரூபாய் வெள்ள நிவாரணம் என்ற வகையில் செலவாகிறது.
அரசு இவ்வளவு பெரிய தொகையை நிவாரணமாக வழங்குகிற
சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இது ஒரு மிக முக்கியமான
பிரச்சனை என்பதை கருத்திற்கொண்டு, நடப்பு நிதியாண்டி
லாவது இந்தப் பணியை நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே,
உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு, இப்போது அரசின்
ஒப்புதலுக்காக இந்தத் திட்டம் அனுப்பப்பட்டிருக்கிறது. விரை
வில் ஒப்புதல் பெற்று, திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை
மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே நான்
ஆரம்பத்திலேயே இந்தக் கேள்வியைக் கேட்டு அதற்கு அமைச்சர்
அவர்களும் பதில் தந்தார்கள். எனவே அந்தப் பதில் அப்படி
இருக்கின்ற காரணத்தால் இதை நான் கவன ஈர்ப்புத் தீர்மான
மாகக் கொண்டு வந்தேன். மீண்டும் இப்போது வெள்ளம்
ஏற்படக் கூடிய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அதனை
உடனடியாகக் கட்டுவதற்குரிய வகையில் அதாவது ஓரிரு மாதங்
களில் இந்தப் பணியைத் துவக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர்
அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் இந்தப்
பிரச்சினை கிளப்பப்பட்டபோதுதான் இதற்குத் தீர்வு காண்
பதற்குரிய ஆலோசனைகள் கேட்கப்பட்டன. நீர் மட்டத்தை
4 அடி குறைத்தால் அது போதுமானதாக இருக்கும் என்ற
வகையில் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய அளவுக்கு

[திரு. யா. சை. மு. யூசுப்] [1985 ஜூலை 26

யுமையும் என்று துறை அதிகாரிகள் எடுத்துச் சொன்னார்கள். அந்த முறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வினாவிற்கு விடை தரப்பட்டது. அதை அடுத்துத்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு திட்டம் தீட்டப்பட்டு அரசின் ஒப்புதலுக் காக அனுப்பியிருக்கிறார்கள். அவ்வாறு ஒப்புதல் பெற்றபின் உடனடியாக நடவடிக்கை மேற் கொள்ளப்படும். ஒப்புதல் பெறுவதைப் பொறுத்தவரையில் விரைந்து செயல்படுத்தப் படும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

## 3. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை நீட்டித்தல், சட்டமுன்வடிவு, 1985).

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" 1985 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை நீட்டித்தல்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு, 1985.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

" 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு* *(சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 34/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

** 24-6-1985 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1985 ஜூலை 26]

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு கொடுப்பதற்காக இந்த மசோதாவை நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். திராவிட முன் னேற்றக் கழகத்தினைப் பொறுத்தமட்டில் நாங்கள் இந்த மசோதாவை மனப்பூர்வமாக வரவேற்கிறோம். அரசாங்க ஊழியர்களுக்குக் குறைந்தபட்சம் இந்த அளவுக்காவது சம்பள உயர்வு கொடுக்க வேண்டும் என்பதில் நாங்கள் குறை கூற ஆரம்பித்தால் அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுப்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கின்றது என்ற தவறான எண்ணம் உண்டாகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் இந்தக் குறைந்த அளவுக்காவது நீங்கள் முன்வந்திருக்கக்கூடிய இந்தக் காரியத்தை நான் வரவேற்கிற நிலையில் இருக்கிறேன். ஆனால் அதற்கு அர்த்தம் இதிலே குறைபாடுகளே இல்லை, இவையெல்லாம் சரியாக இருக்கின்றன என்று ஆகி விடாது. எனவே இதில் உள்ள சில தவறுகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருவது அதாவது அரசாங்க ஊழியர்களின் நன்மைக்காகவும், நகராட்சி, மாநகராட்சி போன்ற ஸ்தாபனங்களில் பணி யாற்றுகின்ற ஊழியர்களின் நன்மைக்காகவும் உங்கள் கவனத் திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமையாகும்.

அரசாங்க ஊழியர்கள் நிர்வாகத்தில் அச்சாணியாக இருப்பவர்கள், ஆனால் இங்கே ஒன்றை வருத்தத்தோடு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மசோ தாவைக் கொண்டு வருவது நான்காவது சம்பளக் கமிஷ னுடைய அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்ற சிபாரிசுகளை அமல் நடத்துவதற்காகத்தான். நாங்கள் ஏற்கனவே இந்த அவையில் எழுப்பினோம் என்பதை பேரவைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இங்கே விவாதம் நடத்துகின்றபோது மாண்புமிகு உறுப்பி னர்கள் எல்லாம் விவாதம் நடத்தியிருக்கிறார்கள். நான் காவது சம்பளக் கமிஷனுடைய ஷரத்துக்கள் என்னென்ன, அதன் சிபாரிசுகள் என்னென்ன என்பதை எல்லாம் தெரிந்து கொள்வதோடு, அரசாங்கம் அதன்படி எப்படி உத்தரவு போட்டிருக்கின்றது. எவை, எவற்றை ஏற்றுக்கொண்டு உத்தர விட்டிருக்கின்றது என்பதையும் தெரிந்துகொண்டால்தான் உறுப்பினர்களால் இங்கே ஒரு ஆரோக்கியமான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துக்களை எல்லாம் சொல்ல முடியும். எனவே அந்தக் கமிஷன் ரிப்போர்ட் மற்றும் அரசினுடைய ஜி. ஓ. ஆகியவற்றை இங்கே வையுங்கள். அப்போதுதான்

எவையெல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன, எவையெல்லாம் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

(முற்பகல் 10–10)

நாவலர் அவர்கள் தமிழ் கற்றவர்கள்—திருவள்ளுவரைப் பற்றி பேச வேண்டுமானால் திருக்குறளைப் படிக்காமல் பேச இயலுமா? ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனைப் பற்றியும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பற்றியும் பேச வேண்டுமானால், சங்க இலக்கியம் படிக்காமல் இயலுமா? அது போலத்தான் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கின்ற பிரச்னையில், அரசாங்கம் சம்பளக் குழுவின் ரிப்போர்ட்டை படிக்காமல் சொல்வது அவ்வளவு சரியானது அல்ல.

நாவலர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும்—

'' அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.''

நூலினைக் கற்காமல் அந்த நூலைப் பற்றி பேசுவது என்பது, அரங்கு இல்லாமல் வட்டாடியதற்கு சமமாகும் என்பார்கள். அதுபோல, சம்பளக் கமிஷனின் ரிப்போர்ட் இங்கே வைக்கப்படாமலே பேச வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நாங்கள் எங்களுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்லி தீர வேண்டிய கட்டாயத்திலே இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, இங்கே இந்தச் சமயத்தில் அரசு ஊழியர்களைப் பற்றிய சில விவரங்களைச் சொல்வது என்னுடைய கடமை என்று நினைக்கிறேன்.

அந்த 8–வது நிதிக் குழு ரிப்போர்ட்டைப் படிக்கக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அந்த 8-வது நிதிக் குழுவிலே சொல்லியிருக்கிறார்கள். அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள், ஸ்தல ஸ்தாபன ஊழியர்கள் என்று அவர்களுக்கெல்லாம் சம்பளத்தை உயர்த்தி கொடுக்க வேண்டும் என்பதற்காக, அந்த ரிப்போர்ட்டிலே 530 கோடி ரூபாய் சாங்ஷனில் அந்த பே-பிக்சேஷன் செய்து அந்த அடிப்படையிலே வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி 530 கோடி இதற்காக செலவிட வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருப்பது பற்றி பார்த்தால் ஆண்டு ஒன்றுக்கு 106 கோடி ரூபாய் செலவழிக்கப்பட வேண்டும். ஆனால் நம்முடைய இந்த அரசாங்கம் அறிவித்திருக்கக்கூடிய அறிவிப்பின்படி 90 கோடி ரூபாய் தான் அரசு ஊழியர்களுக்காக செலவிட இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.



அதுவும் கூட தவறான கணக்கு என்றும் உண்மையி
லேயே அந்த 90 கோடி அல்ல, 90 கோடி என்று சொல்லி
உண்மையாக 60 கோடி தான் செலவழிக்கப்பட இருக்கிறது
என்பதும் எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய தகவலின் அடிப்படை.
இன்னொன்றைச் சொல்லவிரும்புகிறேன். அந்தச் சம்பள
உயர்வு அவர்களுக்கு 1–4–84-லேயிருந்து கொடுக்கப்பட
வேண்டும். ஆனால் அரசு ஊழியர்களுக்கு 1–10–1984-லே
யிருந்துதான், 6 மாதம் கழித்து கொடுக்கப்பட இருப்பதாக
அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி 1–4–84-லேயிருந்து கொடுக்
காமல், 1–10–1984-லேயிருந்து கொடுப்பதினால் அரசாங்க
ஊழியர்களுக்கு 30 கோடி ரூபாய் நஷ்டம் வருகிறது. அது
ஏன் அப்படிச் செய்தார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை.

8-வது நிதிக் கமிஷன் 530 கோடி ரூபாய் செலவு செய்ய
வேண்டும் என்று சொல்லியதில் வரும் 106 கோடி ஆண்டுச்
செலவுக்கு மாறாக 90 கோடி செலவிடப்படும் என்று சொல்லி,
அதுவும் கூட உண்மையில்லாமல், உண்மையிலேயே 60 கோடி
தான் செலவழிக்க திட்டமிடப்பட்டிருப்பதோடு 1–4–84-லேயி
ருந்து கொடுக்க வேண்டிய பணத்தையும் கொடுக்காமல், 6
மாதம் கழித்து கொடுத்து, அதிலேயேயும் 30 கோடி ரூபாயை
நஷ்டம் அடைய வைக்கிறார்கள் என்று சொன்னால் இந்த அரசு
ஆசிரியர்கள் மீது, அரசு ஊழியர்கள் மீது அக்கறை உள்ள
அரசுதானா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்றையும் இங்கே நான் சொல்லவிரும்புகிறேன்.
அகில இந்திய அளவிலேயே ஒரு வேடிக்கை என்னவென்று சொன்
னால், இந்தியாவிலே தமிழகத்திலேதான், அரசாங்க ஊழியர்கள்
குறைந்த பட்சம் சம்பளத்தை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்
என்பதுதான்...... (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இது வந்து எதிர்பாரா செலவு
நிதி சட்டமுன் வடிவு. 50 கோடியாக இருந்ததை எதிர் பாராச்
செலவின் காரணமாக 100 கோடியாக ஆக்கி கொடுக்க வேண்டும்
என்ற அளவிற்குத்தான் இந்த மசோதாவினுடைய நிலைமைகள்,
விவரங்கள் இருக்கும். அது வேண்டும் அல்லது வேண்டாம்
என்ற அளவுக்கு தான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கருத்துக்
களைச் சொல்வதற்கு இதில் வாய்ப்பு இருக்கிறது. இதிலே
செலவழிக்கப்பட்டதற்குப் பிறகு, எந்தெந்த இனத்திலேயிருந்து
எவ்வளவு எவ்வளவு செலவழிக்கப்பட்டன? எவ்வப்பொழுது
செலவழிக்கப்பட்டது? எவ்வளவு அதிகமாக செலவழிக்கப்
பட்டது? ஏன் செலவழிக்கப்பட்டது? எந்த நிதியிலிருந்து
எடுத்து வைக்கப்படுகிறது என்கிற விரைங்கள் எல்லாம்
இங்கே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறபோது,
அப்போது இந்தக் கருத்துக்களைச் சொல்லலாம்.

இப்போது இந்த 50 கோடியை 100 ஆக்குவதற்கான அள
விலே தான் சொல்ல முடியுமே தவிர என்னிடத்திலே முழு
விவரங்கள் அவருக்கு பதில் சொல்வதற்கு இருக்காது. எனவே
எந்தெந்த இனங்களில் என்னென்ன செலவழிக்கப்பட்டது என்று
சொல்லி துணை மதிப்பீடு இந்த அவையினுடைய நிறைவேற்ற
லுக்காக வருகிறபோது இப்படிப்பட்ட விவரங்களை அவர்
சொல்லலாம்: அதற்கு விளக்கங்களும் சொல்லலாம். அது
பற்றி இப்போது பேசுவதால் பலன் ஏற்படாது. பேசுவதற்கு
உரிமை இருக்கிறது. ஆனால் அதற்கான காலத்திலே பேசி
னால் சரியான பதிலாக கிடைக்க வாய்ப்பு இருக்கும், என்பதற்
காகச் சொல்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய
தலைவர் அவர்களே, ஆப்ஜெக்ட்ஸ் மற்றும் ரீசன்ஸ் என்பதிலே
இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிற காரணத்தினாலே
தான், சட்டத்தை ஒட்டிப் பேசினேன். நாலாவது சம்பளக்
கமிஷன் ரிப்போர்ட்டிலே அரசாங்க ஊழியர்கள் சம்பள
உயர்வைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான்காவது
சம்பளக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் நூறு கோடி
ரூபாய்கள் அளவிற்குக் கூடுதல் செலவை உள்ளடக்குகின்ற
ஆணைகளை வெளியிட்டதை ஒட்டி, 50 கோடியிலிருந்து
100 கோடியாக உயர்த்த வேண்டும் என்று பில்லிலே குறிப்பிடப்
பெற்றிருப்பதால், அரசாங்க உத்திரவுப்படி சம்பளக் கமிஷ
னுக்கு எவ்வளவு என்பதுதான் இங்கே சப்ஜெக்ட் பார்
டிஸ்கஷன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர்
அவர்களே, இதில் கேட்பது 50 கோடி ரூபாயை 100 கோடி
ரூபாயாக ஆக்க வேண்டுமென்பது. ஆக்கலாமா, வேண்டாமா
என்பதைக் குறித்து தான் பேச முடியுமே தவிர, உள்ளே புகுந்து
அதனுடைய மெரிட்டிலே போய் சொல்ல வேண்டுமென்றால்,
அதற்கான வாய்ப்பு ஏற்படுகிற நேரத்தில் தான் அந்த நிலைமை
ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்
களை சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் அந்த
வாய்ப்பிலே தான் சொல்லலாம். இப்போது சொல்வதால்
பயனில்லை என்பதைத்தான் சொல்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, சர்ச்சை
செய்வது என்னுடைய நோக்கமல்ல. அருள்கூர்ந்து தாங்கள்
கவனிக்க வேண்டும். இதிலே உறுப்பினருடைய உரிமைப் பிரச்
சினை இருக்கிறது.

In view of the orders of Goverment on the recommendations of the Fourth Pay Commission involving additional expenditure of the order of Rs. 100 crores it is considered necessary to increase the sum temporarily from Rs. 50 crores to 100 crores



பே கமிஷன் பற்றி அரசாங்கத்தினுடைய உத்தரவு வருகிறது.
அதன் சிபார்சுகளை அமல் படுத்துவதற்காக அரசாங்கத்திற்கு
அடிஷனல் எக்ஸ்பெண்டிச்சர் ஏற்படுகிறது. ஆகவே, இதனை
ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா என்றால், நாங்கள் ஆதரிக்
கிறோம். ஆனால், பே கமிஷனைப் பற்றிப் பேசாதே, ஆர்டர்
பற்றி பேசாதே என்றால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேச வேண்டாம் என்று
சொல்லவில்லை. அதற்கான வாய்ப்புகள் வருகிறபோது உறுப்
பினர் அவர்கள் பேசலாம் என்றுதான் சொல்லப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களை பேசாதே என்று
சொல்லவே இல்லை. அதற்கான வாய்ப்பிலே பேசவேண்டு
மென்றுதான் சொன்னேன். 50 கோடி ரூபாயை 100 கோடி
ரூபாயாக ஆக்கவேண்டும். ஏற்கெனவே 50 கோடியாக இருந்த
எதிர்பாராத செலவை 100 கோடியாக உயர்த்தி வறட்சியின்
காரணமாக ஏற்படுகிற செலவுகளை நாம் சமாளிக்க வேண்டி
இருக்கிறது. எவ்வளவு எடுத்துக் கொடுத்தாலும்கூட நாம்
அதை எடுத்துச் செலவிட முடியாது. எவ்வளவு பணம் செல
வழித்தாலும், என்ன செலவு, எதற்கு செலவிடப்பட்டது என்
பதை இந்த அவைக்கு மறுபடியும் துணை மானியக் கோரிக்கை
போது கொண்டு வரவேண்டும். எந்தெந்த இனத்திற்கு எவ்
வளவு செலவிடப்பட்டது என்பது அதிலே வரும். அப்போது
விரிவாகவும், விளக்கமாகவும் சொல்லலாம். அதற்கு உறுப்பினர்
களுக்கு முழு உரிமையும் இருக்கிறது. ஆகவே, இப்போது வறட்சி
நிவாரணப்பணிக்காக நாம் எதிர்பாராத செலவு நிதி 50கோடியை
100 கோடியாக ஆக்குகிறோம் என்று சொல்கிறபோது, இருக்
கிற பிரச்சினைகள் முழுவதையும் அலசிப்பார்த்து விட்டுத்தான்
செய்தோம் என்பதல்ல. எதிர்பாராமல் ஏற்படுகிற செலவு
களுக்கு, புதிய திட்டங்களுக்கு செலவழிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட
வேண்டுமென்பதைத் தவிர வேறல்ல. அதற்கான வாய்ப்பு வரு
கிறபோது மாண்புமிகு உறுப்பினர் தாராளமாகப்பேசலாம் என்று
தான் சொல்லுகிறோமே தவிர, பேசக் கூடாது என்று யாரும்
சொல்லவில்லை.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, மீண்டும்
அருள்கூர்ந்து மன்னிக்க வேண்டும். நம்முடைய நிதியமைச்சர்
அவர்களை உங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன். 50 கோடி
ரூபாயை 100 கோடியாக ஆக்குகிறீர்கள். எதற்காக அப்படிச்
செய்கிறீர்கள்? அடிஷனல் எக்ஸ்பெண்டிச்சருக்காக. என்ன
அடிஷனல் எக்ஸ்பெண்டிச்சர்? எந்தெந்த வகையிலே என்பதை
தயவு செய்து விளக்குங்கள். அதன்மீது நான் பேசத் தயாராக
இருக்கிறேன். தலைவர் அவர்களே, தங்களை கேட்க விரும்பு

வது கன்டின்ஜென்ட் பண்ட்டை 50 கோடியை 100 கோடியாக ஆக்குகிறார்கள். எதற்காக என்றால் அதிலே சொல்லப்பட்டிருக்கிறது, பே கமிஷனுடைய சிபார்சுகளை அமல்படுத்துவதற்காக, ஜி.ஓ. போட்ட காரணத்தால் 50 கோடி என்பது 100 கோடியாகி இருக்கிறது. எதற்காக அதைச் செய்கிறார்கள்? அடிஷனல் எகஸ்பெண்டிச்சருக்காக. அடிஷனல் எக்ஸ்பெண்டிச்சர் என்பது எந்தெந்த வகையில் என்று சொன்னால் அதன்மீது நான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்சில் அது கிளியராக இருக்கிறது. இப்போது அடிஷனல் எக்ஸ்பெண்டிச்சருக்காக கண்டின்ஜென்ட் பண்டிலே எவ்வளவு வேண்டுமென்று கேட்கிறார்கள். நீங்கள் சொல்கிற கருத்துக்களை பே கமிஷன் அறிக்கைமீது விவாதம் வருகிறபோது பேசலாம்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். நீங்கள் சொல்வதை நான் புரிந்து கொள்கிறேன். ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசனில் அடிஷனல் எக்ஸ்பெண்டிச்சருக்காக கண்டின்ஜென்ட் பண்ட்டை 50 கோடியிலிருந்து 100 கோடியாக்குவதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா அல்லது எதிர்க்கிறீர்களா என்றால், அதோடு விவாதம் முடிந்துவிடாது. இதில் அடுத்து சொல்ல வேண்டிய விஷயம் என்னவென்றால், இந்த அடிஷனல் எக்ஸ்பெண்டிச்சர் எதற்காக என்ற கேள்வி எழுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் நான்காவது சம்பளக் குழுவின் சிபார்சுகளை அமல்படுத்துவதற்கு என்று சொல்லி இருக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நான்காவது சம்பளக் குழுவின் அறிக்கையல்ல. நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இந்த வழியில் தான் உங்களுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. ஏதோ ஒரே வரியில், திருக்குறளை எழுதியவர் யார்? திருவள்ளுவர். என்று சொல்வதைப் போல, ஒரே வரியில் முடித்து விடுங்கள் என்று சொல்கிறார்கள். இந்த மசோதாவில் '' ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ்'' பற்றி பேசாமல் வேறு எதைப் பற்றி பேசுவது? ஆகவே, தாவலர் அவர்களே, அதற்கு வழி காட்டட்டும். நான் பேசுவதற்கு தயாராக இருக்கிறேன். இந்த அம்சங்களை மட்டும் பேசுங்கள் என்று சொல்லட்டும். நான் பேசுகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரே வரியில் முடிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. ஒரே வரியில்கூட முடிக்கலாம். '' அறஞ்செய்ய விரும்பு ''— இதில் ஏராளமாக பொருள் விளக்கம், தெளி பொருள் கருத்துக்கள் எல்லாம் சொல்லலாம். அதே போல,

'' அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர் ''.

இரண்டே அடிகள் தான். இதற்கும் ஏராளமான விளக்கமும், தெளி பொருளும் கருத்துக்களும் சொல்லலாம். அதைப் பற்றி நான் சொல்லவில்லை. இங்கே எவ்வளவு பேசினாலும் கூட, இன்றைய நிலையில் அதற்கெல்லாம் பதில் சொல்கிற வாய்ப்பை நான் பெற முடியாது. பேசுவதற்கு உரிமை உண்டு. ஆனால் அதற்கான வாய்ப்பிலே பேசினால் அதற்கான பதில் வரும். வரவு-செலவு அறிக்கையில் தெளிவாக வைத்திருக்கிறோம். இந்த ஆண்டிலே அகவிலைப்படி உயர்வின் காரணமாகவும், சம்பள உயர்வின் காரணமாகவும் அவையில் வைத்திருக்கிற வரவு-செலவு அறிக்கையில் 70 கோடி ரூபாய் நாம் ஒதுக்கி வைத்தோம். அவ்வளவுதான் நாம் எதிர்பார்த்தோம். ஆனால், சம்பள கமிஷனுடைய தன்மைகள் வந்ததற்குப் பிறகு, அவர்களோடு பேசி, சலுகைகளை கொடுத்ததிலே 90 கோடி ரூபாய் ஆயிற்று. அவர்கள் சொல்லியது 1–4–1985லிருந்து தரவேண்டுமென்று சொன்னார்கள். நாம் 1–10–1984லிருந்து தருவதன் காரணமாக கூடுதலாக 45 கோடி ரூபாய் நமக்கு ஆயிற்று.

(முற்பகல் 10–20)

அதுதான் ஆகும் என்று நாம் எதிர்பார்த்தோம். இப்போது 135 கோடி ஆகிறது. 135 கோடிக்கு அதிகமாக செலவாவதன் காரணமாக, வருகின்ற ஜூலை மாதத்திலே அந்த 6 மாதத்திற்கான அதிகப்படியாக ஏற்படுகின்றவைகளை ஒட்டு மொத்தமாகத்தரவேண்டும். ஏப்ரல், மே, ஜூன் ஆகிய 3 மாதத்தினுடைய கூடுதலான சம்பளத்தையும் இந்த ஜூலை மாதத்தில் தரவேண்டும். எல்லோருக்கும் சேர்த்துத் தரும்போது, அதிலே இட்டத்தட்ட 45 கோடியும், இப்போது 20,25 கோடியும் சேர்த்துத் தர வேண்டும். இதிலே அவர்கள் பாண்ட் எழுதிக் கொள்கிற மாதிரியோ, அல்லது வேறு வகைகளிலோ தருகிறோம் என்று சொன்னாலும், ஏற்றுக் கொள்ளவில்லை.

எல்லோரும் பணமாக வேண்டும் என்று கேட்பதன் காரண மாகத்தான், ஜுலையிலே நாம் தந்தாக வேண்டும். ஆகவே தான் இருக்கிற பணம் போதாது. ஆகவே, அது 100 கோடி யானால்தான் இதைத் தர முடியும். ஏன் தந்தோம், எத் தெந்த இனத்திற்குத் தந்தோம், எப்படித் தந்தோம் என்பதைப் பற்றி துணை மதிப்பீடுக் கோரிக்கைகள் வைத்துத்தான் நாம் பெற்று, மறுபடியும் அதிலே சேர்க்க வேண்டும். அப்போது விரிவாக எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றுதான் நான் சொன்னேனே தவிர, ஆகவே, இப்படிச் சலுகைகளின் மூலமாக நாம் எதிர்பார்த்தது 70 கோடி, இப்போது ஆகியிருப் பது 135 கோடி. ஆகவே, கூடுதலாக செலவே தவிர, இதிலே கணக்கிலே வராமல் போய்விடாது. ஆகவே, எதிலேயிருந்து எடுத்து செலவழிக்கப்பட்டது என்பதற்காக இந்த ஏற்பாடே தவிர, மாண்புமிகு உறுப்பினர்கள் அதற்கான துணை மதிப்பீடு கோரிக்கைகள் வரும்போது, அதைப் பற்றி முழுவதுமாக பேச லாம். என்னுடைய ரிப்ளையாகக் கூட இதை வைத்துக் கொள்ளலாம்.

சம்பளக் கமிஷனைப் பொறுத்த வரையில், நான் சொல்லி விடுகிறேன். இந்த கமிஷன், ஸ்டேச்சுடரி ஆக்டின்படி அந்தக் கமிஷன் வைக்கப்படவில்லை. இந்த நிர்வாகத்தின் தன்மையா கத்தான், எக்சிகியூடிவ் ஆர்டர் என்ற முறையில் அரசு ஆணை யாகத்தான் இந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டு இருக்கிறது. இந் தக் கமிஷன் அரசு அவ்வப்போது எடுக்கின்ற சில பல முடிவுகளை நிறைவேற்றுவதற்கு என்பது மட்டுமல்லாமல், ஊதியக் குழுவின் அறிக்கை மற்றும் அதன் பரிந்துரைகளை அரசு ஏற்று, அதன் மீது வெளியிட்டுள்ள ஆணைகள் சட்டப் பேரவையில் வைக் கப்பட்டது என்பது முதல் ஊதியக் குழு, இரண்டாவது ஊதியக் குழு, மற்றும் 3-ஆவது ஊதியக் குழுக்களின் அறிக்கைகள், சட்ட மன்றத்திலே, சட்டத்தின் அடிப்படையிலே இந்தக் குழு அமைக் கப்படவில்லை, நிர்வாகம் சம்பந்தமாக ஊதியக் குழு அமைப்பிலே இருக்கின்ற முரண்பாடுகளை களைவதற்காகத்தான், ஊதிய அமைப்புகளை தற்கால நடைமுறைக்கு ஏற்ப சரியாக அமைக்கும் நோக்கத்தோடுதான் எக்சிகியூடிவ் ஆர்டர் என்ற முறையில், சம் பளக் குழு அமைக்கப்பட்டது.

சம்பளக் குழு சில பல பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரைகளை அரசு ஆராய்ந்து சில பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரைகள் அத்தனையும், ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அந்த அறிக்கை முழு வதையும், பரிந்துரை செய்து முடித்து விட்டது என்றும் சொல் வதற்கு இல்லை. நிதி சம்பந்தமானவைகளை மட்டும் எடுத்துக் கொண்டு, அது சம்பந்தமான சம்பள உயர்வு மற்றவைகளை தந்திருக்கிறது. அந்தச் சம்பளக் கமிஷன் கூட 1–4–1985-லி





ருந்து புதிய சம்பளம் தர வேண்டும் என்று சொல்லியது. ஆனால் அரசு முடிவு எடுத்து, 1–10–1984-லேயிருந்து தரலாம் என்று சொல்லியிருக்கிறது.

ஆகவே, அதற்கு முன்னாலே 1–4–1984-லேயிருந்து அதை நியமித்த நாளிலிருந்து வைக்க வேண்டும் என்றால், 1-ஆவது சம்பளக்குழு நியமித்த நாளிலிருந்து கொடுக்கப்படவில்லை. 2-ஆவது குழுவிலேயும் கொடுக்கப்பட வில்லை. 3-ஆவது குழுவி லேயும் கொடுக்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், 1-ஆவது, 2-ஆவது குழுவிலே, அந்தச் சம்பளக் குழு அறிக்கையை வைத்ததற்குப் பிறகுதான் நடைமுறைப்படுத்தப்பட்டதே தவிர, ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுக்கவில்லை. நாம் சென்ற மூன்றாவது குழுவிலே கூட 6 மாதம் முன்னாலே தள்ளிக் கொடுத் தோம். இப்போதும் 6 மாதம் முன்னாலே தள்ளிக் கொடுக் கிறோம். ஆகவே, இந்தத் தன்மைகளினுடைய அடிப்படையிலே வரும்போது, இன்னும் ஆராய்ந்து கொண்டு இருக்கிறோமே தவிர, அந்த அறிக்கைகள் முழுவதும் முடிந்துவிட்டது என்றல்ல, சில பல பரிந்துரைகளைச் செய்திருக்கிறார்கள், செய்து கொண்டு கொண்டு வருகிறார்கள். இது எக்சிகியூடிவ் ஆர்டர் என்ற அள விற்கு வருகிறது. ஆகவே, இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் கள் தெரிந்துகொள்ள வேண்டுமானால் சட்டமன்றத்தினுடைய நூலகத்திலே அது வைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் யார் அக்கறையோடு பார்க்க வேண்டும் என்று இருக்கிறார்களோ, அவர்கள் பார்க்கலாம். இந்த ஊதியக் குழுவினுடைய பரிந்துரைகளைக் கூட சட்டமன்றத் தினுடைய நூலகத்திலே வைப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன், யார் பார்க்க வேண்டும் என்றாலும் அதைப் பார்க்கலாம். ஆனால், சட்ட சபையில் வைப்பது என்பது, முதல் ஊதியக் குழு இரண்டாவது மற்றும் மூன்றாவது ஊதியக் குழுவின் அறிக்கை கள் வைக்கப்படவில்லை. இது எக்சிகியூடிவ் ஆர்டர் சம்பந்த மாக வைக்கப்பட்ட குழு. நிர்வாக சம்பந்தமான ஆர்டர்கள் ஒவ்வொன்றையும் சட்ட மன்றத்திலே வைத்து விவாதிப்பதில்லை, முடிவு எடுப்பதில்லை. அதனுடைய ஆணைகள் நூலகத்திலே வைக்கப்பட்டு இருக்கின்றன. அந்தக் குழுவின் பரிந்துரைகளை யும் நூலகத்திலே வைப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன். அதை வேண்டுமானால் பாருங்கள். அங்கே வைக்கப்பட்டு இருக்கிற பரிந்துரைகள் முழுவதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ப தில்லை. அதைத் திருத்த அரசுக்கு உரிமையிருக்கிறது. அது முழுவதும் முடிந்துவிடவில்லை. இன்னும் அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

ஆக இப்போது தந்து இருக்கிற பணம் எதிர் பாராமல் எடுத்து செலவழிப்பதற்குத்தான், ஏன் செலவழித்தோம, எதற்கு செலவழித்தோம், எந்த எந்த இனங்களில் செலவழித்

தோம் என்பதை விரிவாக, விளக்கமாக, தெளிவாக, திட்பமாக துணை மதிப்பீட்டுக் கோரிக்கை வரும்போது அதற்கான குறிப்புகளை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர் கள் கையில் தரப்படும். அப்போது அவர்கள் மிக தெளிவாக எடுத்துச் சொல்வார்களானால் அந்தக் கருத்தை அரசு எற்றுக் கொள்வதற்கு சிறப்பாக இருக்கும் என்பதை சொல்கிறேனே தவிர இதிலே மாண்புமிகு உறுப்பினர்களின் உரிமையை மறுக் கவோ, பேசக்கூடாது என்றோ எந்த தன்மையும் இல்லை. எதுவும் சட்ட திட்டங்கள்படி விதிமுறைகள் படி நடக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் நீண்ட நேர பிரசங்கத்திற்கு பிறகு அவர்கள் கேட்டுக் கொண்ட கோரிக்கை யின்படி துணை மானியக் கோரிக்கையில் பேசலாம் என்று கூறி அமைகிறேன்.

திரு கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கண்டின்ஜென்சி பண்டு பில்லுக்கு 100 கோடி ரூபாய் அனுமதிக்கவேண்டும் என்று கொண்டு வந்து இருப்பதை அரசு ஊழியர்களுக்கு அரசு கொடுக்க உள்ள சம்பள உயர்வினை கொடுப்பதற்கான தொகை அதிகப்படுத்தப்பட்டு இருப்பதால் அதற்கு வேண்டும் என்று இந்த காரண நோக்க விளக்கத்தில் கூறப்பட்டு இருக்கிறது, இது பற்றி மேலும் நிதி அமைச்சர் அவர்கள் தெளிவான விவரங்களை எல்லாம் சொன்னார்கள். இருக்கிற கஷ்டம் என்ன என்று சொன்னா.ல் சம்பள கமிஷன் அமைக்கப்பட்டது நிர்வாக உத்திரவின் கீழ் என்றும் அதனுடைய முழு ரிப்போர்ட்டையும் இந்த அவையில் வைத்து விவாதிக் கின்ற பழக்கம் இதுவரைக்கும் இல்லை என்றும் எடுத்து சொன் னார்கள்.

அரசின் உத்திரவின்படி எக்ஸிக்யூட்டிவ் ஆர்டரின் படி நியமிக்கப்பட்டிருக்கும் படியான ஒரு கமிஷன், அதிலிருந்து வந்த அந்த முடிவு, அதில் பலவற்றை அரசு ஏற்றுக்கொள்ளலாம், நிராகரிக்கலாம் . அதைப் பற்றி அரசு விமர்சிக்கலாம் அல்லது அரசு இப்போது ஊழியர்களை நடத்திக்கொண்டு வருவதை மாதிரி அவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற ஊதியம் மற்றும் சலுகைகள் பற்றியும் அந்த கமிஷனுடைய ரிப்போர்ட் டில் விளக்கங்கள் மட்டும் அல்லாமல் விமர்சனங்களும் இருக் கலாம். இந்த மாதிரி காரியங்கள் எல்லாம் இருப்பதால் அந்த டாகுமெண்டு அந்த தாஸ்தாவேஜி ஒரு பரிபூரண ரகசிய டாகு மெண்டாக மாறி விடுமா ? சட்டமன்றத்தினுடைய பார்



வைக்கு பரிபூரண விவாதத்திற்கு அது கிடைக்கவில்லை என்றால், சட்டமன்றத்தின் பார்வைக்கு அந்த டாகுமெண்டு உட்படுத்தப் பட முடியாது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

என்னுடைய கோரிக்கை என்ன என்றால், இப்போது இதிலே 50 கோடியிலிருந்து 100 கோடி ரூபாய்க்கு உயர்த்தி யிருக்கிறார்கள். நாங்கள் அதை சப்போஸ் ரூபாய் 75 கோடி போதும் என்று சொல்ல ஆரம்பித்தால் எப்படி விவாதம் நடத்த முடியும். 100 கோடி ரூபாய் உயர்வுக்கு இன்ன இன்ன முறையில் உயர்த்திக் கொடுக்கப்பட்டது. இதன் விளைவாக இப்படி வந்து இருக்கிறது. அந்த கமிஷன் கொடுத்து இருக்கும்படியான முடிவுகளில் இந்த இந்த மாதிரி இருந்தது. அதை நாங்கள் இப்படி இப்படி திருத்தி அந்த முடிவுகளை வெளியிட்டோம் என்று அந்த [illegible] அந்த முடிவுகளை அரசு பரிசிலித்து திருத்தியிருக்கிறது [illegible] அந்த ஒரு குறிப்பையாவது ஏன் இந்த அரசு எங்களுக்கு தரக் கூடாது.

அப்படி தந்து இருந்தால் அது பிரயோசனப்பட்டு இருக்கும். இது வேண்டும் என்றே விவாதத்திற்காக கண்டின்ஜென்சி பண்டை உயர்த்தக்கூடாது என்பதற்காக சொல்லுவது அல்ல. எங்களுக்கு விவரம் இல்லாமல் இருக்கிறது. இப்போது நடந்த விவாதத்தை எல்லாம் வைத்துப் பார்த்தால் ஒரு அவையினுடைய நட வடிக்கையில் எப்படி வருகிறது என்றால் 50 கோடி என்பது 100 கோடியாக செலவாகிவிட்டது. இதை நீங்கள் ஒத்துக்கொள் கிறீர்களா ? இல்லையா ? என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லி ஒரு பில் பாஸ் செய்வது, ஒரு சட்டம் பாஸ் செய்வது எப்படி சரியாக இருக்கும். அந்த முறை சரி இல்லை. குறைந்தபட்ச விவரங்களையாவது அவைக்குத் தந்து உறுப்பினர் கள் தங்கள் கருத்துக்களை அதில் சொல்வதற்கு சந்தர்ப்பம் அளித்தால் நன்றாக இருக்கும். இன்னும் அந்த அறிக்கை முழு வதையும் நாங்கள் பரிசிலிக்கவில்லை. என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். முழுவதும் பரிசிலித்து முடித்தால் கூட, அந்த அறிக்கை அப்படியே இந்த அவைக்குக் கிடைக்காது என்பது அவருடைய பேச்சிலிருந்தே, அது எக்சிக்யூடிவ் ஆர்டர்-படி போட்ட கமிஷனாக இருப்பதால் கிடைக்காது என்பதும்..........

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு துறைக்கும் மானியம் என்கின்ற வகையில் சட்டப் பேரவை ஒதுக்குகிறது. ஆனால் சில நேரங்களில் பதிலாக எதிர்பாராச் செல மானியம் என்று பெறுவதற்குப்

வினம் என்று 'கன்டின்ஜென்ட் பண்ட்'-ஐப் பெறுகிறோம். ஏற்கனவே 50 கோடி ரூபாய் அளவுக்கு இந்த கன்டிஜென்ட் செலவு. இந்தந்த இனத்திற்கு இன்ன செலவுகள் என்று இப்போதே நிர்மானித்தால். அதை மானியத்திலேயே சேர்த்து விடலாம். இது சாதாரணமாக எதிர்பாராச் செலவுக்கென்று 50 கோடி ரூபாய் என்று வைத்துக் கொண்டிருக்கிறோம். அல்லது இப்போது 100 கோடி ரூபாய் என்று இந்தச் சட்டம் வருகிறது.

இதை ஏன் 50 கோடியிலிருந்து 100 கோடி ஆக்குகிறீர்கள் என்றால், அதற்குப் பல காரணங்கள் உண்டு. புதிய திட்டங்கள் பட்ஜெட்டிலே இப்போது போட்டிருக்கிற திட்டங்கள் போக புதிய திட்டங்களை எடுத்துக் கொள்ளவேண்டும். பணியாளர்களுக்கு கூடுதல் சம்பளம் கொடுப்பது அதில் ஒன்றாக வரலாம் இதனுடைய நோக்கம் என்னவெனில், பேரவையினுடைய அனுமதியோடு தான் ஒவ்வொரு துறையும் செலவு செய்யவேண்டும். இந்தப் பேரவை பார்த்து, ஒரு 100 கோடி அளவுக்கு அரசாங்கத்திற்கு, மொத்தமாக தருகிறது. எதிர்பாராச் செலவினங்களுக்கு என்று. அந்த வரையறையைத் [illegible] [illegible]றோம். அதனால் தான் ஒவ்வொரு இனத்திலேயும் விவாதம் என்று சொல்கிறபோது. அது எல்லா துறைக்குமே வரும். [illegible]னால் தான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் இந்த கன்டின்ஜென்ட் பண்டிலிருந்து நாம் இனிமேல் செய்கின்ற செலவுகள் துணை மதிப்பீடுகளாக வரும். அந்த நேரத்தில், விரிவாக ஒவ்வொரு இனத்திலேயும் எவ்வளவு செலவு என்று சொல்லமுடியும் என்று குறிப்பிட்டார்கள்.

'கன்டின்ஜென்ட் பண்ட்' என்பது 'அன் போர்சீன் சர்க்கம்ஸ்டன்ஸஸ்'-க்காக உருவாகிற நிதி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே. நமது மின் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திலே புதிய வெளிச்சம் எதும் அவர் தரவில்லை. இருக்கிற நிலைமைகளை அப்படியே சொன்னார். அதனாலே தான், இங்கே திருக்குறளைப் பற்றிச் சொல்லும்போது, ஒரே வார்த்தையிலே சொல்லிவிடலாம் எனப்பட்டது. தயவு செய்து எந்தச் சட்டத்தையும் நிறைவேற்றும்போது, இந்த அவைக்கு இருக்கும்படியான ஒரு முக்கியமான உரிமை—சட்டங்கள் மீது தெரிந்து கொண்டு நாங்கள் உங்களுக்கு அனுமதி தரமுடியவேண்டும். அந்தச் சட்டத்தை நிறைவேற்ற முடிய வேண்டும். அதற்காக, நீங்கள், எங்களைத் தகுதி உள்ளவர்களாக ஆக்கிடும் முறையில் விவாதங்கள் உங்களிடத்திலிருந்து கொடுக்க வேண்டும் அந்த அடிப்படையில் நியாயத்தைச் சொல்கிறேன்.





அவர்கள் என்ன என்ன முறையில் செலவழித்திருக்கிறார்கள் என்று முழுவதையும் மேற்கொண்டு வரக்கூடிய சப்ளிமென்டரி பட்ஜெட்டிலோ, மானியக் கோரிக்கைகளிலோ நிச்சயம் நாங்கள் பேசுவோம். அதைப் பற்றி எந்தவித சந்தேகமும் இல்லை. ஆனால் இந்தக் கமிஷன் அறிக்கை ஒரு ரகசிய தஸ்தாவேஜு தானா, அல்லது கவர்ன்மெண்ட்டாவது அதைப் பற்றி எடுக்கிற முடிவுகளைப் பற்றி குறிப்புக்களாவது, தயார் பண்ணி இந்த அவைக்குத் தரக்கூடாதா ? இது வரைக்கும் பழக்கம் இல்லை என்று சொன்னால், ஒரு நல்ல பழக்கத்தை ஏன் புதிதாக உண்டாக்கக் கூடாது ? உறுப்பினர்கள் புரிந்து கொள்ளக்கூடிய முறையிலே அதை ஏன் உண்டாக்கிக் கொள்ளக்கூடாது என்பதை அமைச்சர் அவர்கள் தெரியப் படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்தப் பணம் முழுவதும் அரசு ஊழியர் [illegible] கொடுக்கப்படவேண்டிய ஒரு [illegible] உயர்வுக்குக் [illegible], இதை உயர்த்துவதை நாங்கள் ஆதரிக்கிறோம் ; வரவேற்கிறோம் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் இங்கே முன்மொழிந்து இருக்கிற எதிர்பாராச் செலவினம் என்ற முறையில் 50 கோடியை, 100 கோடி ஆக்குவது குறித்து ஆட்சேபிப்பதற்கு இல்லை. ஆனால், 50 கோடி, 100 கோடியாக ஆக்கப்படுகிறபோது எந்த அடிப்படையில் 50 கோடி ரூபாய் 100 கோடி ரூபாயாக ஆக்கப்படுகிறது என்பதைப் பற்றியும் எந்தத் துறைக்கு அந்தச் செலவு கேட்கப்படுகிறது என்பது பற்றியும், அந்தத் துறையின் [illegible] கோரிக்கைகள் என்ன என்பதைப் பற்றியும் [illegible] கொண்டு, அது பற்றி முடிவு எடுப்பது [illegible] முறையிலே தான் ஏதோ [illegible] இருக்கும் என்ற முறையிலே தான் ஏதோ [illegible] 100 கோடி என்று அறிவிப்பு வெளி[illegible] 50 கோடி இத்தகைய அடிப்படை [illegible]டப்படாமல், மேற்கொண்டு 50 கோடி இத்தகைய அடிப்படை செய்யப்பட்டிருக்கிறது என்கிற [illegible] செலவழிக்க முடிவு கொடுக்கப்பட்டு இருக்கவேண்டும் [illegible] குறிப்பாக [illegible] நான் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக [illegible] விரும்புகிறேன். மரபுகள் என்பது நாமாக உருவாக்கிக் கொண்டது. தம்முடைய தேவைக்காக, உருவாக்கிக் கொண்டுள்ள ஒன்றாகும்.

[illegible] எனவே, அரசின் இயக்கத்தின் அங்கங்களாக இருக்கக்கூடிய [illegible] நியாயமான கோரிக்கைகளை பரிவுணர்[illegible] [illegible] என்பதே விவாதத்[illegible] [illegible] பரிசீலித்திருக்கிறதா என்பதே விவாதத்[illegible] [illegible]ரச்சினையாக இருக்கிறது. எனவே, போர்த்[illegible] [illegible] சட்டமன்றத்தில் வைத்து [illegible] பற்றிய விவரத்தை இந்தச் சட்டமன்றத்தில் வைத்து [illegible] வேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டு[illegible] [illegible] தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது அது பற்றி நான் விளக்கங்கள் தந்து இருக்கிறேன் காரணநோக்க விளக்கங்கள் என்று, எதிர்பாராச் செலவை உயர்த்துகின்ற போது எல்லாம் கோடிட்டுக் காட்டுகின்ற அளவுக்குத் தான் விளக்கம் தரப்பட்டு இருக்கின்றது ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் இதுபற்றிய விளக்கங்களைத் தெளிவாகவும் விவரமாகவும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற அவர்களுடைய விருப்பத்தைச் தெரிவிப்பதிலே தவறு ஏதும் இல்லை.

ஆனால், இங்கே, தமிழ்நாடு மாநில எதிர்பாராச் செலவு நிதியும் ஐம்பது கோடி ரூபாய்களைக் கொண்டிருக்கிறது. நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின்பேரில் நூறு கோடி ரூபாய்கள் அளவிற்குக் கூடுதல்செலவை உள்ளடக்குகின்ற ஆணைகளை வெளியிட்டுள்ளதை யொட்டி, தற்காலிகமாக அத்தொகையை ஐம்பது கோடி ரூபாய்களிலிருந்து நூறு கோடி ரூபாய்களுக்கு உயர்த்துவது அவசியம் எனக் கருதப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களும் எழுப்பினார்கள். மற்றவர்களும் எழுப்பியதற்குப் பிறகுதான் அதுபற்றி விளக்கங்கள் தர வேண்டும் என்பதற்காக நாம் வரவு செலவுத் திட்டத்திலே அக விலைப்படியும், இந்த ஊதிய உயர்வுக்கு 70 கோடி ரூபாய் கொடுக்க வேண்டி வரும் என்று சொல்லி இந்த அவையினுடைய ஒப்புதலைப் பெற்றிருக்கிறோம். ஆனால் 70 கோடி என்று சொன்னோமே தவிர ஊதியக் குழுவின் பரிந்துரைகளெல்லாம் வந்ததற்குப் பிறகு ஆண்டு ஒன்றுக்கு 90 கோடி ஆகும் செலவு மட்டுமல்லாமல், ஆறு மாத காலம் பின் தங்கி 1—4—1984—லேயிருந்து கொடுக்கத் தொடங்கியதனால் அதிலே 45 கோடி ஆகிறது. ஆகவே, 135 கோடி ரூபாய் செலவாகும் நாம் கூடுதலாகப் எழுப்ப வேண்டியிருக்கிறது. ஆகவே, 70 கோடி ரூபாய்தான் இப்பொழுது இருக்கிறது. கூடுதல் செலவு ஆகிறது என்ற விளக்கங்களை நான் தந்தேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று, இது இரகசியமான தஸ்தாவேஜா என்று கேட்டார்கள். இது இரகசியமானது அல்ல. ஆனால் அரசின் நிர்வாகத்தினுடைய பணிகளைச் செம்மையாக நடத்துவதற்காக குழு அமைக்கப்பட்டு, அதனுடைய பிரச்னைகளை ஆராய்ந்து அரசுக்கு உதவி செய்யும் முறையில் இந்த அறிக்கை கேட்கப்பட்டது. அந்த அறிக்கையினுடைய அடிப்படையிலே சில பல முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன





சில பல முடிவுகள் மாற்றியமைக்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் இந்த நிதி சம்பந்தமான முடிவுகளைத்தான் இப்பொழுது எடுத்திருக்கிறோமே தவிர வேறு சில யோசனைகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதையும் அரசு தொடர்ந்து ஆராய்ந்துகொண்டு இருக்கிறது; குழுவைப் பொறுத்து எடுத்த முடிவுகள் முழுவதும் அல்ல. இதுவரையிலும் எடுத்த முடிவுகள், இந்த நிதியைப் பொறுத்தவரையிலேயும் ஐந்து அரசாணைகளின் மூலமாக சம்பள உயர்வு எப்படித் தரப்பட்டு இருக்கிறது என்று தெரிகிறது. அந்த ஐந்து ஆணைகளையும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்பதற்காக சட்டமன்றத்திலே உள்ள நூலகத்தில் இது வைக்கப்பட்டிருக்கிறது. தெளிவாகப் பார்த்துக் கொள்ளலாம்.

ஆகவே, இந்த அறிக்கையை வைக்க வேண்டுமென்று சொல்வதன் காரணமாக,—அது இரகசிய ஏடு அல்ல—ஆனால் அதை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதுபற்றி, இந்தச் சம்பளக் குழுவினுடைய அறிக்கையை நூலகத்திலே வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் அதைப்பற்றி தெளிவாகப் பார்த்துக் கொள்ளலாம். அதற்கு வாய்ப்பு வருகின்றபொழுது பேசுவதற்கு அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைச் சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

“1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த)சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 34/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.”

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 34/1985) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

4. வரவு—செலவுத் திட்டம் 1985-86 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 33—வீட்டு வசதி.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி—என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,16,46,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் நகரில் குடிசை மாற்று வாரியத்தினர் குடியிருப்புகள் கட்ட ஏற்கனவே போடப்பட்டுள்ள திட்டம் நடப்பு நிதியாண்டிலேயே நிறைவேற்ற வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" மானியக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின்கீழ் [illegible]பெறுகின்ற ரூ. 13,16,46,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண். 34-நகர்ப் பகுதி வளர்ச்சி.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப் பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ரூ. 30,06,43,000-க்கு மேற்படாத தொகை [illegible] வழங்கப் பெற வேண்டும்."



திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமுலாக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப் பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 30,06,43,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப் பெற்றுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை** நான் படித்ததாகக் குறிப்பேட்டில் ஏற்றிக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகின்ற கருத்துக்களின் அடிப்படையில் அரசின் தரப்பில் இறுதியாக என்னுடைய பதிலை அளிக்கின்றேன்.

(முற்பகல் 10-40)

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி என்ற இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் மேம்படுத்தவும் வீட்டு வசதி மிகவும் அவசியமான, முக்கியமான ஒன்றாகும். அதேபோல், புதிய 20 அம்சத் திட்டத்தின்கீழ் தமிழக அரசு பல திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருகிறது. கிராமப்புற மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்களும், வீடு கட்ட நிதி உதவியும் 1984-85 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்டுள்ளது. வீட்டு மனைப் பட்டா ஒதுக்கீட்டுக்குக் கடந்த ஆண்டு 1,75,000 என்று இலக்கை வைத்துள்ளார்கள். ஆனால் அது 2,05,108 என்று அளவுக்கு இலக்கைத் தாண்டியுள்ளது.

அதே போல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலமாக வீட்டு வசதித் திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அந்தத் திட்டங்களின் மூலமாக ஏழை, எளிய மக்கள், நடுத்தர மக்கள்

---

** 139–164 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

பொருளாதாரத்திலே நலிந்துள்ள மக்கள் ஆகியோருக்கு
வீடு கட்டுகின்ற திட்டங்களை வீட்டு வசதி வாரியம் செயல்
படுத்தி வருகிறது. பலதரப்பட்ட மக்களுக்காகவும் சமூகத்திலே
வாழ்ந்து நலிவுற்ற மக்களுக்காகவும் வீட்டு வசதித் திட்டங்களை
நிறைவேற்றுகிறார்கள். 1985–86 ஆம் ஆண்டு 15,273 வீடுகள்
கட்ட வீட்டு வசதி வாரியம் திட்டமிட்டு, அதற்காக ரூ. 52.50
கோடியை ஒதுக்கியுள்ளது. குறைந்த மாத வருவாய் உள்ள
ரூ. 351–600 உள்ளவர்களுக்கு உச்ச வரம்பு ரூ. 20,000 அளவில்
1984–85 மார்ச் திங்களிலேயே 23,858 வீடுகள் கட்ட கடந்த
ஆண்டு திட்டமிட்டார்கள். அது போன்ற வீடுகளைக் கட்டி
ஏழை எளியமக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழிவகை
செய்யப்படுகிறது.

1985–86ஆம் ஆண்டில் 2,488 வீடுகளைக் கட்டி முடிக்க
வீட்டு வசதி வாரியம் உத்தேசித்துள்ளது. நடுத்தர வருவாய்
பெறுகின்ற மக்களுக்காக விலை உச்சவரம்பு ரூ. 50,000 என்று
நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில் முன்பணமாக 30 சதவீதத்தை
அவர்கள் கொடுக்க வேண்டும். இது போன்ற திட்டத்தை வீட்டு
வசதி வாரியம் அமுல்படுத்துகிறது.

அதே போல் உயர் வருவாய்த் தொகுதியினருக்காக விலை
உச்சவரம்பை ரூ. 1,25,000 என்று நிர்ணயித்துள்ளது. 1985–
86 ஆம் ஆண்டில், வாரியம் 5,746 வீடுகளைக் கட்ட உத்தேசித்
துள்ளது.

நிலம் கையகப்படுத்துவதிலே வீட்டு வசதி வாரியம் சுமார் 10
ஆண்டுகளாகக் கையகப்படுத்துகிறார்கள். உதாரணத்திற்கு
எடுத்துக்கொண்டால் என்னுடைய ஆத்தூரிலே 1977-லேயிருந்து
155 ஏக்கர் நிலத்தை வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்த
நடவடிக்கை எடுத்தார்கள். அந்த நிலங்களிலே பல ஏழை
எளிய மக்கள் வீடுகளைக் கட்டியிருந்தார்கள். ஆகவே, அந்த
வீடுகளைக் கட்டியதற்கு வீட்டு வசதி வாரியத்தினர் அவர்களுக்கு
விதி விலக்குக் கொடுப்பார்களா அல்லது வீடுகளை எடுத்துக்
கொள்வார்களா என்று புரியவில்லை. அவர்கள் அனுமதி பெற்
றுத்தான் வீடுகளைக் கட்டியுள்ளார்கள். ஆனால், வீட்டு வசதி
வாரியம், அந்த ஏழை எளிய மக்கள், தங்கள் வீடுகளை அப்புறப்
படுத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, இது
போன்ற கஷ்டங்களைத் தீர்க்க அந்த வீட்டுவசதி வாரியம்
தகுந்த நடவடிக்கை எடுத்து, அதைப் போக்குவதற்கு வழிவகை
செய்யவேண்டும்.

அதேபோன்று நகர்ப்புறங்களிலே நிலங்களைக் கையகப்
படுத்த வீட்டு வசதி வாரியம் நிலத்திற்கு இன்ன விலை என்று
நிர்ணயிக்கிறார்கள். மக்களிடம் மனுக்களைப் பெறு





கிறார்கள். அந்த மனுக்களைப் பெறும் முன்னர் ஒரு கிரவுண்
டுக்கு இவ்வளவு விலை என்று நிர்ணயிக்கிறார்கள். ஆனால்,
ஓராண்டு, இரண்டாண்டு பணம் கட்டிய பிறகு அந்த விலையை
உயர்த்துகிறார்கள். இது போன்று விலையை உயர்த்துவது
நியாயமா என்று கேட்க விரும்புகிறேன். அவர்களுக்கு நிர்ண
யித்த பணத்தை. இரண்டு ஆண்டுகள் கழித்து மேலும் 3 பங்காக
உயர்த்துகிறார்கள். வீட்டுவசதி வாரியம், ஏழை எளிய மக்க
ளுக்கும் நடுத்தர மக்களுக்கும் சலுகை தரத்தான் இருக்கிறதே
ஒழிய, மக்களுக்கு எந்தவிதமான தீமையையும் செய்யக்
கூடாது.

அடுத்து, கான்ட்ராக்ட் மூலம்தான் வீடு கட்டப்படுகிறது.
வீடுகளைக் கட்டுகிற முறையிலே மட்டுமல்லாமல் ஜன்னல் கம்பி
கள், மிகவும் லேசானவையாக உள்ளன. கான்ட்ராக்டர்டர்கள்
வீடுகளைக் கட்டிக் கொடுத்த பிறகு வீட்டுவசதி வாரியத்தினர்
அந்த வீட்டினுடைய மதிப்பை உயர்த்தி, விலையைக் கூட்டு
கிறார்கள். என்று குறிப்பிடுகிறார்கள். இதுபோன்று விலையை
உயர்த்தாமல் என்ன விலைக்கு நிலம் ஆர்ஜிதம் செயயப்பட்டதோ
என்ன விலைக்கு வீடு கட்டப்பட்டதோ, அதை வைத்து, அதற்கு
மேல் 20 சதவீதமோ 30 சதவீதமோ உயர்த்தி, வீடுகளுக்கு
விலையை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று இந்தத் திட்டத்திற்கு நிலங்களைக் கையகப்
படுத்துவதிலும் வீடுகள் கட்டுவதிலும் வீட்டுவசதி வாரியம் அதிக
கவனம் செலுத்தி, நல்லமுறையில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க
ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று பல இடங்களில் குடிசைமாற்றுவாரியத்தின்
மூலம் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ள வீடுகளைப் பார்த்தால்
கட்டி 4, 5 ஆண்டுகளில் மாடிகளுக்குச் செல்லக்கூடிய படிகள்
பழுதுபட்டுள்ளன. அதனால் அந்த வீடுகளில் குடியிருப்பவர்
களுக்கு மிகவும் சிரமங்கள் ஏற்படுகின்றன. உடனடியாக அதை
பழுதுபார்த்துக் கொடுக்க ஏற்பாடு செயய வேண்டும், தக்க நட
வடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1984–85 ஆம் ஆண்டில் நம்முடைய மதுரைவாயில் திட்டத்
தில் 418 இலட்சம் ரூபாய் செலவிட்டிருக்கிறார்கள். அதன்
மூலம் 6,580 மனைகளை மேம்படுத்தியிருக்கிறார்கள். மனை
களை மேம்படுத்தி, கட்டிடம் கட்டும்போது எல்லோருக்கும்
முன்நுரிமை கொடுக்க வேண்டும். பாரபட்சம் இல்லாமல்
கொடுக்கவேண்டும்.

குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக கோவை, மதுரை, திருச்சி, தஞ்சை பகுதிகளில் 19,532 வீடுகள் கட்டப் பட்டுள்ளன. அந்தப் பகுதிகள் நல்லமுறையில் பராமரிக்கப்பட வேண்டும். சுகாதார வசதி, விளையாட்டுத் திடல், பூங்கா, மற்ற வசதிகள் எல்லாம் நல்லமுறையில் செய்துகொடுக்க தேவை யான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இன்றைக்கு பல்வேறு இடங்களில் காலி இடங்கள் நிறைய இருக்கின்றன. நத்தம் என்றாலும் சரி, தரிசு நிலம் என்றாலும் சரி, நகர்ப்புற உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நில மாக இருந்தாலும் சரி அந்த இடங்களில் எல்லாம் வீடுகள் கட்டி, ஏழை எளிய மக்களுக்கும் நடுத்தர மக்களுக்கும் அவர்களுடைய வசதிக்கு ஏற்ப கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'ஹட்கோ' மூலம் அதற்காக 46 இலட்சம் ரூபாய் கடன் பெற் றிருக்கிறார்கள். அதை நல்லமுறையில் பயன்படுத்தி, வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு அலுவலர்கள், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள், ஊரக வளர்ச்சிப் பணியாளர்கள் ஆகியோருக்கு வீட்டுவசதி வாரியத் தின் மூலமாக வீடுகள் கட்டிக்கொடுக்க 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தத் தொகை கிராமப்புற வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வீடுகட்ட வழங்கப்படு கிறது. இன்றைக்கு தமிழ்நாட்டில் 104 கிராமப்புற வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அவற்றின் மூலமாக கடந்த ஆண்டு 2 இலட்சம் வீடுகளுக்குமேல் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் 1,58,516 வீடுகள்தான் கட்டப்பட்டுள்ளன. ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்ட 4,500 ரூபாய் கடன் வழங்கப்படும் என்று சொல்கிறார்கள் ஆனால் இந்த 4,500 ரூபாயில் இன்றைய சூழ்நிலையில் வீடுகட்ட இயலாது. 3,500 ரூபாய் கடன், 1,000 ரூபாய் மானியம் 1,500 ரூபாய் வீடு கட்டக்கூடியவர் முன்பணமாகப் போட வேண்டும் என்ற அடிப்படையில் கட்டப்படுகின்றன. இந்த வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் குறித்த காலத்தில் பணம் வழங்க முடியவில்லை. குறித்த காலத்தில் வீடுகட்ட அடித் தளம் போட்ட பின்னால், அடுத்த இன்ஸ்டால்மெண்ட் பணம் கிடைப்பதில் நிறைய கஷ்டம் இருக்கிறது. பணியைப் பார்த்து உடனடியாகப் பணத்தைக் கொடுக்க வீட்டுவசதிவாரியம் செயல் பட வேண்டும்.

1985-86 ஆம் ஆண்டில் கிராமப்புற வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கங்களில் ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்ட பணம் ஒதுக்கப் படவில்லை என்று சொல்கிறார்கள். இந்த வீடு கட்டும் கூட் டுறவுச் சங்கங்களில் போய்க்கேட்டால் பணம் ஒன்றும் ஒதுக்கப்பட வில்லை, இந்த ஆண்டு 7.000 வீடுகளுக்குத்தான் பணம் ஒதுக்கப்





பட்டிருக்கிறது. அவை எல்லாம் பிற்பட்ட மக்களுக்குத்தான் என்று அந்த கூட்டுறவு வீடு கட்டும் சங்கத் துணைப் பதிவாளர் சொல்கிறார். இந்த ஆண்டிலும் அவர்களுக்கு நிறைய வீடுகள் கட்ட பணம் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

சேலம் மாவட்டத்தில் 250 வீடுகள் பிற்பட்டவர்களுக் குக் கட்டத்தான் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்று அந்த துணைப் பதிவாளர் சொல்கிறார். ஒரு மாவட்டத்திற்கு 250 வீடுகள் என்பது மிக மிகக் குறைவான எண்ணிக்கையாகும். அதைவிட அந்த 250 வீடுகளுக்கு கொடுக்காமலே இருப்பது நல்லது. 8 கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் இருக்கின்றன. ஒரு சங்கத் திற்கு 31 வீடுகள் என்ற அளவில்தான் வருகிறது. ஆனால் திருச்சி, தஞ்சை, மதுரை போன்ற மாவட்டங்களுக்கு 1,000 வீடுகள் கட்ட நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக தபால் அனுப்பப்பட் டுள்ளது. இதுபோல ஏற்றத்தாழ்வு இல்லாமல், பாரபட்சம் காட்டா மல், எல்லா மாவட்டங்களுக்கும் ஒரேமாதிரி நிதி ஒதுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு தாலுகாவிற்கு 31 வீடுகள் என்பது மிகவும் கொஞ்சமாக இருக்கிறது. இந்த எண்ணிக்கையை உயர்த்த வேண்டும். இல்லை என்றால் பிற்பட்ட மக்களும், ஆதிதிராவிட மக்க ளும் வீடு கட்ட முடியாத நிலையில் கஷ்டப்படுவார்கள். நம்முடைய அரசு ஆதி திராவிட மக்களுக்கு எல்லா இடங்களிலும் பல்வேறு வகைகளில் வீட்டுமனைப் பட்டாக்கள் நிறைய கொடுத்திருக்கிறது. ஆயிரக்கணக்கான வீட்டுமனைப் பட் டாக்களை ஒவ்வொரு இடத்திலும் அந்த மக்கள் பெற்றிருக் கிறார்கள். ஆனால் கடன் கிடைக்காத காரணத்தால் அந்த இடத்திலே வீடு கட்ட முடியவில்லை. ஆகவே, கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்டதைப்போன்று இந்த ஆண்டும் பணம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டுகின்ற இடங்களில் 26,165 வீடுகள் பிற்பட்ட மக்களுக்கும் கட்டிக் கொடுத்துள்ளார்கள். ஆனால் எங்களுடைய ஆத்தூர் தாலுகாவை எடுத்துக்கொண்டால் இதைப் போன்ற நிலையில் அதிகமாக வீடுகள் கட்டப்படவில்லை.

(முற்பகல் 10-50)

தீப்பற்றி எரிந்த வீடுகளுக்கு மட்டும்தான் நேச்சுரல் கலா மிட்டிஸ் என்ற அடிப்படையில் ஓரிரு வீடுகளுக்கு முன்னுரிமை கொடுத்து கட்டப்பட்டுள்ளது. ஆகவே இந்த ஆதிதிராவிடர்

களுக்குக் கொடுப்பதுபோல் பிற்பட்ட வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் அனைவருக்கும் வீடுகளைக் கட்டிக்கொடுப் பதற்கான வகையில் வழிவகை செய்ய வேண்டும் என்று வீட்டு வசதி அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகக் கொடுக்கப் படுகின்ற தொகை மிகவும் குறைவான தொகையாகும். 4,500 ரூபாய் என்பதை 6,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தால் ஏழை எளிய மக்கள் ஓரளவுக்கு நன்மை பெற்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும். இப்போது கிராமப் புறங்களில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூல மாகவும், ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் மூலமாகவும், தாட்கோ வின் மூலமாகவும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன என்று கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக ஒரு யூனியனுக்கு 20 வீடுகள்தான் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். தாட்கோவின் மூலமாக சில சட்டமன்றத் தொகுதிகளில் கடந்த ஏழெட்டு ஆண்டுக் காலமாக எந்தவிதமான வீடுகளும் கட்டிக் கொடுக்கப் படாமல் இருக்கின்றது. தாட்கோ மூலமாகவும், தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாகவும் வீடுகள் கட்டிக் கொடுத்துப் படுகின்றன என்ற காரணத்தைக்காட்டி வீட்டு வசதி வாரியத்தால் கொடுக்கப்படுகின்ற கடனைக் கொடுக்காமல் இருக்கக்கூடாது என்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரிலே பார்த்தால் ஏழை எளிய மக்கள் கிட்டத் தட்ட 42 இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய சதவிதம் 8.6 என்று கருதுகிறோம். இதுபோல் கிராமப் புறங்களிலும், கோவை, சேலம், மதுரை போன்ற பகுதிகளில் வசிக்கிற மக்களையும் கணக்கிட்டு இருக்கிறார்கள். தற்போது மணலி புற நகர் பகுதியைப் பொறுத்த வரையில் 2,500 வீடுகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு வீட்டு வசதி வாரியம் வீடுகளைக் கட்டிக்கொடுத்தாலும், வீட்டு வசதி பரா மரிப்புக் கழகம் என்ற ஒன்றை நிறுவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நிறுவினால்தான் கட்டப்பட்ட வீடு களைப் பராமரிக்கவும், செப்பனிடவும், அதற்காகச் செலவுகள் செய்யவும் முடியும். ஏனென்றால் குடிசை மாற்று வாரியம் கட்டிய வீடுகள் பல இடங்களில் பராமரிக்கப்படாமல் இருக் கின்றன.

மேலும் கிராமப்புறங்களில் அதிகப்படியான வீடுகளைக் கட்டுவதற்கு உரிய வகையில் திட்டத்தைத் தீட்டி அரசு செலவு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சென்னையைப் பொறுத்த வரையில் பீச் ரோட்டிலே யிருந்து லஸ் வரையிலும் இரயில் பாதைத் திட்டம் போடப்பட் டிருக்கின்றது. இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு தொகை என்று





கொடுக்கப்படவில்லை. அதனுடைய தூரம் 8.45 கிலோ மீட்டர் என்று குறிப்பிட்டுள்ளார்கள். அந்த தூரத்தைப் பற்றிய முழு விவரத்தையும், அதற்கு எவ்வளவு செலவாகும் என்பது குறித்தும் இங்கே விளக்கப்படவில்லை.

வீடுகள் கட்டுவதற்காக நிலங்களைக் கையகப்படுத்துவதிலும் புறம்போக்கு நிலங்களில் கிராமப்புறங்களில் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதிலும் நல்ல முறையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன.

கிராமப்புறங்களில் ஏழை எளிய மக்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகளைக் கட்டித் தரவேண்டும் என்றும் அதற்காக வீட்டு வசதி வாரியத்தின் மூலம் இந்த ஆண்டில் கிட்டத்தட்ட 20 ஆயிரம் வீடுகள் என்ற அளவுக்காவது ஒதுக்கித் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மானியத் தொகையைப் பொறுத்த வரையில் நிறைய வீடுகளைக் கட்டிய பின்னரும் மானியத் தொகை வழங்கப்படாத நிலைமை இருக்கின்றது. எனவே அந்த மானியத்தை உடனடி யாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ஆத்தூரிலே நில ஆர்ஜிதம் செய் யப்பட்ட பகுதிகளில் வீடுகள் கட்டிக் கொடுப்பதோடு, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகவும் அதிகப்படியான வீடுகளைக் கட்டிக் கொடுத்து ஏழை எளிய மக்களுக்கு வீட்டு வசதியை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை நகரைப் பொறுத்த வரையில் சாலையோரங்களில் வீடுகள் இல்லாமல் சாலையில் படுத்துக் கொண்டிருக்கின்ற, படுத்துத் தூங்குகின்ற நிலைமை இருக்கின்றது. அதைப் போக்கு கின்ற வகையில் முழு முயற்சி எடுத்து சாலையோரங்களில் வசிப்பவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த வீட்டு வசதி வாரியம் அதிகமாகக் கிராமப்புறங்களுக்கு நிதியினை ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

டாக்டர் அ. பொன்னுசாமி : பெருமைபெற்ற இந்தப் பேரவையின் தலைவர் அவர்களே, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுக்கொரு வீடு கட்டுவோம் என்ற புரட்சித் தலைவர் இதய தெய்வம், தமிழக முதல்வர் அவர்களின் எண்ணத்திற்கேற்ப முதற்படியாக கூடிய விரைவில் ஒரு குடிசைக்கு ஒரு வீடு கட்டும் திட்டத்தை இந்த அரசு கொண்டுவந்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[டாக்டர் அ. பொன்னுசாமி] [1985 ஜூன் 26

புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் கிராமப்புற மக்களுக்கு
வீட்டு மனையையும், வீடு கட்ட நிதியையும் பொருளாதாரத்தில்
நலிவுற்றவர்களுக்கு வீட்டு வசதியையும், குடிசைப் பகுதியின்
சுற்றுப்புறத்தை மேம்படுத்தவும் இவற்றை எல்லாம் குறிக்கோள்
களாகக் கொண்டு இருக்கின்ற சாதனை இலக்குகளைப் பார்க்கிற
போது நமது புரட்சித் தலைவரின் அரசினுடைய இந்தச்
சாதனை ஓர் இமாலயச் சாதனையாகும் என்பதை எண்ணிப்
பார்த்து நான் பெருமைப்படுகிறேன். ஆகவே, இந்தியாவிலே
கடன் வசதியைப் பெறும் மாநிலங்களிலே தமிழ்நாடு என்பது
இரண்டாவதாக இருக்கிறது, முதலாவதாக ஆக முயற்சியை
மேற்கொண்டிருக்கிற தமிழக அரசை நான் பாராட்டக் கடமைப்
பட்டிருக்கிறேன். எங்களுடைய தன்னிகரில்லா தலைவர்,
தங்கத் தமிழர், தானைத் தலைவர் பொன்மனச் செம்மல்
புரட்சித் தலைவர் அவர்கள், ஊராட்சி ஒன்றியங்களுக்கும்
நகராட்சிகளுக்கும் எப்படி தன்னிறைவுத் திட்டம் என்ற திட்டத்
டத்தைத் தீட்டித் தந்து, அந்த நகராட்சிகளின், ஊராட்சி
ஒன்றியங்களின் அடிப்படைத் தேவைகளை 3 ஆண்டுகளிலே
முடித்துத்தந்து, உலகம் புகழும் உத்தமராக திகழ்கிறாரோ, அது
போலஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடு கட்டித் தரும் தன்னிறைவுத்
திட்டத்தை-வீட்டு மனை தன்னிறைவுத் திட்டத்தை, நகர்ப்புறம்
என்று மட்டும் அல்லாமல் கிராமங்களுக்கும் ஏற்படுத்தி; வீட்டு
மனைகளை ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3 ஆண்டுகளுக்குள்ளா
கவே கொடுக்கின்ற வகையில் வகை செய்திட வேண்டும்
என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படு
கிறேன்.

வீட்டு மனைகளை கையகப்படுத்துவதிலே சில சிக்கல்கள்
தோன்றலாம். குறிப்பாக ஒரு குடும்பத்திற்கு அந்தப் பகுதி
யிலே ஒரு மூன்று அல்லது ஐந்து ஏக்கர் நிலம் மட்டும் இருக்கலாம்.
அதை கையகப்படுத்தி எடுத்துக் கொள்ளும்போது முழுவதுமாக
இல்லாவிட்டாலும் 80 சதவீதம், அதாவது 80 விழுக்காடு அளவிற்
காவது அவர்கள் அருகிலே உள்ள வேறு நிலத்தை வாங்கிக்
கொள்ளும் வகையிலே அந்த நிலத்தை எடுக்கிறபோது பணத்தை
அவர்களுக்குத் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான்
கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஓரளவு விலைக்கு அந்த நிலங்களை வாங்கி, அல்லது
கையகப்படுத்தி, நலிந்த மக்களுக்கு மலிவான விலைக்கோ,
அல்லது இலவசமாகவோ அவைகளை தந்து கொண்டிருக்கிறது.
உண்மையிலேயே நலிந்த பிரிவினர் வாழ வேண்டும் என்பதற்
காக, அவர்களுடைய நன்மைக்காக வழங்கப்படுகிற அந்த
நிலங்களை அவர்கள் அதிக விலைக்கு விற்கிறார்கள் என்பதை
நினைத்துப் பார்க்கும்போது உள்ளபடியே வருத்தப்படுகிறேன்.
ஆகவே அரசு மார்க்கெட் விலையையும் ஓரளவு கணக்கிலே



1985 ஜூன் 26] [டாக்டர் அ. பொன்னுசாமி]

எடுத்துக் கொண்டு நில ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்று
இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதுவும் குறிப்
பாக நகர்ப்புறத்தை விட்டு விட்டு, நகரத்திற்கு அப்பால்
சற்று தள்ளி நிலங்களை எடுத்தால் மிக எளிதாக இருக்கும்
என்றும் எண்ணுகிறேன்.

இரண்டாவதாக கோயில் நிலம் என்று இருக்கிறது. அவை
களை எத்தனையோ ஆண்டுகளாக அனுபவத்தில் வைத்திருப்ப
வர்களே தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கிற ஒரு
நிலைமை இருந்து வருகிறது. அதனைத் தவிர்த்து விட,
அந்தச் சட்டத்தை தளர்த்தி, அந்த நிலங்களையும் கையகப்
படுத்தி, ஆர்ஜிதம் செய்து, அந்த நிலங்களையும் வீடு கட்டுவதற்கு
எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே நான்
கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக 104 கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதி
சங்கங்கள் மூலமாக கிராமங்களில் சிரிய பணியாற்றி வருவதைக்
குறித்து நான் மகிழ்ச்சி கொள்கிறேன. அதன் மூலம் ஆதி
திராவிடர்களுக்கு வழங்கப்படுகின்ற 6 ஆயிரம் ரூபாய் கடன்
வசதி போதாது என்று நினைக்கிறேன். விலைவாசிகள் ஏறிவரு
கின்ற இந்தக் காலக் கட்டத்தில் அதை 9 ஆயிரமாக உயர்த்தித்
தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த 6 ஆயிரத்
திலே ஒரு பங்கை மானியமாக கொடுக்கிறார்கள். ஆறிலே
மூன்றரைப் பங்கை கடனாகக் கொடுக்கிறார்கள், ஆறிலே ஒன்
றரைப் பங்கை பங்குத் தொகையாக போடச் செய்கிறார்கள்.

ஆனால் அதே சமயத்தில் அதே இடத்திலேயே சில ஆதி
திராவிட மக்களுக்கு ஹட்கோ மூலமாகவும், ஆர். எல். ஈ. ஜி. பி.,
என். ஆர். இ. பி. மூலமாகவும் இலவசமாக வீடுகளைக்
கட்டிக் கொடுக்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால்,
இருக்கின்ற இரண்டு கண்களில் ஒன்றில் சுண்ணாம்பையும்,
ஒன்றில் வெண்ணையையும் வைப்பது போல் இருக்கிறது.
இப்படி இருந்தால், அதாவது இலவசமாக வீடு கட்டிக் கொடுத்த
வர்களுக்குப் பக்கத்திலே கடனாக வீடு கட்டிக் கொண்டவர்கள்
இருந்தால், அவர்களுக்கு எப்படி அந்தக் கடனை திருப்பிக்
கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் வரும் என்பதையும்
சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

ஆனால் அரசே எல்லோருக்கும் இலவசமாக வீடு கட்டித்
தருவது என்பதும் இயலாத காரியம். ஆகவே அரசு கடனாகக்
கொடுக்கின்ற பணத்தையும், ஒவ்வொரு வீட்டுக்கும் ஹட்கோ
மூலமாக இலவசமாக கொடுக்கின்ற பணத்தையும் சேர்த்து,
மொத்தமாக வைத்துக் கொண்டு, வீடு கட்டுவதற்காக ஆதி
திராவிடர்கள் முன் வரும்போது, அதிலே பாதியை இலவசமாக

வும், பாதியைக் கடனாகவும், எல்லோருக்கும் ஒரே மாதிரியாகக்
கொடுத்தால், அதனால் யாருக்கும் மனத்தாங்கல் இருக்காது
என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் கூற ஆசைப்படு
கிறேன்.

(முற்பகல் 11–00)

இதனைக் கடைபிடித்தால் கடன் பெற்றவர்கள் எல்லோரும்
நாம்அனைவரும் கடன்பெற்றிருக்கிறோம், நம்முடைய கடனைத்
திருப்பிச் செலுத்தினால் தான் நம்மைப் போன்ற ஏழைஎளிய
ஆதிதிராவிட மக்கள் மீண்டும் கடன் பெற முடியும். அவர்களுக்
கும் வீடு கட்டிக் கொள்கிற வாய்ப்பு ஏற்படும் என்ற அளவில்
உயர்ந்த எண்ணத்தைப் பெறச் செய்ய முடியும் என்பதை இந்த
நேரத்தில் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

இந்தத் திட்டத்திலே ஆதிதிராவிடர்களைத் தவிர நலிந்த
பிரிவிலே இருக்கின்ற மற்றவர்களுக்கெல்லாம் கடன் உதவி
கொடுக்கிறார்கள். அவர்களுக்கு கொடுக்கிற கடனிற்கு வட்டியும்
வாங்கிக் கொள்கிறார்கள். அதே பகுதியில் வாழ்கிற ஆதிதிரா
விடர்களுக்கு ஆறிலே ஒரு பகுதி மானியமாக கிடைக்கிறது.
கடனாகக் கொடுக்கிற பகுதிக்கு வட்டி கிடையாது. ஆனால்
அதே ஊரில் இருக்கிற மற்ற நலிந்த பிரிவினர்களுக்கும் கடன்
கொடுக்கிறார்கள். நலிந்த பிரிவினர்களுக்கு கொடுக்கிற கடனுக்கு
வட்டி தள்ளுபடி செய்யவேண்டும். அல்லது அவர்களுக்கு
குறைந்த வட்டியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள
ஆசைப்படுகிறேன். இந்த வேறுபாடு கட்டாயமாக களையப்பட
வேண்டும்.

பெருந்துறைப் பகுதியில் இந்தத் திட்டத்தின் கீழ் ஆயிரம்
வீடுகளாவது கட்டுவதற்கு நம்முடைய புரட்சித் தலைவர் அவர்
கள் அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக பெருந்துறைப் பகுதியில் சாட்டலைட் டவுன்
அதாவது மாதிரி நகரத்தை எற்படுத்த வேண்டுமென்ற என்னு
டைய கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். ஈரோடு நகரத்தில்
இட நெருக்கடி அதிகமாக இருக்கிற காரணத்தால் இந்தப் பகுதி
யில் மாதிரி நகரத்தை ஏற்படுத்த வேண்டு மென்ற கேட்டுக்
கொள்கிறேன். அதிலே மாடமாளிகைகள், கூடகோபுரங்கள்,
நீர் ஊற்றுக்கள், விளையாட்டு மைதானங்கள், பலநோக்கு
வியாபார ஸ்தலங்கள் போன்ற எல்லாவற்றையும் ஏற்படுத்தி
தமிழ்நாட்டிலே தலைசிறந்த நிர்மாணிக்கப்பட்ட நகரம் என்ற
அளவில், சண்டிகாரைப் போல, பாண்டிச்சேரியைப் போல
அதற்கும் மேல் அழகாக அந்த மாதிரி நகரத்தை ஏற்படுத்த
வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு சிறந்த
நகரமாக ஏற்படுத்தக் கூடிய அந்த சாட்டலைட் டவுனிற்கு



மாதிரி நகரத்திற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்
களுடைய பெயரினைச் சூட்டி உலகம் உள்ள அளவிற்கும் இது
போல வேறு எங்கும் இல்லையென்ற அளவிற்கு அரசு அந்த
நகரத்தினை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நகர்ப்புறங்களில் மட்டும் வீடுகளைக்
கட்டாமல், கிராமப் புறங்களில் வீடுகள் கட்டப்பட வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமப்புறங்களில் வீடுகள்
கட்டிக் கொடுத்தால் தான், நகர்ப் புறங்களுக்கு நகர்ந்து வருபவர்
களுடைய எண்ணிக்கை குறையும் என்பது என்னுடைய எண்ணம்.
அதையும் அரசு கவனிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களுடைய
தொகுதியிலே வீடுகளைக் கட்டிக் கொடுக்கிற ஏற்பாடுகளை
நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு
செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அளவில்
என்னுடைய கருத்துக்களை நிறைவு செய்து அளித்த வாய்ப்புக்கு
நன்றி கூறி அமர்கிறேன்.

*திரு. கு. சுப்பராயன் : தலைவர் அவர்களே, இங்கே
அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுருக்கின்ற வீட்டு வசதி
மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கொள்கைக் குறிப்பின்
மீது என்னுடைய விமர்சனங்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்
சார்பாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

வீட்டு வசதி செய்து கொடுப்பது பற்றி பல்வேறு விளக்கக்
குறிப்புகள் இந்தக் குறிப்புரையில் இருக்கின்றன. கடந்த
ஆண்டு சுதந்திரதினத்தன்று நம்முடைய மாண்புமிகு
முதல்வர் அவர்கள், இந்த மாநிலத்தில் வீடற்ற அனைவருக்கும்
வீடு வழங்கப்படுமென்ற உறுதி மொழியை அளித்து இருக்கிறார்
கள். ஆனால் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு பொன்னுசாமி
அவர்கள், அனைவருக்கும் வீட்டுவசதி செய்து தர இயலாது என்று
குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்
கள் சொல்கிறார்கள், இந்த மாநிலத்திலே இருக்கிற அனைவ
ருக்குமே, வீடு கொடுக்க வேண்டும் என்பது தான் எங்கள் நோக்
கம் என்று சொன்னார்கள். ஆனால் அந்தக் கட்சியைச் சேர்ந்த
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை மறுக்கிற முறையிலே
பேசுவதை என்னால் ஏனோ புரிந்து கொள்ள முடியவில்லை.
ஆகவே இங்கே சொல்லப்பட்டு இருக்கிற விவரங்களில் இந்த
மாநிலத்தில் சொந்த வீடு இல்லாமல் எவ்வளவு பேர்கள் குடி
இருக்கிறார்கள் என்பதை ......

திரு. எம். அண்ணாதாசன் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்பு
மிகு உறுப்பினர் பொன்னுசாமி அவர்கள் எல்லோருக்கும்
வீடுகட்டித் தர இயலாது என்று சொன்னார்கள்என்ற குற்றச்சாட்
டை இங்கே குறிப்பிட்டார்கள், மாண்புமிகு முதல் அமைச்சர்

அவர்கள் சொன்னதற்கும், இதற்கும் மாறுபாடு இருப்பதாகச்
சொன்னார்கள். வசதி படைத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்
களுக்குக் கட்டிக் கொடுக்க முடியாது என்று கூட சொல்லியிருக்க
லாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு கு. சுப்பராயன் : தலைவர் அவர்களே, அவர்கள் என்ன
நோக்கத்தில் சொன்னார்கள் என்பது சொன்னவருக்குத்தான்
புரியுமே தவிர, பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்பிய உறுப்பினருக்குக்
புரிந்திருக்க நியாயமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கி
றேன்.

டாக்டர் அ. பொன்னுசாமி : தலைவர் அவர்களே, ஆளுக்கு
ஒரு வீடு கட்டுவோம் என்பதுதான் புரட்சித் தலைவருடைய
குறிக்கோளாகும். நான் கூறுகின்ற போது உடனடியாக அனை
வருக்குமே ஆளுக்கு ஒரு வீடு கட்ட முடியாது, உடனடியாக
ஒவ்வொரு குடும்பத்திற்கும், அதாவது 'வித் இன் எ ஷார்ட்
பீரியட்' குறிப்பிட்ட கால அளவிற்குள்ளே, அனைவருக்கும்
வீட்டு மனைகளை வழங்கவேண்டும் முதலில். பின்பு, அதிலே
வீடுகளைக் கட்டித் தருவதற்கு அரசு முன்வரவேண்டும் என்பதை
தான் கூறினேனே தவிர, ஒவ்வொருவருக்கும் வீடு உடனடியாக
கட்டிக் கொடுக்க முடியாது என்ற காரணத்தால் உடனடியாக
அனைவருக்கும் வீட்டு மனைகளை கிடைக்கச் செய்து, குறிப்பிட்ட
காலத்திற்குள்ளே, 'வித் இன் எ ஷார்ட் பீரியட்' குள்ளாக
கிடைக்க வேண்டும் என்பதைத்தான் நான் கூற வந்தேன் என்பதை
மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்பு
கிறேன்.

திரு கு. சுப்பராயன் : மாண்புமிகு உறுப்பினரின் விளக்கத்
திற்கு நன்றி. இந்த வீட்டு வசதியைப் பற்றிக் குறிப்பிடப்பட்டு
இருக்கிற கொள்கைக் குறிப்பிலே, செய்யப்பட இருக்கிற பல்வேறு
பணிகளைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் தமிழ்
நாட்டிலே எவ்வளவு குடும்பங்களுக்கு சொந்த வீடு இல்லை என்ற
விவரம் அனேகமாக குறிப்பிடப்படவில்லை. தமிழகத்திலே எவ்வ
ளவு குடும்பங்களுக்கு வீடு இல்லை என்ற விவரம் சேகரிக்கப்பட்ட
டால் தான் எவ்வளவு கால வரம்புக்குள் அதைப் பூர்த்தியாக்க
முடியும் என்பதைப் பற்றிய நடைமுறை உத்திகளை உருவாக்கு
கிற வாய்ப்பு ஏற்படும். எனவே அதைப்பற்றி மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

திருப்பூர் நகரத்திலே பனியன் தொழிலாளர்கள் மிக அதிக
மாக இருக்கிறார்கள். மிகக் குறைந்த வருமானம் உள்ளவர்கள்
அதிகமாக இருக்கக்கூடிய அந்த நகரத்தில் பலமுறை பனியன்
தொழிலாளர்கள் சார்பாக பல்வேறு சங்கங்களுடைய அமைப்புக்
கள் தொடர்ந்து முறையீடுகளை அரசுக்கு அனுப்பியும் கூட,





இன்றைக்கு வரையிலும், குறைந்த வாடகைக்கு குடியிருப்பு
மனைகள் அங்கே உருவாக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் அவற்றைக் கவனித்து வருகிற காலத்திலே 25 ஆயிரம்
தொழிலாளர்கள் வாழ்கின்ற அந்த நகரத்தில், பனியன் தொழி
லாளர்களுக்கு குடியிருப்பு மனைகளை உருவாக்கித் தரவேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வீட்டு வசதித் துறையைப் பொறுத்தவரையில் பல
இடங்களில் வீடுகள் கட்டப்படுகின்றன. ஆனால் கட்டப்படுகிற
வீடுகள் பழுதடைந்துவிட்டால் அப்படியே விட்டு விடுகிற போக்கும்
நிலவுகிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியிலே இருக்கிற
உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். திருப்பூர் அருகே பாளைய
புரத்திலே இருக்கிற அண்ணா காலனியிலே பல வீடுகள் பழுத
டைந்த நிலையில் இன்றைக்கும் இருக்கின்றன. சம்பந்தப்பட்ட
அதிகாரிகளுக்கு பலமுறை சம்பந்தப்பட்டவர்கள் புகார் செய்தும்
கூட, அவைகள் பழுது பார்க்கப்படவில்லை ஏன் என்பது
எங்களுக்குப் புரியவில்லை. ஒரு வேளை அங்கேயிருப்பவர்களில்
பெரும்பகுதியினர் ஆளுகிற கட்சியைச் சாராதவர்கள் என்கிற
காரணத்தாலே, அவர்களைத் தண்டிக்கின்ற மனோபாவத்தோடு
அவர்கள் நடத்தப்படுகிறார்களா என்று கூட சந்தேகப்பட
வேண்டிய ஒரு நிர்ப்பந்த நிலைமை ஏற்படுகிறது. எனவே,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத்தகைய தவறான கருத்துக்கள்
பொதுமக்கள் மத்தியிலே ஏற்பட வல் தவிர்க்கவேண்டுமானால்
உடனடியாக காலத்தில் தலையிட்டு, அவற்றை தீர்க்க நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில், கொடுமை
யான நிலைமைகள் இன்றைக்கும் நிலவிக்கொண்டிருக்கின்றன.
மாநகரங்கள், நகரங்கள் என்று 434 நகரங்கள் தமிழ்நாட்டில்
இருக்கின்றன. தமிழகத்தில் மொத்த ஜனத்தொகையில் 33
விழுக்காட்டினர் இந்த நகரங்களில்தான் வாழ்கிறார்கள்.
அப்படிப்பட்ட ஜன நெருக்கடி உள்ள நகரங்களினுடைய
தேவைகள் போதுமான அளவில் இன்றைக்கு பூர்த்தியாக்கப்
பட்டிருக்கிறதா ? அவற்றைப் பூர்த்தியாக்குவதற்குரிய ஒரு
மாஸ்டர் பிளான் இந்த அரசிடம் இருக்கிறதா என்பதை நான்
கேட்க விரும்புகிறேன். 434 நகரங்களிலேயும் மக்களுடைய
குறைந்த பட்ச தேவைகள் இன்றளவில் பூர்த்தியாக்கப்படவில்லை.
சென்னை நகரிலே நீங்கள் பார்க்கலாம். மழை தொடர்ந்து
பெய்தால், அரை மணி நேரத்தில் ரோடுகள் வெள்ளக்காடாக
தண்ணீர் தேங்கிவிடுகிறது. தேங்குகின்ற தண்ணீரை வடிப்பதற்கு
உரிய வடிகால் உத்தரவாதம் இல்லை. மிக விரைவிலேயே அவை
கள் குளங்களாக தேங்கிவிடுகின்றன.

(முற்பகல் 11-10)

**சென்னையில் மட்டும் அல்ல,** தமிழகத்தின் எல்லா நகரங்
களுடைய நிலைமையும் இது தான். இந்த நிலைமையை மாற்று
வதற்கு உரிய தெளிவான திட்டங்கள் இந்த கொள்கை குறிப்பில்
இல்லை. அதுவும் ஒதுக்கப்பட்டு இருக்கிற நிதி, ஏதோ இந்த
ஒரு துறையில் இருக்கக்கூடிய பொறுப்பாளர்கள் ஒரு அறிக்கை
வைக்கவேண்டுமே என்ற நிலையில் வைக்கப்பட்டு, நிதி ஒதுக்கப்
பட்டு இருக்கிறதே தவிர, தமிழ்நாட்டின் நகர்ப்புற வளர்ச்சித்
தேவைகளை தெளிவாக உணர்ந்து இந்த தேவையை தீர்ப்பதற்கு
உரியபடி நிதி ஒதுக்கியதாகத் தெரியவில்லை. ஒரு நாம்கே
வாஸ்தே நிதி ஒதுக்கம் தான் நடந்து இருக்கிறது. 434 நகரங்
களில் எந்த நகரத்தில் குறைந்தபட்ச தேவை பூர்த்தி ஆக்கப்
பட்டிருக்கிறது? எங்குமே இல்லை. ஆகவே, அவற்றையும்
கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த சம்பந்தப்பட்ட துறைக்கு
ஒதுக்கப்பட்டு இருக்கிற நிதி போதாது. உண்மையில் அதிகமாக
ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். இல்லை என்றால் நகரத்தின்
தேவைகளைப் பூர்த்தி ஆக்குகிற பணி கடுமையான நெருக்கடிக்கு
உள்ளாகும் என்பதைத்தான் நடைமுறையில் நாம் இங்கே காண்
கிறோம்.

அதேபோல் நகரத்தில் ஜனத்தொகை பெருக்கத்திற்குக்
காரணம், கிராமத்திலிருந்து தொடர்ந்து மக்கள் வந்து கொண்டு
இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். கிராமத்திலிருந்து
மக்கள் வருவதற்கான காரணங்களைக்கண்டு அறிந்து, அவற்றை
யும் தடுப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.
தொழிற்சாலைகள் கிராமப்புறங்களை நோக்கிச் செல்ல
வேண்டும். அந்த கிராமப்புற மக்களின் எந்த விதமான
தேவையையும் காலத்தில் உணர்ந்து செயல்படாத காரணத்தால்
தான் அவர்கள் நகரத்தைத் தேடி வருகிறார்கள். நகரத்தில்
வேலைவாய்ப்பு இருக்கிறது என்ற நிலையை மாற்றி ஆங்காங்கே
பல்வேறு கிராமப் பகுதிகளில் தொழிற்சாலைகளை உருவாக்கி,
உரிய திட்டங்களை, தீட்டுகிறபோதுதான் நகரங்களை நோக்கி
மக்கள் படை எடுக்கும் நிலைமை மாறும் என்பதை இந்த
நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் ஒரு லட்சம் ஜனத்தொகைக்கு கீழ்பட்ட
நகராட்சிகள் மட்டுமே இன்றைக்கு உடனடி வேலை செய்வதற்
குரிய பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. திருப்பூர் நகரத்
தைப் பொறுத்தவரையில் வளர்ந்து வருகிற ஒரு பெரிய
கமர்ஷியல் சென்டர் தொழிலாளர் வர்க்கத்தின் மையம் அது.
தொழில் கேந்திரமாக விளங்கக்கூடிய ஒரு பகுதிதான் திருப்பூர்.



தமிழ் நாட்டிலேயே அனைத்து நகரங்களைக் காட்டிலும்
மிக வேகமாக ஜனத் தொகை வளர்ச்சி விகிதம் வளர்ந்து
வருகிற நகரம் திருப்பூர் என்பது புள்ளியியல் துறையால் ஒத்துக்
கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே இவ்வளவு வேகமாக
வளர்ந்துவருகிற அந்த நகரத்திற்கு ஒரு பாதாள சாக்கடை
திட்டம் கூட இன்று வரை நிறைவேற்றப்படவில்லை. நகரத்
திற்கு வளர்ச்சித் திட்டம் என்ற முறையில் நகரத்தினுடைய
தேவையை உணர்ந்து அவற்றை உருவாக்குவதற்குரிய முறையில்
இந்த மாநில அரசு இந்த துறையின் மூலம் சிந்திக்க வேண்டும்.
எனவே அந்தப் பகுதியில் நகர வளர்ச்சித் துறை என்று ஒதுக்கப்
படுகிற திட்டங்களில் இத்தகைய திட்டங்கள் இருக்கவேண்டும்.
அப்படி திட்டங்கள் இல்லை என்று சொன்னால் நகரத்தின்
வளர்ச்சி பெரிதும் பாதிக்கும் என்பதையும் இங்கே நான் குறிப்
பிட்டு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் வீட்டு வசதி பற்றி இன்னொரு விஷயத்தை
குறிப்பிட விரும்புகிறேன், வீட்டு வசதித் துறையில் நம்முடைய
நகர சுத்தித் தொழிலாளர்கள் வேண்டும் என்றே புறக்கணிக்கப்
படுகிறார்கள். துப்புரவுத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாட்டின் பல
யிடங்களில் பல்வேறு காலனிகள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன.
பெரும்பகுதியான காலனிகள் சாக்கடையின் மத்தியிலே
அமைக்கப்பட்டு இருக்கின்றன. பலயிடங்களில் இது பற்றி
புகார்கள் ஆதாரத்தோடு கொடுத்தும் கூட, அவர்கள் அதைக்
கண்டு கொள்ளாமல் விட்டு இருக்கிறார்கள்.

திருப்பூர் நகரத்தில் திருப்பூர் தாராபுரம் ரோடு பகுதியில்
சுற்றிலும் சாக்கடை தேங்கிக் கிடப்பதற்கு நடுவில் மலத்தை
அள்ளுகின்ற அந்த தொழிலாளர்களுக்கு வீட்டு மனை
ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவற்றை எல்லாம் கவனித்து நலிந்து
கிடக்கின்ற சமுதாயத்திற்கு பாவப்பட்டு கிடக்கக்கூடிய
அந்த தாழ்த்தப்பட்ட மக்களின் தேவையை உடனடியாக பூர்த்தி
செய்வதற்கு இந்த வீட்டு வசதித் துறையின் மூலம் நடவடிக்கை
மேற்கொண்டு . . . . . . . . . . .

மாண்புமிகு திரு. என். நலலுசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லு
கிற திருப்பூர் பகுதியில் அந்த நகரத்தில் இருக்கின்ற
அந்த துப்புரவுத் தொழிலாளர்களுக்கு பல்வேறு இடங்களில்
வீட்டு மனைகள் இருக்கின்றன. வேறு துறையைச் சேர்ந்த
வீடுகளா ? வீட்டு வசதித்துறையைச் சேர்ந்த வீடுகளா ? அப்படி
இருந்தாலும் அதைப் பற்றி கவனிக்கப்படும்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான்
குறிப்பிட விரும்புவது வீட்டு வசதித் துறையினர் சம்பந்தப்பட்ட
சுகாதார தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்

தைத் தங்கள் வீட்டு வசதித் துறையிலேயே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். எந்த துறை என்பது அல்ல. எந்த எந்த துறைக்கு ஒதுக்கப் பட்டாலும் அந்த துறையில் அவர்களின் தேவைகளை பூர்த்தி ஆக்காமல் விட்டு விடக்கூடாது. ஆகவே, சுகாதார தொழிலாளர்களுக்கு வீடு கட்டுகிற அந்த முறையை, அந்த திட்டத்தை வீட்டு வசதித் துறையே மேற்கொள்ளவேண்டும் என்பதை நான் வலியுறுத்துகிறேன் என்பதை மாண்புமிகு அமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல, நகரத்தில் இன்னும் பல்வேறு வசதிகள் இல்லை. தேவையான வசதிகள் இல்லை. அவ்வப்போது நகர்ப்புறங்களில் அளிக்கப்படுகிற வசதிகளில் இந்த நகர வளர்ச்சித் துறையும் மிக முக்கியமாகக் கவனித்து, தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அளவுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று சொல்லி, இந்த அளவிலே முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரிய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த மானியக் கோரிக்கைகள் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையில் ஒதுக்கியுள்ள தொகை ரூ. 13,16,46,000 தான். ஏறத்தாழ இரண்டாயிரத்து முன்னூற்று அறுபத்து எட்டு கோடி ரூபாய் வரவு—செலவுத் திட்டத்தில் இந்தத் தொகை மிகக் குறைவானது. சதவிகிதக் கணக்கைப் பார்க்கப் போனால் கூட, 0.08 சதவிதம் தான் இந்த பட்ஜெட்டில் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஐந்தும், மூன்றும் சரியாக இருந்தால் தான் அறியாத பெண் ணும் கறி சமைப்பாள் என்பது பழமொழி. அவ்வளவு குறைவான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையில் என்ன செய்ய முடியும் என்று எதிர்பார்க்கிறீர்கள் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

வீட்டு வசதி என்பது இன்றைய தினம் சென்னை போன்ற பெரு நகரங்களில் ஒரு மிகப் பெரிய பிரச்சினை ஆக இருக்கிறது. இதைச் சமாளிக்க போதிய நிதி ஒதுக்கப்படவேண்டும். 1982–83 ஆம் ஆண்டிற்கான ஆடிட் ரிப்போர்ட்டை படித்துப் பார்த்தேன்.

கோர்ட் கட்டிடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் முத்துசாமி அவர்களுடைய ஈரோடு நகரத்தில் கட்டுவதற்கு, திட்டமிட்டு, நிதி ஒதுக்கி





விட்டு, சிமெண்ட் இல்லை என்ற காரணத்தால், அந்தத் தொகை சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது. எனவே நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்வதெல்லாம், தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் சிமெண்ட்டை நாட்டின் தேவைக்கே பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எஞ்சி, மிஞ்சி இருக்குமானால், பிற மாநிலங்களுக்குத் தரலாம். எனவே, இங்கு உற்பத்தி ஆகும் சிமெண்ட்டை நமக்கே கிடைக்க நீங்கள் வழிவகை செய்திடவேண்டும். மேலும் ஒதுக்கப்பட்ட நிதி போதுமானது அல்ல.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இதை குறைந்தது இன்னும் 10 மடங்காக உயர்த்துகிற நடவடிக்கை எடுக்கவேண்டும். மொத்த பட்ஜெட்டில் குறைந் தது 5 சதவீதமாவது, 6 சதவீதமாவது உயர்த்தித் தருவதற்கு அரசு முன் வரவேண்டும்.

நீங்கள் இந்தத் திட்டங்களை எல்லாம் செயல்படுத்து வதற்கு முன்னால், அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும், மக்க ளுடைய அன்றாடப் பிரச்சினைகளை, தேவைகளைப் புரிந்து கொள்ளவேண்டும். எனவே, கொஞ்ச காலம் அமைச்சர் பெரு மக்கள் வீட்டு வசதி வாரிய, குடிசை மாற்று வாரிய வீடுகளில் வசித்துப் பார்க்கவேண்டும்.

ஏனென்றால் அமைச்சர்கள் பங்களாக்களில் வசிக்கிறார்கள். அதனால் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால் அந்த பங்களாக்கள் ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு எட்டாத தொலைவில் இருக்கிறது. அந்த மக்களின் தொல்லைகளை துயரங்களை, குறைகளை, கோரிக்கைகளை கேட்கின்ற தூரங்களில் அந்த பங்களாக்கள் இல்லை என்பது தான் என்னுடைய ஆதங்கம்.

எனது தொகுதியான பெரம்பூரில் சத்தியமூர்த்தி நகர் என்ற பகுதியில் அங்கே உள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளி லுள்ள மாடிப் படிகள் பெயர்ந்து விழுந்து சுவரிலுள்ள காரைகளும் இற்று விழுகிறது. இதனால் அந்த ஏழைகள் அந்த வீடுகளில் படுப்பதில்லை. பயந்து கொண்டு வெளியே படுக்கிறார்கள். காரணம் எந்த நேரத்தில் காரைகள் விழுமோ என்ற அச்சத்தினால் அப்படி வெளியில் படுக்கிறார்கள். நான் கூட, அதைப் பழுது பார்த்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சென்ற சட்டமன்ற கூட்ட தொடரின்போது ஒரு கோரிக்கை மனு தந்தேன். அமைச்சர் அவர்கள் உடனடியாக பார்த்து ஆவன செய்வதாகச் சொன் னார்.

[திரு. பரிதி இளம்வழுதி] [1985 ஜூன் 26

ஆனால், இதுவரைக்கும் எந்த அதிகாரியும் வந்து பார்த்து
பழுது பார்க்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
இப்படி பழுது பார்க்காத குடியிருப்புக்கள் நிறைய இருக்கின்றன.

திரு. வி. க. நகர் குடியிருப்புகளிலும் அங்கே ஒரு வராண்டா
பெயர்ந்து விழுந்து ஒரு குழந்தை இறந்து இருக்கிறது. அண்மைக்
காலத்தில் அதுபோல் வியாசர்பாடியில் உள்ள மல்லிகைப்பூ
காலனி என்ற குடிசை மாற்று வாரியத்திற்குக் கீழே இருக்கிற
டிரெயினேஜ், கவர் மூடி இல்லாத காரணந்தால், குழந்தை
விழுந்து இறந்து இருக்கிறது. இதை எல்லாம் மாண்புமிகு
அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு
கிறேன்.

ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் எல்லாம் நம்முடைய
மாண்புமிகு மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் சினிமாவில்
பாடிய பாடல்களை பெருமையாக பாடுகிறார்கள். 'இதயதெய்
வம் நமது அண்ணா தோன்றினார். அவர் என்றும் வாழும்
கொள்கை தீபம் ஏற்றினார்', என்று மாண்புமிகு முதலமைச்சர்
ஒரு படத்திலே பாடினார்.

அதே பேரறிஞர் அண்ணாதான், மாற்றான் தோட்டத்து
மல்லிகைக்கும் மணம் உண்டு என்று சொல்லி இருக்கிறார். இதை
நான் சொல்வதற்குக் காரணம், மேற்கூறிய அந்த சத்திய
மூர்த்தி நகர் குடிசை மாற்று வாரிய வீடுகள், எங்களுடைய
தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்ச
ராக இருந்த காலத்தில் கட்டப்பட்டன. அதனால் தான் இந்த
அரசு அந்த வீடுகளைப் பழுது பார்க்காமல் மெத்தனமாக
இருக்கிறது.

அந்த வீடுகள் கலைஞர் காலத்திலே கட்டப்பட்டது என்ப
தற்காக நீங்கள் கவனிக்கவேண்டாம். ஆனால் அங்கே வாழ்கின்ற
மக்களின் சிரமங்களை எண்ணிப்பார்த்தாவது கவனித்து பழுது
பார்த்துத் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கிடை
யே அந்த வீடுகளில் வசிப்பவர்களுக்கு ஏற்கனவே கட்ட வேண்டிய
வாடகைப் பாக்கி இவ்வளவு தொகை இருக்கிறது. இதை

(முற்பகல் 11-20)

உடனடியாகக் கட்டவில்லையென்றால் சீல் வைத்து விடுவோம்
என்று மிரட்டுகின்ற வகையிலே குடிசை மாற்று வாரியத்திலிருந்து
குடியிருப்புகளிலே உள்ள மக்களுக்கு நோட்டீஸ் வந்தது. இப்படி
சத்தியமூர்த்தி நகர், சந்திரயோகி சமாதி சாலையில் உள்ள
குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் வசிக்கின்ற மக்களுக்கு
வந்து, அவர்கள் அது பற்றி என்னிடத்திலே வந்து சொன்னார்கள்.
நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் இதுபற்றிச் சொன்



1985 ஜூன் 26] [திரு. பரிதி இளம்வழுதி]

னேன். தேர்தல் நேரத்தில் எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர்
அவர்கள் ஒரு அறிவிப்பு செய்தார்கள். திராவிட முன்னேற்றக்
கழகம் ஆட்சிக்குவந்தால் குடிசைமாற்று வாரியக்குடியிருப்புகளில்
வசிக்கின்றவர்களுக்கு வாடகை இல்லாமல் அந்தவீடுகளை அவர்க
ளுக்கே சொந்தமாக்கித் தருவோம் என்று தேர்தல் வாக்குறுதியாக
அறிவித்தார்கள். அப்படி அவர்கள் அறிவித்த நேரத்தில், குடிசை
மாற்று வாரியத் தலைவராக இருந்தவர், வாரியத்தின் சார்பில்
பத்திரிகைகளில் பெரிய விளம்பரத்தை செய்தார். இப்பொழுது
நாங்கள் வாடகை வாங்குவதில்லை. கருணாநிதி உங்களைப்
ஏமாற்றப் பார்க்கிறார், உஷார், உஷார் என்று அரைப் பக்க
அளவில் எல்லாப் பத்திரிகைகளிலேயும் விளம்பரம்
கொடுத்திருந்தார். அந்த விளம்பர கட்டிங்களையெல்
லாம் எடுத்துக் கொண்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில்
சென்று கேட்டேன். இப்படி விளம்பரம் செய்திருக்கிறார்களே,
ஆனால் இப்படி வாடகை பாக்கிக்காக நோட்டீஸ் கொடுக்கிறீர்
களே என்று கேட்டேன். அதற்கு அவர்கள் இது வாடகை அல்ல,
இது மெயின்டெனன்ஸ் சார்ஜ் தான், அதாவது பராமரிப்புத்
தொகைதான் என்று என்னிடத்திலே சொன்னார்கள். இப்படிப்
பராமரிப்புத் தொகை என்று வசூலித்துவிட்டு, அவற்றைப்
பராமரிக்கவில்லை என்றால் அது என்ன நியாயம் என்றுதான்
கேட்க விரும்புகிறேன்.

மேலும் வசதியுள்ள ஒரு சிலர் அல்லது எங்கே நம்மை வெளியே
தள்ளி விடுவார்களோ, எங்கே நம்முடைய வீட்டைச் சீல் வைத்து
விடுவார்களோ என்று பயந்து கொண்டு கட்டணப் பாக்கியைக்
கட்டிவிடுகிறார்கள். ஆனால், இப்படிப்பட்ட வீடுகளில் வாழ்பவர்
கள் ஏழை எளிய மக்கள், ஏழை பாழைகள்தான். அவர்கள் அன்
றாட வாழ்க்கையைக் கழிப்பதற்கே மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.
அப்படிப்பட்டவர்களிடத்தில் போய் மூவாயிரம், இரண்டாயிரம்
நான்காயிரம் ரூபாய் என்று பராமரிப்புக் கட்டணம் என்ற வகையில்
சேர்த்துக் கட்ட வேண்டும் என்று சொன்னால், அவர்கள் எங்கே
யிருந்து கட்டுவார்கள? எனவே, இதை மாண்புமிகு அமைச்ச
ரவர்கள் பரிசிலனை செய்து, பராமரிப்புக் கட்டணத் தொகை
பாக்கியிருந்தால் அதை ரத்து செய்து அந்த ஏழை எளிய மக்களுக்கு
சந்தோஷத்தை தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு வீடுகளில்
அடிப்படை வசதிகள் இல்லை. குடிதண்ணீர் வசதி இல்லை. மின்
விளக்கு வசதி இல்லை; வடிகால் வசதி இல்லை; இவைகளெல்லாம்
பற்றி நாங்கள் எடுத்துச் சொன்னாலுங்கூட, எண்ணிக்கையில்
நாங்கள் குறைந்துவிட்டிருக்கிற காரணத்தால் * * இருக்கிற
* * * *
அமைச்சர்களின் காதுகளில் விழுவதில்லை. நாங்கள் சொல்லுகிற
பரிந்துரைகளை அமைச்சரவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பரிதி இளம்வழுதி] [1985 ஜூன் 26

திரு. க. சோலைராசு : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசுகின்ற நேரத்தில் அமைச்சர்கள் * * * இருப்பதாகச் சொல்கிறார்கள். இது சரியா ?

திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் * * * என்று குறிப்பிட்டது, எதிர் வரிசையில் உள்ள * * * என்பதை குறிப்பிட்டேனேதவிர வேறு எதுவும் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தப் பக்கத்தில இருந்து பார்க்கின்றவர்களுக்கு அந்தப் பக்கம் * * * ஆக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அருள்கூர்ந்து தெரிந்து கொள்ள வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) : * * * என்ற வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது.

திரு. பரிதி இளம்வழுதி: நான் இங்கே மாண்புமிகு அமைச்சர் திரு. நல்லுசாமி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், அவர்கள் உடனே மாஸ்கோவுக்குப் போக வேண்டும் என்ற பரிந்துரையைச் சொல்கிறேன். அவ்வாறு என்னுடைய பரிந்துரையை ஏற்றுக் கொண்டு அவர்கள் நாளைக்கே மாஸ்கோவிற்குச் செல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் கேட்கலாம், என்ன உடனே கிளம்பச் சொல்கிறாயா என்று. ஆமாம் நல்ல காரியங்களைத் தள்ளிப் போடக்கூடாது. அப்படிப் போகும் போது குடிசைமாற்று வாரிய அதிகாரிகளையும் அழைத்துக் கொண்டு உடனே மாஸ்கோவிற்குப் போகவேண்டும். அங்கே குடியிருப்பு வசதிகள் எப்படி செய்யப்பட்டிருக்கின்றன என்று அமைச்சரவர்கள் கண்டறிந்து அவற்றை இங்கே வந்து செயல் படுத்த வேண்டும். நம்முடைய அதிகாரிகள் அங்கேயுள்ள அதிகாரிகள் மக்களிடத்தில் எப்படி நடந்து கொளகிறார்கள் என்று கற்றுக் கொண்டு வர வேண்டும். உலகம் தழுவிய சகோதர உணர்வோடு அங்கே உள்ளவர்கள் நடந்து கொள்கிறார்கள். ஏனப்பா அமைச்சரைப் போக வேண்டுமென்று கேட்கிறாயே நீ போய் இருக்கிறாயா என்று கேட்கலாம். நான் போனது இல்லை. ஆனால் அங்குள்ள நிலைமைகளைப் பற்றிப் பத்திரிகைகளிலே படித்து இருக்கிறேன். பார்த்துவிட்டு வந்தவர்கள் சொன்னதைக் கேட்டிருக்கிறேன். அப்படி வார்த்தைகளால

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



1985 ஜூன் 26] [திரு. பரிதி இளம்வழுதி]

வருணிக்க முடியாத சூழ்நிலையில் அங்கே உள்ள அந்த நிலைமைகளைப் போன்று, என்றைக்கு இந்த நாட்டிலேயும் உருவாக்கப் போகிறோம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறேன்.

கொள்கை விளக்கப் புத்தகத்தைப் படித்துப் பார்த்தால் புரியும் என்று நினைத்துப் படித்துப் பார்த்தேன். ஆனால் அது விளக்கம் தருவதற்குப் பதிலாக மேலும் குழப்பத்தையே தான் உண்டாக்குவதாக இருக்கிறது. இரண்டாவது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. 1985-86 ஆம் ஆண்டில் 15,273 வீடுகளை கட்டுவதற்காக வீட்டு வசதி வாரியம் தனது திட்டங்களை நிறைவேற்ற ஆகும் செலவினை ரூ 5,250 இலட்சத்திற்கு உயர்த்தியுள்ளது என்று மொட்டையாக குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு, இப்பொழுது உயர்த்தப்பட்ட தொகை எவ்வளவு, ஒட்டுமொத்தமாக ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை எவ்வளவு என்ற விவரங்களை யெல்லாம் நீங்கள் அதிலே தர வேண்டாமா ? அதே பாராவில், வாரியம் ஹட்கோ விடமிருந்து கடன் பெறுவதில் அனைத்திந்திய அளவில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் ஒன்றுக்கொன்று ஏதாவது தொடர்பு இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். விளக்கம் தருவதற்காக இந்தக் குறிப்பை எங்களுக்குத் தந்திருக்கிறீர்களா அல்லது குழப்பம் ஏற்படுத்துவதற்காக இந்தக் குறிப்பைத் தந்திருக்கிறீர்களா என்று தான் கேட்க விரும்புகிறேன்.

நான்காம் பக்கத்திலே தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதித் திட்டம் என்ற தலைப்பின்கீழ் 1984-85 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை வீட்டு வசதி வாரியம் 3,130 குடியிருப்புக்களைக் கட்டியுள்ளது ; 1984-85 ஆம் ஆண்டிலிருந்து ஹட்கோ நிதியுதவியுடன் இத்திட்டத்தைச் செயல் படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

1985 மார்ச் வரை குடியிருப்புகளைக் கட்டிவிட்டு 1984-85 ஆம் ஆண்டிலிருந்து ஹட்கோ நிதியுதவியுடன் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இது எப்படியிருக்கிறது என்றால், தின்று முடித்து விட்டவன் வெறும் சோற்றுக்குக் கறி தேடி அலைவது போல் இருக்கிறது.

அடுத்து, தமிழ்நாடு அரசு அலுவலர்கள் வாடகை வீட்டு வசதி திட்டம் என்ற தலைப்பின்கீழ், காமராசர், பொன் முத்துராமலிங்கம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 2,730 வீடுகளைக் கட்டுவதற்கு 1985-86 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 650 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது

என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். போதுமா இந்தத் தொகை? எண்ணிப் பார்த்தால் சின்னத் தொகை. இதில் எத்தனை வீடுகள் கட்ட முடியும்? என்ன எஸ்டிமேட் எல்லாம் போடுகிறாய், எத்தனை வீடு கட்டிய அனுபவம் உனக்கு என்று கேட்கலாம். நான் எம்.எல்.ஏ. வாகி, 6 மாதம் ஆகியும் இன்னும் வீடு கிடைக் காத அனுபவம்தான் எனக்கு இருக்கிறது. இங்கே சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்காத கதையைப் போல் என்னுடைய கதையும் நீடிக்கிறது. வீடும் கிடைக்கவில்லை, ஹாஸ்டலில் ரூமும் கிடைக்கவில்லை. எனக்கு வீடு கிடைக்கா விட்டால், பரவாயில்லை. அது ஒன்றும் பெரிய காரிய மில்லை. நானாவது ஒரு சாதாரண சட்டமன்ற உறுப்பினர், இளம்வழுதி. ஆனால், ஒரு உண்மையைச் சொல்கிறேன். வெளி மாநிலத்திலிருந்து வந்து சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்றிருந்தவர், இந்த அரசுக்கே ஆணை யிடக்கூடிய அதிகாரப் பொறுப்பிலிருந்தவர்— அவர் வந்த நாள்முதல், அவர் இங்கிருந்து சென்ற நாள் வரை வீடு தரப் படவில்லை. விருந்தினர் மாளிகையிலேயே தங்கியிருந்தார்.

அடுத்து, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்— முகப்பேர் திட்டம் என்று ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதிலே, 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் துவங்கி, இத்திட்டத்தின் கீழ் 153 ஏக்கர் நிலத்தில், வசதிகளடங்கிய வீட்டு மனைகள் 3,754 வழங்கப்பட்டுள்ளன. நிலத்தினை கையகப்படுத்துவதிலே உள்ள சிரமங்களினால் மீதி 152 ஏக்கர் நிலத்தினை மேம்படுத்துவதற் காக எடுத்துக் கொள்ள இயலவில்லையென்று குறிப்பிட்டிருக் கிறீர்கள். சர்வசக்தி படைத்த அரசாங்கம் எதையும் செய்யலாம். நாவசைத்தால் நாடசையும்; கண் அசைத்தால் போதும் காவல் துறை படையெடுக்கும். இத்தனைக் கீர்த்திகளைப் படைத்த மகோன்னதமான சர்க்கார் என்று சொல்லப்படுகின்ற அரசாங்கத்தால், நிலத்தைக் கையகப்படுத்துவதிலே சிரமங் களிருக்கின்றன, எனவே கையகப்படுத்த இயலவில்லை என்று சொல்லலாமா? சரி, கையகப்படுத்துவது போகட்டும், கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் உரிய காலத்திலே வழங்கப்பட்டிருக் கிறதா என்றால், இல்லை. அதற்கு இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடே சாட்சி. ஆயிரம் விளக்கு பகுதியிலே காவல் துறையினருக்காக கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் இரண்டாண்டுகளாக ஒப்படைக்கப் படாமல் அப்படியே பூட்டிக் கிடந்தன.

அதேபோல், அண்ணா நகரில் வீட்டு வசதி வாரியத்திலே கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் மின் இணைப்பு தரப்படாத காரணத் தாலே, ஒதுக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படாமல் ஆண்டுக் கணக்காக தவமிருந்தன. அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கண்காணித்துப் பணியாற்ற வேண்டும்.



அடுத்து, தமிழ்நாடு ஹவுசிங் போர்டு 1982-83 ஆம் ஆண்டு ஆடிட் ரிப்போர்ட்டைப் படித்தேன். அதில் 21-வது பக்கத்திலே உலகத் தமிழ் மாநாட்டுக்காக கழிப்பறைகள் கட்டிய விவரங்கள் இருக்கின்றன. ரூ. 8,61,331.77 செலவிலே கழிப்பறைகள் கட்டி யிருக்கிறார்கள். மதுரை மாநகராட்சி இந்தத் தொகையை ஹவுசிங் போர்டுக்குக் கொடுத்துக் கட்டிப்பட்டிருக்கிறது. இதில் மதுரை மாநகராட்சி தந்த ரூ. 3,64,000 வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகளிலே வரவு வைக்கப்பட வில்லை. மதுரை சூப்பரன்டென்டிங் இன்ஜினீயரிங் கடிதப்படி மதுரை கார்ப்பரேஷன் ரூ. 4,02,631.54 வீட்டு வசதி வாரியத்திற்குத் தர வேண்டும். ஆனால், வீட்டு வசதி வாரியத்தின் கணக்குப்படி ரூ. 12,37,331.77 மதுரை மாநகராட்சி வீட்டு வசதி வாரியத் திற்குத் தர வேண்டியிருக்கிறது. இதுபோல விவரங்கள் எல்லாம் ஆடிட் ரிப்போர்ட்டில் காணப்படுகின்றன. அவற்றை யெல்லாம் பேசுவதற்குள் மணியடிக்கப்பட்டுவிடும் என்ற காரணத்தால் நான் அடுத்து துரித ரயிலுக்கு வருகிறேன்.

கொள்கைக் குறிப்புப் புத்தகத்தில், கடைசி பக்கத்தில், சென்னை துரித ரயில் போக்குவரத்துத் திட்டம் என்று ஒரு தனி பாராவே போட்டிருக்கிறீர்கள். இது மத்திய அரசினுடைய திட்டம். இந்தத் திட்டம் ஏற்கப்பட்டாலும் கூட, ஒதுக்கப்பட வேண்டிய நிதி உரிய காலத்தில், உரிய அளவு ஒதுக்கப்படவில்லை என்கிற குறை ஒரு பக்கம் இருக்கிறபோது, எப்படி வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்திற்குச் சொந்தம் கொண்டாடுகிறது என் பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

வீட்டு மனைகளின் விலை உயர்கிறது என்று அரசாங்கம் கொள்கைக் குறிப்பில் சொல்லியிருக்கிறது. இதைத் தடுக்க காஷ்மீரில் உள்ளது போல, பிற மாநிலத்தவர் இங்கே நிலம் வாங்குவதைத் தடை செய்ய வேண்டும். இதை ஏதோ நான் தேசிய ஒருமைப்பாட்டுக்கு விரோதமாகச் சொல்வதாகக் கருதி விடக் கூடாது.

இன்றைக்குக் கறுப்புப் பணத்தை முதலீடு செய்ய கிடைத் துள்ள மிக வாய்ப்பான துறையாக இந்த வீட்டு மனைகள் விற்பனை துறையிருக்கிறது. இதனால் விலைவாசி உயர்கிறது. எனவே, ஏழைகள் வீட்டு மனைகள் வாங்க முடியவில்லை.

(முற்பகல் 11-30)

எனவே, அரசாங்கமே இந்த ரியல் எஸ்டேட் பிஸினசை மேற் கொள்ள வேண்டும். அதனால் அரசுக்கும் இலாபம் கிடைக்கும், மலிவு விலையில் வீட்டு மனையும் கிடைக்கும்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் 24-வது
பக்கத்தில் கோயம்பேடு, ஆலந்தூர், மாதவரம் ஆகிய இடங்
களில் கனரகப் பேருந்து நிலையம் அமைக்க திட்டமிடப்பட்
டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது மிக மகிழ்ச்சிக்
குரிய ஒன்று. அதே நேரத்தில் வெளியூர்களிலிருந்து நிறைய
பேருந்துகள் வரும். பின்னால் அந்த கோயம்பேடு, ஆலந்தூர்,
மாதவரம் பகுதிகளிலிருந்து சென்னை மாநகருக்கு வரவேண்டும்
அல்லவா? அதற்கு அதிகப்படியான நகரப் பேருந்துகள் விட
வேண்டும். அப்படியானால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும்.
பயணிகளுக்கு சிரமங்கள் ஏற்படும். அதைக் கருத்திற் கொண்டு
அரசு தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

சென்னை மாநகரில் பல இடங்களில் குடிசை மாற்று வாரிய
குடியிருப்புகள் இருக்கின்றன. அதை ஒட்டி நிறைய குடிசைகள்
இருக்கின்றன. இதைப் பார்க்கும்போது மாண்புமிகு முதல்வர்
அவர்கள் ஒரு படத்திலே பாடிய பாடல் நினைவுக்கு வருகிறது.
''அண்ணாந்து பார்க்கின்ற மாளிகைக் கட்டி, அதன் அருகினில்
ஓலைக் குடிசை கட்டி, பொன்னான உலகென்று பெயரும்
வைத்தால் இந்த பூமி சிரிக்கும், அந்த சாமி சிரிக்கும்.'' என்று
முதல்வரே பாடியிருக்கிறார். எனவே, மற்றவர்கள் இதைப்
பார்த்து சிரிப்பதற்குள் வேறு நல்ல இடமாகப் பார்த்து
எல்லோருக்கும் வீடுகள் கட்டித்தர வேண்டும். (மணியடிக்
கப்பெற்றது).

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, வீட்டுவசதி வாரியம், குடிசைப் பகுதி
மாற்று வாரியம், எம்.எம்.டி.ஏ. போன்ற மானியக் கோரிக்கை
கள் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்லி விடைபெறலாம்
என்று கருதுகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு திராவிட முன்னேற்றக்
கழக உறுப்பினர் எழுதி வைத்த சில குறிப்புகளைச் சொல்லி
அந்தப்புரம் என்றும், மாடமாளிகை என்றும் சொன்னார்கள்.
நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். மாளிகையிலே
இருந்து கொண்டு மக்களைப் பார்ப்பவர்கள் அல்ல நாங்கள் ;
மக்களோடு இருந்து மாளிகையைப் பார்ப்பவர்கள் நாங்கள்
என்ற அந்தப் பரம்பரையிலே வந்தவர்கள். எனவே, எங்களுக்கு
அந்த மாட மாளிகைகள் எல்லாம் ஒத்துவராது என்பதை நான்
அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப்
பொறுப்பை ஏற்றபிறகு பல்வேறு சீரிய பணிகளை வீட்டுவசதிவா
ரியத்திலும் குடிசைப்பகுதிமாற்று வாரியத்திலும்செய்திருக்கிறார்
கள். சென்னை மாநகரை ஒரு எழில் நகராக மேம்படுத்த
எம்.எம்.டி.ஏ. அமைப்பை உருவாக்கி, இன்றைக்கு சிறப்பான





பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். முந்தைய ஆட்சிக்
காலத்தில் நிலம் வேண்டுமென்றாலும், வீடு வேண்டுமென்
றாலும் ஒதுக்கப்பட்டது என்ற முறையை மாற்றி, தகுதி
உள்ளவர்கள் எல்லாம் விண்ணப்பம் செய்தால் அவர்களுக்கு
நிலமும் கிடைக்கும், வீடும் கிடைக்கும் என்ற புதிய வரலாற்று
சிறப்புமிக்க மாறுதலை வீட்டுவசதி வாரியத்திலே கொண்டு
வந்து, லஞ்சலாவண்யங்களுக்கு இடமில்லாமல் புதிய சகாப்
தத்தைப் படைத்தவர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் என்பதை நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு குடிசைப் பகுதி மாற்று வாரியமும் வீட்டுவசதி
வாரியமும் சென்னை மாநகரில் மாத்திரமில்லாமல் தமிழ்நாடு
முழுவதற்கும் சிறப்பான பணிகளை ஆற்றி. எந்தவிதமான
அடிப்படை வசதியும் இல்லாத ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு
எல்லாம் சிறப்பாக, செம்மையாகப் பணியாற்றிக்கொண்டு
வருகிற பாங்கினைப் பார்க்கிறபோது நான் இந்த வாரியங்களைப்
பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அவற்றிற்குப் பொறுப்
பாக இருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் பாராட்
டக்கடமைபட்டிருக்கிறேன்.

இந்த மானியத்தினுடைய கொள்கைக் குறிப்பில் கூறப்பட்
டிருக்கிற ஒரு குறிப்பை நான் பார்த்தேன். அதை மாண்புமிகு
அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு
கிறேன். குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணி இன்றைக்கு
சென்னை மாநகரிலிருந்து தமிழ்நாடு முழுவதற்கும் விரிவு
படுத்தப்பட்டிருக்கிறது. அப்படி விரிவாக்கப்பட்டிருக்கிறபோது,
இந்த வாரியத்திற்கு 1983-84 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட
நிதியைவிட இந்த ஆண்டு குறைவாக ஒதுக்கப்பட்டிருப்பதாக
கருதுகிறேன். எனவே, தயவுசெய்து இந்தத் தொகையை உயர்த்
தினால் நலமாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தை மாண்பு
மிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர
விரும்புகிறேன்.

இன்றைக்குக் குடிசைப்பகுதி மாற்றுவாரியம் பல்வேறு
பணிகளைச் சிறப்பாகவும், செம்மையாகவும் நடத்திக்கொண்டி
ருக்கின்றது. அதேபோல் இன்றைக்குக் குடிசைப் பகுதி
மாற்று வாரியத்தின் வாயிலாக, சென்னை மாநகரத்தின்
குடிசைப்பகுதிகளில் எல்லாம் மேம்பாட்டுத் திட்டத்தின் வாயி
லாகப் பணிகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். புரட்சித்
தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு
சென்னை மாநகரைச் சீர்படுத்திச் செம்மைப்படுத்த குடிசைப்
பகுதிகளுக்காகவே கொண்டுவரப்பட்ட ஏறத்தாழ இரண்டு
திட்டங்களின் மூலம் 50 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறு
கின்ற வகையிலேயும் இதுவரையில் 38,500 குடும்பங்களுக்கு

பட்டா, கடன், குடிநீர் மற்றும் சாலை வசதி போன்றவற்றைச்
செய்து தருவதற்காகவும் சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கப்
பட்டு வருகின்றன. இப்போது மூன்றாவது பெரும் திட்டத்
தையும் உருவாக்குகின்ற செயற்குறிப்பையும் நாங்கள் காண
முடிகின்றது.

இரண்டாவது பெருந்திட்டத்தைப் பொறுத்தவரையில்
எனது தொகுதியான சைதாப்பேட்டையில் சில பகுதிகளைச்
சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் ஏற்கனவே
சொன்னேன். சூரியா நகர், ஜோதியம்மாள்நகர், மேற்கு
கனால் குடிசைப் பகுதி, சத்தியா நகர், செட்டித் தோட்டம்,
விநாயகாபுரம், நாகிரெட்டித் தோட்டம், பார்த்தசாரதி
மண்டபம், 5 பர்லாங் சாலை, முத்துரங்கம் பிளாக், பாரதி
பிளாக் போன்ற பகுதிகள் இரண்டாவது பெருந்திட்டத்திலே
அதாவது அடிப்படை வசதிகளைச் செய்து தருகின்ற மேம்
பாட்டுப் பணியிலே இணைத்துக்கொள்ளப்பட வேண்டும்
என்று இந்த நேரத்தில் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அடுத்து குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புக்களும்
வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளும் கட்டுகின்ற நேரங்
களில் அதோடு சேர்த்தே இப்போது நான் சொல்கின்ற
திட்டங்களையும் இணைத்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக
ஒரு இடத்தில் 500 குடியிருப்புகள், ஆயிரம் குடியிருப்புகள்
கட்டுகிறோம் என்றால் அந்தக் குடியிருப்புகளுக்குத் தேவை
யான கடைகள் மற்றும் திருமணம் போன்றவற்றை நடத்து
கின்ற வகையில் சமூகக் கூடங்கள் போன்றவற்றையும்
அந்தக் குடியிருப்புகளில் கட்டுகின்ற வகையில் இனியாவது
திட்டமிட்டுச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கி
றேன். இதனை இனியாவது நடைமுறைப்படுத்த வேண்டும்.
இப்போது குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் குடியிருப்பு
களிலும், வீட்டுவசதி வாரியத்தின் குடியிருப்புகளிலும் பெரும்
பகுதியாக மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் இதுபோன்ற
வசதிகள் இல்லாத சூழ்நிலை இருப்பதை மனதில் கொண்டு
நடப்பு நிதியாண்டிலே திருமணக்கூடங்கள் அல்லது சமூகக்
கூடங்கள் மற்றும் ஷாப்பிங் சென்டர்ஸ் போன்றவற்றை
எல்லாம் எந்தெந்த இடங்களில் தேவையோ அந்தந்த இடங்
களில் கட்டவேண்டும் என்பதை உணர்ந்து அவற்றுக்கான
உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் நினைவு
படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமீபத்தில் எனது தொகுதியில் ஏற்பட்ட தீ விபத்தின் கார
ணத்தால் இன்றைக்குப் பல்வேறு பகுதிகளில் குடிசைமாற்று
வாரியத்தின் மூலம் வீடுகளைக் கட்டித்தர வேண்டும் என்ற



கோரிக்கையை உடனுக்குடன் புரட்சித் தலைவர் அவர்களின்
அரசு அறிவித்து அந்த இடத்தில் வீடு கட்ட உத்தரவிட்டிருக்
கிறார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தி எனது தொகுதி க்ம
களை எல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திக்கொண்டிருக்கின்றது.
அப்படிப்பட்ட அந்தப் பணியை விரைவாகச் செயல்படுத்தி,
துரிதப்படுத்தி நடப்பு சட்டமன்றக் கூட்டத் தொடர் முடி
வதற்குள்ளாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டப்பட
இருக்கின்ற அந்த வீடுகளின் எண்ணிக்கையையும், கட்டப்பட
இருக்கின்ற அந்த இடத்தையும் அறிவித்தால் இன்றைக்கு ஏங்கிக்
கொண்டிருக்கின்ற மக்களுக்கு அது உதவிகரமாக இருக்கும்.

அது ஆற்றின் ஓரப் பகுதியாக இருப்பதன் காரணத்தால்
வெள்ளம் வரக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அப்படி வெள்ள
அபாயம் ஏற்பட்டால் மீண்டும் அவர்களுக்கு உதவித்தொகை,
நிவாரணங்கள் எல்லாம் வழங்கவேண்டிய கட்டாயம் ஏற்
படும். ஆகவே அதைக் கருத்தில் கொண்டு இந்தப் பணியை
எவ்வளவு விரைவாக முடுக்கிவிட முடியுமோ அவ்வளவு விரை
வாக முடுக்கிவிட்டு அந்தப் பணியைத் தொடங்க வேண்டும் என்று
இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சி.ஐ.டி. நகர் 140-வது வட்டத்தில் சிட்டி இம்ப்ருவ்
மென்ட் என்ற அந்த அடிப்படையில் அங்கே குடி இருக்கின்ற
மக்களுக்கு பல ஆண்டு காலமாக பட்டா வழங்கப்படாமல்
இருக்கின்றது. எனவே குடிசைப் பகுதி மாற்று வாரியமும்,
வீட்டுவசதி வாரியமும் இணைந்து செய்ய வேண்டிய பணியா
இது அல்லது குடிசைப் பகுதி மாற்று வாரியம் தனியாகச் செய்ய
வேண்டிய பணியா அல்லது வீட்டுவசதி வாரியம் தனியாகச்
செய்ய வேண்டிய பணியா என்பதை எல்லாம் ஆராய்ந்து அந்தப்
பணியைத் துவங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கி
றேன்.

அடுத்து கூட்டுறவு வீட்டுமனைச் சங்கங்களுக்கு அளிக்கப்
படுகின்ற கடன் உதவி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.
எனவே மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள்
கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் புதிதாக இடத்தைக் கேட்
டாலும் அல்லது புதிதாக வீடு கட்ட அவர்கள் மனுச்
செய்தாலும் கூட்டுறவு வங்கிகளிலிருந்து அந்தத் தொகையிலே
இருந்து கொடுக்க கூட்டுறவுத் துறைக்கு ஒரு சரியான ஆலோ
சனையை வழங்கி அவர்களுக்கு உதவித் தொகையும், கடன்
தொகையும் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்
பதை இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

அதேபோல இன்றைக்கு எம்.எம்.டி.ஏ. என்கிற ஒரு நிறு
வனம் சென்னை மாநகரத்தினுடைய வளர்ச்சியை முன்னிட்டு
அமைக்கப்பட்ட மிகப் பெரிய ஒரு அமைப்பாகும். இன்றைக்கு
அந்த அமைப்பில் பல்வேறு சிறப்பான பணிகள் நடைபெற்றா
லும் ஒரு சில முரண்பட்ட சட்டங்கள் இருந்து கொண்டு,
மக்களைப் பாதித்துக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த
நேரத்திலே நான் நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு அவர்கள் ஒரு கிரவுண்ட் நிலத்திற்குத்தான்
பிளான் அப்ரூவல் செய்கிறார்கள். அப்படி ஒரு கிரவுண்ட்
இருந்தால்தான் வீடு கட்டுவதற்கு அனுமதி கிடைக்கிறது. அப்படி
வீடு கட்டுவதற்கு அனுமதி இருந்தால்தான் கடன் உதவி அளிக்கி
றார்கள். எனவே அப்படி ஒரு கிரவுண்டுக்கு குறைவாக நிலம்
வைத்திருப்பவர்களுக்கு பிளான் அப்ரூவல் செய்யப்பெறாத கார
ணத்தினால், எவ்வளவோ பெரிய சங்கடமான சூழ்நிலை
ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அவர்களுடைய கவனத்திற்குக்
கொண்டு வர விரும்புகிறேன்.

இன்றைக்கு ஒரு குடும்பத்தில் ஒரு நபர் இருக்கிறார். அவ
ருக்கு மூன்று குழந்தைகள் இருக்கின்றன என்று வைத்துக்
கொள்வோம். ஒரு கிரவுண்ட் நிலம் அவருக்குச் சொந்தமாக
இருந்து, அந்த ஒரு கிரவுண்ட் 3 பேருக்கும் பிரித்தால் ஒரு
நபருக்கு அரையரைக்கால் கிரவுண்ட் வரும். அதில் வீடு
கட்ட அனுமதி கிடைக்காது என்பதால் அதைக் கட்டாய
மாக விற்றே தீரவேண்டிய நிலை அவர்களுக்கு வருகி
றது. எனவே எம்.எம்.டி.ஏ. வைப் பொறுத்தமட்டில் இந்த
நிலையில் மாற்றம் செய்தாக வேண்டும். அரை கிரவுண்டோ,
கால் கிரவுண்டோ, அரையரைக்கால் கிரவுண்டோ, எந்த அள
விற்கு இருந்தாலும், அந்த அளவிற்குள் எப்படிச் செய்ய வேண்
டும் அல்லது எப்படி ஒரு புதிய திட்டத்தை வகுத்தால்
அந்த அடிப்படையில் அது சரியாக வரும் என்று பார்த்துப்
பணியாற்ற வேண்டுமே தவிர, அதற்கேற்ப சட்ட திட்டங்களை
மாற்றி யமைக்க வேண்டுமே தவிர, 1/2 கிரவுண்டிற்கு அனுமதி
வழங்க முடியாது என்று சொல்வது சரியான அணுகு முறையல்ல
என்பதை எம்.எம்.டி.ஏ. பொறுத்தவரைக்கும் சொல்லி,
அங்கே அந்த நிலையை மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் நட
வடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கி
றேன்.

அதேபோல இன்றைக்கு சென்னை மாநகரத்திலே நெருக்
கடி அதிகரித்துக் கொண்டு வருகிறது. எல்லாப் பகுதிகளிலி
ருந்தும் எல்லோரும் விரும்பி வருகிற சென்னை மாநகரத்தில்





நாள்தோறும் மக்கள் தொகை பெருகிக் கொண்டே போகி
றது. அப்படி போகிற சென்னை மாநகரத்தில் இன்றைக்கு
பல இடங்களில் பல மாடி வீடுகள் எழும்பிக் கொண்டிருக்கின்
றன. இந்த பிஃளாட் சிஸ்டம் எனப்படும் பல மாடிவீடு
களைப் பொறுத்தமட்டில், இதைக் கட்ட வேண்டும் என்று
விண்ணப்பித்து யாராவது அனுமதி கேட்டால், உடனே
கொடுத்து விடாமல், ஒரு சில விஷயங்களைக் கணக்கிலே
எடுத்துக் கொண்டு அனுமதி வழங்கும் வகையில் முறைகளை
மாற்றி அமைக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக்
கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்று சொன்னால், குறிப்பாக ஒரு தெருவிலே 200
வீடுகள் இருந்தால், அந்த 200 வீடுகளில் உள்ள குடும்பங்
களுக்குத் தேவையான வகையில்தான் சென்னை மாநகரத்
தினுடைய குடிநீர் வழங்கு துறைக்கும் கழிவு நீர்
அகற்றுத் துறைக்கும் தேவையான வசதி வாய்ப்புகளோ
அனுமதியோ கிடைத்திருக்கும். அந்தக் குறிப்பிட்ட குடும்
பங்களின் தேவைகளுக்கேற்பத் தான் அவர்கள் பணிகளை
ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி 200 குடும்பங்
களுக்கு மட்டுமே தேவையை நிறைவு செய்யும் வகையில்
குடிநீர் வாரியமும், கழிவுநீர் அகற்று வாரியமும் செயல்
படும் இடத்தில் திடீர் என்று 400 குடியிருப்புகள் தோன்றி
னால், அதில் குடியேறும் குடும்பங்களுக்கும் இந்த அடிப்படைத்
தேவைகளை நிறைவு செய்யும் பணியை கருத்தில் கொண்டு
தான், அந்த மாடி வீடுகளுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

இல்லையென்று சொன்னால், இன்றைக்கு பெருகி வரு
கின்ற மக்கள் தொகை பெருக்கத்தை வைத்துப் பார்த்தால்,
சென்னையின் சுற்றுப்புறங்களில் இருக்கிற பகுதிகளுக்கெல்
லாம் குடிநீர் கிடைக்காத நிலையும், கழிவு நீர் தேங்கிக் கிடக்
கின்ற நிலையும் தான் ஏற்படும். ஆகவே, அதைக் கருத்தில்
கொண்டு, குடிநீர் வழங்கு துறைக்கு கொடுக்கப்பட்டிருக்கிற
அந்த அனுமதியை வைத்து, கழிவுநீர் அகற்று வாரியத்திற்கு
இருக்கும் வசதியை கணக்கில் எடுத்துக் கொண்டு அதன் அடிப்
படையில்தான் இதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். இல்லா
விட்டால் பம்பாய் நகரம் போன்று நம் சென்னை நகரமும்
நெருக்கடிக்கு ஆளாகி, சுகாதாரம் கெட்டு, இயற்கையான
காற்று வசதியே இல்லாமல் போய்விடும். சென்னை மெரினா
கடற்கரையிலிருந்து வரும் காற்று கூட சென்னையை தாண்
டிச் செல்ல முடியாமல் தடுக்கப்பட்டுவிடும் அபாயச் சூழ்நிலை
யும் இருக்கிற காரணத்தால் இதைத் தீவிரமாகப் பரிசீலனை
செய்து, மாடி வீடுகள் கட்ட விண்ணப்பங்கள் வருகிறபோது
அவற்றை சென்னைக்கு அடுத்திருக்கும் புற நகர்ப் பகுதி
களில் கட்ட அனுமதித்தால் புறநகர்ப் பகுதியை விரிவு
படுத்துகின்ற பணிக்கும் அது உதவிசெய்யும்.

[திரு. சா. துரைசாமி] [1985 ஜூன் 26

ஆகவே, பலமாடிக் கட்டிடங்களைக் கட்ட அனுமதி கேட்
டால் அதற்கான காரணங்களை தீவிரமாக ஆராய வேண்டும்.
வெறும் பணம் சம்பாதிப்பது தான் நோக்கமாக இருந்தால்,
ஏன் அதற்கு உதவும் வகையில் அவர்களை ஊக்குவிக்கின்ற முறை
யில்இந்த அனுமதியை வீணாக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்வதோடு, அது நியாயமான காரணத்திற்காக இருந்தால்,
அதிகமான அளவுக்கு தளங்கள் அமையாமல் கட்டுவதற்கு
அனுமதி அளிப்பதோடு நாம் நிறுத்திக் கொள்ளவும் இயலும்,
என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, கிண்டி தொழிலாளர்கள் குடியிருப்பு, அங்கே
வாழ்ந்துக்கொண்டிருக்கும் தொழிலாளர்களுக்கும், மற்றும்
தமிழகம் முழுவதும் உள்ள தொழிலாளர்களுக்கும் அவரவர்களின்
அந்தக் குடியிருப்பையே சொந்தமாக்கித் தரவேண்டும் என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்களைக்கேட்டு கொள்கிறேன்.
சிறு தொழில் செய்கிற முதலாளிகள் அந்தத் தொழிற்
கூடங்களைத் தாங்களே பெற்றுக் கொள்ள அனுமதி
கேட்டுப் பெற்றுக் கொண்டு விட்டார்கள். அந்தத்
தொழிலாளர்களுக்கு அந்தக் குடியிருப்புக்களை சொந்த
மாக்கித் தரவேண்டும். இதனை குடிசைப்பகுதி மாற்று வாரி
யத்தில் எல்லாம் செய்கிறார்கள். இந்த முறையை, தொழி
லாளர்களுக்கு அந்த குடியிருப்புகளை வழங்குகிற முறையை
நிச்சயமாகச் செய்ய வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கை
யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு வீட்டு வசதி வாரியமும், குடிசைப் பகுதி மாற்று
வாரியமும் பல்வேறு பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.
வீடு கட்டுகிற கட்டுமானப் பணிகளை எல்லாம் இன்றைக்குத்
தனிப்பட்ட கான்ட்ராக்ட்டர்கள் எடுத்து, அந்த கான்ட்ராக்ட்
களுக்கு 20 சதவீதம், 30 சதவீதம், 40 சதவீதம் என்று அரசு
நிர்ணயிக்கிற அந்தத் தொகையை ட குறைவாகச் செய்வதாக
கான்ட்ராக்ட்கள் எடுத்து, அவர்களால் கட்டப்படுகிற வீடுகள்
எல்லாம் தரமாக இல்லாத காரணத்தால், கட்டி முடிக்கப்பட்டு
ஆறு மாதங்கள், ஒரு வருடம், இரண்டு வருட காலத்திற்குள்
களாவே பழுதடைந்து விடுகின்றன. அதைத் தடுக்க, புரட்சித்
தலைவர் அவர்கள் அரசு, தொழிலாளர்கள் அரசு, புரட்சித்
தலைவர் அவர்கள் அரசு தொழிலாளர்களைப் பேணி பாது
காக்கிற அரசு என்ற அளவிலே செயல்படுகின்ற அரசு, இதில்
ஒரு புரட்சிகரமான மாற்றத்தை, ஒரு முன்மாதிரியாக சென்னை
மாநகரத்தில் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
அதாவது, கட்டிடத் தொழிலாளர்கள்தான் இன்றைக்கு அந்தப்
பணிகளை எல்லாம் செய்கிறார்கள். அந்தப் பணிகளை கட்டி
டத் தொழிலாளர்களுக்கு அளிக்க, அவர்களை ஒரு சங்கமாக
அமைத்து, அந்தச் சங்கத்தின் வாயிலாக அவர்களாகவே அந்தப்



1985 ஜூன் 26] [திரு. சா. துரைசாமி]

பணிகளை செய்கிற ஒரு முறையைக் கொண்டு வந்தால் நிச்சய
மாக அந்தப் பணிகள் தரமுள்ளவையாக இருக்கும். அதே
நேரத்தில் நம்முடைய தொழிலாளர்களை வாழவைக்கிற அளவி
லும் அவர்களுக்கு உதவியாக இருக்கும். இதை பரிசீலித்து,
என்னென்ன முறைகளை கடைப்பிடித்து, அந்தக் கட்டிடத்
தொழிலாளர்களுக்கு கட்டுமானப் பணிகளை கொடுக்கிற அடிப்
படையில் செய்யலாமென்பதை ஆய்வு செய்து அவர்களுக்கு
அந்தப் பணிகளை வழங்கினால் நிச்சயமாக குடிசைப்பகுதி மாற்று
வாரியம், வீட்டுவசதி வாரியத்தின் பணிகள் மட்டுமல்லாமல்,
தமிழகத்திலே இருக்கிற இதுபோன்ற அனைத்துப் பணிகளையும்
நல்ல முறையில் செய்யலாம். தமிழகம் முழுவதிலும் இருக்கிற
அந்தத் தொழிலாளர்களை சங்கமாக அமைத்து, பட்டம் பெற்று
வேலையில்லாமல் இருக்கிற இளைஞர்களை வைத்து, இந்தப்
பணிகளைச் செய்தால் அந்தத் தொழிலாளர்களுக்கும் உதவியாக
இருக்கும், வாரியத்திற்கும் நல்லது, மக்களுக்கும் தரமான வீடு
கள் கிடைக்கும் என்பதை என்னுடைய கருத்தாக தெரிவிக்க
விரும்புகிறேன். தயவு செய்து அரசு இதனை பரிசீலனை செய்ய
வேண்டும். எவ்வளவு சிரமங்கள் இருந்தாலும், புரட்சித் தலை
வர் அரசு சிறப்பாக பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது.
இந்த நிலையில் இந்தத் திட்டத்தை அரசு பரிசீலிக்க வேண்டு
மென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாற்றுத் தலைவர் அவர்களே,
வீட்டு வசதி வாரியம், நகர்ப்புற வளர்ச்சி மானியக்
கோரிக்கைமீது பேசுகிற வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக்
கொள்கிறேன்.

உணவிற்கு அடுத்தபடியாக இருப்பது உறைவிடம்தான்.
அந்த அடிப்படையில் செயல்படுவதாக கூறுகிற இந்த அரசை
நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் நம்முடைய திட்டங்
கள் மக்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு பயன்படுகிற விதத்தில்
அமைந்திருக்கின்றனவா என்றால், இல்லையென்று தான் கூற
வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். அப்படிப்பட்ட சூழ்
நிலையில், இல்லையென்பது இல்லையென்ற அளவிற்கு, எல்லோ
ருக்கும் வீடு வழங்குகிற திட்டத்தின் அடிப்படையில் மிக வேக
மாக செயல்பட்டு வீடுகளை வழங்க முன் வர வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே வீடுகள் கட்டுவதற்காக கடன் கொடுக்கப்படுவதாகச்
சொல்கிறார்கள். அந்தக் கடனைப் பெறுவதற்கு மக்கள் அலை
கிற அலைச்சலில் வீடு கட்ட வேண்டாம் என்ற எண்ணத்திற்கு
கடன் வாங்கச் செல்கிறவர்கள் வந்து விடுகிறார்கள். இதில்
அவ்வளவு சிரமங்கள் ஏற்படுகின்றன. வீடு கட்டுவதற்கு கடன்
வேண்டுமென்று அணுகுகிறபோது, காலதாமதம் இல்லாமல்
அவர்களுக்கு கடனுதவி கிடைப்பதற்கான எல்லா நடவடிக்கை
களையும் அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1985 ஜூன் 26

அடுத்து, இங்கே வீடுகளைக் கொடுக்கிற போது ஒரு இலட்சம் ரூபாய் கடனுதவி கொடுப்பார்களானால், அதிலே 25 சதவீதம் வீடு வாங்குபவர்கள் முதலில் கட்ட வேண்டுமென்ற முறையை வைத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 1 இலட்சம் ரூபாயில் கட்ட வேண்டும் என்றால், 25 ஆயிரம் ரூபாயை முதலில் முதலீடாகச் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, இதை 10 சதவீதமாக நீங்கள் குறைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–50)

அதேபோல், தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வாடகை வீட்டுவசதிகளைப் பொறுத்தவரையில் குமரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் அங்கே வீடுகளைக் கட்டுவதற்கான எந்த விதமான குறிப்பும் இல்லை. ஏன் என்றால் கன்னியாகுமரி மாவட்டத்தை ஒரு நகர்ப்புறமாக நமது அரசு கருதவில்லை என்பதையும், அதை ஓர் மாவட்ட ரீதியாக கவனிக்கவில்லை என்பதையும் நான் குற்றச்சாட்டாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, இந்தக் கொள்கைக் குறிப்பைப் பார்த்தால், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு என்று ஏதாவது வீடு கட்டும் திட்டங்கள் இருக்கிறதா ? அதற்கான நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறதா ? என்றால், அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் எந்தத் திட்டமும் கூறப்படவில்லை. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கு வீட்டு வசதி என்ற அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நாகர்கோவிலில் 100 வீடுகள் இருக்கின்றன. அது போதாது, மேற்கொண்டு அதிகமான வீடுகளை தாலுக்கா வாரியாக அமைத்துத் தர வேண்டும் என்றும், அதற்காக அரசு நிதி ஒதுக்கித் தர வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1961 முதல் 1985 வரைக்கும் 19,532 வீடுகள் கட்டப்பட்டு இருப்பதாக குறிப்பிட்டு இருக்கிறார்கள். அது போன்று, 1985–86 ஆம் ஆண்டில் 608 வீடுகளைக் கட்ட இருப்பதாகவும், ஈரோடு மற்றும் மதுரை மாவட்டங்களில் கட்ட இருப்பதாகவும் அதற்கு 60 இலட்சம் ரூபாய் செலவாகும் என்றும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதுபோல் நீங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் ஒரு தொகையை ஒதுக்கி, அந்தப் பகுதியில் வாழ்கிறவர்கள் எல்லாம் கோடீஸ்வரர்கள் அல்ல, அங்கேயும் ஏழை எளிய மக்கள், குடிசைகளில் வாழ்கின்றவர்கள் பெருவாரியாக இருக்கிறார்கள், அவர்களையும் கவனித்து, அந்தப் பகுதிகளிலும், புதிய வீடுகளை அமைப்பதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1985 ஜூன் 26] [டாக்டர் தே. குமாரதாஸ்]

அதே போல் தமிழகத்தில் காலி இடங்கள், நகர்ப்புற உச்சவரம்புக்கு அப்பாற்பட்டு இருக்கிற நிலங்கள் இருந்தால், அதை அரசு எடுத்து, அங்கே வீட்டு மனைகளைக் கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்திலே இதுவரைக்கும் அப்படி எத்தனை இடங்களில் அதிகமான நிலங்களை எடுத்து, அங்கே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகளை அமைத்திருக்கிறார்கள் என்ற குறிப்பில்லை. அது குறிப்பிடப்பட்டு இருந்தால், மிகவும் நன்றாக இருந்து இருக்கும்.

அடுத்து, தனியார் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 72 வீடுகள் கட்டுவதற்கு, 1985–86 ஆம் ஆண்டு 1.83 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு அரசு நிறுவனங்களில் பணியாற்றுபவர்களை விட அதிகமான தொழிலாளர்கள் தனியார் நிறுவனங்களில் பணியாற்றுகிறார்கள், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கும் போது, இந்தத் தொகை போதுமா ? இந்த 72 வீடுகளை மட்டும் கட்டிக் கொடுத்தால் போதுமா ? என்பதை எண்ணிப் பார்த்து, அதிகமான வீடுகளைக் கட்டிக் கொடுக்க முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக கடன் உதவித் திட்டம் என்று போட்டிருக்கிறார்கள். அதில் 16.41 இலட்சம் ரூபாய் கடனாகவும், ஆதரவுத் தொகையாக 11.68 இலட்சமும் வழங்கப்பட்டு இருப்பதாக குறிப்பிட்டு இருக்கிறார்கள். இந்தத் தொகை போதாது. இதையும் அதிகரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன.

அதுபோல், தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் மத்திய அரசு 1982-ஆம் ஆண்டு முதல் கொடுத்து வந்த உதவித் தொகையை நிறுத்தி வைத்துள்ளதாக கூறியிருக்கிறார்கள். அதற்கான காரணம் என்ன என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை. எனவே, அந்த உதவித் தொகையை மீண்டும் கேட்டு, இன்னும் பல புதிய அமைப்புக்களை அமைத்துத் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல், அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக மற்றும் விரிவுபடுத்துவதற்காக பணம் வழங்கும் திட்டத்தின் கீழ் தற்போது நீங்கள் மற்ற பிரிவுகளுக்கும், இதற்கும் இடையே 10:1 என்று வீதத்தில் கொடுக்கிறீர்கள். அது போதாது, இப்போது ஒருவர் 1 இலட்சம் ரூபாயில் ஒரு வீட்டை புதுப்பிக்க வேண்டும் என்றால், நீங்கள் 10 ஆயிரம் ரூபாய் கொடுத்து, அதிலே செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்கள். அந்தக் குறைந்த பணத்தைவைத்து, அவர் சிமென்டை வாங்கி, இன்னும் மற்ற வேலைகளைச் செய்வதற்கு இந்தப் பணம் போதாது. எனவே, நீங்கள் குறைந்த பட்சம் 50 சதவீதம், அதாவது 1 இலட்சம் ரூபாய் கேட்டால், 50 ஆயிரமாவது கடன் கொடுத்தால்

அவர்கள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே, அதைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கி வருகின்ற கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள தவறான நடவடிக்கைகள் பற்றி உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியும், நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற காரணத்தால் எங்கள் மனக் குறையை நாங்கள் கூறுகிறோம். அப்படிக் கூறியும் நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், தவறு செய்கின்ற அதிகாரிகள் மீண்டும் தவறு செய்கின்ற வாய்ப்பு இருக்கிறது.

எனவே நாங்கள் கூறுகின்ற ஆதாரமான குற்றச்சாட்டை கருத்தில் கொண்டு தவறு செய்கின்ற அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் குமரி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் என்.ஒய். 242 என்ற ஒரு சங்கம் இருக்கிறது. அங்கே இருக்கின்ற செயலாளர் பல தவறுகளைச் செய்து இருக்கிறார்கள். அதன் அடிப்படையில் 1983 ஆம் ஆண்டு விஜிலன்ஸ் கேஸ் போட்டு அப்போது மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு. திருபாதி அவர்கள் இந்த சங்கத்தின் தவறுகளை கண்டு பிடித்து அதைத் தடுக்க தனி அதிகாரியைப் போட்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் 1985 வரை அவர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதற்கு காரணம் யாது என்று தெரியவில்லை.

அவர் இந்த சங்கத்திற்கு செயலாளராக ஆவதற்கு முன்பாக இருந்த வசதி எவ்வளவு? இப்போது இருக்கின்ற வசதி எவ்வளவு என்பதை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர் பெரும்வளை என்ற பகுதியில் 6 ஏக்கர் நிலத்தை அவர் மனைவி பேருக்கு வாங்கியிருக்கிறார். பிறகு சில காலங்களில் அதை கூட்டுறவு சங்கத்திற்கு விற்று விடுகிறார்கள். ஒரு சென்ட் 500 ரூபாய் என்று மதிப்பு போட்டு வாங்குகிறது. இந்த சங்கம், வீடுகளை தனி நபருக்கு லே அவுட் போட்டு விற்கின்ற போது 10 சென்ட் 5 ஆயிரம் ரூபாய்க்கு வாங்குகிறது. இப்படி 50 ஆயிரம் ரூபாய் வாங்கியதில் 5 ஆயிரம் ரூபாய் சங்கத்திற்கு கட்டிவிட்டு மீதி 45 ஆயிரம் ரூபாயைக் கையாடல் செய்கிறார். இதுபோல பல குற்றச்சாட்டுக்களை நாங்கள் ஆதாரத்தோடு கூறியிருக்கிறோம்.



அங்கே குமரி மாவட்டத்தில் பொன்னப்ப நாடார் நகர் என்ற புதிய காலனி, அவுசிங் ஸ்கீமை ஆரம்பித்து 400 வீட்டுக்கு அங்கே லே அவுட் போட்டு ஒதுக்கப்பட்டது. அதில் 10 சதவீத மனைகளில் கூட 40 பேர் கூட வீடுகள் கட்டாத சூழ்நிலையில், 10 மாதம் 18 மாதத்தில் வீடுகள் கட்டவில்லை என்ற காரணத்தைக் காட்டி வீடுகள் கட்டாத 360 பேரிடமிருந்து அந்த மனைகளைப் பெற்று இருக்கிறார்கள். 5 வருட காலமாக கிட்டத்தட்ட 20 ஆயிரம் 30 ஆயிரம் ரூபாய் முதலாவதாக மூலதனம் போட்டு அந்த இடத்தைப் பெறுகின்ற நபர் 10 மாத காலத்திற்குள் வீடுகள் கட்டவில்லை என்று சொன்னால் அந்த நபருக்கு ஏற்படுகின்ற பாதிப்பை இந்த அரசு எப்படி சரி கட்டப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

அதுமட்டும் அல்லாமல், 30 ஆயிரம் ரூபாய் பெறுமானம் உள்ள அந்த இடம் அடுத்த நபருக்கு வருகின்ற போது 5 வருட காலத்தில் அதன் மதிப்பு 1½ இலட்சம் ஆகிறது. ஆனால் அதே 30 ஆயிரம் ரூபாயை சங்கத்தில் போட்டு விட்டு பாக்கி 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயை கையாடல் செய்கிறார் என்றால் 360 வீட்டுக்கு எவ்வளவு கையாடல் செய்திருப்பார் பாருங்கள். கிட்டத் தட்ட இப்படி எத்தனை இலட்சங்கள், எத்தனை கோடிகள் அந்த நபர் சம்பாதித்து இருக்கிறார் என்பதை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆகவே அந்த சங்க செயலாளரை பதவியில் இருந்து நீக்கி அங்கு தனி அதிகாரியை நியமித்து அங்கு நடந்து இருக்கின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர் அவருடைய மனைவியின் பெயரில் ஒரே தெருவில் 3 வீடுகளை வாங்கியிருக்கிறார். இப்படி குற்றச்சாட்டுகளை ஆதாரத்தோடு எடுத்துக் காட்டத் தயாராக இருக்கிறோம். இதை நான் மட்டும் அல்ல, ஆளுங்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பெருமாள் பிள்ளை அவர்களிடம் கேட்டாலும் சொல்லுவார்கள். குமரி மாவட்டத்தைச் சேர்ந்த இடது கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்களைக் கேட்டாலும் சொல்லுவார்கள். இன்னும் சொல்லப் போனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெத்தினராஜ் அவர்களைக் கேட்டாலும் சொல்லுவார்கள். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவர் செய்யும் தவறுகள் தெரியும். இப்படி எடுத்து சொன்னாலும் அந்த அதிகாரியின் மீது தக்க நடவடிக்கை எடுக்க தயக்கம் காட்டுவது ஏன் என்று புரியவில்லை.

இந்த மாமன்றத்தில் கூறுவதற்கு காரணம் என்ன என்றால், அப்படி தவறுகள் செய்கின்றவர் மீது நாங்கள் இங்கே சட்டமன்றத்தில் கூறுவதால் நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையில் சொல்லுகிறோம். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது சம்பந்தப்[illegible] நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் என்

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1985 ஜூன் 26

என். ஓய். 242 இன் செயலாளர் மீது தக்க நடவடிக்கை எடுத்து அங்கே நியாயம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12–00)

அதேபோல், குமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இந்த வீட்டு வசதி வாரியக் கழகத்தின் மூலம், மீனவர் குடியிருப்புக்கள் கடல் பகுதியில் இருப்பதால், மே, ஜூன், ஆகஸ்ட் மாதங்களில் கடல் கொந்தளிப்பு அதிகமாக ஏற்பட்டு, மீனவர்கள் குடியிருப்பு வீடுகள் அரித்துச் செல்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், மீனவர்களுக்கு நிரந்தரமான வாழ்வு, நிம்மதியான வாழ்வு வாழ்வதற்கு வழி காணும் வகையில், கடல் ஓரத்திலிருந்து வீடுகளை மாற்றி, ஊருக்குள்ளாகவே சில பகுதிகளை தேர்ந்தெடுத்து, அங்கே வீட்டுமனைகள் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

மீனவர் குடியிருப்புப் பகுதிகளில் சுகாதாரத்தைப் பொறுத்த வரையில், மிக மோசமான சூழ்நிலையில் இருக்கிறது. அந்த வடிகால் நீர் வெளியே போக முடியாமல் இருக்கின்றது. அங்கே வடிகால் அமைத்துக் கொடுத்து, அந்தப் பகுதிகளில் நிம்மதியாக இருப்பதற்கான நடவடிக்கைகளை நீங்கள் மேற் கொள்ள வேண்டும்.

வீடுகள் வழங்கினால் மின் இணைப்புக்கள் வழங்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் அங்கே வழங்கப்பட்ட குடியிருப்புக்கள் பெரும்பாலானவற்றில் மின் இணைப்புக்கள் வழங்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. ப்ளஷ்-அவுட், லெட்ரீன், பாத்ரும் பெசிலிட்டீஸ் அங்கே இல்லை. வீட்டு வசதி வாரியத்தில் வீடு அமைத்துக் கொடுக்கும்போதே, அந்தக் குறைபாடுகளும் இல்லாத வகையில் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

**THIRU G. K. FRANCIS**: Mr. Temporary Speaker Sir, in regard to Demand No. 33—Housing, permit me to make the following observations.

Housing constitutes one of the vital necessities of human existence and given the constraints of finance it is noteworthy that the Government has put in practice its Social objectives to the people by developing a Housing Programme to benefit all classes of Society. Infact, the Governments' broadbased social housing schemes implemented through the Tamil Nadu Housing Board, the Tamil Nadu Slum Clearance Board and Housing Co-operatives is to be commended.



[1985 ஜூன் 26

Giving priority to the implementation of the New Twenty Point Programme that stresses the necessity to provide house sites and construction assistance to rural families and houses to economically weaker sections as well as improvement of Slums, the Government has done extremely well in achieving its targets.

An outstanding feature of the Governments' Housing programme is its broadbased approach of aiding a wide range of various sections of the society. The Housing Board's work to the cause of L.I.G., M.I.G. and H.I.G. flats is commendable. I request the Government to formulate a suitable and separate Housing Scheme for Teachers. The school and college teachers have a tough time in getting suitable houses and it would be commendable if the Government formulate a separate Housing Scheme for them.

The Housing Scheme formulated for Industrial Workers and for Government servants should be expanded to cover a wider group of people. The Government should try to encourage companies to establish Housing Colonies. To start with all State-owned Organisations and Industrial units must establish their own housing colonies.

It is commendable to note that the Madras Urban Development Project undertaken by the Tamil Nadu Housing Board to improve housing conditions of Urban poor is gaining momentum. The schemes undertaken at Arumbakkam, Villivakkam and Kodungaiyur is unique in that it helps to expand the units of the City and spread out the population. The proposed development at Mogappair and Nolambur villages is a step in the right direction, in that it helps to keep off the pressure of population from the City. The Government should formulate furthes schemes as this in other backward regions.

Slum clearance is a vital task to make Madras a clean and beautiful city and to help the economically backward to live in better conditions and in a clean and healthy environment. The perpetuity of Slums only leads to anti-social activities and slowly they become done of violance and hot beds of crime and it is vital that the programme of Slum Clearance should be speeded up. The Tamil Nadu Slum Clearance Board's massive programme of constructing tenements to solve this problem is noteworthy and commendable. I request the Government to help poor Anglo-Indians who are living in Slums to obtain a tenement.

[திரு. ஜி. கே. பிரான்சிஸ்] [1985 ஜூன் 26

The accelerated Slum Improvement Scheme formulated by the State Government, is commendable and deserves all praise. Madras is slowly be coming a major International City and it is nice to know that improvements like roads, public fountain, street lights, public conveniences are provided under this scheme. In this regard I request the Government to beautify the key centres of Tourist attraction.

Further, I request the Government to establish a Housing Finance Corporation on the lines of the Housing Finance Development Corporation in the Private Sector. This Housing Finance Corporation may charge moderate and reasonable rates of interest on loans given to borrowers. It should also grant loans on different rates of interest to weaker sections of Society. This I am sure will encourage people to build their own houses and complement the various other housing programmes of the Government. This in turn will ease the problem of Housing in the State of Tamil Nadu.

Finally I request the Government to establish a Research and Development Cell to conduct Research in the development of cheaper constructions materials. Construction costs in these hard times are escalating at staggering limits, and it is high time cheaper materials are utilised to speed up the Housing Programme. I am sure with the explosion of Science and Technology, Research can provide new materials to replace traditional construction materials. Having spoken I wholeheartedly support the Demand . Thank You.

திரு. கு. ரமணி : மாற்றுத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின்பேரில் சில விஷயங்களை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். வீட்டு வசதி வாரியம் பற்றிச் சொன்னால், ஏழை மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கு குடிசை மாற்று வாரியமும், அதேபோல மத்திய தர மக்களுக்கும், மற்றவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக வீட்டு வசதி வாரியமும் ஓரளவுக்கு ஜனங்களுக்கு நன்மைசெய்யக்கூடிய நல்ல திட்டங்கள். 1967 ஆம் ஆண்டுக்குப்பிறகு தமிழகத்திலே ஆட்சி மாற்றம் கண்டபிறகு இந்த மாதிரியான திட்டங்கள் உருவாக்கப்பட்டு, மேலும் இன்றைக்கு அது வளர்க்கப்பட்டு வருகிறது. இதைப் பலனுள்ள முறையிலே அமலாக்குவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அவைகளைப் பற்றிச் சில விஷயங்களைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

குறிப்பாகச் சொன்னால், தமிழகம் தொழிலிலே கொஞ்சம் முன்னேறி வருகின்ற ஒரு மாநிலம். பல்லாயிரக்கணக்கான இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி என்று எடுத்துக்கொண்டால்



1985 ஜூன் 26] [திரு. கு. ரமணி]

அது மிகவும் பலஹீனமாக உள்ளது என்பதை நமது புதிய அமைச்சரவர்கள் குறித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், தொழிலாளர்களுக்கு மலிவு வீட்டு வசதி திட்டம் பற்றி எடுத்துக்கொள்வோம். இது தனியார் துறையிலே தொழிலாளர் இலாக்கா மூலமாகக் கொண்டு வரப்படுகிறது. இத்திட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்து 1985 ஆம் ஆண்டு மார்ச் முடிய 1,346 தொழிலாளர்களுக்குத்தான் வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்று அவரால் வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலே குறிப்பிடப்படுகிறது. அதற்குக்கூட தொழில் நிறுவனங்களுக்கு தொழிற்சாலை சொந்தக்காரர்களுக்கு தொழிற்சாலைகளின் முதலாளிகளுக்கு, கடனாக 36.81 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. ஆதரவுத் தொகையாக, சப்சிடியாக அரசாங்கமே கொடுக்கும் படியான பணம்—திருப்பிக் கட்ட வேண்டியதில்லை—17,51,000 ரூபாய். ஆகமொத்தம் 54,32,000 இதற்கே கொடுக்கப்பட்டிருக்கிறது 1,346 வீடுகள் கட்டுவதற்கு. அப்படியென்றால் தங்களுடைய தொழிற்சாலைகளிலே வேலை செய்கின்ற இலட்சோப லட்சம் தொழிலாளர்களுடைய சம்பாத்தியத்திலேயிருந்து, இலாபத்திலேயிருந்து அந்தத் தொழிலாளர்களுக்கு நியாயமான முறையிலே வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற மனோபாவம்கூட அந்தத் தொழிற்சாலை முதலாளிகளுக்கு ஏற்படாமல் இருப்பதைப் பார்க்க முடிகிறது. சர்க்கார் கையிலிருந்து, மக்களின் வரிப் பணத்திலிருந்து மானியமாகவும், கடனாகவும் பெற்றுக் கொண்டுதான் அவர்கள் நடத்துவதாக இருக்கிறார்கள். தொழிற்சாலை முதலாளிகள் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவது என்ற நல்ல காரியத்தைச் செய்ய வேண்டியதைக்கூட கைவிட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

(பிற்பகல் 12–10)

முன்பு சில பஞ்சாலை முதலாளிகள் 50 வீடுகள், 20 வீடுகள் என்று கட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அவர்கள் அதைக் கைவிட்டு விட்டார்கள். 1985–86 ஆம் ஆண்டு. வரும் ஆண்டிற்கு இந்த பட்ஜெட்டிலே போடப்பட்டிருப்பது 72 வீடுகள்தான். வெறும் 72 வீடுகள் மட்டும்தான். அதற்கு ரூ. 1,83,000 கடனும் ரூ. 1,83,000 சப்சிடியும். அப்படியானால், தொழிலாளி மக்களுக்காக வீடு கட்டிக் கொடுப்பது என்ற சிறந்த நடவடிக்கையை, சமுதாய முன்னேற்றத்திற்காக பாடுபடக்கூடிய அந்த உழைப்பாளி மக்களுக்காக, அவர்கள் சம்பாதித்துக் கொடுக்கக்கூடிய கோடானு கோடி இலாபப் பணத்தை வைத்திருக்கிற முதலாளிமார்கள் மனிதாபிமானமற்ற முறையில்

செல்வது சரியல்ல என்பதை எடுத்துக்காட்டி, தகுந்த முறையில் அவர்களுக்கு நிர்பந்தங்களைக் கொடுத்து, சட்டபூர்வமாகச் செய்தோமானால் இதைக்கூடச் செய்யலாம் என்பது என்னுடைய நம்பிக்கை. அவர்களைக் கொண்டு அதிகமான பணத்தை முதலீடு செய்யச் செய்து, தொழிலாளர்களுக்கு அதிக வீடு கட்டிக் கொடுக்க ஆவன செய்யவேண்டும்.

அடுத்தது, தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக, மத்திய சர்க்காரிடம் ஏராளமான பணம் இருக்கிறது. அவர்கள் ஒரு திட்டத்தை வைத்து அமுல் நடத்திக் கொண்டிருந்தார்கள். 1982 ஆம் ஆண்டிலிருந்து ஒருங்கிணைந்த தொழிலாளர் வீட்டு வசதி திட்டத்தை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். ஏன் நிறுத்தினார்கள்? நாடு முழுவதும் இருக்கிற தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தாகி விட்டதா ? தமிழகத்திலே இருக்கிற அரசாங்கம் மட்டும் இந்தக் காரியத்தைப் பூராவும் செய்யட்டும் என்று விட்டுவிட்டார்களா ? அதுவும் மக்களுடைய வரிப் பணம் தானே ? ஏன் அந்தப் பணியை அவர்கள் நிறுத்தி இருக்கிறார்கள் ஏன் இந்தத் திட்டத்தை அவர்கள் நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்பது புரியாத விஷயம். இந்தக் குறிப்பிலே அதற்கு விளக்கம் கிடையாது. ஆகவே, நான் அரசாங்கத்திற்கு வற்புறுத்திச் சொல்வது என்னவென்றால், மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி அதிக வீடுகளைத் தொழிலாளர்களுக்குக் கட்டிக் கொடுக்க முயற்சிகள் எடுக்க வேண்டும். அதற்காக, எல்லா பகுதி மக்களுடைய ஆதரவும் உங்களுக்குக் கிடைக்கும்.

அடுத்தது, மிகக் கஷ்டத்தோடு வாழக்கூடிய தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள்—தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் 2 இலட்சம் மக்கள் இருக்கிறார்கள், கோவை மாவட்டத்தில் வால்பாறை மலையிலே சுமார் 50,000 மக்கள் இருக்கிறார்கள். மதுரை, நெல்லை, குமரி, சேலம் போன்ற மாவட்டங்களிலே தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மலை உச்சியிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டும்படியான திட்டம் இருக்கிறது. 1985 ஆம் ஆண்டு மார்ச் முடிய 1,073 வீடுகள்தான் அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளன. அதற்கும் கடனாக ரூ. 16.41 இலட்சமும், சப்சிடியாக ரூ. 11.68 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 27 இலட்சம் அரசாங்க கஜானா பணத்தை பெற்றுக்கொண்டுதான் அவர்கள் இதைச் செய்திருக்கிறார்கள். கடனை மெள்ளமெள்ள கட்டுவார்கள். வீடுகட்ட வேண்டிய இடமே அவர்கள் கையிலே இருக்கிறது. உண்மையிலே வீடு கட்ட அந்தத் தேயிலைத் தோட்ட முதலாளிகள் என்னதான் செலவழித்திருப்பார்கள் என்றால் ரூ. 1,000, ரூ. 2,000 ஒரு வீடு கட்ட, அவர்கள் தங்கள் கையிலேயிருந்து போட்டிருக்க மாட்டார்கள். இது மிகவும் அநீதி என்றுகூட நான் சொல்ல விரும்புகிறேன்.





தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டை அமைச்சர் அவர்கள் போய் பார்க்கவேண்டும். அவர்களது வீட்டில் ஒரு அறை 10'-க்கு 10' என்று சொன்னால், அதில் 10 பேர்கள், 8 பேர்கள் குடியிருப்பார்கள். அப்படிப்பட்ட நிலையிருக்கிறது. ஆகவே, அது கவனிக்கப்பட வேண்டும். தொழிலாளர் துறை மூலமாகத்தான் இந்தக் காரியங்கள் நடைபெறுகின்றன. அமைச்சர் அவர்களுடைய குறிப்பிலிருந்து இந்த விஷயங்களை நான் சொல்ல விரும்புகிறேன். வரும் ஆண்டு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடு கட்ட எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் வெறும் 83 வீடுகள் கட்டத்தான் திட்டமிடப் பட்டிருக்கிறது. முதலாளிகளைக் கேட்டால் நாங்கள் ஏராளமான வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்வார்கள். ஆனால், அவர்கள் வாழ்கிற வீட்டைப் பார்த்தால் அப்பொழுது தெரியும் உண்மை. ஆகவே, உழைப்பாளர் மக்களுக்கு, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகமான வீடுகளைக் கட்ட முதலாளிகளை நிர்பந்தம் செய்து, அதிகமான வீடுகளைக் கட்ட அரசு முயற்சி செய்ய வேண்டும். 3 இலட்சத்துக்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் மொத்தத்தில் இருக்கிறார்கள் என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

அடுத்து, குடிசைமாற்று வாரியம் சம்பந்தமாக சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். குடிசைமாற்று வாரியத்தினுடைய வீடுகள் தமிழ்நாடு பூராவும் ஏராளமாக இருக்கின்றன. மேலும் கட்டப்பட்டு வருகின்றன. கோவை மாநகரைப் பொறுத்தமட்டில் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கோவை கிழக்குப் பகுதியில் சித்தாபுதூர், செல்வபுரம் கல்லறூர் போன்ற புறநகர்ப் பகுதிகளில் 4,000-க்கு மேற்பட்ட வீடுகள் இந்த வாரியத்தின் மூலம் கட்டப்பட்டிருக்கின்றன. அதைப்போன்று, மேற்குப் பகுதியில் சிருக்கேரியில் ஏராளமான வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இப்படிக் கட்டப்பட்ட வீடுகள் ஆரம்பத்தில் யாருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டனவோ அந்த 'பஸ்ட் அலாட்டீஸ்' என்று சொல்லப்படுபவர்களில் கிட்டத்தட்ட ஆயிரம் பேர்கள் அந்த வீடுகளில் இல்லை. அவர்கள் ஏதோ ஒரு வகையில் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். வெளியேற்றியது சர்க்கார் அல்ல. வெளியிலே இருக்கிற சிலரால் வெளியேற்றப் பட்டு அந்த வீடுகளை பினாமியாக வைத்துக்கொண்டு விற்பனை செய்கிறார்கள். விற்பனை எப்படி நடக்கிறது என்றால் அதைப் பற்றிச் சொல்லும்போது ஆச்சிரியமாக இருக்கும். இதே மன்றத்தில் ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். 3 ரூபாய், 5 ரூபாய் மதிப்புள்ள முத்திரைத் தாளில் குடியிருக்கக்கூடிய ஒருவர் தான் இருந்த வீட்டை 3 அல்லது 5 வருஷத்திற்கு இன்னொருவருக்கு குடியிருக்க எழுதி கையெழுத்துப் போட்டுக் கொடுத்ததுபோல் தயார்செய்து கொடுத்து, அவரை அந்த வீட்டைவிட்டு வெளியேற்றி, வேறு ஆட்களைக் கொண்டுவந்து

புகுத்துகிறார்கள். அப்படி புகுத்தும்போது, ஆரம்பத்தில் 2,000 ரூபாய் 3,000 ரூபாய், 5,000 ரூபாய் வாங்கினார்கள். இப்போது 30,000 ரூபாய்க்கு கூட ஒரு வீட்டை ஒருவரிடமிருந்து பிடுங்கி, இன்னொருவருக்குக் கொடுக்கிற பரிதாபமான நிலைமை இருக்கிறது. இதை யார் செய்கிறார் ? ஒரு ரௌடிக் கூட்டம் செய்கிறது ; தரகர்கள் இருக்கிறார்கள். தரகர்கள் ரௌடிக் கூட்டத்தை வைத்துக்கொண்டு, ஏழை எளிய மக்களை மிரட்டி, வெளியேற்றுகிறார்கள். ஹவுசிங் போர்டு நிர்வாகத்தில் இருக்கிற ஒரு சில ஆட்களும் இதற்கு உதவியாக இருக்கிறார்கள் இந்த விஷயம் முழுவதையும் இதற்கு முன்னால் இதே மன்றத்தில் இதற்கு முன்னால் இருந்த அமைச்சரிடம் கூறினேன். முத்திரை தாள்களைக் கொண்டுவந்து காட்டினேன். இங்கே அந்த முத்திரைத் தாள்களைக் காட்டி, விஷயங்களைச் சொன்னேன் என்பதற்காக எனக்கு அனாமத்து டெலிபோன் வந்தது, நான் வீட்டில் இல்லாதபோது. ‘உன்னை அட்ரஸ் இல்லாமல் முடித்துவிடுவேன்’ என்று டெலிபோனில் மிரட்டினார்கள். அதுபற்றி நான் போலீஸ் அதிகாரிகளுக்குச் சொன்னேன். போலீசிலே சொன்னாலும் போலீஸ் நிலையத்தில் இருக்கிற பூராபேரும் இதில் ஈடுபட மாட்டார்கள். காரணம் இந்த ரௌடிக் கூட்டமும், தரகர் கூட்டமும் போலீஸ் நிலையத்தோடு தொடர்பு வைத்திருக்கிறது.

கோவை மாநகரில் டாட்டாபாட்-ல் இருக்கக்கூடிய ஹவுசிங் போர்டு எக்சிகியூட்டிவ் எஞ்சினீயரிடம் விசாரித்தேன். அவர்கள் சரியாகத்தான் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆனால் அந்த காரியாலயத்தில் ஒருசிலர் இதற்கென்று இருக்கிறார்கள். அவர்கள்தான் சட்டப்படி நோட்டீஸ் கொடுக்கிறோம் என்று சொல்லி, காலி பண்ண நோட்டீஸ் விடுகிறார்கள். நீங்கள் வீட்டை காலி செய்ய வேண்டுமென்று நோட்டீஸ் கொடுக்கிறார்கள். அதிலே எக்சிகியூட்டிங் எஞ்சினீயர் பெயர் எழுதப்பட்டிருக்கிறது, ஆனால் அவருடைய கையெழுத்து இல்லை. உள்ளபடியே அந்த அதிகாரிக்கு பயம்தான். அவரை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முன்னால் அழைத்துக்கொண்டுபோய் ‘நீங்கள் ரௌடிகளைக் கண்டு பயப்படக்கூடாது, அரசாங்கம் உங்களுக்கு பாதுகாப்பு அளிக்கும்’ என்று சொன்னேன். இப்படிப்பட்ட ஒரு ரௌடி கும்பல் இதை ஒரு வியாபாரமாக நடத்திக்கொண்டிருக்கிறது. அந்த ரௌடி கும்பல் ஆளும் கட்சியின் பெயரைப் பயன்படுத்திக்கொண்டு இந்த வியாபாரத்தைச் செய்கிறது. அந்த ரௌடி கும்பலை கண்டுபிடித்து வெளியேற்றுவதோடு, கடுமையான தண்டனையும் அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்களையே அந்த ரௌடிகள் மிரட்டுகிறார்கள் என்றால் இதை எங்கே போய் சொல்ல முடியும் என்று இந்த மன்றத்திலே எடுத்துச் சொன்ன பிறகு ஒரு போலீஸ் அதிகாரி விசாரணை நடத்தினார்கள். அது என்னவாயிற்று என்று



தெரியாது. அன்றைக்கு இருந்த ஹவுசிங் போர்டு சேர் மெனிடம் ரிக்கார்டு பூர்வமாக ரிப்போர்ட் செய்தேன். நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கும் அந்த ரௌடி குரூப் அந்த வேலையை செய்துகொண்டுதான் இருக்கிறது. நூற்றுக்கணக்கான குடும்பங்கள், ஏழை எளிய மக்கள் நலன் கருதிக் கட்டப்பட்ட வீடுகள், பஸ்ட் அலாட்டிக்கு ஒதுக்கப்பட்ட வீடுகள் எல்லாம் பினாமி முறையிலே வியாபாரம் செய்யப்படுகிறது. அந்த பஸ்ட் அலாட்டீஸ் அந்த வீட்டை விட்டு துரத்தப்பட்டிருக்கிறார்கள். இப்படி சர்க்கார் சொத்தையே விற்கக்கூடிய அக்கிரமம் வேறு எங்கே நடக்கும்? இங்கே நடக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடங்களைப் பார்வையிட்டு, பரிசீலனை செய்ய வேண்டிய ஒன்று இது. அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கு முன்னாலே இந்த மன்றத்தில் கேட்டிருக்கிறேன், ஒன்றும் நடக்கவில்லை. இந்தத் துறையிலே ஒரு நல்ல நிர்வாகம் ஏற்படவேண்டும். இவ்வளவு இலட்சக்கணக்கான ரூபாய்க்கான சொத்துகளை நிர்வகிக்கின்ற ஒரு வாரியத்தில் இப்படிப்பட்ட தவறுகள் நடக்கக்கூடாது. அந்த நிர்வாக அதிகாரியின் காரியாலயத்தில் இருக்கக்கூடியவர்களே இந்தத் தவறுகளுக்கு சௌகரியம் செய்து கொடுக்கிறார்கள். இப்படி ஒரு குரூப் அங்கே இருக்கிறது. அதைக் கண்டுபிடித்து வெளியேற்ற வேண்டும்.

[பிற்பகல் 12-20]

யார், யாருக்கு வீடுகள் இல்லையோ அவர்களுக்கு வீடுகள் கிடைக்கின்ற வகையிலும், யார் அங்கெல்லாம் குடியிருக்காமல் இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் கண்டுபிடித்து ரெகுலரைஸ் பண்ணுகின்ற வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். ஏழை எளியவர்களாக இருப்பவர்கக்கு மட்டும் அவற்றை நிரந்தரப்படுத்த வேண்டும். சிலர் வேறு எங்கோ இருந்துகொண்டு அவற்றை வாடகைளுக்கு விட்டுவிடுகிறார்கள் என்று கூட சொல்லப்படுகின்றது. கேரளாவில் இருந்துகொண்டு இங்கே வாடகைக்கு விட்டுக்கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கின்றது. இந்த நிலைமைகளை எல்லாம் தவிர்க்கின்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு ஏழை எளியவர்களுக்கு வீடுகள் கிடைக்கின்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு அரசு தகுந்த நடவடிக்கை எடுத்தால் நாங்களும் அதற்குத் தகுந்த ஒத்துழைப்புத் தர தயாராக இருக்கிறோம்

அதேபாதிரி அறிஞர் அண்ணா ஹட்கோ காலனியில் 400க்கு மேற்பட்ட வீடுகள் இருக்கின்றன. அதிலே அரசாங்க ஊழியர்கள் இருக்கிறார்கள். அவை அந்த ஊழியர்கக்குச் சொந்தமாக்கப்

பட்டன. அந்த காலத்தில் 14,000, 15,000 ரூபாய் என்ற வகையில் விலை நிர்ணயம் செய்து கொடுக்கப்பட்டுளளது. அந்த இடத்தைப் பொறுத்தவரையில் இன்றைய வரையில் மாநகராட் சிக்குக் கொடுக்கப்படவில்லை. அதற்குக் காரணம் பக்கத்திலே சங்கனூர் தோட்டத்தின் அருகிலே இருக்கின்ற ரோடு அந்த இடம் ஹட்கோவிற்குக் கிடைத்தால்தான் எடுத்துக்கொள்ள முடியும் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். இதன் காரணத்தால் அங்கெல்லாம் சுகாதாரப் பணி மாநகராட்சி யால் மேற்கொள்ளப்படவில்லை. பல்வேறு பகுதிகளில் இப் படிப்பட்ட நிலைமை இருக்கின்றது. அங்கே சுகாதார ஊழியர் களை வைத்துச் சுத்தப்படுத்த முடியவில்லை. எனவே ஹட்கோ காலதாமதமில்லாமல் அந்த இடத்தை மாநகராட் சிக்கு ஒப்படைக்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விசேஷ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் செல்வபுரம், சித்தாபுதூர் போன்ற இடங்களில் உள்ள ஹவுஸிங் போர்ட் குடியிருப்புக்களில் துப்புரவுப் பணி செய்வதற்கான ஏற்பாடுகள் இல்லை. அவை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படாத காரணத்தால் சுகாதார நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றை விரைவில் மாநக ராட்சியிடம் ஒப்படைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரே ஒரு விஷயம். அதாவது நகர்ப்புற வளர்ச்சி. இது சம்பந்தமாக ஒரு சிறிய அளவு பிக்சர் என்ற வகையில் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய 4 கோடியே 83 இலட்சம் ஜனத்தொகையில் 33 சதவீதம் அதாவது ஒரு கோடியே 61 இலட்சம் பேர்கள் 434 நகர்ப்புறங் களில் அதாவது மாநகராட்சி உட்பட இருக்கிறார்கள். சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய நான்கு மாநக ராட்சிகளில் மட்டும் கிட்டத்தட்ட 3/4 கோடி ஜனங்கள் இருக்கிறார்கள். இப்படி மக்கள் இருக்கின்ற பிரச்சினை காரணத்தால்தான் மாநகரங்களில் புறநகர்ப் பகுதிகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவ்வாறு அந்தப் பகுதிகளில் வசதிகளைச் செய்து கொடுத்தால் மாநகரங்களில் குடியேற் றம் குறையும் என்றும் கொள்கைக் குறிப்பிலே கொடுத்திருக் கிறார்கள். இது நல்ல யோசனைதான். ஆனால் நடைமுறை யில் அப்படி இல்லை. தொழிலும், வர்த்தகமும் குவிந்துகிடக் கின்ற மாநகரங்களில்தான் மக்கள் குவிந்து விடுகின்ற நிலைமை இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு வேண்டிய வசதிகள் கிடைக்கவில்லை. எனவே அந்த வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது மிக முக்கியமான காரியமாகும். எனவே அதற்கு அரசாங்கம் தகுந்த முன் முயற்சி எடுத்து நடவடிக்கை



எடுக்கவில்லை என்று சொன்னால் அவர்களுடைய பிரச்சினை யைத் தீர்க்க முடியாத இடர்பாடுதான் வந்து சேரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அரசாங்க ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்குரிய கடன் கொடுக்கிறார்கள். மனைகளை வாங்கிக்கொடுத்து, வீடு கட்டக் கடன் கொடுக்கிறார்கள். இப்படி வீட்டு வசதியினை விரிவாக்கிக் கொடுத்தாலும் இதெல்லாம் போதாது. எல்லா ஊழியர்களாலும் அரை இலட்சம், முக்கால் இலட்சம் செலவு செய்து வீடுகளைக் கட்டுவது என்பது முடியாத காரியம். எனவே அவர்களுக்குக் குறைந்த வாடகைக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற வகையில் தாலுக்கா தலைநகரங்களிலும் மாவட்டத் தலைநகரங்களிலும் மற்றும் பஞ்சாயத்துப் பகுதிகளிலும் இடங்களைத் தேர்ந்தெடுத்து அரசாங்க ஊழியர்களுக்கு குறைந்த வாடகைக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எல்லோரும் சொந்த வீட்டுக்காரர்களாகிவிட்டால் பரவாயில்லை. ஆனால் எல்லோ ராலும் அப்படிச் செய்ய முடியாது. எனவே அரசே வாடகை வீடுகளை அதிகப்படியாகக் கட்டிக் கொடுக்கின்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாநகரத்தில் குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகளைச் சொல்லவேண்டியிருக் கின்றது. குடிசை வாசிகள் நிறைந்திருக்கக்கூடிய கோவை கிழக்கு பகுதியில் எல்.ஜி.பி. காலனி, வாலாங்குளத்தில், வடக்கு கரை, இராமநாதபுரத்தில் பழைய ஊர், நஞ்சுண்டாபுரம் ரோட்டுப் பகுதிகள், புலியகுளத்தில் கல்லுக்குழி போன்ற பகுதிகள் எல்லாம் 200 அடி ஆழத்தில் இருக்கின்றன. இங்கெல்லாம் கிட்டத்தட்ட 500-க்கு மேற்பட்ட குடிசை வாசிகள் குடி இருக் கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கூட்டிக் கொண்டுபோய் அந்த இடத்தைக் காட்டியிருக்கிறார்கள்.

ஆனால் இன்றைக்கும் அவர்கள் அங்கேதான் இருக்கிறார்கள் அவர்களுக்கு வேறு இடம் கொடுக்கப்படவில்லை. அதேபோல அம்மன்குளம் என்ற இடம். அது அரசாங்கத்திற்குச் சொந்த மான இடம். அதிலே ஆயிரம் வீடுகள். அது ஏரிதான். ஆனால் மேடிட்டுப் போய்விட்டக் காரணத்தால் வீடுகள் எழும்பியிருக் கின்றன.

அதேபோல பி. என். பாளையம்-பழைய ஊர் சிற்றம்பலம் லே வுட் என்று சொல்லும்படியான இடம் கந்தசாமி லே- அவுட் என்று சொல்லும்படியான இடம்; பாலாஜி நகர் தனலட்சுமி நகர் பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் ராம கிருஷ்ணா ஆஸ்பத்திரிக்கு பக்கத்திலே இருக்கும்படியனா இடம். காந்திபுரம் சரஸ்வதி நகர்; இச்சிப்பட்டிக் காலனி

என்ற இடத்திலே உள்ள சாலைகள், டாக்டர் சுப்பராயன் ரோடு சாலைகளில் உள்ள இடங்கள்; சிவானந்தா காலனி ஹோச்சிமின் நகரிலிருந்து ரெயில்வே வரை இருக்கும்படியான சாலைகள் எல்லாம்— இப்படி சாலை ஓரங்களில் வாழும் அவர்கள் உடனடியாக நீங்கள் போய் ஸ்லம் கிளியரன்ஸ் மூலமாக வீடு கட்டிக் கொடுப்பீர்கள் என்று எதிர் பார்க்கவில்லை. குறைந்த பட்சம் அடிப்படைத் தேவையான வசதிகளை, சாக்கடை வசதி, நடைபாதை வசதி, கழிப்பிட வசதி, குடிநீர் வசதி போன்ற குறைந்த பட்சத் தேவையையாவது அவர்களுக்குச் செய்துதர வேண்டும் என்றுதான் அவர்கள் எதிர் பார்க்கிறார்கள். நகர்ப்புற மேம்பாடு என்று சொல்லும்போது இவைகள் எல்லாம் முக்கியமானவை.

அதேபோல 15 வது வார்டு, ரெயில்வே நகர் பகுதியிலே ரெயில்வே லைனுக்கு 2 புறத்திலேயும் ஓடிக்கொண்டிருக்கிற சாலைகளில் சுமார் 1,500 வீடுகள் இருக்கின்றன. அவர்களை என்ன செய்வது என்பது அல்ல பிரச்னை. ஜனங்கள் அங்கே குடியேறியதற்குப் பிறகு அவர்களை அங்கேயிருந்து நீங்கள் வெளியேறுங்கள் என்று சொன்னால் அவர்களுக்கு போவதற்கு வேறு வழியில்லை. எனவே நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தப் பகுதி மக்களை எல்லாம் எடுத்துக்கொண்டு அவர்களுக்கு மாற்று இடங்களை ஏற்பாடு செய்வதற்கு அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அழகான அந்த கோவை மாநகரத்தினுடைய சாலைகளைப் பார்த்தால் அந்த நிலைமை இருக்கிறதே, பயங்கரமான நிலைமை. அவர்களுக்கு அங்கே எந்தவிதமான வசதிகளும் கிடையாது. குடிநீர் கிடையாது, கழிப்பிடங்களும் கிடையாது. சாக்கடைகளும் இல்லை, நடைபாதைகளும் இல்லை. அந்த மக்களின் நிலைமை மிகப் பயங்கரமானது; அவர்களுக்கு கண்டிப்பாக இந்த அரசு ஏதாவது செய்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சங்கனூர் பள்ளக் கரையோரங்கள். அந்தப் பள்ளத்தை திசை திருப்பியாக வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பி, அதைச் செயல்படுத்த முடியாத நிலை. ஆனாலும் அந்தப் பள்ளத்தினுடைய இரண்டு பக்கங்களிலே தடுப்புச் சுவர்கள் கட்டி, மழைத்தண்ணீர் தேங்கி வழிந்து வராத நிலையில் செய்தால், அங்கே இருக்கும்படியான லட்சக் கணக்கான மக்களுக்கு அது பாதுகாப்பாக அமையும். சென்ற தடவை அப்படி வெள்ளம் வந்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த இடத்தைச் சுற்றிப் பார்த்தார்கள். தண்ணீர் ரோடிலே வழிந்தோடி, அங்கே கட்டப்பட்டிருந்த வீடுகளைக் கூட மூழ்கடித்துக்கொண்டு ஓடியது. ஆகவே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரத்தியேகமாக அதற்காகவென்றே





2 லட்சம் ரூபாயைக் கொடுத்து, அந்த இடத்திலே உடைப்பு ஏற்பட்டிருந்ததை சரி செய்தார்கள். அந்தமாதிரி நிலைமை இருக்கிறது. ஆகவே அந்த சங்கனூர் பள்ளத்தில் உள்ள வீடுகளை பாதுகாக்க முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான ஒரு திட்டம் இருப்பதாக நமது உள்ளாட்சி அமைச்சர் அவர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள். அதை அவசியம் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது அமைச்சர் அவர்கள் ஒரே ஒரு விஷயத்தை மட்டும்—நான் சொல்லப்போவதை—கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கோவை மாநகரத்திலே கே. கே. நகர் பகுதியிலே ஹவுசிங் போர்டு ஸ்கீமிலே ஒருவருக்கு ஒரு வீடு ஒதுக்கப்பட்டு, அதற்கு கட்ட வேண்டிய பணம் முழுவதும் கட்டப்பட்டாகிவிட்டது. ஆனால் அந்த வீட்டிற்கான பத்திரங்களை பதிவு செய்துக் கொடுப்பதற்கு எவ்வளவு முறை அந்த வீட்டு வசதி அலுவலகத்தில் போய் கேட்டாலும், பதிவு செய்துக் கொடுக்க மறுக்கிறார்கள். இதுபோன்று பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. பணம் முழுவதும் கட்டியாகிவிட்டபிறகு ஏன் இந்த நிலை? இது நிர்வாகத்திற்கு உள்ளே இருக்கும்படியான சூழ்நிலை. இதுகுறித்து அமைச்சர் அவர்கள் மட்டத்திலோ அதிகாரிகள் மட்டத்திலோ வரும் என்று சொல்ல முடியாது. அதற்கு என்ன அர்த்தம்? வீட்டுக்கு பணம் முழுக்க கட்டியபிறகும் பத்திரங்களை பதிவு செய்ய மறுப்பதால், கீழ் மட்ட அளவிலே அவர்கள் ஏதோ எதிர் பார்க்கிறார்கள் அதற்கு என்றல்லவா அர்த்தம்? இப்படிப்பட்ட சிரமங்கள் இருக்கின்றன. அந்த நிர்வாகத்தை சீர்திருத்த வேண்டும். ஸ்டீரீம் லைனிங் ஆப் தி அட்மினிஸ்ட்ரேஷன் என்று நீங்கள் அடிக்கடி சொல்வீர்களே—அந்த அளவிற்கு நான் கேட்கவில்லை. குறைந்தபட்சம் இது போன்ற தவறுகளை திருத்தி சரியான நடவடிக்கைகளை எடுக்க, அவர்கள் யாராக இருந்தாலும் சரி— அவர்களுக்கு யாருடைய தொடர்பு இருந்தாலும் சரி, அதைப்பற்றி கவலைப்படாமல், அவைகள் சரி செய்யப்பட்டாக வேண்டும். இதுபோன்ற நடவடிக்கைகளை எடுத்தாலே உங்களுக்கு பொதுமக்களின் ஆதரவு நிச்சயமாக கிடைக்கும். அந்த முறையில் நடவடிக்கை எடுத்து இதுபோன்ற பிரச்னைகளை தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்து நான் சொல்லிய இடங்களையெல்லாம் பார்க்க வேண்டும். ஆளும் கட்சி நண்பர்களுடைய ஒவ்வொரு தொகுதிக்கும் அவர்கள் போகிறார்கள். ஆனால் என்னைப் போன்றவர்கள் அமைச்சரை, எங்கள் தொகுதிக்கு அழைத்திட என்ன செய்வது என்று தெரியவில்லை. (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு திரு என். நல்லுசாமி : கோவை மாநகரத்திற்கு வருகை தருகிறபோது, உறுப்பினர் அவர்கள் சொன்ன இடங்களுக்கு நான் கட்டாயம் வருகிறேன்.

(பிற்பகல் 12–30)

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கைக்காக சற்றொப்ப 43 கோடி ரூபாய் கோரிக்கை வைத்திருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

மனித வாழ்க்கையில் மிகவும் தேவைப்பட்ட பகுதியில் இப்போது நாம் ஒதுக்கியிருக்கிற தொகை பயன்படுகிறது என்ற காரணத்தால், இதற்கு என்னுடைய ஆதரவை நான் தெரிவிப்பதோடு, கொடுத்திருக்கிற மானியம் குறைவானது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஏறத்தாழ 2,300 கோடி ரூபாய் அளவில் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கக்கூடிய நம்முடைய தமிழக அரசு, மக்களுடைய அடிப்படைத் தேவைகளை, இன்றியமையாத ஒரு பகுதியான வீட்டு வசதிக்காக,, நகர்ப்புற வளர்ச்சிக்காக இரண்டிற்கும் சேர்ந்து 43 கோடி ரூபாய் தான் ஒதுக்குகிறது என்பது குறைவான தொகையாகவே எனக்குப் படுகிறது. ஏசுநாதர் அவர்கள் சொன்னதாக ஒரு வசனம் உண்டு. '' நண்டுக்கு வளை உண்டு, நரிக்கு பொந்துண்டு, குருவிக்கு கூடு உண்டு, ஆனால் இந்த மனிதர்களுக்குத்தான் ஒரு வீடில்லை '' என்று அவர்கள் குறிப்பட்டார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் பட்ட குறை இன்று கூட தீர்க்கப்படாத நிலையில்தான் நம்முடைய வாழ்க்கை நடந்து கொண்டிருக்கிறது. எவ்வளவு பேர்களுக்கு நாம் வீட்டு வசதி உருவாக்கித் தருகிறோமோ, அதை விட அதிகமாக குடும்பங்கள் இந்த நாட்டிலே பெருகி வருகின்றன. இந்தத் துறையில் மாத்திரம் அல்ல. பள்ளிக்கூடங்கள் அதிகமாக கட்ட வேண்டுமென்று, அதற்காக கூடங்களை நாம் அமைக்கிறோம். ஆனால், மாணவர்கள் அதைவிட அதிகமாக வருகிறார்கள்.

அதே போல தான் கட்டப்படுகிற வீடுகளுடைய எண்ணிக்கை, வீடுகள் , தேவைப்படுகிற மக்களுடைய எண்ணிக்கையை கணக்கிட்டுப் பார்க்கிறபோது மிகமிகக் குறைவான அளவில் தான் இருக்கிறது. ஆகவே, இந்த அளவில் போய்க் கொண்டிருந்தால் எல்லாமே பற்றாக்குறை தான். பற்றாக்குறை அதிகரித்துக் கொண்டே போகிறது. நேற்றைய தினம் நீதித் துறைப் பற்றி பேசினோம். குவிந்திருக்கிற வழக்குகள், வழக்குகளை கவனிக்கக் கூடிய நீதிபதிகள் எண்ணிக்கையை பார்க்கிறபோது, மேலும் வழக்குகள் குவிவதற்கு உரிய நிலையில் தான் காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையைப் போக்க வேண்டுமென்



றால், '' கிராஷ் புரொகிராம் '' என்று சொல்கிறார்களே, அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அமல் நடத்தியாக வேண்டும். இதற்கு ஒரு முன்னுதாரணம் வேண்டுமென்றால், நம்முடைய அண்டை நாடுகளில் நேச நாடுகளில் ஒன்றான சிங்கப்பூர் முக்கியமான உதாரணமாக இருக்கிறது. அந்த நாட்டிலே வீட்டுவசதியில் மக்களின் தேவைகளை மிகச் சிறப்பாக போக்கி இருக்கிறார்கள். 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால், நம்முடைய நகரை விட மிகக் கேவலமாக இருந்த, சேறும் சகதியுமாக இருந்த இடத்தில் வீடுகளை திட்டம்போட்டு அழகான கட்டிடங்களை அடுக்கடுக்காக கட்டி அங்கே வாழக்கூடிய அந்த நாட்டு பிரஜைகளுக்கு கொடுத்து, அவர்களின் தேவையை மிகச் சிறப்பாக நிறைவேற்றி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை வகுத்தாலொழிய இதில் தீர்வு காண முடியாது. இங்கொன்றும் அங்கொன்றும் பரந்து விரிந்திருக்கிற தமிழகத்திலே இப்போது நகரத்திலே வீடுகள் கட்டி முடிக்காமல், அடுத்திருக்கிற முனிசிபாலிட்டி பகுதிகளில் கட்ட ஆரம்பிப்பது என்ற முறையில் நடந்து கொண்டிருக்கிற தன்மையை போக்க வேண்டுமென்றால், இப்படிப்பட்ட ஒரு தீவிரத் திட்டத்தை அரசு வகுப்பது பற்றி யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி சொல்லும்போது, நிதியைப் பற்றிய பிரச்னை நிச்சயமாக எழத்தான் செய்யும். இப்போது கூட நம்முடைய அரசிலே ஒதுக்கக்கூடிய தொகை போக, ஹட்கோவில் கடன் வாங்கி, அந்தத் தொகையைக் கொண்டுதான் ஓரளவிற்கு வீடுகள் கட்டப்படுகிற நிலைமை இருந்து வருகிறது.

எனக்கு ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. சென்ற 2-வது உலக மகா யுத்தத்தின்போது யூகோஸ்லோவாகியா நாட்டிலே, அங்கே வீட்டுக்காக மிகப் பெரிய தேவை ஏற்பட்டது. அப்போது நடந்த உலகப் போரிலே இருந்த வீடுகள் எல்லாம் தரை மட்டமாகி, மக்கள் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிற நேரத்தில் அந்த நாட்டினுடைய ஆட்சிப் பொறுப்புக்கு வந்த டிட்டோ அவர்கள், யோசித்து ஒரு அறிக்கையை விட்டார்கள். யூகோஸ்லோவாகியா நாட்டில் கருப்புப் பணம் வைத்திருப்பவர்கள், தங்களுடைய கருப்புப் பணத்தை எல்லாம் வீடுகள் கட்டுவதிலே செலவழிப்பார்களானால், அதற்காக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல், இந்த அரசு உதவி செய்யும் என்று ஒரு அறிக்கையை விட்டார்கள். ஒரு ஆண்டுக் காலத்தில் யூகோஸ்லெவாகியா நாட்டிலே வீட்டு வசதி மிகப் பூரணமாக நிறைவேற்றப்பட்டது என்ற வரலாற்றை அந்த நாட்டினுடைய சரித்திரத்திலே நாம் பார்க்கிறோம். அப்படிப்பட்ட ஒரு அறிக்கையை விடுவதற்கு தமிழக அரசுக்கு முற்றாக அதிகாரம் இல்லை என்பதை நான் நன்றாக அறிவேன். ஆனாலும் கூட ஒரு ஊரில், சென்னை நகரத்திலேயாவது அல்லது குறிப்பிட்ட மாவட்டத்திலேயாவது கருப்புப் பணத்தை வைத்து இருப்பவர்கள் முதலீடு செய்து ஒரு நகரை உண்டாக்கக்கூடிய அளவிற்கு, செய்வதற்கான விதிவிலக்கை

மத்திய அரசு தரவேண்டும் என்று தமிழக அரசு ஒரு கோரிக்கையாக அதை வைப்பார்களானால், இந்தத் துறையிலே எவ்வளவோ செய்வதற்கு இடமிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, வீட்டு வசதித் துறையில் குடிசை மாற்று வாரியம் செய்து வரக்கூடிய பணிகள் மிகவும் பாராட்டத்தக்க ஒன்று என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த குடிசை மாற்று வாரியம் தோன்றியதே, நினைத்துப் பார்க்க வேண்டிய ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், அவர்கள் எதிர்நோக்கிய இரண்டு மாபெரும் பிரச்சனைகள், ஒன்று, கள்ளச்சாராயத்தைக் குடித்து விட்டு நூற்றுக்கணக்கான பேர்கள் பிணமாக அடுக்கி வைக்கப்பட்டு இருந்த காட்சியை அவர்கள் காண நேரிட்டது. இரண்டாவது, அவர் அரசு அமைப்பதற்கு உறுதுணையாக இருந்த வாக்காளர்கள் நிரம்ப வாழ்கின்ற அந்த குடிசைப் பகுதிகளில் தீ வைக்கப்பட்டவுடன் தான், அவர்கள் அழுது அழுது, அதைப் பற்றி நினைத்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். எரியக் கூடிய வீடுகளில் அவர்கள் குடியிருந்தால்தானே இப்படி தீங்கைச் செய்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு எரியாத வீடுகளைக் கட்டிக் கொடுத்துவிட்டால், இப்படி துன்பத்திற்கு ஆளாக மாட்டார்கள் என்று நினைத்துத்தான் இந்த குடிசை மாற்று வாரியம் தோற்றுவிக்கப்படக்கூடிய அந்தக் காரியத்தைச் செய்தார்கள். இது எல்லாக் காலத்திலேயும் மிகச் சிறப்பான முறையில் நடந்து வருகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆனால், குடிசை மாற்று வாரியம் கட்டிக் கொடுத்த அந்த வீடுகள் இன்று எந்த நிலையில் இருக்கின்றன என்பதைப் பற்றி தனியாக ஒரு ஆய்வை நடத்துவது மிகத் தேவைப்பட்ட ஒரு பணி என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது அவர்கள் ஏற்கெனவே வாழ்ந்து வந்த குடிசைகளைவிட மிக மோசமான நிலையில், அவர்களுக்குக் கட்டித் தரப்பட்டு இருக்கிற அந்த பல அடுக்கு மாடிகள் சுகாதார மற்ற முறையிலே, விளக்கு வசதிகள், தண்ணீர் வசதிகள் இல்லாத முறையிலே இருந்து கொண்டு இருக்கின்றன. மேலும், அவர்களாகவே, சுற்றுப்புறத்திலே கொட்டி வைத்து இருக்கிற குப்பைகள் மலைபோல் எழுந்து இருக்கிறபோது, முழுக்க முழுக்க சுகாதாரத்திற்கு எதிர்ப்பான நிலையில் அவர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, மேற்கொண்டு இந்தக் குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக வீடுகள் கட்டக் கூடிய அதே நேரத்திலே ஏற்கெனவே இருக்கக்கூடிய அந்தப் பகுதிகளை எவ்வாறு சீர்திருத்தலாம், அங்கேயுள்ள குறைபாடுகளை எப்படி நீக்கலாம் என்பதைப் பற்றியும் அரசு தீவிரமாக யோசித்துப் பணியாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



இன்னொன்று. நகர்ப்புற வளர்ச்சியைப் பற்றி பல நட-
வடிக்கைகள் எடுக்கும்போது, இன்றைய தினம் அதற்கு மேல்
மட்டக் குழு நியமிக்கப்பட்டு, தீவிரமான பணிகள் இன்று மேற்
கொள்ளப்பட்டு இருப்பது மகிழ்ச்சிகரமாக நாம் வரவேற்கத்
தக்க செய்தியாகும். ஆனால், அதிலேஒன்று அடிக்கடி சுட்டிக்
காட்டப்படுகிறது. குடிசை மாற்று வாரியம் அமைத்திருக்கக்
கூடிய இடங்களில் இருக்கக்கூடிய குப்பைகளை யார் அகற்று
வது, மாநகராட்சி மன்றம் அகற்றுவதா அல்லது குடிசை
மாற்று வாரியமே அகற்றுவதா என்ற ஒரு போராட்டம் இப்
போது குப்பையை அகற்றுவதிலே நடந்து கொண்டிருக்கிறது.
இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் மாற்றி, ஒரு சேர குப்பை
களை அகற்றுவதற்கு, வேண்டிய வழிகளை குடிசை மாற்று
வாரியத்தைச் சேர்ந்த பொறுப்பாளர்களும், மாநகராட்சி மன்
றத்தைச் சேர்ந்த பொறுப்பாளர்களும் கூடி, தங்களுக்குள் பிரச்
சனையை உடனடியாகத்தீர்த்து குப்பைகளை அகற்ற நடவடிக்கை
மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. பல பெரிய தொழிற்சாலைகள் இன்று பல்வேறு
மாவட்டங்களில் அமைக்கப்படுகின்றன. அப்படி அமைக்கப்
படக்கூடிய நேரத்திலே பெரிய தொழிற்சாலைகளில் வேலை
செய்யக் கூடிய எல்லாத்தொழிலாளர்களுக்கும் கட்டாயமாக ஒரு
ஆண்டுக் காலத்தில் அல்லது இரண்டு ஆண்டுக்காலத்திற்குள்
வீட்டு வசதியைச் செய்து தரவேண்டும் என்ற நிபந்தனையை
அவர்களுக்கு கட்டாயமாக விதித்து இப்படி பட்ட ஒருஏற்பாட்டி
னைச் செய்வார்களேயானால் தொழிற்சாலைகள் வளரக்கூடிய
அதே நேரத்தில் சேரிப் பகுதி மக்களின் சுகாதாரம் அற்ற நிலை
மாறி ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படும்.

(பிற்பகல் 12–40)

இன்று சென்னையைப் பொறுத்து இந்த மாநகராட்சியின்
வளர்ச்சிக்காக ஏற்பட்டு இருக்கக்கூடிய முனைப்பான நடவடிக்கை
கள் பொது மக்களினால் பெரிதும் வரவேற்கப்படுகின்றன. கிட்
டத்தட்ட 35 ஆண்டுகளுக்கு முன்னர் நாம் எல்லாம் கல்லூரியில்
படித்துக் கொண்டு இருக்கும்போது சென்னை நகரத்தில் 300
சேரிப் பகுதிகள் இருப்பதாகக் கணக்கெடுத்தார்கள். ஆனால், 35
ஆண்டுகளுக்குப் பிறகு அந்தச் சேரியை அப்புறப்படுத்தவேண்டும்
அந்த குடிசைப் பகுதிகளை சீர் செய்ய வேண்டும் என்று இவ்
வளவு திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றிய பிறகு இப்போது
1,300 குடிசைப்பகுதிகள் இந்த சென்னையில் இருக்கின்றன என்று
சொன்னால் இதற்கு விடிவு என்ன என்பதைப் பற்றி அரசு
தீவிரமாக ஆராயவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1985 ஜூன் 26

இந்த குடிசைப் பகுதிகளை சேரி என்று குறிப்பிடும்போது ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர் எல்லாம் வாழக்கூடிய பகுதி என்று சில பகுதிகளில் ஆராயப்பட்டாலும் கூட மக்கள் எல்லாம் சேர்ந்து வாழக் கூடிய பகுதி தான் ஒரு காலத்தில் சேரி என்று கூறப்பட்டது ஆனால், இன்று வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை யில் இப்படி ஒரு சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் நலிந்த பிரி வினர், பாடுபடக்கூடிய பிரிவினர் வாழக் கூடிய பகுதி காலனி என்று சொல்லப்பட்டு ஆயிரக்கணக்கான ஊர்கள் இப்போது அமைக்கப்பட்டு இருக்கின்றன.

அந்தச் சமுதாய மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு ஒரு திட்டம் ஏற்கெனவே அமைக்கப்பட்டு இருந்தாலும் அது எவ் வளவு முனைப்பாக செயல்பட வேண்டுமோ அவ்வளவு முனைப் பாகச் செயல்படவில்லை என்று குறிப்பிட விரும்புகிறேன்.

சென்னை நகரைப் பொறுத்த வரையில் என்னுடைய தொகு தியிலும் இப்படிப்பட்ட குடிசைப் பகுதிகள் நிறைய இருக்கின்றன. இன்னும் ஒன்று, குடிசை பகுதிகளை சீர்திருத்த வேண்டும் என்று அந்த நிலங்களை மற்ற தனியாருக்கோ அல்லது அறநிலையங் களுக்கோ சொந்தமாக இருக்கக்கூடிய நிலங்களை வாரியத்தின் சார்பாக, அரசின் சார்பாக பெரிய முயற்சி எடுத்து அந்த நிலங் கள் விடுவிக்கப்பட்டதற்கு பின்னாலே பலயிடங்களில் சேரி பகுதியினர், குடிசைப்பகுதியினரை அப்புறப் படுத்தி பெறப் பட்ட நிலங்களில் விட்டு வசதித் துறை தலையிட்டு அங்கே வேறு விதமான திட்டங்கள் தயாரிக்கிறார்கள் என்ற குறிப்பு என் னுடைய தொகுதியில் பல பகுதிகளிலிருந்து வந்து இருக்கிறது. அது பற்றிய விவரங்களை வேண்டுமானால் அமைச்சர் அவர் களுக்கு தனியாக நான் தர சித்தமாக இருக்கிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதியில் டாக்டர் இராதா கிருஷ்ணன் சாலையும் டாக்டர் நடேசன் சாலையும் சேரக்கூடிய அந்த பகுதியில் இருக்கக்கூடிய குடிசைப்பகுதியில் இப்படிப் பட்ட ஒரு நிலையிருக்கிறது. இன்னும் என்னுடைய தொகுதியில் உள்ள மீனாம்பா தர்க்கா, ராம் நகர், ஜானி ஜான் கான் ரோடு, அம்பேத்கார் நகர், யானை குளம் போன்ற பகுதி களில் இருக்கக்கூடிய இந்த குடிசைகளை எல்லாம் மாற்றி அங்கு எல்லாம் கட்டிடம் கட்டி தருவதற்கு ஒரு நல்ல திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த சில ஆண்டுகளில் அதா வது நான் அங்கே இந்த மன்றத்தில் உறுப்பினராக இருக்கக் கூடிய காலத்திலேயே கட்டி அவர்களே வந்து திறக்கக்கூடிய அள வுக்கு அவர்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு எஸ். வேணுகோபல்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்களே, இன்றைய தினம் வீட்டு வசதி



1985 ஜூன் 26]

மானியத்தைப் பற்றி இங்கே எனக்கு முன்னால் பல உறுப்பினர் கள் சிறப்பாக உரை ஆற்றியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் சென்னை நகரில் இருக்கின்ற காரணத்தால் நான் குறிப்பாக வட சென்னையில் இருக்கின்ற காரணத்தால் வட சென்னையில் இருக்கின்ற குடிசைப் பகுதிகளை எண்ணிப் பார்க்கின்ற போது அந்த குடிசைப் பகுதிகள் சரியாக இயங்கு கிறதா ? முறையாக இயங்குகிறதா என்பதை எண்ணிப் பார்த்து ஆக வேண்டும்.

எவ்வளவு குடிசைகள் இங்கே மாற்றப்பட்டு இருக்கின்றன? குடிசை மாற்று வாரியத்திலிருந்து எவ்வளவு குடிசை மாற்று வாரியக் கட்டிடங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன என்று எண் ணிப் பார்த்தால், குடிசைகளிலிருந்து குடிசை மாற்று வாரியக் கட்டிடங்களுக்குள் மாற்றப்பட்ட பிறகு, அவை சரியாகப் பராமரிக்கப்படுகிறதா ? முறையாக இருக்கிறதா என்று பார்த் தால் இல்லை என்று தான் என்னால் சொல்ல முடியும்.

இன்றைக்கு சென்னை நகரிலே வட சென்னையிலே அதிகமான குடிசைகள்இருக்கின்ற பகுதி ஆகும். குடிசைகளைப் பார்க்கும் போது, அவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறதே தவிர குறையவில்லை.

எனக்கு முன்னாலே பேசிய மரியாதைக்குரிய அப்துல் சமது பேசும்போது ஒரு கணக்கைச் சொன்னார். எத்தனை ஆண்டு களுக்கு முன்னால் எவ்வளவு குடிசைகள் இருந்தது ? இப்போது எத்தனை குடிசைகள் இருக்கின்றன என்று கேட்டால் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகிறதே தவிர, குறைந்த பாடில்லை.

என்னுடைய தொகுதியில் இருக்கின்ற குடிசைப் பகுதி களில், போஜராஜ நகர் இருக்கிறது. அங்கே என்ன நிலைமை என்று கேட்டால், தண்ணீர் மட்டத்திலே மக்கள் நடந்து போகவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அங்கே மனிதன் வாழ்வானா, வாழமாட்டானா என்ற சூழ்நிலை இருக்கிறது. அங்கே இருக்கின்ற மக்கள், அந்தப் பகுதிக்கு வந்து அதிகாரிகள் காரியங்கள் செய்ய மறுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நானும் அதைப் பற்றி பல முறை சொல்லியும், நிர்வாக ரீதியாகச் சொல்லியும் செய்தபாடில்லை.

அடுத்தாற்போல், இந்த ஆண்டு காங்கிரஸ் கட்சியின் நூற் றாண்டு விழா தமிழகத்திலே சிறப்பாக கொண்டாடப்படுகிறது. வ.உ.சி. அவர்கள் மிகச் சிறப்பாகப் பணியாற்றி இருக்கிறார். அவரது பெயராலே அமைந்து இருக்கக்கூடிய வ.உ.சி. நகர் என் தொகுதியில் இருக்கிறது. அந்தப் பகுதியில் போன

[திரு. எஸ். வேணுகோபால்] [1985 ஜூன் 26

வாரம் சுற்றிப் பார்க்கும்போது மனிதர்கள் வாழுகின்ற இடமா பன்றிகள் வாழுகின்ற இடமா என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது.

ஏனென்றால், அங்கே கழிவு நீர் வெளியே போகமுடியவில்லை, மனிதன் கழிவு வெளியே போகாத சூழ்நிலை இருக்கிறது. சாலைகள் சரியாக இல்லை. அங்கே உள்ளவர்கள் அந்த இடத்தைக் கொண்டு போய் எனக்குக் காட்டினார்கள. சமையல கூடமும், கழிவு நீரும் பக்கத்திலேயே இருக்கின்றன.

அங்கே தண்ணீர் வசதி இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால், தண்ணீர் இல்லை என்பது உண்மை தானா? லட்சக் கணக்கான ரூபாய் செலவிலே பெரிய மேல்நிலைத் தொட்டி அங்கே கட்டி இருக்கிறார்கள். தொட்டி, தொட்டியாகத்தான் இருக்கிறதே தவிர, தண்ணீர் வருகிறதா என்றால் இல்லை.

ஏன் தண்ணீர் வரவில்லை என்றால், அங்கே பராமரிப்பு சரியாக இல்லாதது தான் காரணம். மோட்டார் இல்லையா, பம்பு செட்டுகள் இல்லையா என்றால் பம்பு செட்டுகள் இருக்கின்றன. இயக்கமுடியவில்லை. காரணம், அங்கே முறையாக அதிகாரிகள் பார்வையிடுவது இல்லை என்று சொல்கிறார்கள். அதையும் நிர்வாக அதிகாரியிடம் சொன்னால், பார்க்கிறேன், செய்கிறேன், முடிக்கிறேன் நாளை வாருங்கள் என்று சொல்கிறார்களே தவிர செயலில் ஒன்றும் இல்லை.

அந்த இடங்களில் சுற்றிப் பார்க்கிறபோது, சாலை வாரியாகப் போய் பார்க்கிறபோது, விந்தையான காரியம் ஒன்று நடக்கிறது. என்ன விந்தை என்றால், அங்கே குப்பை எடுப்பதற்கு கான்ட்ராக்ட் விடப்படுகிறது. கான்ட்ராக்டில் ஒரு வீட்டுக்கு இரண்டு ரூபாய். இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கிற நபர்களே காண்டிராக்ட் காரர்களாக இருக்கிறார்கள். அதனாலே அங்கே அடிக்கடி குப்பைகளை எடுப்பதில்லை.

என்றைக்காவது ஒரு நாள் குப்பையை எடுக்கிறார்களே தவிர, வாரந்தோறும் குப்பைகளை எடுப்பதில்லை. மாதத்திற்கு ஒரு தடவைதான் குப்பையை எடுக்கிறார்கள். தண்ணீரும் இல்லை. கழிவு நீரும் அகற்றப்படவில்லை.

கட்டிடம் கட்டுகிறோம் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம். இந்த நாட்டிலே ஒரு ஆளுக்கு ஒரு வீடு கட்டித் தருவோம் என்று உறுதி சொல்கிறபோது, அந்தத் திட்டங்களைப் பாராட்ட வேண்டும்.



1985 ஜூன் 26] [திரு எஸ். வேணுகோபால்]

ஆனால், உண்மையில், எவ்வளவு வீடு கட்டினோம் என்பது பெருமை அல்ல. அதை எவ்வளவு சுகாதாரமாக வைத்திருக்கிறோம் என்பது தான் தேவை. வீடுகள் நிறைய கட்டிக் கொண்டுபோனாலும் அவை பராமரிக்கப்படுவதில்லை.

ஏன் பராமரிக்கப்படவில்லை என்று சொன்னால் தெரியவில்லை. அங்கே இருக்கின்ற குப்பையை நகர மன்றங்கள் எடுப்பதா குடிசை மாற்று வாரியம் எடுப்பதா என்று இரண்டு பேருக்குள்ளே, அதிகாரிகளிடம் அவர்களா இவர்களா என்று போட்டி போட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

சில இடங்களில் வாரியம் என்று சொல்கிறார்கள். சில இடங்களில் நகர மன்றம் என்று சொல்கிறார்கள். இப்படிச் சொன்னால் ஏழைகள் இருக்கும் இடங்களில் எப்படிச் சரியாக வரும்?

அடுத்தது, சேணியம்மன் கோயில் காலனி. ஒரு இடம் 6-க்கு 6 இருக்கும் இடத்தை ஏழைகளுக்கு விற்கிறார்கள். இந்தக் கொடுமையில், 6-க்கு 6 உள்ள இடத்தில் கோணித்திரை கொண்டு தடுக்கப்படுகிறது. ஒன்றிலே ஒருவர் குடும்பம், அடுத்ததிலே இன்னொருவர் குடும்பம். இதைக் கவனித்து ஏன் செய்யவில்லை என்று கேட்டால், செய்கிறேன். அதற்கான சட்டங்கள் இடம் கொடுக்கவில்லை. கட்டித் தருகிறேன் என்று சொல்கிறார்கள். அங்கேயும் சாக்கடை உண்டு. அங்கேயும் தண்ணீர் தேங்கி நிற்கிறது. அங்கேயும் கழிவு நீர் போகவில்லை. இப்படி எத்தனை இடங்களைப் பார்த்தாலும் பலயிடங்களிலேயும் இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால் நன்றாக இருக்காது. குடிசை மாற்று வாரியம் எப்படியெல்லாம் செயல்படுகின்றது என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டாலும், பலயிடங்களிலே இப்படிப்பட்ட சுகாதாரக் கேடுகள் இருப்பதால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

[பிற்பகல் 12-50]

வ.உ.சி. நகரிலே ஒரு கல்யாண மண்டபம் கட்டுகிறார்கள். அந்த மண்டபத்தின் உள்ளே 100 பேர்கள் கூட இருக்க முடியாத அளவிற்கு திட்டம் போடப்பட்டிருக்கிறது. அது சமூகக் கூடமா அல்லது சீட்டு விளையாடக்கூடிய கட்டிடமா அல்லது வேறு ஏதாவது தொழில் செய்வதற்காகக் கட்டுகிறார்களா என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட குறைகள் இங்கு மட்டுமல்லாமல் நகரத்தின் பல பகுதிகளிலேயும் இருக்கின்றன.

இராயபுரம் தொகுதியில் சிமிட்ரி ரோடு என்று இருக்கிறது. அங்கே பெரிய காலனி இருக்கிறது. அங்கே போய் நீங்கள் பாருங்கள். அதிகாரிகளையும் அழைத்துச் சென்று பாருங்கள். அங்கேயுள்ள முன் பகுதியை மட்டும் பார்த்து விட்டு வந்து விடாதீர்கள். ஏனென்றால் முன் பகுதி அழகாக இருக்கும்;

ஆனால் பின் பகுதியைப் பார்த்தால் அது எவ்வளவு துர்நாற்றமா
இருக்கிறது எவ்வளவு கழிவுநீர் தேங்கியிருக்கிறது. எவ்வளவு
சாக்கடை நீர் தேங்கியிருக்கிறது, எவ்வளவு மலம் தேங்கி
யிருக்கிறது என்பதைப் பாருங்கள்.

மாடமாளிகைகள், கூடகோபுரங்கள் என்று கட்டினாலும்
நாட்டிலே உள்ள ஏழை எளிய மக்களுக்கு நல்ல சுகாதார
வசதி கொண்ட கட்டிடங்களைக் கட்டித் தர முடியுமா என்று
பார்க்கின்றபொழுது வருத்தமாகத்தான் இருக்கிறது.

வீட்டு வசதியைப் பார்க்கின்ற நேரத்தில் இன்றைக்கு
சென்னை நகரம் மிகவும் ஓங்கி வளர்ந்து கொண்டிருக்கிறது. 4
அடுக்கு, 5 அடுக்கு, 6 அடுக்கு என்று போய்க் கொண்டே
யிருக்கிறார்கள். 6 அடுக்கு ப்ளாட் சிஸ்டம் என்று கட்டு
கிறார்களே, அங்கெல்லாம் தண்ணீர் கொடுக்க முடியுமா என்றால்
இல்லை. சாக்கடைக் கழிவு நீர் போக வழியில்லை. ஆனால்
5 அடுக்கு 6 அடுக்கு என்று போய்க் கொண்டேயிருக்கிறது.
சென்னையிலே இப்படிப்பட்ட மாடிக் கட்டிடங்களைக் கட்டு
வதால் விலைதான் உயர்ந்துகொண்டே போகிறதே தவிர
எங்கேயாவது விலை குறைந்திருக்கிறதா என்றால் இல்லை.

இன்னொன்றையும் சொல்வேன். விருகம்பாக்கம், வள
வாக்கம் என்ற இடத்தில் ஹவுசிங் போர்டு நிலத்தை ஆர்ஜிதம்
செய்திருக்கிறது, அப்படி அது ஆர்ஜிதம் செய்த பிறகும்கூட,
வேறு யாரோ ஒருவர் வேறொரு பெயரில் வைத்து அந்த
இடத்திலே பிளாட் போட்டு விற்று, கட்டிடமும் கட்டப்படுகிறது.
ஒரு பக்கம் அரசு நிலத்தை ஆர்ஜிதம் செய்திருக்கிறது என்று
ஜி.ஓ. இருக்கிறது. ஆனால் இன்னொரு பக்கத்தில் தனிப்
பட்டவர்கள், தங்களுடைய அரசியல் செல்வாக்கின் காரணமாக,
சொந்த செல்வாக்கின் காரணமாக அங்கே பிளாட் போட்டு
மற்றொருவர் பெயரில் விற்றுக்கொண்டிருக்கின்றார்கள். கிட்டத்
தட்ட அரசாங்கத்திற்கும் இது தெரியும் ஆனால் ஏன் சும்மா
இருக்கிறது என்று எங்களுக்குப் புரியவில்லை

இப்பொழுதெல்லாம் கட்டிடம் கட்டுகிறார்கள். மிகவும்
அழகாகத் தோற்றமளிப்பதுபோல் கட்டப்படுகிறது. ஆனால்
அந்தக் கட்டிடங்கள் எத்தனை ஆண்டுக் காலத்திற்கு நிலை
யானதாக இருக்கும் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.
இப்பொழுது கட்டப்பட்டிருக்கின்ற கட்டிடங்களையெல்லாம்
மாண்புமிகு அமைச்சரவர்கள் சென்று பார்க்க வேண்டுமெ
நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் செ
கிறேன். என்னுடைய உறவினர்கள் கட்டியிருக்கிறார்கள்.
1946 ஆம் ஆண்டு காண்ட்ராக்டர்களாக இருந்து இருக்கிறார்
கள். அவர்கள் 1946 ஆம் ஆண்டு காந்தி நகரில், கஸ்தூரிபாய்





நகரில் கட்டிடங்களைக் கட்டியிருக்கிறார்கள். அந்தக் கட்டிடங்
களெல்லாம் இத்தனை ஆண்டுக் காலமாகியும் இன்றைக்கும்
வைரம் போல நின்று கொண்டு இருக்கின்றன. ஆனால் இன்
றைக்கு உள்ள காண்ட்ராக்டர்கள் கட்டுகின்ற கட்டிடங்கள்
எத்தனை ஆண்டுக் காலத்திற்கு நிலைத்து நிற்கும் என்றேதெரிய
வில்லை. ஏன் இந்த நிலைமை? இடையிலே என்ன நடக்கிறது,
இடைத்தரகர்கள் எத்தனை பேர் மாறி மாறி வருகிறார்கள்?
எத்தனைபேர்களுக்குக் கையூட்டு வழங்கப்படுகிறது? எவ்வளவு
ரூபாய் கொடுக்கப்படுகிறது? கட்டிடங்கள் கட்டுவதற்குச் செல
வழிக்க வேண்டிய பணத்திலிருந்து இப்படி வாங்கிக்கொண்டு
செல்கிறார்கள். அப்படியென்றால் கட்டிடத்திற்கு வாங்க
வேண்டிய பொருள்கள் குறையாதா ? கேட்டால், பட்ஜட்
வருவதற்குள் இந்தத் திட்டத்தை முடிக்க வேண்டும், நாங்கள்
கையூட்டாகக் கொடுத்த பணத்தையெல்லாம் எப்படி ஈடுகட்டுவது
அந்தப் பணத்தையெல்லாம் இதிலேயிருந்துதானே எடுக்க
வேண்டியிருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலைமைகள் இருக்
கின்றன.

இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால் கட்டப்படுகின்ற
கட்டிடம் எப்படி உறுதியாக இருக்கும் என்பதை எண்ணிப்
பார்க்க வேண்டும். அதைப் பார்க்கும்பொழுது மிகவும் விந்தை
யாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம்
மாற்றி, நாம் எப்படிச் செழிப்பாக இருக்கிறோம் என்பதைக்
காட்டுகின்ற விதத்தில் இவ்வளவு சிறப்பாகக் கட்டியிருக்கிறோம்,
எங்கள் காலத்தில் கட்டப்பட்ட வீடு இது என்று சொல்லிக்
கொள்ளக் கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

குடிசை மாற்று வாரியத்தில் ஒரு ஆலோசனைக் குழுவைப்
போட்டு இருக்கிறார்கள். அந்தக் குழுவில் குடிசைப் பகுதிகள்
நிரம்பியுள்ள தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்களையும்,
மற்றவர்களையும் போட்டு அவர்களிடம் ஆலோசனை கேட்டு, ஒரு
தரப்பினரையே ஆலோசனைக் குழுவில் போட்டால் அவர்கள்
ஆலோசனைகளைக் கூறுவதற்குச் சங்கடப்படுவார்கள். ஆளுங்கட்சி
யைச் சேர்ந்தவர்களையே அந்த ஆலோசனைக் குழுவிலே போட்
டால் அவர்கள் இருக்கின்ற குறைகளைத் தெளிவாகச் சொல்ல
முடியாது. அதில் எல்லாக் கட்சிக்காரர்களும் இருந்தால்தான்
அமைச்சரிடமும், வாரியத் தலைவரிடமும் குறைகளைச் சொல்லி,
இந்தக் குறைபாடு இங்கே இருக்கிறது, அதை முறைப்படுத்துங்
கள், சரிப்படுத்துங்கள் என்று சொல்ல முடியும். அப்படியில்லா
மல் தனக்கு உடன்பாடு உள்ளவர்களையே ஆலோசனைக் குழு
விலே போட்டால் நல்ல ஆலோசனைகள் கிடைக்க வாய்ப்
பில்லை என்பதால் அப்படிப்பட்டவர்களைப் போட வேண்டாம்.
பரந்த எண்ணமுள்ளவகையில் எல்லோருக்கும் வீடு என்ற எண்
ணம் முதலமைச்சருக்கு இருக்கிறது.

அந்த உன்னதமான செயல்திட்டங்களுக்கு மாற்றுக் கட்சித்
தலைவர்களையும் மாற்றுக் கட்சி அங்கத்தினர்கலளயும் வைத்து,
ஆலோசனை செய்து செயல்படுவோமானால் உள்ளபடியே
ஏழைகள் வாழ்வு செழிப்பாக இருக்கும் என்பதை நீங்கள் கவனத்
தில் கொள்ள வேண்டும்.

இன்றைக்கு சென்னை நகரத்திலே மேம்பட்ட நிலையிலே
இருப்பவர்கள் மிக அதிகமாக இடங்களைத்தான் தேடிக் கொண்
டிருக்கிறார்கள். கட்டிடங்களுக்கும் மற்றவைகளுக்கும் பிரச்னை
கள் என்பது நாட்டிலே இருக்கிற ஏழை, எளியவர்களுக்குத்தான்.
ஏழை, எளியவர்கள் வாழ்வு வளம் பெற வேண்டும்.

என்னுடைய தொகுதியில் அண்ணாவின் பெயரால் ஒரு நகர்
இருக்கிறது; கடற்கரை ஓரத்தில் இருக்கிற பகுதி. அந்தப்
பகுதியிலே இருக்கிற எல்லோருக்கும் அட்டை கொடுக்கப்பட்டி
ருக்கிறது. 4, 5 ஆண்டுகளுக்கு முன்னால் அந்த அட்டை கொடுக்
கப்பட்டது. அவர்களுக்கு வீடு தர மறுக்கிறார்கள். இன்றைக்கு
நாளைக்கு என்று சொல்கிறார்கள். அடையாள கார்டை வைத்
திருந்தும் ஒன்றும் செய்ய முடியவில்லை. அண்ணாவின் பெயரால்
இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறாகள் ; அண்ணாவின்
பெயரால் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது;
அண்ணாவின் பெயரால் கொடுத்துத் தீர வேண்டிய கட்டாயம்
இருக்கிறது. இருந்துங்கூட அந்த ஏழை எளியவர்கள், அன்றாடம்
காய்ச்சிகளாக இருப்பவர்கள், இருக்க இடம் இல்லாதவர்களாக,
தங்குவதற்கு இடம் இல்லாதவர்களாக மழையிலே நனைந்து
கொண்டிருப்பவர்கள் வீடு வாங்கித் தர முடியவில்லையா என்று
கேட்கிறார்கள். நாங்கள் அதிகாரிகளைப் பார்த்துச் சொல்
கிறோம் ; மேல் அதிகாரிகளைப் பார்த்துச் சொல்கிறோம். வீடு
இன்றைக்கு, நாளைக்கு என்று சொல்கிறார்கள். ஆகவே
ஏழைகள்ன்பால் கருணை வையுங்கள் என்று கேட்கிறேன்.

திரு. ரமணி அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள்.
முதன் முதலில் அலாட்மென்ட் வாங்கியவர்கள் சிறிது காலம்
கழித்து மற்றவர்களுக்கு விற்று விடுகிறார்கள் என்று அவர்கள்
சொன்னது ஒரு சாரார் பற்றி. ஆனால் மற்றொரு சாரார்
இருக்கிறார்கள். இந்த வீடுகளில் குடியிருப்பவர்கள், பொருளா
தாரத்திலே வீழ்ச்சி கண்டு, வறுமை அவர்கள் வீட்டிலே தாண்ட
வம் ஆடியவுடனே, வயிற்றுக்கு வழியில்லாமல், வந்த வரை
ஆதாயம் என்று அவர்கள் வீட்டை மற்றவர்களுக்கு விற்று விடு
கிறார்கள். உறவினர்கள் பேரில் விற்று விடுகிறார்கள். முன்பு
ரூ. 3,000, ரூ. 4,000 என்று இருந்தது. இப்பொழுது ரூ 20,000
ரூ. 25,000 வாங்குகிறார்கள். பத்திரங்கள் எழுதப்படுகின்றன
முத்திரைகள் குத்தப்படுகின்றன. பத்திரங்கள் எழுதப்பட்டா
லும், முத்திரைகள் குத்தப்பட்டாலும், சட்டத்திற்கு விரோத
மானவை அவை என்று தெரிந்தே செய்கிறார்கள். இன்று





மாநகராட்சியிலே இருப்பவர்கள் நிறைய பேர்கள், குடிசை
களிலே இருக்கிற நிறைய பேர்கள் அத்தகைய வீடுகளை வாங்கு
கிறார்கள். வசதி படைத்தவர்கள் வாங்கி இருக்கிறார்கள்.
அரசு அதில் கவனம் செலுத்தி, வேறு எங்கும் வீடு இல்லாதவர்
கள் வாங்குகிறார்களா? வேறு எங்கும் வீடு வைத்துக்கொண்டு
வாங்கியிருக்கிறார்களா? யார், யார் வாங்குகிறார்கள் என்பதை
எல்லாம் பரிசீலனை செய்து, தயவு செய்து வீடில்லாதவர்களுக்கு
அப்படிப்பட்ட வீட்டை நீங்கள்கொடுத்தாக வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன். முறை தவறி நடப்பவர்கள் மேல் நட
வடிக்கை எடுங்கள். முறையாக, சரியாக நடப்பவர்கள் மேல்
கருணை காட்ட வேண்டும். ஒரு தேதியை நிர்ணயித்து, அந்தத்
தேதிக்குள் அதைச் செய்தாக வேண்டுமென்று கொண்டு வர
வேண்டும்.

பல நேரங்களிலே, வீட்டிலே இருப்பவர்களுக்குப் பதிலாக
வேறு ஒருவருக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு, அந்த வீட்டில் உள்ள
பாத்திரங்களை எடுத்து வெளியே போடுகிறார்கள், அவர்களுக்குத்
தெரியாமலே பூட்டி விடுகிறார்கள் என்ற தகவல் எனக்கு வந்
திருக்கிறது. அப்படிப்பட்ட காரியங்களில் தயவுசெய்து ஈடுபட
வேண்டாம். ஏழைகளாக இருப்பவர்கள்மேல் தயவுசெய்து
கருணை காட்டுங்கள்; அவர்களைப் புண்படுத்தாதீர்கள். ஏழை
கள் அரசு என்று சொல்கிறீர்கள் ; ஏழைகள் இதயங்களைப் புண்
படுத்த வேண்டாம்.

நான் காங்கிரஸ் கட்சிக்காரனாகயிருந்தாலும், மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் என்னுடைய பகுதிக்கு வரவேண்டும்
குடிசைப் பகுதிகளைக் காட்டுகிறேன்; அங்கே இருக்கிற சாக்கடை
துர் நாற்றங்களைக் காட்டுகிறேன்; அதற்குப் பின்னாலாவது
இந்தச் சட்டமன்ற உறுப்பினர் வேலை செய்கிறாரா என்று
தெரிந்து கொள்ளட்டும். மக்கள் மிகவும் சூட்சுமமாக இருக்கி
றார்கள். 10 ஆண்டுகளுக்கு முன்னால் சட்டமன்ற உறுப்பினர்
என்றால், ஏதோ வருவான், போவான் என்று இருப்பார்கள்.
ஆனால் இப்பொழுது மக்கள் விழிப்பாக இருக்கிறார்கள். சட்ட
மன்ற உறுப்பினர் வரவில்லை என்றால், எங்கே அந்தச் சட்ட
மன்ற உறுப்பினரைக் காணோம், நாங்கள் ஓட்டு போட்டோமே
காணோமே என்று கேட்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்
சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.
என்னுடைய தொகுதிக்கு வந்து சுற்றுப்பயணம் செய்யுங்கள்.
எங்களுடைய நிலையைப் பாருங்கள்; குடிசைப் பகுதியைப்
பாருங்கள்; குறைகளைப் பார்த்து, காரியங்களை
ஆற்றுங்கள்; குடிசை வாழ் மக்கள் இதயங்களிலே விளக்கு ஏற்ற
வேண்டிய அளவில் காரியம் ஆற்றவேண்டுமென்று கூறி முடிக்
கிறேன். நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 1-00)

(

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச் சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற 1985–86 ஆம் ஆண்டிற்கான 13,16,46,000 ரூபாய்க்கான வீட்டுவசதி பற்றிய 33-ம் எண் மானியக் கோரிக்கையையும் 30,06,43,000 ரூபாய்க் கான நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 34-ம் எண் மானியக் கோரிக்கை யையும் வரவேற்று, பாராட்டி, என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சட்டமன்றத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களும் பேசிய பேச்சை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். ஆளும் கட்சி என்பது ஆதரித்துதான் பேச வேண்டுமென்றும், எதிர்க்கட்சி என்பது எதிர்த்தே பேசவேண்டு மென்றும் இருக்கிற நிலை எப்போது மாறுகிறதோ அப்போது தான் பொதுவாக சர்க்காருக்கு ஒத்துழைப்பு கொடுத்து, எந்த ஒரு காரியமும் நாட்டிலே நடைபெற முடியும். எனக்கு முன்னாலே நமது திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அழகாகப் பேசினார்கள். இந்த நகரத்திற்கு ஒன்றுமே செய்ய வில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்லி, இந்த 28 பக்கங் களிலே உள்ள அறிக்கையில் எதுவுமே எனக்குத் தெரியவில்லை, சிறந்த திட்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை என்று சொன்னார்கள்.

உண்மையிலேயே நகரப்புறத்தைக் காப்பாற்ற இன்றைய தினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு எப்படி முனைந்திருக்கிறது என்பதை அவர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர் களைத் தலைவராகக் கொண்ட உயர்மட்டக் குழுவில் 5 சட்ட மன்ற உறுப்பினர்களையும் போட்டு, எவ்வளவு வேகமாக நகர்ப்புறம் வளரவேண்டும் என்பதில் அக்கறை எடுத்து காரியங் களைச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இன்னும் ஒன்றி ரண்டு மாதங்களில் காணமுடியும். குறிப்பாகச் சொல்ல வேண்டு மென்றால் இந்த சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற் பட்ட நாளிலிருந்து இந்த நாட்டுக்கு, குறிப்பாக சென்னையை ஒட்டியுள்ள பகுதிகளுக்கு அது ஆற்றி வருகின்ற பணிகளை மறந்து ஏன்தான் பேசுகிறார்களோ என்று நான் அச்சப்படுகிறேன்.

உண்மையிலே சொல்கிறேன். அந்தக் குழுமம் வந்த பிறகு தான்—42 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட சென்னை பகுதி, தமிழக மக்கள் தொகையில் 8.5 சதவீதம் மக்களைக் கொண்ட சென்னை பகுதியில் உள்ள கொத்தவால் சாவடி பற்றி இங்கே பேசிய உறுப்பினர்களில் யாராவது ஒருவர் பேசுவார்கள்



என்று எதிர்பார்த்தேன், ஒருவரும் குறிப்பிடவில்லை. பல்லாண்டு காலமாக இந்த கொத்தவால் சாவடியால் எப்படிப்பட்ட பிரச் சனைகள், சங்கடங்கள், சுகாதார கேடுகள், மக்களுக்கு செய்யப் பட வேண்டிய வசதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது இங்கே இருக்கிற மக்களுக்கு நன்றாகத் தெரியும். விடியற்காலை 4 மணி முதம் 8 மணி வரையில் அந்தப் பக்கத்திலே பார்த்தால் மக்கள் படுகின்ற அவஸ்தையை நேரில் காணமுடியும். அந்த கொத்தவால் சாவடி இன்றையதினம் கோயம்பேடுக்கு மாற்றப் பட்டிருக்கிறது. இது இந்த எம்.எம்.டி.ஏ. குழுவை உருவாக்கி, ஊக்கமளிக்கின்ற புரட்சித் தலைவர் அவர்களையே சாரும் என் பதை யாரும் மறுக்க முடியாது. இது எவ்வளவு பெரிய திட்டம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அந்த கொத்தவால் சாவடி சென்னைக்கு அருகில் 18 கிலோமீட்டர் தூரத்தில் மாறி போகுமானால் சென்னை மாநகரில் எவ்வளவு பிரச்சனைகள், இட நெருக்கடி சமாளிக்கப்படும் என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

அங்கே 230 ஏக்கரில் 3,000 கடைகளைக் கட்டி, மிகச் சிறந்த அங்காடியை உருவாக்கும் திட்டம் இந்த அரசின் சார்பாக, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய முயற்சியால் இந்த சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பாக நிறைவேறி வருகிறது என்றால் அதை மறுக்க முடியுமா ? இவ் வளவு பெரிய திட்டத்தை, ஒரு நல்ல திட்டத்தை தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரில் கொண்டுவருகிறார்கள் என் றால் இதை பாராட்ட வேண்டாமா என்று நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, கோயம்பேடு, ஆலந்தூர், மாதவரம் ஆகிய மூன்று புறநகர்ப் பகுதிகளில் 331 இலட்சம் ரூபாய் செலவில் பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்கள் நிற்கும் நிலையங்களை உருவாக்கு வதைக் குறிப்பிட வேண்டும். இன்றைக்கு சென்னை மாநகரை உலுக்கிக் கொண்டிருக்கிற பெரிய பிரச்சனை லாரி, பஸ் போக்கு வரத்து. ஒரு ஆள் போவதற்குக் கூட இடம் இல்லாத அளவுக்கு நெருக்கடியை உருவாக்கியிருக்கிறது இந்த போக்குவரத்துகள் என்பதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம்.

அதற்காகத்தானோ என்னவோ தெரியவில்லை ஒரு தொலை நோக்குத் திட்டத்தை வகுத்து இன்றைய புரட்சித் தலைவரின் அரசு எம்.எம்.டி.ஏ. மூலம் மிகப் பெரிய திட்டத்தைக்கொண்டு வநதிருக்கிறார்கள் என்பதை யாரால் மறுக்க முடியும் ?

அதேபோல் சாத்தாங்காடு இரும்பு மற்றும் பல பொருட்கள் அங்காடிக்காக கிட்டத்தட்ட 203 ஏக்கர் ரூ. 920 இலட்சம் செலவில் பெறப்பட்டுள்ளது என்பதை நீங்கள் யாரும்

இங்கே குறிப்பிடாதது குறித்து நாங்கள் உண்மையிலேயே வருத்தப்படுகிறோம். மண்ணடி பகுதியில் ஒருநாள் காலையில் ஒரு காரோ அல்லது லாரியோ சென்றால் இரவு 8 மணிக்கு மேலேதான் அந்தப் பகுதியிலே இருந்து திரும்பி வரக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. ஒரு லாரியிலே பொருட்களைக் கொண்டு வந்துவிட்டால் அந்தப் பொருட்களை இறக்குகின்ற வரையில் 3 மணி நேரம், 5 மணிநேரம் ஆனாலும் இறக்கிவிட்டு வர முடியாத சூழ்நிலையினை நம்மால் பார்க்காமல் இருக்க முடியவில்லை. இப்படிப்பட்ட நிகழ்ச்சியை நாம் அன்றாடம் கண்டு வருகிறோம். இப்படி பல ஆண்டுக்காலமாக இருந்து வந்த குறையை நீக்குகின்ற வகையில் எம்.எம்.டி.ஏ. நிறுவனம் அங்கே கோயம்பேட்டுக்கு அதை மாற்றியிருக்கிறார்கள் என்று சொன்னால் நாம் அதற்கு நன்றி சொல்ல வேண்டாமா? நினைத்தாவது பார்க்கவேண்டாமா? அரசு எதுவுமே செய்யவில்லை என்ற கருத்தை சொல்கின்றவர்கள் தயவுசெய்து இதை எண்ணிப் பார்க்க வேண்டும், பெருந்தன்மையோடு என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மணலிப் பகுதி. இந்த மிகப் பெரிய புறநகர்ப் பகுதியை அதாவது காடாக இருந்த பகுதியை இன்றைக்கு ஒரு நாடாக ஆக்கி இன்றைக்குப் பெரிய அளவில் குடிமனைகளை அமைத்து நடப்பு நிதியாண்டில் கூட 61 ஏக்கர் நிலப்பரப்பில் 2 ஆயிரம் குடும்பங்களைக் குடியமர்த்தக்கூடிய வகையில் 100 இலட்சம் ரூபாய் செலவில் அந்தப் புறநகர்ப் பகுதி நகருக்கு அடுத்துள்ள மணலியில் ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்ற அந்தக் காட்சியினைக் காண்கின்றபோது இதைப் பாராட்டுவதற்கு யாரும் இல்லை என்று நினைக்கின்ற நேரத்தில் வருத்தமாக இருக்கின்றது.

இந்த நாடு குறை உள்ள நாடு, பிரச்சினைகள் உள்ள நாடு என்பதை மறுக்கவில்லை. ஆனால் பிரச்சினைகளை நிவர்த்திக்க நாம் ஒன்று சேர்த்துதான் அவற்றைச் சந்திக்க வேண்டுமே தவிர குறைகளையே மேலும், மேலும் எடுத்துச் சொல்லி நிறைகளைப் பற்றிக் கவலைப்படாமல் இருப்பது சரியாக இருக்காது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

இந்த ஆண்டிலே நமது சாதனையாக சென்ற மார்ச் 31-க்குள் ஒரு இலக்கினை வைத்திருந்தார்கள். அதாவது வீட்டுவசதி வாரியமும், குடிசை மாற்று வாரியமும் ஒரு இலக்கினை வைத்திருந்தார்கள். வீட்டுமனை ஒதுக்கீட்டிற்காக 1984-85-ல்வைக்கப்பட்ட இலக்கு 1,75,000. ஆனால் மார்ச் வரையில் கொடுக்கப்பட்ட வீட்டுமனை ஒதுக்கீடுகள் 2,05,108. எனவே, அதிகப்படியான அளவில் உழைத்து இந்த அரசுக்கு நல்ல பெயர் வரவேண்டும் என்ற வகையிலும் நாட்டு மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்





பட வேண்டும் என்பதிலும் இவ்வளவு உறுதியாக கடமையாற்றக்கூடிய இந்த வீட்டுவசதித் துறையை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

அதே நேரத்தில் வீடு கட்ட நிதியுதவி வழங்குகின்ற வகையில் வைக்கப்பட்டிருந்த இலக்கு 41,484. ஆனால் 42,476 என்ற அளவுக்கு, வைக்கப்பட்ட இலக்கினை விட அதிகப்படியாக நிதியுதவி வழங்கி சாதனை புரிந்திருக்கிறார்கள்.

அதேபோல் பயன்பெறும் பொதுமக்களின் மேம்பாட்டுத் திட்டத்திற்காக 2,45,000 பேர்களுக்காகத் திட்டம் தயாரிக்கப்பட்டு இருந்தது. இன்றைய தினம் 2,62,927 மக்கள் பயன் அடையத்தக்க வகையில் அந்தத் திறமையைக் காட்டியிருப்பதை எதிர்க்கட்சித் தலைவர்கள் பாராட்ட வேண்டும். நல்லதைச் செய்கின்ற நேரத்தில் இதைப் பாராட்டுவதன் மூலமாகத்தான் பல நல்ல காரியங்கள் எதிர்காலத்திலே நடைபெற உதவிகரமாக இருக்கும் என்ற காரணத்தால் இந்தக் கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-10]

அடுத்து பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு வீட்டு வசதி செய்துகொடுப்பதில், 33,700 வீடுகள் வழங்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்து, நிர்ணயித்ததைக் காட்டிலும் 36,081 என்று அளவிற்கு அதிகமாகவே வீட்டு வசதிகளைச் செய்து தந்திருக்கிறார்கள் என்பதை நாம் மறுப்பதற்கு இல்லை. அதே நேரத்தில் இருக்கிற குறைகளையும் நாம் எடுத்துச் சொல்லுவதிலே தவறு இல்லை என்ற எண்ணத்தோடு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படுகிற வீடுகளில் சில குறைபாடுகள் உண்டு. இதற்குத்தான் அன்றைக்கே பெரியவர்கள் சொன்னார்கள், 'வீட்டைக் கட்டிப் பார், கல்யாணத்தைச் செய்து பார்' என்று. கட்டிய வீட்டிற்கு ஆயிரம் பேர் குறை சொல்லலாம் என்று அன்றைக்கே பெரியவர்கள் சொன்னார்கள். அதையெல்லாம் நினைவுபடுத்துகின்ற விதத்தில், இன்றையதினம் வீட்டுவசதி வாரியத்தைச் சார்ந்த அதிகாரிகளும், அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிற காரணத்தினால் நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு அனுபவத்தில் வந்த படிப்பினை அது. இன்றைற தினம் செல்கிரீட் என்ற ஒரு கல் வீட்டு வசதி வாரியத்தினால் தயாரிக்கப்படுகிறது. எண்ணூரிலே செய்கிறார்கள் அந்தக் கல்லை. அந்தக் கல்லை வைத்துத்தான் வீடுகள் கட்டப்பட வேண்டும் என்று அந்தத் துறையிலே இருக்கிற சில அதிகாரிகள் நிர்ப்பந்திக்கிற காரணத்தினாலே சில குறைபாடுகள் ஏற்படு

இன்றன. அந்தக் கல் உண்மையிலேயே வெளிநாட்டிலிருந்து
கண்டுபிடிக்கப்பட்டு, இங்கே தொழிற்சாலை அமைத்து அதை
நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துட
னேயேதான் அது ஆரம்பிக்கப்பட்டது என்றாலும் அங்கே உற்
பத்தியாகி வருகிற ஒவ்வொரு கல்லும் ஒவ்வொரு அளவிலே
வருகிற காரணத்தினாலே அந்தக் கல்லை வைத்து வீடுகளைக்
கட்டும்போது சிக்கனத்தை கடைபிடிக்க முடியாமல் போய்விடு
கிறது. உண்மையிலேயே அந்தத் திட்டம் கொண்டு வரப்பட்
டதே சிக்கனத்தை கடைபிடிக்க வேண்டும் என்பதற்காகத்தான்.
ஆனால் இன்றையதினம் அது தோல்வியடைந்திருக்கிறது. அன்
றையதினம் அந்தக் கல்லை கொண்டு வந்தபோது இருந்த நிலை
என்னவென்றால், அந்தக் கல்லை வைத்து ஒரு சுவரை கட்டு
கிறோம் என்றால், அதற்கு இரண்டு பக்கமும் பூச்சு தேவை
யில்லை என்றும், அந்தக் கல்லை மட்டும் வைத்துக் கட்டிவிட்
டால் போதும் என்றும் இருந்தது. ஆனால் இன்றைக்கு இரண்டு
பக்கமும் பூசினாலும் கூட, மழை ஒரு பக்கம் பெய்தால், இன்
னொரு பக்கம் ஓதம் வருகிற நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதேபோன்று அதே செல்கிரீட் பேக்டரியிலே சதுர ஓடுகள்
என்று சில ஓடுகளைச் செய்கிறார்கள். வீடுகளைக் கட்டி முடிந்த
தற்குப் பிறகு மேலே கூரையிலே போடப்படுகின்ற ஓடுகள்
அவை. அந்த ஓடுகள் அப்பளம் போன்று இருக்கிறது. உறுதி
இல்லாமல் இருக்கிறது. அது சர்க்காருடைய தயாரிப்புப்
பொருள் என்று சொல்லி, இந்த வீடுகளுக்குப் போட்டு, எப்படி
யாவது அந்த உற்பத்தி பொருள்களுக்கு ஒரு வழி காண வேண்டும்
என்று, அந்தத் தொழிற்சாலையை நலிவுற்றதாக அரசு கருதி
விடக்கூடாது என்று அங்கே இருக்கிற சில அதிகாரிகள் இப்படி
செய்ததன் காரணமாகத்தான், இன்றையதினம் மறைமலை
யடிகள் நகரிலே, ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளுக்கு போட்
டிருந்த ஓடுகளை நீக்கி ப்ரெஸ்-டைல்ஸ் என்பதை இப்போது
போட்டு வருகிறார்கள். இதனால் கூடுதல் செலவுதான் வாரியத்
திற்கு ஏற்படுகிறதே தவிர, வேறு ஒன்றும் லாபம் இல்லை.

முதலிலேயே அந்த ஓட்டை அந்தப் பணியிலிருந்து நீக்கி
யிருந்தால் அங்குப் பிரச்னை தீர்ந்திருக்கும். இவைகளையெல்
லாம் சொல்வதற்குக் காரணம் பிரச்னைகள் வந்துக் கொண்டே
தான் இருக்கும், அவைகளை எப்படித் தீர்க்க வேண்டுமோ
அப்படி தீர்ப்பதற்கு நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்
என்பதற்காகத்தான் இந்த நேரத்திலே இதை எடுத்துச் சொல்
கிறேன். அடுத்து, அதே வீடுகளுக்கு செல்-கிரீட் பேனல் என்ற
கூரையை வேய்ந்திருக்கிறார்கள். அதிலே 3 நாள் மழை பெய்
தால், 4-வது நாள், அந்த ஓட்டிலிருந்து தானாகவே தண்ணீர்
கொட்டுகிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், மேலே
வேயப்படுகின்ற அந்த கூரை ஓடுகள், வருகின்ற தண்ணீரை





வா வா என்று அழைத்து வாங்கிக் கொண்டு, பிறகு அது
நிதானமாக கக்குகிறது. இந்த நிலை வீட்டு வசதி வாரியத்
துறைக்கு அவசியம் அற்ற ஒன்று.

சர்க்கார் கட்டிக் கொடுக்கின்ற வீடுகள் என்றாலே ஒழுகு
கிறது என்று மக்கள் மத்தியிலே இருக்கும் அந்த நிலையை மாற்ற,
அதை தீவிரமாக பரிசீலிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே
கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல ஹவுசிங் போர்டிலே இன்னொரு முக்கியமான
விஷயம், மரங்களை அவர்களே சப்ளை செய்கிறார்கள். கதவு
கள் செய்து அதில் போடுகிறார்கள். மரங்கள் நாட்டிலே தற்
போது குறைந்து வருகின்றன என்பது எல்லோருக்கும் தெரியும்.
ஆனால் அதற்காக பிஞ்சு மரங்களை வெட்டி வந்து அதில் கதவு
களையும், ஜன்னல்களையும் செய்து இந்த வீடுகளுக்குப் போடு
கிறார்கள். அதை வைத்துக் கொண்டு கான்டிராக்டர் வீடு
களைக் கட்டி, ஒரு 3 மாதம் கழித்துப் பார்த்தால் அது அப்
படியே தனித் தனியாக வருகிறது. நடு நடுவே ஓட்டை விழு
கிறது. ஹவுசிங் போர்டிலே நீண்டகால அனுபவம் உள்ள நல்ல
அதிகாரிகளும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் சேர்ந்து
உட்கார்ந்து, இதுபோன்ற விஷயங்களைப் பரிசீலிக்க வேண்டும்.
அப்படி பரிசீலிக்கின்ற நேரத்தில் கதவுகளைப் போடும்போது,
ஒரே கதவாக 3 அடி அகலம் உள்ள கதவுகளாகக் போடுகிறார்கள்.
அதை 2 கதவுகளாக செய்துக் கொடுத்தால் நலமாக இருக்கும்.
ஏனென்றால் இரண்டு கதவுகளாகக் கொடுத்தால் அதை சரியாக
லாக்செய்ய முடியவில்லையென்ற காரணத்தால் 3 அடி, 3½ அடி
கதவாகக் கொடுக்கிறார்கள். அந்தக் கதவு வெகு சீக்கிரத்தில்
தனியாக பிய்த்துக் கொண்டு வந்து விடுகிறது. அதற்கு காரணம்
அந்தக் கதவின் கனம் தான். காட்டு மரம் என்றாலே பளு
அதிகமாகத்தான் இருக்கும். ஆகவே இதனை கவனத்தில் எடுத்துக்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் தனிக்
கவனம் செலுத்தி, ஆட்சிக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்களுக்கும் நல்ல பெயர் கிடைக்க இதையெல்லாம் பரிசீலிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நெய்வேலியில் 2,000 ஏக்கர் அரசு நிலம் இருப்பதாகச்
சொல்கிறார்கள். அங்கே வீட்டு வசதி வாரியம் வீடுகளைக் கட்
டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாம்பரம் தொகுதியிலே ஒரு வருடத்திற்கு முன்னால் 200
ஏக்கர் நிலங்களை கையகப்படுத்துவதற்கு நோட்டீஸ் எல்லாம்
கொடுத்தார்கள். அந்தப் பகுதியில் வீடுகளுக்கு டிமாண்ட்

இருக்கிறதா என்பதைட் பார்க்கும் வகையில் டிமாண்ட் சர்வே எல்லாம் செய்தார்கள். அதற்கு பொது மக்கள் ஒவ்வொருவரும் 100 ரூபாய் கட்டி விண்ணப்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் இப்போது அப்படி பணம் கட்டியவர்களில் பாதி பேருக்கு பணத்தைத் திருப்பி அனுப்பி விட்டார்கள். இன்னும் பாதி பேர்களுக்கு பணத்தை அனுப்பாமல் அப்படியே வைத்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பது தெரியவில்லை. இதனால் பொதுமக்களிடம் தேவையில்லாத ஒரு அதிருப்தி உருவாகி இருக்கிறது. இதில் போதிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தாம்பரத்தில் வீட்டு வசதி வாரியத்தின் திட்டங்களை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு வாரத்திற்கு முன்பு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அழகப்பா பல்கலைக் கழகத்திற்கு ஒரு சிறந்த பெண்மணியை துணைவேந்தராக நியமித்திருக்கிறார்கள். அதற்காக பெண்களின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சரவைக்கும் என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கைகள் மீது .என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே பேசிய பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். இந்த குடிசைப் .பகுதி மாற்று வாரியத் திட்டம் 1967ஆம் ஆண்டிற்கு பின்னால்தான் கொண்டு வரப்பட்டது என்று சொன்னார்கள். நான் 1957, 1967-ல் இந்தச் சட்டமன்றத்தில் இருந்திருக்கிறேன். அப்போதிருந்த திட்டத்தை நம்முடைய அமைச்சரவர்கள் விரிவுபடுத்திச் செய்வதை நான் பாராட்டுகிறேன். ஆனால், 1967-க்கு முன்னாலே இந்தத் திட்டங்களைச் செய்யவில்லை என்றால் அது சரியல்ல. அன்றைக்கு '' ஸ்லம் கிளியரன்ஸ் ஸ்கீம் '', '' ஸ்லம் இம்ப்ரூவ்மெண்ட் ஸ்கீம் ' என்ற தலைப்பின் கீழ் இன்றைய தினம் நம்முடைய துணை ஜனாதிபதியாக இருக்கிறார்களே மாண்புமிகு வெங்கட்ராமன் அவர்கள் அப்போது தொழில் அமைச்சராக இருந்தார்கள். அவர்களுடைய பொறுப்பிலே குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம், வீடு கட்டும் திட்டம் ஆகியவை சிறப்பாக நடந்து வந்தன. அதனை இப்போது விரிவுபடுத்தியிருக்கிறார்கள். அன்றைக்கு இது போன்ற திட்டங்கள் எதுவுமே இல்லையென்று, முதிர்ந்த அனுபவசாலிகளாகஇருக்கிறஉறுப்பினர்களே 1967ஆம் ஆண்டிற்கு முன்னால் அந்தத் திட்டங்கள் நடக்கவில்லை என்று சொல்வது மிகவும் வேதனைப்படக்கூடியது, வருத்தப் படக்கூடியது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அடுத்த படியாக, இன்றைக்கு நாம் நலிந்த மக்களுக்கு, ஏழை மக்களுக்கு விரைவாக இந்தத் திட்டங்களை அமுல்படுத்த வேண்டுமென்று பல நல்ல காரியங்களை நாம் செய்து வருகிறோம். இரண்டு வருடங்களுக்கு முன்பு கிராமிய வீடு கட்டும் திட்டத்தின் மூலமாக ரூ. 2,800, ரூ. 3,800 என்று ஒதுக்கி வீடு கட்டிக் கொடுத்தோம். அப்படி கொடுக்கிறபோது பணம் போதவில்லை என்ற பிரச்னை வந்தது. அந்தக் குறைவான பணத்தை வாங்கி அவர்களால் வீடு கட்ட முடியவில்லை. வீடு கட்டுபவர்கள் 13 ஆண்டுகள் வில்லங்க சர்டிபிகேட் வாங்க வேண்டும். அதற்காக அவர்கள் ரெஜிஸ்ட்ரார் ஆபீசிற்கு அலைந்து வாங்கி பணம் செலவழித்து ஸ்கீம் எல்லாம் போட்டு, சர்டிபிகேட் வாங்கி, சர்க்காருக்கு 95 ரூபாய் செலுத்தி அங்கத்தினராகி வீடுகளைக் கட்டினார்கள்.

வீடுகளைக் கட்ட பணம் போதாதென்று கடந்த இரண்டு ஆண்டுகளாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அரசும் அதை 6,000 ரூபாயாகச் செய்து, அதிலே 4,500 ரூபாய் கடன், பாக்கி 1,500 ரூபாயை அவர்களாகவே கட்டவேண்டுமென்று வைத்திருக்கிறோம். ஏற்கெனவே ரூ. 2,800, 3,800 என்று பணம் வாங்கி கட்டினார்களே அந்த வீடுகளே பெரும்பாலும் மாநிலம் முழுவதிலும் கட்டப்படாமல் அரைகுறையாக இருக்கின்றன. அது பற்றி அமைச்சர் அவர்களுக்கு தெரியும். அந்த லிஸ்ட்டை இப்போது சொல்வதென்றால் நேரமில்லை.

(பிற்பகல் 1–20)

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கின்றபோது சொன்னார்கள். 2 தினங்களுக்கு முன்னாலே மதுரைக்கு தொலைபேசி மூலமாகத் தெரிவித்து, அந்தத் தொகுதியிலே இன்னென்ன குறைகள் இருக்கின்றன, செய்ய வேண்டும் என்று ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மிக்க நன்றி. அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்த மாநிலம் முழுவதும் கட்டப்பட்ட வீடுகள் அறைகுறையாக இருக்கின்றன. 3,700 ரூபாய் கொடுத்த அந்த வீடுகளுக்கு எல்லாம் மீண்டும் 4,500 ரூபாய் கொடுக்கக்கூடிய அளவிற்குச் செய்தால்தான் அந்த வீடுகள் முழுமையாகப் பூர்த்தியாகும். நம்முடைய இலக்கு, அரசாங்கத்தினுடைய இலக்கு ஒரு வருடத்திற்கு 40 ஆயிரம் வீடுகள். நாம் எந்த இலக்கை அடைய வேண்டும் என்று வீடுகளைக் கட்டிக் கொள்கிறோமோ, அந்த வீடுகள்

அரைகுறையாக இருப்பதை மீண்டும் பரிசீலனை செய்து, ஏற்கனவே கொடுத்த பணம் போதாது என்ற காரணத்தால், மறுபடியும் 4,500 ரூபாய் கொடுக்கக்கூடிய அளவிற்குச் செய்ய வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் பணிவன்போடு என்னுடைய வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். குடிசை மாற்று வாரியத்திலே இருப்பவர்களிடம் வாடகையைக் கேட்கக் கூடாது என்று சொன்னார்கள். நான் அதை வன்மையாகக் கண்டிக்கிறேன். எந்த அரசாங்கமாக இருந்தாலும், அவர்களே, வீட்டை ரிப்பேர் செய்ய வேண்டும், மற்றும் பூச வேண்டும், மந்திரியே வந்து பூச வேண்டும் என்று சொல்வதெல்லாம் நியாயமில்லை, தர்மமில்லை. எனவே, நாம் வீட்டைக் கட்டிக் கொடுக்கும் போதே, அந்த வீட்டை அவர்களுக்கேச் சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டும். அப்படி அவர்களுக்கு வீட்டைச் சொந்தமாக்கிக் கெடுக்கிற போது, அவர்கள் மாதா மாதம் 25, 35 ரூபாய் கொடுத்து, தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டுமே தவிர, வாடகை கொடுக்க வேண்டாம் என்று சொன்னால், அரசியல்வாதிகளாகிய நாமே, அவர்களை திசை திருப்பி விட்டால், மக்களுக்கு நாம் நன்மை செய்தவர்களாக ஆகமாட்டோம் என்பதை நான் அழுத்தந்திருத்தமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே போன்று வீடுகள் இடிந்துவிட்டபோது, கட்டிக்கொடுக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டபோது, அவர்களிடத்திலே நான் கடுமையாக கோபித்து இருக்கிறேன். என் முகத்திலே முழிக்காதீர்கள் என்று கூட நான் அவர்களிடத்திலே தெரிவித்து இருக்கிறேன். உங்களுடைய வீட்டை நீங்கள் தான் ரிப்பேர் செய்து கொள்ள வேண்டுமே தவிர, அரசாங்கமே செய்ய வேண்டும் என்று சொல்வது நன்றாக இருக்காது என்று நான் சொல்லியிருக்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு முறையில் .வீடுகளைக் கட்டுவதற்கு நாம் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து .வருகிறோம். இந்தத் திட்டம் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது கொண்டு வந்தோம். அன்றைக்கு மிகப் பெரிய அளவிலே திட்டம் நடைபெறுகிறது. இன்றைக்கும் செய்து வருகிறோம். அப்படி கொடுத்து வரும் போது, 40 ஆயிரம் ரூபாய் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வீடு கட்டுவதற்குக் கொடுத்தால், அதிலே 4 ஆயிரம் ரூபாயை அட்வான்சாக பிடித்துக் கொள்கிறார்கள். அந்த 4 ஆயிரம் ரூபாய் அட்வான்சுக்கு 5 சதவீதம் வட்டி கொடுக்கிறார்கள். ஆனால், மீதியுள்ள 36 ஆயிரம் ரூபாய்க்கு 15 சதவீதம் வட்டி வசூல் செய்யப்படுகிறது. சில பேர்கள் 10½ சதவீதம் என்று சொன்னார்கள். இப்படி வசூல் செய்யும் போது, 15 ஆண்டுக் காலத்திலே அவர்கள் திருப்பிக் கட்டக்கூடிய பணம்



90 ஆயிரம் ரூபாயாக இருக்கிறது. இது எப்படி? எனவே,
இந்த நிலைமையை மாற்றி, இதிலே என்ன கோளாறு இருக்கிறது
என்பதை தயவு செய்து இலாக்கா அதிகாரிகளும், அமைச்சர்
அவர்களும் உட்கார்ந்து கலந்து பேசி, இந்த நிலைமையை சீர்
திருத்தம் செய்வதற்கு ஒரு வழிவகையைச் செய்ய வேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நாம் வீடு கட்டுவதிலே முன்னுரிமை கொடுக்கி
றோம். அதிலும், கிராமப்புறங்களிலே உள்ள வீடுகள் தீயினா
லும் பாதிக்கப்படுகிறது, வெள்ளத்தினாலும் பாதிக்கப்படுகிறது.
அதற்கு எல்லாம் முன்னுரிமை கொடுத்தால்தான் நாம் அந்த
ஏழை மக்களுக்கு உதவியவர்களாவோம் என்பதைச் சுட்டிக் காட்
டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, நம்முடைய சின்ன சேலம் சட்டமன்ற உறுப்பினர்
திரு. சிவராமன் அவர்களுடைய தொகுதியிலே தீ விபத்து ஏற்
பட்டு, கடந்த 2 ஆண்டு காலமாக, கட்டநத்தம், மற்றும்
தெங்கியநத்தம் என்ற அந்த 2 கிராமங்களில் 300 வீடுகள்
இதனால் பாதிக்கப்பட்டு, இரண்டு ஆண்டு காலமாகக் கட்டப்
படாமல் அப்படியே இருக்கின்றன.

அதே போல் என்னுடைய.பழைய நிலக்கோட்டைத் தொகுதி
யில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, அந்த வீடுகள் அழிக்கப்
பட்டு, கிட்டத்தட்ட, 300, 400 வீடுகள் பாதிக்கப்பட்டு, மனுக்
கள் எல்லாம் கொடுத்து, அவர்களை அங்கத்தினர்களாகச் செய்
தும் கூட, இதுவரைக்கும் .எந்த வீடும் கட்டப்படவில்லை.
எனவே, தீ விபத்தால் பாதிக்கப்பட்டாலும், வெள்ளத்தால்
பாதிக்கப்பட்டாலும், அவர்களுக்கு நாம் முன்னுரிமை கொடுத்து,
அந்த வேலையைச் செய்து கொடுக்க வேண்டும் என்று நான்
கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில்—
நாம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 374 யூனியன்களுக்கும் அதி
காரிகளுக்கு குடியிருப்பு மனைகள் கட்டிக் கொடுத்தோம். இன்
றைய தினமும் அதை விரிவாகச் செய்து கொண்டு வருகிறோம்.
அதை நான் பாராட்டுகிறேன், சந்தோசப்படுகிறேன். ஆனால்,
இன்றையதினம் தாலுக்கா அலுவலகத்தில் இருக்கின்ற அலுவலர்
களுக்கும் ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் வேலை செய்கின்ற அலு
வலர்களுக்கும், உண்மையிலே அவர்கள் வீடுகள் இல்லாமல் மிகவும்
சிரமமான நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்
னுரிமை கொடுத்து, வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஆண்டில் பழனி நகரில் வீடு கட்டும் திட்
டத்தைச் சேர்த்து இருப்பதற்காக என்னுடைய பாராட்டுக்
களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி

சேர்த்து இருக்கின்ற ஊர்களிலே 28 நகரங்கள் சேர்க்கப்பட்டு இருக்கின்றன. ஒரு நகரத்திற்கு 80 இலட்சம் என்றால் இது எப்படி சாத்தியமாகும். எனவே, ஒரு நகரத்திற்கு கிட்டத்தட்ட 2 கோடி ரூபாயாவது ஒதுக்கி, அந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்கான நில ஆர்ஜிதத்தை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நிலக்கோட்டை என்னுடைய சொந்த ஊர். என்னுடைய சொந்த தொகுதி, அந்தத் தொகுதியில் வீடு கட்ட ஹவுசிங் யூனிட் வேண்டும் என்று கடந்த 2 ஆண்டுகாலத்திற்கு முன்பாக நான் அமைச்சரிடத்திலே அணுகி, அவர்களும் அதற்கு ஒத்துக் கொண்டு, அதற்கு சாங்க்ஷன் செய்யப்பட்டு, ஆயிரம் நபர்களிடத்திலே—ஒரு நபரிடத்திலே 100 ரூபாய் என்று வசூலித்து, அதை பேங்கிலே கட்டி, அவர்கள் டிராப்ட் எல்லாம் வாங்கி, பிறகு சாங்ஷன் செய்யப்பட்டது. ஆயிரம் வீடுகளுக்கு 76 ஏக்கர் நிலம் வேண்டும் என்று நிலம் ஒதுக்கப்பட்டு, சாங்ஷன் செய்யப்பட்டது. ஆனால், அந்தத் திட்டம் இதிலே சேர்க்கப்படாமல் இருக்கிறது. அது மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிற காரணத்தினால், அதற்கு முன்னுரிமை வழங்கி, 2 ஆண்டு காலத்திற்கு முன்பாகவே முயற்சி எடுத்துக் கொண்டு வருகிற அந்த நிலக்கோட்டையை விரிவுபடுத்துவதற்கு, என்ன வழிவகையைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டும் அல்லாது, விவசாயிகளை அறவே இதிலிருந்து விலக்கி இருப்பதாக நான் அறிகிறேன். கிராமப்புறத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில் நிலம் இருந்தால் அவர்கள் வீடு கட்டுவதற்கு அந்த சங்கத்தையோ, அல்லது அரசையோ அணுகினால் அவர்களுக்கு இன்டிவிடுயல் கெப்பாசிட்டி, ரீ-பேயிங் கேப்பாசிட்டி இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்த்து அந்த விவசாயிகள் தங்கள் சொந்த ஊரில் வீடு கட்ட வேண்டும் என்று கருதினால் அவர்களுக்கு இந்தத் திட்டத்தை அமல் செய்கிற அளவுக்கு ஒரு மேக்சிமம் 50 ஆயிரம் ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்கு வீடு கட்டிக் கொள்வதற்கு உதவி செய்தால் அது சாலச் சிறந்ததாக இருக்கும்.

நாம் வீடுகள் கொடுக்கிறோம், மனைப்பட்டாக்கள் கொடுக்கிறோம். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு வேணுகோபால் அவர்கள் கூட சொன்னார்கள். இந்த மனைப் பட்டா வீடுகள் கொடுத்த பிறகு நான் உதாரணமாக ஒன்றைச் சொல்கிறேன். பட்டி வீரன் பட்டி என்ற என்னுடைய பழைய தொகுதி. நான் 15 ஆண்டுகளாக அந்தத் தொகுதியில் எம்.எல். ஏ. ஆக இருந்து இருக்கிறேன். அங்கு ஒரு காங்கிரஸ்காரர்



இடத்தை அவருக்கும் எனக்கும் தகராறு கூட வந்து அந்த இடத்தை எடுத்து 75 பேருக்கு வீட்டு மனைப் பட்டா வாங்கிக் கொடுத்தேன். அதில் 13 பேர் வாங்கிக் கொடுத்த அடுத்த மாதத்திலேயே அதிக விலைக்கு விற்று விட்டார்கள். அதைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது. ஆக யாருக்கு வீடு ஒதுக்குகிறோமோ அவர்கள் 10 ஆண்டு காலத்திற்குள் விற்கக் கூடாது. யாருக்கு வீட்டு மனை கொடுக்கிறோமோ அவர்கள் 10 ஆண்டு காலத்திற்குள் விற்கக் கூடாது என்றும் அப்படி விற்றால் கடுமையான ஜெயில் தண்டனை என்ற முறையில் விதிகளை நாம் திருத்துவோமானால் தான் பயன்டைபவர்கள் பயப்படுவார்கள். நாம் கொடுக்கும் வீடுகளை விற்றுவிட்டு புதிதாக குடிசைகள் போடமாட்டார்கள், அதன் மூலம் நாம இந்த குடிசைகளை அறவே வளரவிடாமல் தடுப்பதற்கு வாய்ப்பினை உண்டாக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துகொள்கிறேன்.

இன்றைக்கு கிராமங்களில் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு நான் வீடு வேண்டும் என்று கேட்கவில்லை. அங்கே பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கின்ற சேர்மேன்களுக்கு அவர்களுக்கு என்று ஒரு ரூம் இருக்கிறது. ஆனால் எம்.எல்.ஏ.க்களுக்கு அப்படி இல்லை. எங்களை போன்று கிராமத்தில் இருக்கிற எம்.எல்.ஏ.க்கள் அங்கே சென்றால் ஏதோ ஒரு போர்டு போட்டு வைத்து இருக்கிறார்கள், ஏதோ வேண்டா வெறுப்பாக எம்.எல்.ஏ. வந்தால் உட்கார்ந்து விட்டு போகட்டும் என்று. ஆக சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அந்தத் தொகுதியின் தலைநகரில் சென்று பணியாற்றும் போது இப்போது அவர்களுக்கு தனியாக ரூம் இல்லை. பஞ்சாயத்து யூனியன் சேர்மேனுக்கு இருக்கிற மாதிரி தனியாக ஒரு ரூமை எம்.எல்.ஏ.க்களுக்கு கட்டிக் கொடுப்பதற்கு வழி செய்தால் அது சாலச் சிறந்ததாக இருக்கும்.

இன்றைக்கு பலயிடங்களில் பல குடியிருப்புகளில் நாம் கட்டிக் கொடுத்து இருக்கக்கூடிய வீடுகளுக்கு லைட் வசதி இல்லை. தண்ணீர் வசதி இல்லை. இப்போது அடுக்கு மாடி பிளாட் சிஸ்டத்தில் கட்டுகிறார்கள். இந்த பிளாட் சிஸ்டத்தில் 6 மாடி கட்டிக் கொடுக்கிறார்கள். ஒரு பெண் கீழே இருந்து தண்ணீர் மேலே எடுத்துச் செல்ல வேண்டும் என்றால் How is it possible எப்படி அந்தப் பெண் பளுவை தூக்கிக்கொண்டு 6 மாடியை ஏற முடியும். அது மிகவும் சிரமமான காரியம். அதுவும் அந்தப் பெண் கர்ப்பமாக இருந்தால் மிகவும் சிரமமாக இருக்கும். ஆகவே, பிளாட் சிஸ்டத்தில், வீடுகள் கட்டினால் அவர்களுக்கு லிப்ட் வசதியை செய்து கொடுக்க வேண்டும். அதற்கு கூட தனியாக நிதி ஒதுக்கி அந்த அடிப்படையில் இந்த வீட்டு வசதி திட்டத்தை அமல் செய்யவேண்டும். அமல் நடத்தி மக்களுக்கு நல்ல காரியங்கள்

செய்து கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கூறி எனக்கு கடைசியாக பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த மாற்றுத் தலைவருக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

*மாண்புமிகு திரு என். நல்லுசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலை துவக்குவதற்கு முன்னால் பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய கொள்கையை ஏற்றுக்கொண்டு இருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றி கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் திருச்சி—2 தொகுதியைச் சேர்ந்த வாக்காள பெரு மக்களுக்கும் நன்றி சொல்லி, என்னுடைய பதில் உரையை இப்போது துவக்குகிறேன்.

இங்கே கிட்டத்தட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் 15 பேர் தங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நாட்டு நலன் கருதியும், நாட்டு வளர்ச்சி கருதியும், அதே நேரத்தில் தொகுதி வளர்ச்சி கருதியும் அதை மைய கருத்தாக வைத்து பல நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

அதிலே முதலில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பழனி முத்து அவர்கள் ஆதி திராவிட மக்கள் கிராம கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக பெற்று வந்த அந்தச் சலுகைகள் நிறுத்தப்பட்டு இருக்கின்றன என்ற கருத்தில் சொன்னார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு செ. செம்மலை) : பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:

அப்படி இப்போது நிறுத்தப்படவில்லை. அதனைப் போல, மாண்புமிகு உறுப்பினர் பொன்னுசாமி அவர்கள் நல்ல கருத்தினைச் சொல்லியிருக்கிறார்கள், நலிந்தவர்களுக்கு உதவ வேண்டும் என்ற நியாயமான கருத்து அது. இந்த அரசு அந்தக் கருத்தினை மையமாக வைத்து தான் இன்றைக்கு சென்னை பெருநகரத்தை ஒட்டிய பல்வேறு இடங்களில் பல நல்ல நகரங்கள் எல்லாம் புதிதாக உருவாகி இருக்கின்றன.

அதைப் போல, அங்கு கூட வீட்டு வசதிக்காக பல மனைகள் இன்றைக்குப் புதிதாக பெறுகிற அந்த வாய்ப்பு நலிந்தவர்களுக்குத் தான் இருக்கிறது. கிட்டத்தட்ட 90 சதவீதம் அவர்களுக்கு கிடைக்கின்ற அடிப்படையிலே திட்டங்கள் வர இருக்கின்றன.





அதைப் போல. மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசுகிறபோது, தமிழகத்தைப் பொறுத்தவரையில், எத்தனை பேர் வீடு இல்லாத அந்த எண்ணிக்கை கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள்.

தமிழகத்தில் 99 இலட்சம் குடியிருப்புக்கள் இருக்கின்றன. 99 இலட்சம் வீடுகளிலே, ஒரு சில வீட்டுக்குள்ளே 4 குடும்பங்கள், 5 குடும்பங்கள் என்கின்ற கணக்கைப் பார்க்கிறபோது, ஒட்டு மொத்தமாகப் பார்த்தால்,103 இலட்சம் குடும்பங்கள் இன்றைக்கு தமிழகத்தில் இருக்கின்றன. தனி வீடு இல்லாதவர்கள் கணக்கைப் பார்த்தால், கிட்டத்தட்ட, 4 இலட்சம் பேர் இருக்கிறார்கள்.

இதிலே, வருகின்ற ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே, இரண்டு தினங்களுக்கு முன்னர் கேள்விக்குபதில் சொல்லும்போது சொன்னேன். 2 இலட்சம் பேருக்கு வருகிற ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம்முடைய தமிழக அரசு, புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில், அவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான நல்ல முடிவினை எடுத்து இருக்கிற காரணத்தால், மீதி இரண்டு இலட்சம் பேருக்கு, மத்திய அரசினுடைய உதவியோடு, நிச்சயமாக அதற்கான உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்.

மாஸ்டர் பிளான் திட்டங்கள் நம்முடைய தமிழகத்தில் இருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். கிட்டத்தட்ட 98 நகராட்சிகள் தமிழகத்தில் இருக்கின்றன. 607 பேரூராட்சிகள் இருக்கின்றன. இதிலே ஒவ்வொரு ஆண்டுக்கும் நாங்கள் சில நகராட்சிகளை மாஸ்டர் பிளான் திட்டத்தின் அடிப்படையில் கொண்டு வந்து நல்ல திட்டங்களை நிறைவேற்றுகின்ற தன்மையோடு இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதனைக்கூட, ஒரு இலட்சத்திற்கு அதிகமாக இருக்கிற பகுதிகளையும் இப்போது எடுக்கவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். இப்போது ஏழாவது திட்டத்தில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமாக மக்கள் தொகை உள்ள நகரத்திற்கும் அந்தத் திட்டங்களை விரிவாக்கவேண்டும் என்ற முடிவினை எடுத்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி பேசுகின்றபோது நிதியைப் பற்றிப் பேசிவிட்டு, மாடி வீடு மற்ற இடங்கள் எல்லாம் பழுதுபட்டிருக்கிறது என்று சொன்னார். அதனைக் கூடச் சொல்கிறபோது, பொதுவாக பழமொழி ஒன்று இருக்கிறது. 'வீட்டைக் கட்டிப் பார் : கல்யாணம் பண்ணிப்பார்' என்று சொல்வார்கள்.

[திரு. என். நல்லுசாமி] [1985 ஜூன் 26

இப்போதெல்லாம் கல்யாணம் போலீஸ் ஸ்டேஷனில் கூட பண்ணுகிற அளவுக்கு சாதாரணக் காரியம் ஆகிவிட்டது. ஆனால் வீட்டைக் கட்டுவது இன்றைக்கும் ஒரு கடினமான காரியம். மாண்புமிகு உறுப்பினர் கலைஞர் காலத்திலே கட்டிய வீடுகள் இப்போது பழுது பார்க்கவேண்டிய நிலை இருக்கிறது என்று கூறினார்கள். நம் துறையைச் சேர்ந்த வர்களே அவசியம் அந்த வீடுகளையும் பழுது பார்க்கச் சொல்லி யிருக்கிறோம்.

குறைகள் நாட்டிலே இருப்பதில் தவறில்லை ; ஆனால் குறைகளைப் போக்கவேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லும்போது, மாஸ்கோ வுக்குப் போக வேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 1979-ஆம் ஆண்டிலே என்னை மாஸ்கோவுக்கு அனுப்பி விட்டார்கள். எனவே, வேறு ஏதாவது நல்ல ஊரைச் சொன்னால், பார்த்துவிட்டு, வருவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

நம்முடைய மாண்புமிகு சைதை துரைசாமி அவர்கள், புதிதாக தோன்றுகிற நகரங்களில் திருமண மண்டபம் எல்லாம் கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். அது நம்முடைய சட்டத் திலே இருக்கிறது. டைரக்டர் ஆஃப் டவுன் ப்ளான்னிங்- கைையில், ஒரு புதிய நகரம் உருவாகிறபோது திருமண மண்டபம் பொது மண்டபம் எல்லாம் அவசியம் இருக்கவேண்டும் என்ற அந்த முடிவும் இருந்து கொண்டிருக்கிறது.

அவர் தன்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், அங்கே சென்னை நகரத்திலேயே 3, 4 தீ விபத்து ஏற்பட்டு, தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. தமிழக அரசைப் பொறுத்த வரையில், உடனுக்குடன் அமைச்சர்கள் எல்லாம் சென்று பார்த்து, உடனடியாக நடவடிக்கை எடுத்து மாற்று வீடுகள் கொடுக்கின்ற திட்டங்களைப் பொறுத்தவரையில், அது பரிசிலனையில் எடுத்துக் கொள்ளும் அளவுக்கு இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள், கடன் வாங்குகிற நேரத்தில் காலதாமதம் ஆகியது என்றார்கள். குமரி மாவட்டத்தை விட்டு விட்டார்கள் என்றார்கள். குமரி மாவட் டத்தைப் பொறுத்த வரையிலும், மாஸ்டர் பிளான் திட்டங்கள், இன்றைக்கு கன்னியாகுமரி, குழித்துறை, நாகர்கோவில், பத்ம நாபபுரம் ஆகிய 4 ஊர்களில் அந்தத் திட்டத்தின் அடிப்படையில், நகரத்தின் வளர்ச்சிக்கான நல்ல திட்டங்கள் இப்போது வர இருக்கின்றன. அந்த முடிவினை அரசு ஏற்கெனவே எடுத் திருக்கிறது.



[திரு. என். நல்லுசாமி] [1985 ஜூன் 26

வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த வரையில், நாகர் கோயில் நகரத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலையில் குடிசை மேம்பாட்டுத் திட்டங்களின் அடிப்படையில், அபி விருத்தித் திட்டங்களை அங்கே நிறைவேற்ற இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் மதிப்பிற்குரிய ரமணி அவர்கள், தொழிலாளர்களுக்கு மலிவு வீடுகள் கட்டுகின்ற திட்டத்தை மத் தியஅரசு 1982-லே நிறுத்தியிருக்கிறது என்று சொன்னார்கள். அது உண்மையிலேயே நல்ல திட்டம்தான். மத்திய அரசுக்கு மீண்டும் நாம் எழுதி அந்தத் திட்டத்தை மீண்டும் நிறைவேற்று கின்ற காரியத்திலே ஈடுபட வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் அவசியம் செய்யத் தயாராக இருக்கிறோம். அவர் களுடைய தொகுதியிலே உள்ள பல்வேறு பிரச்னைகளைப் பற்றிக் கூறினார்கள். அப்படிக் குறைபாடுகள் இருந்தால் நிச்சயமாகப் போக்கும் காரியத்தை இந்த அரசு எப்பொழுதும் செய்யும். அதற்காக வேறு ஏதாவது காரணங்களைச் சொல்லிக் கொண்டு தட்டிக் கழிக்கின்ற காரியத்தை நிச்சயமாகச் செய் யாது.

மாண்புமிகு உறுப்பினர் அப்துல் சமத் அவர்கள், இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஏசுநாதர் கதையைச் சொல்லி, அப்பொழுதெல்லாம் யார் யாருக்கோ, மிருகங்கள், மற்றவர் களுக்கெல்லாம் வீடு கட்டப்பட்டது. மனிதனுக்கு இல்லை என்று சொன்னார்கள். அந்தக் கருத்தையெல்லாம் நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் ஏற்றுக்கொண்டி ருக்கின்ற காரணத்தினாலேதான், நான் ஏற்கனவே சொன்ன தைப்போல, இன்றைக்கு இரண்டு இலட்சம் வீடுகளை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழக அரசு கட்டுவதற்குத் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் வேணுகோபால் அவர்கள் சென்னைப் பெருநகரில் உள்ள அவரது தொகுதி பிரச்னையைப் பற்றிக் கூறினார்கள். சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் பல நல்ல நடவடிக்கைகளை இன்றைக்கு எடுத்து வந்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அரைகுறையாகக் கட்டப்பட்டிருக்கின்ற வீடுகள் இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்றன. அதற்கெல்லாம் நல்ல முடிவு எடுக்க வேண்டு மென்று சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில், அந்த ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்காக 6,000 ரூபாய் தருகின்ற திட்டத்தின் அடிப்படையில் எங்கெங்கு

வீடுகள் கட்டி அல்லது பாதி வீடாக எங்கே இருக்கிறதோ
அவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து, புதிதாக வீடு கட்டுகின்ற
மனுக்கள் வந்தால் அதையும் பரிசீலிக்க 'வேண்டுமென்று நான்
நேற்று அந்த நியாயமான கோரிக்கையைப் பற்றிச் சொல்லி
யிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தமிழக அரசைப் பொறுத்த வரையில், வீட்டு வசதி
வாரியம், குடிசைப் பகுதி மாற்று வாரியம், சென்னைப் பெரு
நகர் வளர்ச்சிக் குழுமம், நகர வளர்ச்சித் துறை, கூட்டுறவு
வீடு கட்டும் சங்கம் ஆகியவற்றின் மூலமாகப் பல்வேறு நல்ல
திட்டங்கள் இன்றைக்கு வந்திருக்கின்றன.

வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த வரையில், அதைத்
தொடங்கிய காலத்திலே மூன்று கோடி ரூபாயை அன்றைக்கு
ஒதுக்கியிருந்தார்கள். ஆனால் இன்றைக்குக் கிட்டத்தட்ட
52½ கோடி ரூபாய் அளவிற்குத் தமிழக அரசு, வேறு துறைகள்
மூலமாகவும், வேறு நிதியைப் பெறும் துறைகளின் மூலமாகவும்
அந்தத் திட்டம் உயர்ந்திருக்கிறது என்றால், நாட்டிலே அந்தத்
தேவை எவ்வளவு இருக்கிறது என்பதை உணர்ந்து, அதை
நிறைவேற்றுகின்ற பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்
கிறது என்ற கருத்தைத்தான் அது காட்டுகிறது.

ஆரம்ப காலத்திலிருந்து 1985 ஆம் ஆண்டு வரை 1,15,910
குடியிருப்புகளைக் கட்டியிருக்கிறது; 1985-86-இல் 15,273
குடியிருப்புகளைக் கட்ட முடிவை எடுத்திருக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்தில் ஹட்கோவிடமிருந்து எல்லா
மாநில அரசுகளும் இன்றைக்குக் கடனைப் பெறுகின்ற தன்மை
யிருக்கிறது. நம்முடைய தமிழக அரசைப் பொறுத்தவரையிலே
பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம், நல்ல திட்டங்கள்
தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் ஹட்கோ
விடமிருந்து கடன் பெறுவதில் இந்தியத் துணைக் கண்டத்தி
லேயே இரண்டாவது இடத்தில் நாம் இருக்கிறோம் என்ற
பெருமை நம்முடைய தமிழக அரசுக்கு உண்டு. அந்த அளவிற்கு
அதிகக் கடனை வாங்கி, திரும்பவும் பொருத்தமாக, ஒழுங்
காக இந்த அரசு செலுத்திக் கொண்டிருக்கிறது என்ற நல்ல
சூழ்நிலை தமிழகத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

நாட்டு மக்களின் நலன் கருதி நம்முடைய தமிழக முதல்வர்
மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் புதிய மாவட்டங்களைத்
அமைக்கின்ற அப்படிப்பட்ட நல்ல வாய்ப்பைத் தமிழகத்திற்குத்



தந்திருக்கிறார்கள். புது மாவட்டங்களின் தலைநகரங்களிலே
நல்ல வீட்டு வசதித் திட்டங்கள் கிடைப்பதற்கு முன்னுரிமை
தரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்த வரையில், 1971
ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்டது. சென்னைப் பெருநகரில்
1,202 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. அவைகளில் மொத்தக்
குடும்பங்கள் 1,63,804 இருக்கின்றன. 1983-84 வரையில்
சென்னையிலே மட்டும்தான் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின்
நடவடிக்கை இருந்தது; இப்பொழுது சென்னையைவிட்டு வேறு
மாவட்டங்களுக்கும் குடிசை மாற்று வாரியம் இந்தக் குடி
யிருப்புகளைக் கட்டக்கூடிய நல்ல சூழ்நிலை ஏற்பட்டு, 16 நக
ரங்களுக்கு நீட்டி, பிறகு இப்பொழுது மேலும் 25 நகரங்களுக்கு
குடிசை மாற்று வாரியத்தின் பணியை அளிக்கும் வகையில் இந்தத்
திட்டம் விரிவாக்கப்பட்டிருக்கிறது.

1983-84 வரையிலே 43,980 குடியிருப்புகளை 47 கோடி
ரூபாய் செலவிலே நம்முடைய சென்னைப் பெருநகரிலே மட்டும்
கட்டியிருக்கிறது. சென்னைப் பெருநகரிலே உள்ள குடிசைவாசி
களின்மீது உண்மையான பற்றும் பாசமும் கொண்டிருக்கின்ற
அரசாக இருப்பதால்தான் 1977-78-இல் இங்கே, குடிசைமாற்று
வாரியம் அந்தக் காலத்திலேயே தொடங்கினாலும், அவர்
களுக்கு உரிமை வேண்டும், பட்டா வழங்கப்பட வேண்டுமென்ற
நல்ல முடிவை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரவர்கள்
எடுத்து, கிட்டத்தட்ட 25,573 பேர்களுக்கு பட்டா வழங்கி
யுள்ள பெருமை நம்முடைய அரசுக்கு உண்டு.
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் என்று சென்னைப்
பெருநகரிலே இருக்கிறது. ஹட்கோ மூலமும், இன்னும் பல்
வேறு நிதிநிறுவனங்களின்மூலமும் கடன்பெற்று சென்னை நகரத்
தினுடைய வளர்ச்சிக்கும் பல நல்ல காரியங்களை இதன்மூலம்
ஆற்றிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது மணலி புறநகரில்
28 கோடி ரூபாயில் 208 ஹெக்டேர் நிலத்தில் நலிந்த மக்களுக்கு
சகல வசதிகளும் கூடிய ஒரு தனி பிளாட் - மனைகளெல்லாம
விற்கும் திட்டம் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்
மூலமாக வேகமாக நடந்து கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 1.40)

சென்னை நகரத்தினுடைய போக்குவரத்து நெரிசலைத்
தவிர்ப்பதற்காக நாம் போக்குவரத்துத் துறைக்குக் கூட இந்தக்
குழுமத்தின் மூலமாக, உலக வங்கியின் மூலமாக, 565 புதிய
பேருந்துகளை ரூ. 12 கோடிக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறோம்.
அந்தப் பெருமை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தைத்
தான் சாரும். அதுபோல், 3,000 கை வண்டிகள், 6,000 குப்பைத்

தொட்டிகள், 10 சிறு சக்கர வண்டிகள், 6 டிராக்டர்கள், 2 எடை கருவிகள் போன்ற பொருட்களை எல்லாம் சென்னை மாநகராட்சிக்கு நம்முடைய சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தந்திருக்கிறது.

சென்னையைப் பொறுத்த வரை மக்கள் தொகைக் கணக்கை 1981 ஆம் ஆண்டு கணக்கின்படி பார்த்தால், 484 இலட்சங்கள்; அதில் சென்னை நகரத்தில் மட்டும் 43 இலட்சங்கள் மக்கள் தொகை ; தமிழகத்தில் உள்ள மொத்த மக்கட் தொகையில் 9 சதவீதம் மக்கட் தொகை சென்னை நகரத்திலே இன்று இருந்து கொண்டிருக்கின்றது. அதன் வளர்ச்சிக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழுவை உருவாக்கி மாநகரத்தை வளர்ப்பதில் கொண்டுள்ள அக்கறையைக் காட்டு கிறது. வேறெந்த மாநிலத்திலும் முதல்வர் தலைமையில் குழு இருப்பதாக எனக்குத் தெரிந்த வரையில் இல்லை. எதிர்க்கட்சிகளின் தொகுதியாக இருப்பவைகளுக்கு ஒதுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். ஆனால் சென்னை மாநகர வளர்ச்சியின் மீது இந்த அரசு எடுத்துள்ள அக்கறையைப் பார்த்துவிட்டு இந்த குற்றச்சாட்டு உண்மையில்லை என்பதை உணரவேண்டும். சென்னை நகரத்திற்கு அடுத்து, திருச்சி, மதுரை, சேலம், மற்றும் கோவை ஆகிய நகரங்கள் பெரிய நகரங்களாக தமிழகத்தில் இருக்கின்றன.

உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால், நம்முடைய தமிழகத்தின் மீது நம்பிக்கை அதிகம் வைத்திருக்கிற காரணத்தால், அதுவும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழு மத்தின் பணியினைப் பார்த்துதான் நம்முடைய உலக வங்கி: இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திற்கும் கூட அவ்வளவு விரை வாகப் பணத்தைத் தருகின்ற சூழ்நிலையைத் தெரிவிக்காமல், நமக்குத் தெரிவித்திருக்கிறார்கள். உலக வங்கியின் குழு 19—7—1985-ல் இங்கு வர இருக்கிறது. அவர்கள் வருவதன் நோக்கம் பற்றி ஏற்கனவே ஒரு குறிப்பு தந்திருக்கிறார்கள். அவர்கள் நம்முடைய தமிழகத்திற்கு ரூ. 500 கோடி அளவில் தயாரித்திருக்கும் திட்டத்தைப் பற்றி விவாதிக்க இருக்கிறார் கள். அதில், ரூ. 150 கோடி சென்னை நகரத்தினுடைய வளர்ச் சிக்காக இருக்கும். அதைப் போல் திருச்சி, மதுரை, சேலம், கோவை ஆகியவற்றிற்கும் யாரும் எதிர்பாரா அளவில், ரூ. 350 கோடி உலக வங்கியிடமிருந்து பெற திட்டங்கள் தீட்டப்படு கின்றன. திருச்சியைப் பொறுத்த வரையில் நகரத்திற்கு ரூ. 50 கோடி ; திருச்சியைச் சுற்றியிருக்கிற பகுதிக்கு ரூ. 50 கோடி ; அதைப்போல் கோவை, சேலம், மதுரை போன்ற நகரங்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கிவிட்டு, நகரத்தைச் சுற்றி யிருக்கிற பகுதிகளை வளர்க்க வேண்டுமென்ற நல்ல நோக்கத் தோடு அதற்கும் தொகை ஒதுக்க திட்டமிட்டு வருகிறார்கள்; இந்தியத் திருநாட்டைப் பொறுத்த வரையில், உலக வங்கியே நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர்



பேரில் கொண்டிருக்கிற நம்பிக்கை, நல்லெண்ணம்தான், கடனைக் கொடுத்தாலும் திரும்பத் தருவார்கள் என்ற நம் பிக்கையின் பேரில்தான் ரூ. 500 கோடி—அது சாதாரணத் தொகை அல்ல—தருகின்ற முடிவை எடுப்பதுபற்றி விவாதிக்க வருகை தருகிறார்கள் என்றால் அது உண்மையிலே வரவேற்கத் தக்க நல்ல காரியமாகும்.

அதுபோல், மைய அரசின் உதவியுடன் ஒருங்கிணைப்பு வளர்ச்சித் திட்டம் இன்றைக்குத் தமிழகத்தில் நடந்துகொண் டிருக்கிறது. அதிலே, நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரை 98 நகராட்சிகள் இருக்கின்றன : 607 பேரூராட்சிகள் இருக்கின்றன. இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் மிக அதிகமான, சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் இப்படிப்பட்ட ஒரு திட்டம் முன்னுரிமை அளிக்கப்பட்டு, தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக 28 நகரங்கள் வளர்ச்சிப் பெற உறுதுணையாக இருக்கும். இத் திட்டத்தில் உதாரணமாக மத்திய அரசு ரூ. 40 இலட்சம் கொடுத்தால், நம்முடைய தமிழக அரசு ரூ. 40 இலட்சம் கொடுக்கும். அந்த அடிப்படையில் 28 நகரங்கள் இந்தத் திட்டத்தின் மூலமாக வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக் கின்றன.

அதனைப் போல், மாநில அரசு உதவி பெற நடைபெறும் ஒருங்கிணைப்புத் திட்டம் இருக்கிறது. நான் முதலிலே சொன்ன திட்டம் மத்திய அரசு, மாநில அரசு பகிர்ந்து கொள்கிற திட்டம். இரண்டாவது திட்டத்தின் கீழ் மாநில அரசு மட்டும்தான் நிதி தரும். அந்தத் திட்டத்தைத் தீட்டுகின்ற அடிப்படையில் 900 இலட்சம் ரூபாயில் உத்தேசமாக 110 நகரங்கள் பயன்பெறும் வகையில் 176 வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றும் முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

அதனைப் போல், மூதன்மை திட்டம், மாஸ்டர் பிளான் போடுகின்ற திட்டங்கள் எவ்வளவு பணம் போட்டாலும், முழுமையாகப் போடப்பட வேண்டும். அதற்காக, மாஸ்டர் பிளான் என்ற நிலைமையில், கிட்டத்தட்ட 20 ஆண்டுக் காலத் திற்குப் பின்னால் எதிர்பார்த்து, இப்பொழுது இருக்கிற மக்கள் தொகை, 20 ஆண்டுகளுக்குப் பின்னால் எப்படி இருக்கும் என்று எதிர்பார்த்து, அதற்காக ஒரு திட்டத்தைத் தீட்டி, 1984-85-ல் 13 நகராட்சிகளை அரசு எடுத்திருக்கிறது. அது போல், வருகிற ஆண்டில், நம்முடைய தமிழகத்தில் 45 நகராட்சிகளுக்கு, என்ன, என்ன திட்டங்கள் தேவை என்ற குறிப்பைத் தருகின்ற ஒரு பொறுப்பை அந்த மாஸ்டர் பிளான் என்ற திட்டத்தின் மூலமாக, நம்முடைய தமிழகத்திலே இருக்கிற பல்வேறு நகரங்கள் வளர்ச்சி பெற வழி செய்யப்படுகிறது.

[திரு. என். நல்லுசாமி] 1985 ஜூலை 26]

அதைப் போல், வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கங்களைப்
பொறுத்தவரையில், தமிழகத்தில் இன்றைக்கு 385 வீடுகட்டும்
சங்கங்கள் இருக்கின்றன. ரூ. 54 கோடி கடந்த திட்டத்தில்
செலவு செய்யப்பட்டு வந்தது. இந்த ஆண்டைப் பொறுத்த
வரையில் ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் 7,000
வீடுகள்தான் கிராமப்புறத்தில் இருக்கிறவர்களுக்கு வீடுகளுக்
காக கொடுக்கிற திட்டம் என்று சொன்னார்கள். ஆனால்
இப்பொழுது அப்படி அல்ல, 14,000 வீடுகள் கட்டுகின்ற
முடிவை, கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கட்டு
கின்ற முடிவை, தமிழக அரசு எடுத்திருக்கிறது. அதைப்
போல் நகர்ப்புறக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்றைக்குத்
தமிழகத்தில் 910 இருக்கின்றன. இப்பொழுது வீடு கட்ட வேண்
மென்று யாராவது நினைத்தால், அவருக்கு மாதம்
ரூ.350-க்கு மேல் வருமானம் இருக்க வேண்டும். அதற்கு மேலே
வருமானம் இருந்தால்தான் கடன் பெறத் தகுதி இருக்கிறது.
இப்பொழுது நாம் நடைமுறைப்படுத்துகின்ற திட்டத்தின்படி,
ரூ. 60,000 அவர்களுக்குக் கடன் தருகிறோம்.

ஆனால் நாட்டிலே விலைவாசி ஏறியிருக்கிற காரணத்தால்
வீடு கட்டுவது கஷ்டமான காரியம். அந்த அடிப்படையில்
60,000 ரூபாயை 80,000 ரூபாயாக உயர்த்தப்போகிறோம்.

வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டம் இன்றைக்கு அரசுப்
பணியாளர்களுக்கு இருக்கிறது. 1985-86 ஆம் ஆண்டில்
இதற்காக 9 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத்
திட்டத்தின் அடிப்படையில் ஏற்கனவே பே கமிஷன் மூலமாக
வந்திருந்தாலும் தமிழக அரசைப் பொறுத்தவரையில் இந்
தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநிலமும் செய்யாத
அளவுக்கு செய்திருக்கிறது. ஒரு மாநிலத்திலே அரசு ஊழியர்
40,000 ரூபாய் பெறும் சூழ்நிலை இருக்கிறது. இன்னொரு
மாநிலத்திலே 80,000 ரூபாய் பெறும் சூழ்நிலை இருக்கிறது.
1,20,000 ரூபாய் பெறும் சூழ்நிலை ஒரு மாநிலத்தில் இருக்கிறது.
தமிழ்நாட்டில் மட்டும்தான் 1,75,000 ரூபாய் வீடுகட்ட அரசு
ஊழியருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பெருமை
தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையே
சேரும்.

வீட்டு வசதி இல்லாதவர்களுக்கு வீடுகள் கட்டித்தர வேண்டு
மென்று 1983 டிசம்பர் 31-ந்தேதி ஐக்கிய நாடுகள் சபையில்
ஒரு முடிவை எடுத்து அறிவித்திருக்கிறார்கள். 1987 ஆம்
ஆண்டை வீட்டுவசதி இல்லாதவர்களுக்கு வீடுகள் வழங்கும்
சர்வதேச ஆண்டாக அறிவிக்க வேண்டுமென்று சொல்லி
யிருக்கிறார்கள். 2000-வது ஆண்டு வரையில் அது
தொடர்ந்து இருக்க வேண்டும். 2000-வது ஆண்டில் உல
கத்தில் யாரும் வீடு இல்லாமல் இருக்கக்கூடாது என்பது ஐ.நா.சபை
மேற்கொண்ட முடிவு.



1985 ஜூலை 26] [திரு. என். நல்லுசாமி]

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் ஏற்கனவே சொல்லப்
பட்டமாதிரி ஏறத்தாழ 4 இலட்சம் வீடுகள் கட்டதேவை
என்பது ஒரு உத்தேசமான கணக்கு. ஆகவே இவர்களுக்கு 12
ஆண்டுகளுக்குள் அவர்களுக்கு எல்லாம் வீடு கட்டிக்கொடுக்க
முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது ; இந்தியத் துணைக்
கண்டத்திலேயே தமிழ் நாட்டிற்குத்தான் அந்த பெருமை
கிடைக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன்.

அதைப்போன்று சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழு
மத்தின் மூலம் பல்வேறு நல்ல திட்டங்கள் ஏற்கனவே அறி
விக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பி
னர் எல்ல. இராசமாணிக்கம் அவர்கள் இங்கே ஒன்றைக்
குறிப்பிட்டார்கள். கொத்தவால் சாவடி பற்றி அனை
வருக்கும் தெரியும். அங்கே போனமாதிரி திரும்பி வருவது
கொஞ்சம் கஷ்டம். அந்த இடம் அப்படி இருக்கும்.
உண்மையைச் சொல்லப் போனால் அவ்வளவு சுத்தமாக
இல்லை. அந்த இடத்திலிருந்து கொத்தவால் சாவடியை
கோயம்பேடுக்கு மாற்றுகிறோம். கோயம்பேட்டில் 230
ஏக்கர் நிலத்தில் கொத்தவால் சாவடியை அமைக்க 65
கோடி ரூபாய் திட்டத்தில் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்
றன. 1988 ஆம் ஆண்டில் இந்தப் பணி முடிந்துவிடும் என்
பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று சாத்தன்காடு பகுதியில் இரும்பு மார்க்
கெட்டை அமைக்க இருக்கிறோம். இப்போது சென்னையில்
ஜார்ஜ் டவுன் பகுதியில் இரும்பு வியாபாரிகள் இருக்கிறார்கள்.
அந்தப் பக்கத்தில் காரில் போவது கஷ்டம். அங்கே போகிற
வர்கள் இரும்பை மிதித்துக்கொண்டுதான் போக வேண்டும்.
அதையும் அங்கிருந்து மாற்றி, சாத்தன்காடு பகுதியில் 203
ஏக்கர் நிலத்தில் 700 மனைகள் அமைத்து, 14 கோடி
ரூபாய் செலவில் பணிகளைச் செய்துகொண்டிருக்கிறோம். மின்
சார வசதி, போக்குவரத்து வசதி, இதர வசதிகள் எல்லாம்
செய்யப்படுகின்றன. சென்னை பெருநகரில் இருக்கிற இரும்பு
வியாபாரிகள் அங்கே செல்ல ஒத்துக்கொண்டார்கள். அவர்
களுக்கு அதற்காக நன்றி தெரிவிக்க வேண்டும்.

அதைப்போன்று புற எல்லை பேருந்து மற்றும் சரக்கு வாகனங்
கள் நிலையங்கள் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.
சென்னை மாநகர் வளர்ந்து வரும் ஒரு பெரிய நகரம். 44
இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டிருக்கிறது. இப்போது,
சென்னைப் பெருநகரில் மேலும் மக்கள் தொகை பெருகுவதைக்
குறைக்க வேண்டும். போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க
வேண்டும். அதற்காக கோயம்பேடு, ஆலந்தூர், மாதவரம்
ஆகிய மூன்று இடங்களில் "ட்ரக் டெர்மினல்" சரக்கு வாகனங்
கள், பேருந்துகள் நிற்கும் நிலையங்கள் அமைக்க 331 இலட்சம்

ரூபாய் செலவில் நம்முடைய சென்னை மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. அந்த ஆண்டு மட்டும் அந்தத் திட்டத்திற்கு 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.

அதைப்போலவே 'இன்னர் ரிங் ரோடு' அமைக்கும் பணியும் நடந்துவருகிறது. கிண்டி எஸ்டேட் பக்கத்தில் 8.8 கிலோமீட்டர் பகுதி இருக்கிறது. 2 கோடி ரூபாய் இப்போது அதற்காகச் செலவு செய்திருக்கிறோம். 1986 பொங்கல் அன்று கிண்டியிலிருந்து பூந்தமல்லி ரோடு வரை இந்தப் பாதை பொதுமக்கள் பயனுக்கு அனுமதிக்கப்பட திறந்து விடப்படவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசைவாழ் மக்களைப் பொறுத்தவரையில் குடிசை மாற்று வாரியம் அவர்களுக்கு வீட்டுவசதியைச் செய்து கொடுப்பதாக இருந்தாலும் எம்.எம்.டி.ஏ. அமைப்பு அவர்களுக்கு பட்டா வழங்கி, மேம்பாட்டுப் பணிகளைச் செய்து வருகிறது.

சிறு தொழில் செய்கின்றவர்களுக்கு கடன் கொடுக்கும் நல்லதொரு திட்டமும் இருக்கிறது.

அதைப்போன்று மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் தமிழக அரசு துரிதப் போக்குவரத்தை அறிமுகப்படுத்த இருக்கிறது என்று சொன்னார்.

(பிற்பகல் 1–50)

அந்தத் திட்டத்தையே எம்.எம்.டி.ஏ. போட்டுத்தான் மத்திய அரசுக்குத் தந்திருக்கின்றது. நாம் கிட்டத்தட்ட 25 கோடி ரூபாய் பெறுமானம் உள்ள 50 ஏக்கர் நிலத்தை மத்திய அரசுக்குத் தந்திருக்கிறோம். அந்த இரயில் பாதை பீச்சிலே இருந்து லஸ் வரையில் உள்ள தூரம் 8.4 கிலோ மீட்டர். அந்த திட்டத்தைப் பொறுத்தவரையில் 1985–86-ல் துவங்கி இருக்கிறோம். 6 கோடி ரூபாய் கிட்டத்தட்ட ஆரம்பத்தில் வந்து இருக்கின்றது. இந்தத் திட்டத்திற்கு மொத்தச் செலவு 53 கோடி ரூபாய். மாண்புமிகு மத்திய இரயில்வே அமைச்சர் திரு. பன்சிலால் அவர்கள் வந்திருந்தபோது விமான நிலையத்திலே நேரடியாக அவரை வரவேற்று இந்தத் திட்டம் பற்றிச் சொல்லியிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவருடைய இல்லத்தில் காலையில் அளிக்கப்பட்ட சிற்றுண்டியின் போது அங்கே பேசிக்கொண்டிருந்தபோது இது





பற்றிக் குறிப்பிட்டபோதும் மாண்புமிகு மத்திய இரயில்வே அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்திற்கு உதவி செய்ய நான் தயார் என்று சொல்லியிருக்கிறார்கள்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில் 20 கோடி ரூபாய் பெறுமான நிலத்தை இலவசமாக அளித்துள்ளோம். தற்போது என்னுடைய பேச்சின் இறுதிக் கட்டத்திற்கு நான் வந்திருக்கிறேன்.

பொதுவாக அரசு செய்கின்ற காரியங்களில் உதாரணமாக ஆயிரம் வீடுகள் என்று முடிவெடுத்திருந்தால் 700 வீடு, 600 வீடுகள்தான் முடிக்க முடியும். பல அரசுகளைப் பொறுத்தவரையில் இதுதான் நிலைமை. ஆனால் தமிழக அரசைப் பொறுத்தவரையில் 1984–85-ல் வீட்டுமனை ஒதுக் கீட்டிற்காகப் போடப்பட்ட திட்டம் 1,75,000 பேர். ஆனால் திட்டம் முடிகின்றபோது வீட்டுமனை ஒதுக்கப்பட்டது 2,05,108 பேருக்கு. அதுபோல் வீடு கட்ட நிதியுதவி செய்வதைப் பொறுத்தவரையில் நாம் முடிவு செய்த நபர்கள் 41,484 பேர். ஆனால் திட்டம் முடிவடைகிற போது பயனடைந்தவர் கள் 42,476 பேர். அதைப்போல குடிசைவாசிகளைப் பொறுத்த வரையில் 2,45,000 பேர் பயன் அடைவார்கள் என்று முடிவு எடுத்தோம். பிறகு பயனடைந்தவர்கள் 2,62,927 பேர். அதே போல் சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிந்த நிலையில் இருக்கின்றவர்களுக்கு வீடு வழங்குகின்ற திட்டத்தைப் பொறுத்தவரையில் 33,702 என்ற முடிவை ஆரம்பத்தில் எடுத்தோம். முடிவில் கொடுத்திருப்பது 36,081 பேர்களுக்கு. இப்படி தமிழக அரசைப் பொறுத்தவரையில் சொல்வதை விட செய்வது அதிகம் என்பதற்கு இதைவிட வேறு எதுவும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இதை எல்லாம் அருள் கூர்ந்து இங்கே பேசிய அத்தனை உறுப்பினர்களும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அடுத்து பத்திரிகை நிருபர்களைப் பொறுத்தவரையில் வீட்டுவசதி தரவேண்டும் என்று அவர்கள் கேட்கின்ற கருத்து மிகவும் நியாயமாக இருக்கின்றது. அவர்கள் எல்லாம் சேர்ந்து தனியாக ஒரு வீட்டுவசதி சங்கத்தை உருவாக்கி நம்முடைய துறையோடு அவர்கள் தொடர்பு கொண்டால் நிச்சயமாக அவர்களுக்கு உதவுகின்ற தன்மையில் இந்த அரசு முன்னுரிமை அளிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அடிப்படையில் இன்றைக்குப் பேசிய அத்தனை உறுப்பினர்களும் தொகுதியினுடைய வளர்ச்சி கருதித்தான் பேசியதாக நான் கருதுகிறேன். நம்முடைய தமிழக அரசு வளர வேண்டும், தமிழ் மக்கள் வாழவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு கூறிய நல்ல கருத்துக்களாக இருக்கின்றன.

நம்முடைய தமிழக அரசினிடத்திலே ஏதேனும் குறைகள் இருந்தாலும் அந்தக் குறைகளைப் போக்க இந்த அரசு முன்னுரிமை அளிக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது ; இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 33—வீட்டு வசதி.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாத தால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியு டன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

" மானியக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின்கீழ் ரூ. 13,16,46,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற் றது.

கோரிக்கை எண் 34—நகர்ப் பகுதி வளர்ச்சி.

திரு. கு. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

" மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப் பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ரூ. 30,06,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (27-6-1985) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.





பின்னர் பேரவை பிற்பகல் 1-54 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

228. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 21-3-1985 ஆம் நாளிட்ட 223 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ் நாடு) 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

229. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

230. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956. 619-A பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

129. கோரிக்கை எண்கள் 33 மற்றும் 34—தமிழ்நாட்டில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

[1985 ஜூன் 26

இணைப்பு.

(55-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 33.

தமிழ்நாட்டில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, 1985-86.

கொள்கை விளக்கக் குறிப்பு.

முன்னுரை :

மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் உயர்த்துவதற்கும் வீடற்றவர்களுக்கு வீட்டு வசதியளிப்பது மிக இன்றியமையாததாகும். ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் செயல் படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களில் வீட்டு வசதிப் பிரிவுக்கு இந்த அரசு எப்பொழுதும் உரிய முக்கியத்துவத்தை அளித்து வந்துள்ளது. உணவுக்கு அடுத்தபடியாக வீட்டு வசதியானது மிக முக்கியத் தேவையாக உருவாகியுள்ளது. இவ்வரசு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மற்றும் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் வாயிலாக பல்வேறு பட்டத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

1.1 புதிய இருபது அம்சத் திட்டம் :

புதிய இருபது அம்சத் திட்டம் கிராமப் புற மக்களுக்கு வீட்டு மனையும், வீடு கட்ட நிதி வசதியும், பொருளாதாரத்தில் நலிவுற் றோருக்கு வீட்டு வசதியும், குடிசைப் பகுதியின் சுற்றுப்புறத்தை மேம்படுத்துதலும் கட்டாயத் தேவை என்பதை வலியுறுத்து கிறது. இந்த இருபது அம்சத் திட்டத்தின்கீழ் நமது சாதனைகள் இலக்குகளை காட்டிலும் அதிகமாக அமைந்துள்ளது.

| வரிசை எண்ணும் இனமும், (1) | 1984–85-க்கான இலக்குகள். (2) | மார்ச் 1985 வரையி லுள்ள சாதனைகள். (3) |
|---|---|---|
| 1 வீட்டு மனை ஒதுக்கீடு .. .. | 1,75,000 | 2,05,108 |
| 2 வீடு கட்ட நிதியுதவி வழங்குதல் .. | 41,484 | 42,476 |
| 3 பயன் பெறும் குடிசைவாழ் மக்கள் | 2,45,000 | 2,62,927 |
| 4 பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு வீட்டு வசதி வழங்குதல் .. .. .. | 33,700 | 36,081 |



1985 ஜூன் 26]

2.1 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலமாக சமூக வீட்டு வசதித் திட்டங்கள்:

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் முதல் உயர் வருவாய்த் தொகுதியினர் வரை உள்ள பல தரப்பட்ட மக்களுக்காக பல்வேறுபட்ட சமூக வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றி, தமிழ்நாட்டில் வீட்டு வசதி இருப் பினை பெருக்குகிறது. 1985–86 ஆம் ஆண்டில் 15,273 வீடுகளைக் கட்டுவதற்காக வீட்டு வசதி வாரியம் தனது திட்டங்களை நிறை வேற்ற ஆகும் செலவினை ரூ. 5,250 இலட்சத்துக்கு உயர்த்தி யுள்ளது. அதன் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| | வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1 பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் .. | 3,629. |
| 2 வெளியூர்களில் குடிசைப்பகுதி மாற்றுத் திட்டம் | 608 |
| 3 தொழிலாளருக்கான வீட்டு வசதி .. | 72 |
| 4 குறைந்த வருவாய்த் தொகுதியினர் .. | 2,488 |
| 5 நடுத்தர மற்றும் உயர் வருவாய்த் தொகுதியினர் | 5,746 |
| 6 தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம் .. .. | 2,730 |

வாரியம் ஹட்கோவிடமிருந்து கடன் பெறுவதில் அனைத் திந்திய அளவில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது.

2.2 குறைந்த வருவாய்த் தொகுயினர் வீட்டு வசதித் திட்டம் :

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மாத வருமானம் ரூ. 351-க் கும், ரூ. 600-க்கும் இடைப்பட்ட வருவாயினர் நலனுக்காக இத்திட்டத்தினை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கட்டப் படுகின்ற வீட்டின் தற்போதைய உச்சவரம்புச் செலவு ரூ. 20,000. வீட்டின் செலவினத்தில் 25 சதவீதத்தை உடனடியாக முன்பண மாகச் செலுத்தும்படியான விதி இத்திட்டத்தில் உள்ளது. மீதி யுள்ள தொகை 15 ஆண்டுகளில் மாதத் தவணையாக வசூலிக்கப் படும். வாரியம் 1984–85 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 22,858 வீடுகளை கட்டி முடித்துள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் 2,488 வீடுகளைக் கட்டி முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தன் நிதிநிலை அறிக்கையில் குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கு வீடுகள் கட்டுவதற்காக ரூ. 275 இலட்சத்திற்கு வகை செய்திருக்கிறது. அதில் அரசின் கடன் தொகையான ரூ. 75 இலட்சமும் அடங்கும்.

2.3 நடுத்தர மற்றும் உயர் வருவாய்த் தொகுதியினர் வீட்டு வசதித் திட்டங்கள்:

நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம், மாத வருமானம் ரூ. 601-க்கும், ரூ. 1,500-க்கும் இடைப்பட்ட வருமானம் உள்ளவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வீட்டுக்கான விலை உச்ச வரம்பு ரூ. 30,000 முதல் பிரிவுக்கென்றும் மற்றும் ரூ. 50,000 இரண்டாம் பிரிவுக்கென்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மொத்தச் செலவினத்தில் 30 சதவீதம் முன்பணமாகவும், மீதமுள்ள தொகை மாதத் தவணையாக 12 ஆண்டுகளில் வசூலிக்கப்படுகிறது.

2.4 உயர் வருவாய்த் தொகுதியினர் வீட்டு வசதித் திட்டம் :

இத்திட்டம், மாத வருமானம் ரூ. 1,500-க்கு மேல் உள்ளவர்களுக்கு வீட்டு வசதி செய்து தருவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீட்டின் தற்போதைய விலை உச்ச வரம்புச் செலவு ரூ. 1,25,000 ஆகும். மொத்த செலவினத்தில் 30 சதவீதம் முன்பணமாகவும், மீதமுள்ள தொகை மாதத் தவணையாக 10 ஆண்டுகளில் வசூலிக்கப்படுகிறது.

1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரை வாரியம் 20,082 வீடுகளை நடுத்தர மற்றும் உயர் வருவாய்த் தொகுதியினருக்கான திட்டங்களின்கீழ் கட்டியுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் வாரியம், 5,746 வீடுகளைக் கட்ட உத்தேசித்துள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த வாரியத்தின் நிதிநிலை அறிக்கையில் ரூ. 1,560 இலட்சத்தினை ஒதுக்கீடு செய்துள்ளது.

3.1 நிலம் கையகப்படுத்துதல் மற்றும் வீட்டு மனை மேம்பாட்டுத் திட்டம் :

நிலத்தின் விலைகளில் ஊக வாணிகத்தைத் தடுக்கும் பொருட்டும், நிலத்தின் விலையைக் குறைக்கும் பொருட்டும், வீடு கட்டுவதற்கு நியாயமான விலையில் நிலம் கிடைக்கச் செய்யும் பொருட்டும், பெருமளவில் வளர்ந்துவரும் நகரங்களில் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டும் நிலங்களைப் பெருமளவில் முன்னதாகக் கையகப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். 1985–86 ஆம் ஆண்டில் வீட்டு வசதி வாரியம் சுமார் 230 ஹெக்டேர் நிலத்தை மேம்படுத்தும் பணியினை எடுத்துக்கொள்ளும்.

1985–86 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் வீட்டு வசதி வாரியத்திற்குக் கடனாக ரூ. 125 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



4.1 தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் வீட்டு வசதி வாரியம் மாத வருமானம் ரூ. 350-க்கும் குறைவாக உள்ள தொழிற்சாலைத் தொழிலாளர் களுக்கு குடியிருப்புகளைக் கட்டி வாடகை அடிப்படையில் ஒதுக் கீடு செய்கிறது. இத்திட்டத்தின்கீழ் 1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை வீட்டு வசதி வாரியம் 3,130 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. 1984–85 ஆம் ஆண்டிலிருந்து ஹட்கோ நிதி உதவியுடன் இத் திட்டத்தை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள் ளது. இத் திட்டத்தின்கீழ் கட்டப்படவிருக்கும் குடியிருப்புகள் தவணை அடிப்படையில், ஒதுக்கீடு செய்யப்படும்.

5.1 தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம் :

இத்திட்டம், சென்னை நகரம், மாவட்டம் மற்றும் வட்டத் தலைமையகங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்குச் சலுகை வாடகை அடிப்படையில் வீட்டு வசதி வழங்குவதற்கு உருவாக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தை அரசு சார்பில் வீட்டு வசதி வாரியம் செயல்படுத்துகிறது. மேலும், கட்டி முடித்த வீடுகளைப் பேணிப் பாதுகாக்கவும் செய்கிறது. இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகள் அரசுக்குச் சொந்தமாகும். 1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை வீட்டு வசதி வாரியம் 15,364 வீடுகளைக் கட்டி யுள்ளது. இத்திட்டத்திற்காக 1985–86 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 650 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் 2,730 வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கம் மற்றும் இராமநாதபுர மாவட்டங்களின் தலைமையிடங்களில் முறையே விருதுநகர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரத்தில் கட்டப்படவிருக்கும் வீடுகளும் மேற் குறிப்பிட்ட இலக்கில் அடங்கும்.

6.1 தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டம் :

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டங்களின் கீழ் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் நிலத்தினை மேம்படுத்தும் சிறப்புத் திட்டத்தினை செயல்படுத்துகிறது. நகர்ப்புற ஏழை மக்களின் வீட்டு வசதி நிலையினை உயர்த்தி அடிப்படை வசதிகளுடன் கூடிய வீட்டு மனைகளை நியாய விலையில் வழங்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். வீட்டு வசதித் துறையில் சமுதாயத் தில் நலிந்த பிரிவினருக்கு மிகக் குறைந்த செலவில் தீர்வு காணும் வண்ணம் மனைகளுக்கான விலைகள் சலுகை அடிப்படையில்

நிர்ணயிக்கப்படுகின்றன. ஒதுக்கீடுதாரர்கள் தங்களது சொந்த
மூலதனத்தைப் பயன்படுத்தி வீடுகளை கட்டி முடிக்கும் வண்ணம்
தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வைப்பதும் இத்திட்டத்தின் 1
குறிக்கோளாகும்.

7.1 முதலாம் சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நிறைவேற்றும் தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டம், அரும்பாக்கம், வில்லிவாக்கம் மற்றும் கொடுங்கையூர் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை ரூ. 643.64 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள பணியினை முடிப்பதற்காக ரூ. 120 இலட்சம் வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8.1 இரண்டாம் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் (மொகப்பேர் திட்டம்) :

1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் துவங்கிய இத்திட்டத்தின் கீழ் 153 ஏக்கர் நிலத்தில் 3,759 வசதிகளடங்கிய வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. நிலத்தினை கையகப்படுத்துவதில் உள்ள சிரமங்களினால் மீதி 152 ஏக்கர் நிலத்தினை மேம்படுத்துவதற்காக எடுத்துக்கொள்ள இயலவில்லை. முன்பு திட்டமிடப்பட்ட இடத்திலிருந்து 1 கிலோ மீட்டர் மேற்கேயுள்ள மொகப்பேர் மற்றும் நொளம்பூர் கிராமங்களில் உள்ள நிலத்தில் தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டத்தினை மாற்றி மொகப்பேர் மேற்குத் திட்டமாக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 187·02 ஏக்கர் நிலத்தில் மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு எல்லா அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும். 4,172 வீட்டு மனைகள், நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கு 1,275 மனைகள், நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கு 152 உயர்தர வருவாய்த் தொகுதியினருக்கு 72 மனைகள் ரூ. 9,63.76 இலட்சம் செலவில் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

8.2 மதுரவாயல் திட்டம் :

இத்திட்டத்தினை செயல்படுத்த முதலில் நெற்குன்றம் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டது. இப்பகுதியில் நிலம் கிடைப்பதிலுள்ள சிரமத்தினால் திட்டப்பகுதி மதுரவாயலுக்கு மாற்றப்பட்டது. 1984–85 ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் ஒன்று மற்றும் இரண்டின் கீழ் ரூ. 418.61 இலட்சம் வாரியம் செலவிட்டு 6,589 மனைகளை மேம்படுத்தியுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டின்கீழ் இப்பகுதியில் 2,715





மனைகள் மேம்படுத்தப்படும். சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டினை நிறைவேற்ற வீட்டு வசதி வாரியத்திற்கு 1985–86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 350 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9.1. குடிசைப்பகுதி மேம்பாடு மற்றும் அகற்றுதல்— தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வெளியூர்களில் குடியிருப்புகள் கட்டும் திட்டம்.

1961 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குடிசைப்பகுதி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மாவட்ட தலைநகர்களான கோயம்புத்தூர் மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் 19,532 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் அதிகமான வீட்டுவசதிகள் வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு நகரங்களுக்கு கட்டுப்படுத்தியிருந்த வாரியத்தின் நடவடிக்கைகள் [illegible] முழுவதும் தேவையின் அடிப்படையில் ஹட்கோ நிதி உதவியுடன் குடிசைப்பகுதி மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்த வாரியத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வீட்டுவசதி வாரியம் 1985-86 ஆம் ஆண்டில் ஈரோடு மற்றும் மதுரையில் 608 வீடுகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை நிறைவேற்ற 1985–86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10.1. தமிழ்நாடு குடிசைப்பகுதி] மாற்று வாரியம்.

1971 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், சென்னை மாநகரில் மூன்று குறிப்பிடத்தக்க திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

(அ) வீட்டு வசதி—

(1) குடிசை மாற்றும் திட்டம்.

(ஆ) நகர்ப்புற வளர்ச்சி—

(2) விரைவுப்படுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணி புரிதல்.

(3) சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணி புரிதல்.

1983–84 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் நடவடிக்கைகளை மாநிலம் முழுவதும் உள்ள மாநகராட்சி மாவட்டத் தலைநகரங்கள் மற்றும் நகராட்சிகளில் விரிவுபடுத்த வேண்டுமென அரசு முடிவெடுத்தது.

10.2. குடிசை மாற்றும் திட்டம்.

குடிசைப்பகுதி மாற்று வாரியம் 1983–84 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் சென்னை நகரில் ரூ. 46,61·69 இலட்சம் செலவில் 43,980 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. சமீப ஆண்டு களில் குடியிருப்பு கட்டும் திட்டத்திற்கு அரசு மானியம் மற்றும் ஹட்கோ கடன் உதவி பெறப்படுகிறது. 1983–84 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஹட்கோ விடமிருந்து ரூ. 466.97 இலட்சம் கடனாகப் பெற்றுள்ளது.

1984–85 ஆம் ஆண்டில் அரசு வழங்கும் மானியம் மற்றும் ஹட்கோ கடன் ஆகியவற்றைக் கொண்டு 2,000 குடியிருப்பு களை வாரியம் கட்டியுள்ளது. இதற்காக 1984–85 ஆம் ஆண்டில் செலவிட்ட தொகை ரூ. 200.07 இலட்சமாகும்.

குடிசைப்பகுதி மாற்று திட்டத்தினை சென்னை மாநகரிலும் மற்றும் வெளியூர்களிலும் செயல்படுத்த 1985–86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 150 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. அரசு மானியம் மற்றும் ஹட்கோ கடன் ஆகியவற்றைக் கொண்டு 488 குடியிருப்புக்களைக் கட்ட உத்தேசிக் கப்பட்டுள்ளது.

11.1. தன்னிறைவு வீட்டு மனைகள் வழங்கும் திட்டம்.

குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் கைவசமுள்ள சில காலி நிலத்திலும், நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் பெறப் பட்டுள்ள நிலத்திலும் தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டம் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென ஹட்கோவிட மிருந்து கடனாக ரூ. 45 இலட்சம் பெற்று ஒதுக்கீடுதாரர்களிட மிருந்து கிடைக்கப்பெறும் வருவாயினைக் கொண்டு இருபதாண்டு களில் திருப்பிச் செலுத்தப்படும்.



11.2. விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

மாநில அரசால் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் சாலை கள், பொதுக் குடிநீர்வசதி, தெரு விளக்குகள் மற்றும் பொதுக் கழிப்பிடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படுகின்றன. இவ்வசதிகளுக்கான வரைமுறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் 1983–84 ஆம் ஆண்டு வரை 65,700 குடும்பங்கள் பயனடையும் வண்ணம் ரூ. 3,94.85 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

1984–85 ஆம் ஆண்டில் சென்னை மாநகரிலும் மற்றும் மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளிலும், சென்னை நகரைச் சுற்றியுள்ள நகராட்சி மற்றும் பேரூராட்சிப்பகுதிகளான கத்தி வாக்கம், ஆவடி, ஆலந்தூர். திருவொற்றியூர், அம்பத்தூர், பல்லாவரம், போன்ற பகுதிகளில் வாழும் 14,998 குடும்பங்கள் பயனடைய ரூ. 70.90 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டம் சென்னை பெருநகரிலும் மற்றும் வெளியூர்களிலும் 1985–86 ஆம் ஆண்டில் ரூ. 70 இலட்சத்தையும் அதே அளவு ஹட்கோ கடனுதவி பெற்று 11,600 குடும்பங்கள் பயனடையும் வண்ணம் செயல்படுத்தப்படும்.

11.3. நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் கூடுதல் மேம்பாட்டுத் திட்டம் (மத்திய அரசு வழங்கும் தொகை).

புதிய இருபது அம்சத் திட்டத்தின்கீழ் 1983–84 ஆம் ஆண்டு முதல் குடிசைப்பகுதி சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நகர்ப்புறப் பகுதிகளுக்கு உதவியளிக்க மைய அரசு முன் வந் துள்ளது.

1983–84 ஆம் ஆண்டில் மைய அரசிடமிருந்து உதவியாக ரூ. 18.94 இலட்சம் வரப்பெற்று திருவொற்றியூர், மாதவரம், பல்லாவரம், அம்பத்தூர், நகராட்சிகளைச் சேர்ந்த குடிசைப் பகுதிகளில் சுற்றுப்புற மேம்பாட்டுப் பணிகள் செய்யப்பட்டு 13,819 நபர்கள் பயனடைந்தனர். 1984–85 ஆம் ஆண்டில் ரூ. 34.94 இலட்சம் செலவில் 20,505 நபர்கள் பயனடைந்தனர்.

12.1. உலக வங்கி உதவி பெறும் திட்டம்—சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்.

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் முக்கியப் பகுதி குடிசைப்பகுதி மேம்படுத்தும் பணியாகும். இத்திட்டம் சுற்றுப்புற மேம்பாடு, நில உரிமை வழங்கல் மற்றும் குடிசைவாழ் குடும்பங்களின் வருமானத்திற்கேற்ப ரூ. 1,500, ரூ. 2,500 மற்றும் ரூ. 3,500 வரை மேம்பாட்டுக் கடன் வழங்குதல் முதலியவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது.

முதலாம் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குடிசைப் பகுதி மாற்று வாரியமும் சென்னை மாநகராட்சியும் இணைந்து செயலாற்றி ரூ. 443.65 இலட்சம் செலவில் 24,862 குடும்பத்தினர் பயனடைந்தனர். 1977 ஆம் ஆண்டு தொடங்கிய இத்திட்டம் 1982 ஆம் ஆண்டு முடிவடைந்தது. 1981 ஆம் ஆண்டு தொடங்கிய சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டு ரூ. 27.80 கோடி மதிப்பீட்டுச் செலவில் 50,000 குடும்பங்கள் பயனடைய திட்டமிடப்பட்டுள்ளது. 1983–84 ஆம் ஆண்டு வரை ரூ. 657 இலட்சம் செலவில் 35,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. 1984–85 ஆம் ஆண்டில் ரூ. 384.62 இலட்சம் செலவிடப்பட்டு, 13,501 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

நில உரிமை பெறும் பொருட்டு 1983-84 ஆம் ஆண்டுவரை 24,433 குடும்பங்கள் குத்தகை மற்றும் விற்பனை உடன்படிக்கை செய்துள்ளனர். வீடு கட்டுவதற்காகவும், அல்லது மேம்படுத்துவதற்காகவும் 17,079 குடும்பங்கள் ரூ. 256.47 இலட்சம் கடனுதவி பெற்றுள்ளனர்.

1984–85 ஆம் ஆண்டு வீடுகட்டுவதற்காக ரூ. 237 இலட்சம் கடன் வழங்கப்பட்டு 8,099 குடும்பங்கள் பயனடைந்தனர்.

1985–86 ஆம் ஆண்டில் மேம்பாட்டுப் பணிக்காகவும், வீட்டு மேம்பாட்டுக் கடன் அளிக்கவும் ரூ. 500 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் சென்னைப் பெருநகரில் பெரும் வெள்ளம் ஏற்படும்போது குடிசைவாழ் மக்கள் வெள்ளத்தினால் பாதிக்காமலிருக்க சென்னை மாநகராட்சி சிறு வடிகால்களையும் பொதுப்பணித்துறை உட்புற வடிகால்களையும் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் கட்டித் தருகின்றன. இத்திட்டத்திற்கு 1983–84 ஆம் ஆண்டுவரை ரூ. 275 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1984–85 ஆம் ஆண்டிற்காக ரூ. 147 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியாலும், பொதுப்பணித் துறையினாலும், நிறைவேற்றப்படும் திட்டங்கள் முடிவடையும்போது தாழ்வான பகுதிகளில் வெள்ள அபாயத்தை எதிர் நோக்கி வாழும் பெரும்பாலான குடும்பங்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னைப்பெருநகர் வளர்ச்சித் திட்டம் ஒன்றின்கீழ் 90பாலர் பள்ளிகள், இரண்டின் கீழ் 40 பாலர் பள்ளிகளும் கட்டப்பட்டுள்ளது. சமூக நலத்துறையின் நிதியுதவியுடன் மேலும் 60 பாலர் பள்ளிகள் கட்டப்படும்.





13.1. யூனிசெப் நிறுவன உதவியுடன் சமுதாய வளர்ச்சிப் பணி.

1983–84 ஆம் ஆண்டு முதல் யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் சமுதாய வளர்ச்சிப் பணி நடைமுறையிலுள்ளது. யூனிசெப் இப்பணிக்காக ரூ. 39.98 இலட்சம் உதவியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் மேம்பாடு செய்யப்பட்ட குடிசைப்பகுதிகளில் வாழும் 2,50,000 குடிசை வாசிகளுக்கு சமுதாய வளர்ச்சிப் பணிகளில் பங்கு கொள்ளவும் குடிசைப் பகுதிகளை சுத்தமாக வைத்துக்கொள்ள அவர்களை தயார்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பளிக்கப்படும்.

குடிசைப்பகுதி மாற்று வாரியம் குடிசைப்பகுதிகளிலுள்ள இளைஞர்களும், இளம் பெண்களும், வேலைவாய்ப்புப் பெற வேண்டும் என்ற நோக்கோடு தொழிற்பயிற்சிகள் கொடுக்கப்படுகிறது. பயிற்சி பெற்றவர்கள் தாங்களாகவே தொழிலைத் தொடங்கவும், ஒரு தொழிலை புரியவும் ஏதுவாகிறது. குடிசைப் பகுதி மாற்று வாரியத்தில் இயங்கி வரும் சமுதாய வளர்ச்சிப் பிரிவு குடிசை வாசிகளுக்கு சுகாதாரம் சமூக வளர்ச்சி போன்றவற்றின் அவசியத்தை வலியுறுத்தும் முகத்தான் ஒலி ஒளிக் காட்சிகள் காண்பித்து வருகிறது.

14.1. தொழிலாளர் துறை ஆணையர் மூலமாக செயல்படுத்தப்படும் தொழிலாளர் மலிவு வீட்டு வசதித் திட்டம் (தனியார் துறை).

இத்திட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்து 1985 ஆம் ஆண்டு மார்ச் முடிய உள்ள காலத்தில் தனியார் துறை தொழில் நிறுவனங்கள் அரசிடம் நிதி உதவி பெற்று 1,346 தொழிலாளர்களுக்காக வீடுகள் கட்டியுள்ளனர். இதற்கென கடனாக ரூ. 36.81 இலட்சமும், ஆதரவுத் தொகையாக ரூ. 17.51 இலட்சமும் இது வரை தனியார் துறை தொழில் நிறுவனங்களுக்கு அரசால் வழங்கப்பட்டுள்ளன.

1985–86 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு 72 வீடுகள் கட்டுவதற்கு கடன் ரூ. 1.83 இலட்சமும் ஆதரவுத் தொகை ரூ. 1.88 இலட்சமும் ஆகும்.

1982 ஆம் ஆண்டிலிருந்து ஒருங்கிணைந்த தொழிலாளர் மலிவு வீட்டு வசதித் திட்டத்தினை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது.

15.1. மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக மலிவு வீட்டு வசதித் திட்டம்:

(தொழிலாளர் துறை ஆணையர் மூலமாக நிறைவேற்றப்படும் திட்டம்).

இத்திட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்து 1985 ஆம் ஆண்டு மார்ச் முடிய உள்ள காலத்தில் மலைத் தோட்டங்களின் உரிமை யாளரால் அரசிடம் நிதி உதவி பெற்று 1,073 தொழிலாளர் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதற்கென கடனாக ரூபாய் 16.41 இலட்சமும், ஆதரவுத் தொகையாக ரூபாய் 11.68 இலட்சமும் இதுவரை தோட்ட அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் இதுவரை இத்திட்டத்தின் கீழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏழு வீடுகள் கட்டுவதற்கான திட்டங் களுக்கு அரசிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளன.

1985–86 ஆம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீட்டில் இத்திட் டத்திற்குக் கடனாக ரூ.4.82 இலட்சமும் ஆதரவுத் தொகையாக ரூ. 3.82 இலட்சமும் 83 வீடுகள் கட்டுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16.1 அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டுவதற்காக முன்பணம் வழங்கல்:

அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டவும் வீட்டு மனைகள் வாங்கி அதில் வீடு கட்டவும், முன்னரே கட்டப்பட்ட வீடுகள் வாங்கவும் தங்களுக்குச் சொந்தமான வீடுகளில் உள்ள இடவசதியை விரிவாக்கவும் மற்றும் நிலையான மேம்பாடுகள் செய்வதற்கும் முன்பணம் வழங்கப்படுகிறது.

அரசு அலுவலர்கள் வீடு கட்டுவதற்கு அதிகபட்சக் கடனாக ரூ. 1,75,000 தற்பொழுது வழங்கப்படுகிறது. அலுவலர்கள் தங்களுக்குச் சொந்தமான வீடுகளை விரிவாக்கிக்கொள்ள அதிகபட்சக் கடன் தொகைக்கு உட்பட்டு ரூ. 75,000 கடனாகப் பெறலாம்.

இத்திட்டத்திற்காக 1984–85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவ்வொதுக் கீட்டில் நகராட்சி அலுவலர்களுக்கு வீடுகட்ட கடன் வழங்க, நகர வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைக்கு ரூ. 50 இலட்சமும் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வீடுகட்ட கடன் வழங்க ரூ. 50 இலட்சமும் ஒதுக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை முன்னரே கட்டப்பட்ட



வீடுகள்/மற்றும் குடியிருப்புகள் வாங்குவதற்காக வரப்பெற்ற விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் வழங்கும் அதிகாரிகள் ஒப்புதல் வழங்கியுள்ளனர். அவ்வாறே 1–7–1983 முதல் 31–1–1984 வரை கட்டுமானத்தில் இருக்கும் வீடுகளை முடிப்பதற்காக வந்த விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் வழங்கும்படி ஒப்புதல் வழங்கும் அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

வீடுகட்டுவதற்காக முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் இவ்வாண்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகள் தரப் பட்டுள்ளன—

(1) அரசு அலுவலர்கள் தங்களது வீட்டை விரிவு படுத்தவும், மேம்பாடு செய்யவும் இரண்டாவது முறையாக முன் பணம் வழங்கப்படும். அவ்வாறு முன்பணம் வழங்கப்படும் விண்ணப்பதாரர்கள் திருப்பிச் செலுத்தும் திறன், தற்பொழுதுள்ள அதிகபட்ச வரம்பு ரூ. 75,000 மற்றும் முன்பணம் வழங்குவதில் மற்ற பிரிவுகளுக்கும் இதற்குமிடையே 10 : 1 என்ற விகி தத்தின் அடிப்படையில் முன்பணம் வழங்கப்படும்.

(2) வீடுகட்டுவதற்கான முன்பணம் வழங்கும் திட்டத்தின் கீழ் விண்ணப்பிப்பதற்கு ஆறாண்டுகள் தொடர்ச்சியாக பணி புரிந்திருக்க வேண்டும். அவ்விதிமுறையினை மாற்றி அரசு அலு வலர்கள் மற்றும் அனைத்திந்திய பணி அதிகாரிகள் முன்பணத் திற்கான விண்ணப்பத்தினைத் தருகின்றபொழுது ஆறாண்டு தொடர்ச்சியாகப் பணியிலோ அல்லது தங்களது பணியில் வரை நிரந்தம் செய்யப்பட்டிருந்தாலோ, இவைகளில் எது முந்தி யதோ அதன் அடிப்படையில் முன்பணம் வழங்கப்படும்.

1985–86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அரசு அலுவலர்களுக்கு ரூ. 900 இலட்சமும், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ரூ. 50 இலட்சமும், அனைத்திந்திய பணி அதிகாரிகளுக்கு ரூ. 30 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17.1. கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் :

மாநிலம் முழுவதும் 104 கிராமிய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் மூலமாகக் கிராமப்புற வீட்டு வசதித் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2,00,000 வீடுகள் கட்டுவதாக திட்டமிடப்பட்டது. 1–4–1983 முதல் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தில் கட்டப்படும் வீட்டின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 6,000 ஆகும்.

இம்மதிப்பீட்டுச் செலவு கீழே குறிப்பிட்டுள்ளவாறு வழங்கப்படுகிறது :—

| (1) | ஆதி திராவிடர்கள். (2) ரூ. | மற்றவர்கள். (3) ரூ. |
|---|---|---|
| 1. கடன் .. .. .. | 3,500 | 4,500 |
| 2. முதலீட்டு மானியம் .. | 1,000 | .. |
| 3. பயன் பெறுவோரது பங்கு | 1,500 | 1,500 |

1980—81 ஆம் ஆண்டு முதல் 1983—84 ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் ரூ. 4,485.11 இலட்சம் கடன் வழங்கி 1,58,516 வீடுகள் கட்டியுள்ளது. இதில் 1,32,151 வீடுகள் ஆதிதிராவிடர்களாலும் 26,365 வீடுகள் மற்றவர்களாலும் கட்டப்பட்டன. 1—4—1984 முதல் 31—3—1985 வரையில் ரூ. 950.91 இலட்சத்தை இச்சங்கம் வழங்கியுள்ளது. மார்ச் மாத இறுதிவரை 21,302 வீடுகள் ஆதி திராவிடர்களாலும், 6,705 வீடுகள் மற்றவர்களாலும் ஆக மொத்தம் 28,007 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. கிராமபுற வீட்டு வசதித் திட்டத்தினை நிறைவேற்ற தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கதிற்கு கடனாக வழங்குவதற்கு 1985—86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 275 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் முதலீட்டு மற்றும் வட்டி மானியம் வழங்குவதற்காக ரூ. 300 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1985—86 ஆம் ஆண்டில் 5,000 வீடுகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கிராமப்புற ஆதி திராவிடர்களின் வீட்டு வசதித் தேவைகளை தாட்கோ, தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் கிராமப்புறத்தில் நிலமற்றோரின் வேலை உத்தரவாதத் திட்டத்தின்கீழ் கவனித்துக் கொள்ளப்படும்.

### 18.1. நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் :

நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்கு, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் நிதியுதவி அளிக்கிறது. இதற்கு வேண்டிய நிதியை இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து இச்சங்கம் கடனாகப் பெறுகிறது. பொருளாதாரத்தில் நலிவுற்றப் பிரிவினர், குறைந்த, நடுத்தர மற்றும் உயர் வருவாய்த் தொகுதியினருக்கு ரூ. 10,000 முதல் ரூ. 60,000 வரை பிரதம கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் கடனாக வழங்குகின்றன. இச்சங்கம் தொடங்கப்பட்ட



நாள் முதல் 30—6—1984 வரையில் பிரதம சங்கங்கள் அங்கத்தினர்களுக்கு கடன் வழங்கியதின் மூலம், 52,137 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இச்சங்கம் 1—7—1984 முதல் 31—3—1985 வரை ரூ. 1,811.00 இலட்சத்தை பிரதமச் சங்கங்களுக்குக் கடனாக வழங்கி 5,350 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தினை செயல்படுத்த 1984 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் ஆயுள் காப்புறுதிக் கழகம் தலைமைச் சங்கத்திற்கு ரூ. 1,100 இலட்சம் கடன் உதவி வழங்கியுள்ளது.

மானியக் கோரிக்கை எண் 34. நகர்ப்புற வளர்ச்சி.

### 19.1. நகர் ஊரமைப்புத்துறை

1981 ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி 4.83 கோடி மக்கள் வாழும் தமிழ்நாட்டில் 33 விழுக்காடு நகரங்களிலும், பெருநகரங்களிலும் வாழ்கிறார்கள் என்று அறியப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள நகரங்கள் மற்றும் பெருநகரங்களின் மொத்த எண்ணிக்கை 434 ஆகும். முந்தைய பத்தாண்டுகளை ஒப்பிடும்போது நகரங்கள் மற்றும் பெருநகரங்களில் வாழும் மக்கட் தொகை 34.63 இலட்சம் பெருகியுள்ளது எனத் தெரிய வருகிறது. வளர்ச்சி விகிதக் கணக்கில் இது 27.72 விழுக்காடாகும்.

தமிழகத்திலுள்ள நகர்ப்புறங்களில் வாழும் மொத்த மக்கட்தொகையில் 45 விழுக்காடு சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு பெருநகரங்களில் வசிக்கிறார்கள். இவ்வாறு பெருகரங்களில் பொதிந்தும், பெருகியும் வரும் நகர்ப்புற மக்கட் தொகைப் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்தவும் கிராமம் மற்றும் சிறுநகரங்களிலிருந்து பெருநகரங்களுக்குக் குடியேறும் போக்கினைக் கட்டுப்படுத்தவும், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களை வளர்ச்சி செய்ய வேண்டியது. கட்டாயமான தொன்றாகிவிட்டது. இதன் மூலம் பெருநகரங்களில் மக்கட் தொகை பெருக்கத்தினைக் குறைப்பதுடன், நகர்ப்புறத்தில் கிடைக்கக்கூடிய வசதி வாய்ப்புகளைக் கிராம மக்களுக்கும் எட்டும் வகையில், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களிலேயே கிடைக்க ஏதுவாக்க முடியும் எனவே தேர்வு செய்யப்பட்ட மண்டல வளர்ச்சி முனைகளை ஒருபுறமும் வளர்ச்சி மையங்களை மறுபுறமும் வளர்க்க வேண்டியது அவசியமாகிறது. இதன் அடிப்படையில், தமிழகஅரசு, ஒரு இலட்சம் மக்கட் தொகைக்கும் குறைவாயுள்ள 28 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களைத் தேர்வு செய்து அவைகளில் மத்திய அரசின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களை செயற்படுத்தி வருகிறது.

[1985 ஜூன் 26

**20.1 மத்திய அரசு நிதியுதவியின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த வளர்ச்சித்திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த நகர்வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்த, ஒவ்வொரு நகரத்திற்கும் அதிகபட்சக் கடன் தொகையாக ரூ. 80.00 இலட்சம் என நிர்ணயித்து இக்கடன் தொகையினை மத்திய மற்றும் மாநில அரசுகள் சம பங்காக வழங்குகின்றன. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களின் பட்டியல் பின்வருமாறு :—

| வரிசை எண். | நகரின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1 | உதகமண்டலம். |
| 2 | கரூர். |
| 3 | தர்மபுரி. |
| 4 | புதுக்கோட்டை. |
| 5 | திருச்செங்கோடு. |
| 6 | கோபிசெட்டிபாளையம். |
| 7 | மன்னார்குடி. |
| 8 | மேட்டுப்பாளையம். |
| 9 | செங்கல்பட்டு. |
| 10 | கூனூர். |
| 11 | தாராபுரம். |
| 12 | பழனி. |
| 13 | ஆத்தூர். |
| 14 | திருவண்ணாமலை. |
| 15 | உடுமலைப்பேட்டை. |
| 16 | நாமக்கல். |
| 17 | கோவில்பட்டி. |
| 18 | பொள்ளாச்சி. |
| 19 | ஓசூர். |
| 20 | ராணிப்பேட்டை, ஆற்காடு, வாலாஜாபேட்டை |
| 21 | தேனி அல்லிநகரம். |
| 22 | நாகப்பட்டினம். |
| 23 | காரைக்குடி. |
| 24 | கள்ளக்குறிச்சி. |
| 25 | பண்ருட்டி. |
| 26 | ஆரணி. |
| 27 | சிவகங்கை. |
| 28 | அரக்கோணம். |



[1985 ஜூன் 24

மேற்கண்ட திட்டத்தின் கீழ், பேருந்து நிலையம் கட்டுதல், நாள் மற்றும் வார அங்காடிகள் அமைத்தல், சரக்கு நிலையம் அமைத்தல், குடியிருப்பு மனைகள் மற்றும் இதனைச் சார்ந்த வசதிகள் செய்து கொடுத்தல் போன்ற 171 திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களுக்கான மொத்த மதிப்பீடு ரூ. 22,44.81 இலட்சம் ஆகும். இது வரை 88 திட்டங்கள் முடிக்கப்பட்டு உபயோகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் மத்திய அரசின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்த வழங்கப்பட்ட தொகை ரூ. 1,794.45 இலட்சம் ஆகும்.

1.1 குறைந்த செலவினத் துப்பரவுத் திட்டங்கள் :

28. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் நகர் வளர்ச்சித் திட்டங்கள் செயலாக்கி வருவது தவிர, மத்திய அரசு ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குறைந்த செலவினத் துப்புரவுத் திட்டங்களை செயற்படுத்த மத்திய மற்றும் மாநில அரசுகள் ஒப்புதல் வழங்கியுள்ளன. இதன் கீழ், கீழ்குறிப்பிட்டுள்ள எட்டு நகரங்களில் ரூ. 177.40 இலட்சம் மதிப்பீட்டில் திட்டங்கள் வெகுவிரைவில் செயலாக்கப்படவுள்ளன.

தேர்ந்து எடுக்கப்பட்ட நகரங்கள்.

| வரிசை | நகரின் பெயர். | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | காரைக்குடி | 26.78 |
| 2 | ஆரணி | 21.00 |
| 3 | அரக்கோணம் | 26.81 |
| 4 | சிவகங்கை | 25.00 |
| 5 | மேட்டுப்பாளையம் | 25.41 |
| 6 | ஓசூர் | 10.40 |
| 7 | கள்ளக்குறிச்சி | 17.00 |
| 8 | மன்னார்குடி | 25.00 |

இதற்கான முதற்தவணைக் கடன் தொகையாக மத்திய மற்றும் மாநில அரசுகளால் ரூ. 104.98 இலட்சம் வழங் கப்பட்டு, ஆக்கப் பணிகள் வெகு விரைவில் தொடங்கப்பட வுள்ளன.

28 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த மற் றும் குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டங்களைச் செய லாக்க 31-3-1985 வரை மைய அரசு மற்றும் மாநில அரசு ரூ. 17.94 கோடி வழங்கியுள்ளன. 1984-85 ஆம் ஆண்டில் மட்டும் இத்திட்டங்களுக்கு ரூ. 537.56 இலட்சம் வழங்கப்பட் டுள்ளது. இதுவரை 86 திட்டங்கள் முழுமையாக முடிக்கப் பட்டு, பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள திட்டங்களும் விரைவில் முடிக்கப்படும் நிலையிலுள்ளன. மேற் கூறிய திட்டங்களை தமிழ் நாட்டில் செயற்படுத்த 1985-86 நிதியாண்டில் ரூ. 710 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

22.1 மாநில அரசு நிதியுதவியின் கீழ் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் :

மாநில நகர்-ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வருமானம் தரும் ஆக்கப் பணிகளை மேற் கொள்ளவும், கட்டணக் கழிப்பிடங்களைக் கட்டவும், மாநில அரசு தனது உதவிகளை 1985-86 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து அளிக்கும். இவ்வகையில் 1984-85 ஆம் ஆண்டில் இதுவரை ரூ. 99.36 இலட்சம் கடன் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 900.00 இலட்சம் முதலீட்டில் 176 திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ரூ. 714.73 இலட்சம் நிதியதவி வழங்கப்பட்டுள்ளது. இதுவரையில் 132 திட்டங்கள் முடிக்கப்பட்டு, பொதுமக்களின் உபயோகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

23.1 பெருநகர் வளர்ச்சி :

மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி போன்ற மண்டல அபிவிருத்தி முனைகளை அபிவிருத்தி செய்து, அதன் மூலம் அவற்றைச் சார்ந்துள்ள சுற்றுப்புற பகுதிகளுக்குத் தேவை யான வசதிகளை அளிக்க வேண்டி, தற்சமயம் இப்பெருநகரங் களில் காணப்படும் இன்றியமையாத வாழ்க்கை வசதிக் குறை பாடுகளைச் சீர்திருத்திட வழிவகுக்கும் நகர் வளர்ச்சித் திட் டங்கள் தீட்டப்பட்டுள்ளன. இதில், பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய வகுப்பினர்க்கு கைகொடுத்து அவர்கள் வாழ்க்கையை மேம்படுத்தும் பல புதிய திட்டங்களும், அத்திட்டங்களை மேற்



கொள்ள தேவைப்படும் பொருளாதார உதவியை உலக வங்கியிட மிருந்து கோருதலும் அடங்கியுள்ளன. இத்திட்டம் மத்திய அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

24.1 முழுமை திட்டங்கள் :

நிலப் பயன்பாட்டினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, தமிழ் நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப் பட்ட பஞ்சாயத்து நகரங்களுக்கு முழுமைத் திட்டங்கள் (master plan) தயாரிக்கப்பட்டு வருகின்றன. மொத்தம் 112 நகரங் களுக்கு முழுமைத் திட்டம் தயாரிக்கும் பணி நடைபெற்றுவரு கிறது. 1984-85ஆம் ஆண்டில் மட்டும், 25 முழுமைத் திட்டங் களுக்கு மாநில அரசு இசைவு அளித்திருப்பதுடன், 12 நகரங் களுக்கு முழுமைத் திட்டத்திற்கான இறுதி ஒப்புதலும் வழங்கி யுள்ளது. இப்பணி தொடங்கப்பெற்றதிலிருந்து இந்நாள் வரை மாநில அரசு, 75 நகரங்களுக்கான முழுமைத் திட்டங்களுக்கு இசைவு அளித்திருப்பதுடன், 17 நகரங்களுக்கு ஒப்புதலும் வழங்கியுள்ளது. இதுவன்றி, ஓசூர், அரூர், பல்கலை நகர், நாவல் பட்டு, மானாமதுரை, குறிச்சி, சித்தோடு, மாமல்லபுரம் ஆகிய நகரங்கள் புறநகர்ப் பகுதிகளாகவும் மாநில அரசு அறிவித் துள்ளது.

25.1 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் :

சென்னைப் பெருநகர் பகுதிகளில் மக்கட் தொகை சமீப ஆண்டுகளில் மிக வேகமாக பெருகிவருகிறது. 1982ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி சென்னை மாநகரத்தின் மக்கட் தொகை 42.70 இலட்சமாகும். இது தமிழ்நாட்டின் மொத்த மக்கட் தொகையில் 8.6 விழுக்காடாகும். வளர்ந்து வரும் மக்கட்தொகையின் தேவையைச் சமாளிக்க வீட்டு வசதி குடிநீர் வடிகால், சாலைப் போக்குவரத்து, குடிசைப் பகுதி மேம் பாடு மற்றும் சமூக முன்னேற்றம் போன்ற பல்வேறு அடிப்படை வசதிகளைச் செய்யவேண்டியுள்ளது. சென்னைப் பெருநகர்ப் பகுதியின் சீரான வளர்ச்சிக்கு திட்டமிடுவதற்கென்றே அமைக்கப் பட்ட சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தோற்றுவிக்கப் பட்டு பத்தாண்டுகள் ஆகியுள்ளன. தற்போது இக்குழுமம், வளர்ச்சியினைத் திட்டமிடுதல், திட்டப்பணிகளை ஒருங் கிணைத்தல், கண்காணித்தல், மேம்படுத்துதல் ஆகிய பணி களுடன் வளர்ச்சியினை ஒழுங்குபடுத்தும் பணியினையும் மேற் கொண்டுள்ளது. குடியிருப்பு, குடிநீர் வசதி போன்ற திட்டங் களைக் கொண்ட உலக வங்கி உதவியுடன் செயலாக்கப்படும் சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தை, தமிழக அரசின் ஆணையின்படி இக்குழுமம், ஒருங்கிணைத்தும், கண்காணித்தும் வருகின்றது. விரைவாக செயல்படுத்தப்பட்டு வரும், இக்குழு மத்தின் பல்வேறு பணிகளைப் பற்றிய சிறப்பு அம்சங்களைக் கீழே காணலாம்.

26.1 சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 1 மற்றும் 2

1977 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட முதல் சென்னைப் புறநகர் வளர்ச்சித் திட்டத்தில், தன்னிறைவு வீட்டு மனைத்திட்டமும், உள்வட்டச் சாலையின் ஒரு சிறிய (2 கி.மீ.) பகுதியும் மற்றும் ஒரு சாலை—இரயில் மேம்பாலமும் தவிர ஏனைய பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு விட்டன. மேலே குறிப்பிட்ட முடிவுறாப் பகுதிகளை முடிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முதல் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குறிப்பிடத்தக்க வளர்ச்சியின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம் மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களில் அடைந்துள்ள முன்னேற்றங்கள் இக்கொள்கை குறிப்பில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளன. இது தவிர போக்குவரத்துத் திட்டத்தின் கீழ் 305 பேருந்துகள் சாலையில் விடப்பட்டுள்ளன. 9.00 கி.மீ. உள்வட்டச் சாலை, 7 சிறிய பாலங்கள் மற்றும் 8 சரக்கு நடைபாதைகள் கட்டப்பட்டுள்ளன. இத்துடன் 50 கி.மீ. அளவில் மிதிவண்டி தடமும், 200 கி.மீ. நீள நடைபாதையும் மேம்படுத்தப்பட்டுள்ளன. 3 பேருந்து பணிமனைகளும், 7 பேருந்து நிலையங்களும் மற்றும் 400 பேருந்து நிறுத்துமிடங்களும் இத்திட்டத்தின் கீழ்க் கட்டப்பட்டுள்ளன.

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்—2, ரூ. 73.9 கோடி செலவில் 1981 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. உலக வங்கியின் நிதியுதவி ரூ. 35.28 கோடியாகும். இத்திட்டத்தை முடிப்பதற்கு தற்போதைய மதிப்பீடு ரூ. 78 கோடி அளவில் இருக்கும். இத்திட்டத்தின் கீழ் தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம் மற்றும் 50,000 குடும்பங்கள் பயனடையும் குடிசைப் பகுதி மேம்பாடு திட்டங்களில் அடைந்துள்ள முன்னேற்றம் பற்றி இக்கொள்கைக் குறிப்பில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. இது தவிர கீழ்க்கண்ட திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

27.1 சமூக முன்னேற்றத் திட்டம் :

குடிசைப் பகுதிகளில் 9 மருத்துவக் கூடங்கள் திறப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாலர் கல்விக் கூடங்கள் இயங்குவதற்கு 138 மதிய உணவுக் கூடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. நீரில் மூழ்கக் கூடிய தாழ்வான பகுதிகளில் உள்ள 19,000 குடும்பங்கள் மழைக்காலங்களில் பயனடையும் வகையில் முக்கிய கால்வாய் மற்றும் இணைப்பு வாய்க்கால்களும் கட்டப்பட்டு வருகின்றன.



28.1 சிறு தொழில் வளர்ச்சித் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் சிறு தொழிலதிபர்களுக்கு நெற்குன்றம் மற்றும் மொகபேர் தன்னிறைவு வீட்டு மனைத் திட்டங்களில் மேம்படுத்தப்பட்ட தொழிற்சாலைகளுக்கான மனைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. தொழிற்சாலைகள் கட்டுவதற்கும், இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்குவதற்கும் பொருளாதார உதவி அளிக்கப்படுகிறது. இது கடனாக வழங்கப்படுகிறது. 1985–86 ஆம் ஆண்டு 150 தொழிற்சாலை மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளன. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 480 இலட்சம். 1985–86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 200 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டம் 1985 ஆம் ஆண்டு டிசம்பரில் முடிவடையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

29.1 திடக் கழிவுப் பொருள் நிர்வாகம் :

சென்னை மாநகராட்சி இயந்திரம் மற்றும் வாகனங்களை வாங்கி கழிவுகளை ஒன்றாக சேர்த்து அகற்றுவதற்கு துணை புரிகிறது. ரூ. 161 இலட்சம் செலவில் ஒரு மாற்று நிலையமும் மற்றும் 8 வாகன நிறுத்துமிடங்களும் அபிவிருத்தி செய்யப்பட உள்ளன. மேலும் இதற்கான இயந்திரங்கள் வாங்கப்பட்டு விட்டன. மாற்று நிலையம் மற்றும் 8 வாகன நிறுத்துமிடங்களில் கட்டுமானப் பணிகள் முன்னேறும் வகையில் நடந்துகொண்டிருக்கின்றன. ரூ. 25 இலட்சம் செலவில் இரண்டாம் பட்ச சாலைகள், நடைபாதைகள், கழிவுநீர் கால்வாய்கள், தெரு விளக்குகள் மற்றும் பொதுக்கழிப்பிடங்களை நகராட்சி நிர்வகிக்கும் பராமரிப்புப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

30.1 போக்குவரத்து மேம்பாடு :

இத்திட்டத்தின் கீழ் பாடி லூக்காஸ் முதல் மாதவரம் வரை 6 கி.மீ. நீளமுள்ள உள்வட்ட சாலை போடுதல், பாடி–லூக்காஸ் முதல் ஆவடி வரை 15 கி.மீ. நீளமுள்ள சென்னை–திருவள்ளூர் நெடுஞ்சாலை மேம்படுத்துதல் மற்றும் பேருந்து போக்குவரத்திற்கு உதவி செய்யும் வகையில் 555 பேருந்துகள் வாங்குதலும் அடங்கும். பேருந்து முழு பணிகளும் முடித்து தற்போது 555 பேருந்துகள் சாலையில் விடப்பட்டுள்ளன. தரம்வாரியாக பிரிக்கும் வேலையும், சென்னை–திருவள்ளூர் நெடுஞ்சாலை மேம்படுத்தும் பணியும் மற்றும் 6 கி.மீ. நீளமுள்ள உள்வட்டச் சாலைப் பணிகளும் முன்னேற்றமடைந்து வருகின்றன. 1985–86 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 0.01 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1985 ஜூன் 26]

31.1 சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 3 :

தற்போது பெருகிவரும் மக்கட் தொகையையும், அதற்குத் தேவையான வீட்டு வசதி மற்றும் சாலைகள், போக்குவரத்து போன்ற பொதுப்பணித் திட்டங்களையும் கவனத்தில் கொண்டு மூன்றாவது சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்திற்கு மத்திய அரசின் மூலம் உலக வங்கியின் நிதியுதவி பெற இவ்வரசு உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 135.05 கோடியாகும். உலக வங்கி நிதியுதவி பெறும் திட்டங் களில் சேர்க்க கோரி இத்திட்டத்தை மத்திய அரசின் பணி மற்றும் வீட்டுவசதி அமைச்சகத்திற்கு இவ்வரசு அனுப்பியுள்ளது. இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களைக் கீழே காணலாம்.

(அ) மனைகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் :

மதுரவாயில் மற்றும் இராமபுரம் பகுதிகளில் சுமார் 19,500 வீட்டுமனைகளை மேம்படுத்துதல்.

(ஆ) குடிசைப் பகுதி மேம்படுத்தும் பணிகள் :

52,500 குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளான குடிதண்ணீர், வட்டச் சாலைகள், பொதுக்கழிப் பிடங்கள், வீடு விரிவாக்கப் பணிகளுக்கான கடன் உதவி போன்ற வைகளை அளித்தல்.

(இ) நீர் அரிப்பு தடுப்புகளும் வெள்ளப் பாதுகாப்புப் பணிகளும் :

எகாஷஸ்தலயார் ஆற்றில் (Kosasthalaiyar River) வெள்ளத் தடுப்புச் சுவர்கள் கட்டுதல், வட சென்னை கூடுதல் சால்வாய், ஆதம்பாக்கம் வடிநீர்த் திட்டம், வட சென்னைக் குறுக்கு கால்வாய் போன்றவைகளை அமைத்தல்.

(ஈ) சாலை மற்றும் போக்குவரத்து மேம்பாடுகள் :

உள்வட்ட சாலையை மேலும் மேம்படுத்துதல், 6 குறுகிய பாலங்கள் பிதுப்பித்தல், 7 இடங்களில் தரம் பிரித்தல் (grade seperator) 6 சுரங்க பாதைகள் அமைத்தல்.

(உ) பேருந்து போக்குவரத்து :

900 பேருந்துகளையும், பிற சாதனங்களையும் வாங்குதல்.

(ஊ) இட கழிவுப் பொருள்களை அகற்றும் பணிகள் :



1985 ஜூன் 26]

தேவையான சாதனங்களை வழங்குதல் மற்றும் குப்பை மாற்றும் இடங்களை (Transfer Stations) கட்டுதல்.

(எ) சாலை விளக்குகள் :

நகரம் முழுவதும் மின்கம்பி இணைப்பு அமைப்பினை மாற்றி அமைத்தல், குழல் விளக்குகளை நகரம் முழுவதும் அமைத்திடல் போன்ற பணிகளும் இதில் அடங்கும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சிறப்புத் திட்டங்கள்

31.2 கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி

நகரத்தின் மத்திய பகுதியிலிருந்து 18 கி.மீ. தொலைவில் உள்ள கோயம்பேடு என்னும் இடத்தில் மொத்த விற்பனை அங்காடி அமைப்பதன் நோக்கம் என்னவெனில், நகரத்தின் போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், பொது வியாபார இட மாக அமைத்து அதில் திட்டமிட்ட நவீன கட்டிடங்களை கட்டி அவற்றில் துணிமணி, உணவுப் பொருள் மற்றும் அழுகக்கூடிய பொருள்கள் கொண்டு அங்காடியை அமைக்கத் திட்டம் தீட்டப் பட்டுள்ளது. 230 ஏக்கர் நிலப்பரப்பில் 3,000 கடைகள் கட்டு வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 204 ஏக்கர் தனியார் நிலத்தில் 150 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதி 1985–86 ஆம் வருடம் கையகப்படுத்தப்படும். நில ஆர்ஜிதத் திற்காக இதுவரை ரூ. 15 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. முதலில் செய்யவேண்டிய நடவடிக்கையாக எல்லைக்கோடு அளவை, மண் பரிசோதனை, நிலத்தடி நீர் ஆய்வு போன்ற வேலைகள் முடிக்கப்பட்டு விட்டன. கீழ்ப்பாக்கம் குடிநீர் தொட்டியிலிருந்து மொத்த விற்பனை அங்காடிக்கு ரூபாய் 50 இலட்சம் செலவில் குடிநீர் குழாய்கள் அமைப்பதற்கான அடிப்படை வேலைகள் துவக்கப்பட்டுவிட்டன.

1985–86 ஆம் ஆண்டு சாலைகள் அமைத்தல், மழைநீர் வடிகால், குடிநீர் மற்றும் கழிவு நீர்க்கால்வாய்கள் அமைத்தல் மேலும் அழுகக்கூடிய பொருள்களின் அங்காடி அமைத்தல் போன்ற வேலைகள் எடுத்துக்கொள்ளப்படும். இத்திட்டம் 1987–88 ஆம் ஆண்டுகளில் முடிவடையும். 1985–86 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 31.3. புற எல்லை பேருந்து மற்றும் கனரக வாகன நிலையங்கள்.

கோயம்பேடு, ஆலந்தூர் மற்றும் மாதவரம் ஆகிய மூன்று
புறநகர் பகுதியில் ரூ. 331 இலட்சம் செலவில் பேருந்து மற்றும்
கனரக வாகன நிலையங்கள் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்
டுள்ளது. இதனால் நகரத்தில் போக்குவரத்தின் நெரிசல் குறை
வதோடு நகரத்திற்குள் வாகனங்கள் வருவதை தடை செய்வதற்கு
ஏதுவாகும். இத்திட்டம் செயல்படுத்துவதற்கு நிலம் கையகப்
படுத்துதல் மற்றும் அடிப்படை வசதி செய்து கொடுப்பது
முக்கியமானவை.

இந்த மூன்று நிலையங்களுக்கான மொத்த நிலப்பரப்பான
200 ஏக்கரில் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று
வாரியத்திற்கு உரிமையான 36 ஏக்கர் நிலப்பரப்பை சென்னைப்
பெருநகர் வளர்ச்சிக் குழுமம் எடுத்துக் கொண்டுவிட்டது.
60 ஏக்கர் நிலப்பரப்பு பாதுகாப்புத் துறைக்கு உரியது. மீதம்
உள்ள நிலப்பரப்பு தனியாருக்குச் சொந்தமானது. இந்
நிலத்தை கையகப்படுத்தும் பணி நடந்தேறி வருகிறது. 1985–86
ஆம் ஆண்டில் சுமார் 70 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படும்.

கனரக வாகன நிலையங்கள் அமைப்பதற்காக சென்னை
மாநகரில் தற்போதைய கனரக போக்குவரத்தினை அறிவதற்கு
ஒரு கூட்டு ஆய்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1985–86 நிதி
யாண்டில் ரூ. 25 இலட்சமும் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்
பட்டுள்ளது.

### 34.1. சாத்தான்காடு இரும்பு மற்றும் கனரகப் பொருள் அங்காடி.

உருக்கு இரும்பு தயாரிப்பாளர்களான எஸ்.ஏ.ஐ.எல். (SAIL)
டி.ஐ.எஸ்.கோ. (TISCO) மற்றும் ஐ.ஐ.எஸ்.கோ. (IISCO)
போன்றவர்களுக்கு நவீன சேமிப்பு கிடங்கு அமைத்துத் தருதல்,
மேலும் இதனால் நகர மையத்தில் இருக்கும் இரும்பு
வியாபாரிகளுக்கு ஒரு மாற்று இடமாகவும் இத்திட்டம் அமையும்.
இத்திட்டத்திற்கு தேவைப்படக்கூடிய மொத்த நிலப் பரப்பு
203 ஏக்கரில் 20 ஏக்கர் தனியார் நிலமாகும். ரூ. 920 இலட்சம்
செலவில் தொழிற்துறையிடமிருந்து 45 ஏக்கர் நிலம்
பெறப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அடிப்படை வசதி மட்டுமே
செய்து கொடுக்கப்படும். 1985–86 ஆம் ஆண்டில் இப்பகுதியில்
தாழ்ந்த நிலத்தினை சமப்படுத்துவதற்கும், சாலைகள் போடு
வதற்கும் மழைநீர் வடிகால் கட்டுவதற்கும் மற்றும் குடிநீர்
குழாய்கள் அமைப்பதற்கும் ரூ. 275 இலட்சம் மதிப்பீட்டில்
பணிகள் எடுத்துக் கொள்ளப்படும். 1985–86 ஆம் நிதி ஆண்டில்
ரூ. 15 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.



### 35.1. அலுவலகக் கட்டிடம்.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தனது அலுவலகத்
திற்காகவும் மற்ற அரசாங்க அலுவலகங்களுக்காகவும் மற்றும்
பொது நிர்வாகத்தின் கீழ்வரும் அலுவலகங்களுக்கும் ஒரு நவீன
அலுவலகக்கட்டிடம் சென்னைஎழும்பூர் இரயில் நிலையம் அருகில்
உள்ள உயர்நிலைப்பள்ளி உள்ள இடத்தில் கட்ட திட்டமிடப்
பட்டுள்ளது. மூன்று வருடத்தில் கட்டப்படவுள்ள இக்கட்டிடத்
தின் மதிப்பீடு ரூ. 1,000 இலட்சம் ஆகும். 1985–86 ஆம்
ஆண்டில் ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 36.1. வட்டார வளர்ச்சித் திட்டம்.

வட்டார வளர்ச்சித் திட்டம் ( Area Development Project )
சென்னைப் பெருநகர் குழுமத் திட்டத்தில் ஏற்கப்பட்டுள்ள
செயல்நோக்கிற்கு ஏற்ப வேறு எந்த ஓர் அரசுத் துறையும்
செயல்படாத சில குறிப்பிட்ட பகுதிகளை எவ்வாறு எந்நேரத்தில்
மேம்படுத்த வேண்டுமோ, அவ்வவ்வாறே சரியான முறையில்
மேம்படுத்தும் திட்டமாகும். மணலி புறநகர் மையம் மற்றும்
மறைமலைநகர் புது நகர் திட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு
1974–75 ஆம் ஆண்டிலிருந்து முன்னேறி வருகின்றன.

### 37.1. மணலி புறநகர்.

169 ஏக்கர் நிலப்பரப்பில் சாலைகள் அமைத்தல், குடிநீர்
வசதிகள், கழிவுநீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள்
இதுவரை செய்யப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் 61 ஏக்கர்
நிலப்பரப்பில் 2,100 குடும்பங்கள் குடியமர்த்தும் வகையில்
மேம்பாடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 1985–86 ஆம்
ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்
பட்டுள்ளது. இதுவரை 1,228 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன.
மேலும் 98 மனைகள் மேம்படுத்தப்பட்டன. வீட்டு வசதி
மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் (HUDCO) வீடுகள்
கட்டுவதற்கு கடன் உதவி புரிகிறது.

### 38.1. மறைமலை புதுநகர்.

இதுவரை 152 ஏக்கர் நிலப்பரப்பில் 483 மனைகள், 20
குளியல் மற்றும் கழிவறைகள் கூடிய மனைகளும் மற்றும் 1,186
வீடுகளும் கட்டி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 456 ஏக்கர்
நிலப் பரப்பளவில் தொழிற்சாலைகளுக்கான மனைகள் அபி
விருத்தி செய்யப்பட்டு 87 தொழிற்சாலைகளுக்கு மனைகள்
ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதில் 60 தொழிற்சாலைகள்
இயங்கிக் கொண்டிருக்கின்றன. 1985–86 ஆம் ஆண்டில் 84
ஏக்கர் நிலப் பரப்பில் 35 தொழிற்கூடங்கள் அபிவிருத்தி

செய்யப்படும். 1985–86 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் (HUDCO) வீடுகள் கட்டுவதற்கு கடனுதவி வழங்குகிறது.

39.1. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மற்ற பணிகள்.

சென்னை நகரம் இந்திய நாட்டில் அதிவிரைவில் முன்னேறக் கூடிய நகரங்களில் ஒன்றாகும். இங்கு ஒழுங்கற்ற முன்னேற்றத்தை தடை செய்யவில்லையெனில், மேலும் நெருக்கடி ஏற்பட்டு சுகாதாரக் கேட்டிற்கு வழிவகுத்துவிடும். இருந்த போதிலும், சென்னை புறநகர்ப் பகுதிகளில் வீடுகளும், வியாபார நிலையங்களும் வரைமுறைக்குட்படாமல் வளர்ந்து வருகின்றன. எனவே பொது மக்களுக்கு திட்ட அமைப்பின் அவசியத்தையும், அனுமதியற்ற வளர்ச்சியினால் ஏற்படும் நலிவையும் இக்குழுமம் எடுத்துரைக்கிறது.

40.1. விரிவான வளர்ச்சித் திட்டம்.

முழுமைத் திட்டத்தின் ஒழுங்குமுறை விதிகளைச் செயலாக்குவதும், சென்னைப் பெருநகர்ப் பகுதியில், குறிப்பாக சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் விரிவான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதும், இத்திட்டத்தின்கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ளது. திட்ட அனுமதிகள் வழங்கும் முறையினை சீரான நிர்வாக வழி முறைகள் மூலம் வரைவுபடுத்த ஏற்கனவே இந்தக் குழுமமும், சென்னை மாநகராட்சியும் தேவையான மாறுதல்களைக் கொண்டு வந்துள்ளன. விரிவான திட்டங்கள் அமைத்திட சென்னை நகரம் 99 திட்டப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் அடுக்கு மாடி கட்டிடத்திற்கு தற்காலிக தடை நீக்கம் செய்யப்பட்டு அதற்கென்று தனியான சட்டத்திட்டங்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டத் திட்டங்களின் மூலம் பொது மக்களுக்குப் போதுமான கட்டிட அமைப்பு வசதிகள், தீ, பாதுகாப்பு வசதிகள் மேலும் அடிப்படைத் தேவையான குடிநீர், மின்சாரம் போன்றவையும் கிடைக்க வழி ஏற்படும்.



41.1. சென்னை துரித இரயில் போக்குவரத்துத் திட்டம்.

இவ்வரசின் நீண்ட கால கடும் முயற்சிக்குப் பின், மத்திய
அரசு சென்னை துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்திற்கு
அனுமதி அளித்துள்ளது. இத்திட்டம் சென்னை கடற்கரை
இரயில் நிலையத்திலிருந்து மைலாப்பூர் லஸ் வரை 8.45 கி.மீ.
தூரம் அமையும். 8.45 கி.மீ. தூரத்தில் 2.93 கி.மீ. தூரம் வரை
தரைமட்டத்திலும் 5.52 கி.மீ. 18 அடி உயர மேல் மட்டத்திலும்
இருக்கும். ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்ட அறிக்கையின்படி, இத்
திட்டம் 1989–90 ஆம் ஆண்டு முடிவடையும் என்று எதிர்பார்க்
கப்படுகிறது. 1983–84 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்திற்கான
வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வரசு இத்திட்டத்தின்
நேர்பாட்டில் வரும் மாநில அரசுத் துறை நிலத்தினை இரயில்
வேய்க்கு இனாமாக கொடுக்க ஒத்துக் கொண்டுள்ளது. அதன்படி
காலியாக உள்ள அரசு நிலங்களை முறைப்படி மாற்றம் செய்யும்
முன்னர் இரயில்வேய்க்கு உடனடியாக ஒப்படைக்கும் அரசுஆணை
பிட்டுள்ளது. அரசால் அனுமதியளிக்கப்பட்டுள்ள தன் வரு
வாய்ப் பிரிவு, அரசு நிலங்களை ஒப்படைக்கவும் இப்பகுதியில்
உள்ள குடிசைப் பகுதிகளை மாற்று இடம் கொடுத்து அப்புறப்
படுத்தவும் துரிதமாகச் செயல்பட்டு வருகிறது. இவ்வரசு இத்
திட்டத்தினை வேகமாகச் செயல்படுத்துவதில் ஆர்வத்துடன்
இரயில்வேய்க்கு ஒத்துழைப்பு நல்குகிறது.

800 009
136390